# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - ஏப்ரல் 2020

## www.tnpscthervupettagam.com

















SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 10
தமிழ்நாடு செய்திகள் ..... 16
மலைப் பகுதிகளுக்கான விதிகள், 2020 ..... 16
தென்னம்பாளையத்தில் தொற்றுநீக்கிச் சுரங்கம் ..... 17
தமிழ்நாடு முதலமைச்சரின் சமீபத்திய அறிவுப்புகள் ..... 17
தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், 1939 ..... 18
வீடுகளுக்கேச் சென்று நிதி வழங்குதல் ..... 19
டிஎன்பிஎஸ்சியின் புதிய தலைவர் ..... 19
மாற்றுத் தடுப்பு மருந்து அறிவியல் ..... 19
ஆரோக்கியம் திட்டம் ..... 20
தேசியச் செய்திகள் ..... 20
இந்தியத் தண்டனைச் சட்டத்தை செயல்படுத்துதல் ..... 20
இரயில்வேயின் தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகள் ..... 20
"Stranded in India" என்ற இணையதளம் ..... 21
சமூக வன வளங்கள் ..... 21
PM Cares நிதி குறித்த அவசரச் சட்டம் ..... 22
மருத்துவச் சாதனங்கள் மருந்துகளாக அறிவிப்பு ..... 22
கோவிட் – 19 குறித்த சர்வதேச ஓவியப் போட்டி ..... 22
ஆரோக்கிய சேது ..... 23
கோவிட் – 19 குறித்த தேசியக் கண்காணிப்புத் தகவல் பலகை ..... 23
மின்னணு முறையிலான தேசிய வேளாண் சந்தையின் புதிய அம்சங்கள் ..... 23
ஜியோ – பென்சிங் (பூகோள வேலி) ..... 23
5 ஆராய்ச்சித் திட்டங்கள் ..... 24
காருணா (CARUNA) ..... 25
UberMEdic சேவை ..... 25
நெருக்கடி குறித்த ஹேக்கத்தான் – இந்தியா ..... 26
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரம் பெற்ற குழு ..... 26
அமிதாப் காந்த் குழு ..... 26
மிகப்பெரிய நோய் வெடிப்புகளுக்கான கட்டுப்படுத்தல் திட்டம் ..... 27
மருத்துவ ஆக்ஸிஜன் ..... 27
சிறந்த சுற்றுலாத் தளங்களின் பட்டியல் ..... 28
ஜன் அவுசாதி சுகம் செயலி ..... 28
அஹார் 2020 ..... 29
கோவிட் – 19 பணிக் குழு ..... 29
சமாதன் ..... 30
கோவிட் – 19 குறித்த உச்சநீதிமன்ற உத்தரவு ..... 30
iGOT ..... 30
உலகளாவிய இந்திய மருத்துவர்கள் – கோவிட் – 19 ..... 31
டிஜிலாக்கர் ..... 31

சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை மண்டலங்கள் ..... 32
யுக்தி (YUKTI) தளம் ..... 32
CollabCAD முன்னெடுப்பு ..... 32
நாடு முடக்கம் (ஊரடங்கு) நீட்டிப்பு ..... 33
விரைவாகப் பரவிய செயலி ..... 33
“தேகோ அப்னா தேஷ்” ..... 34
ஊரடங்கு 2.0விற்கான வழிகாட்டுதல்கள் ..... 34
நிறக் குறியீடு மூலம் நாட்டைப் பிரித்தல் ..... 35
ஜூம் செயலி (Zoom App) ..... 37
துடிப்பான இந்தியா செயலூக்கத் தின  திட்டம் (Fit India Active Day Programme) ..... 38
சஹயோக் (SAHYOG) ..... 38
தேசிய போலியோ கண்காணிப்பு வலையமைப்பு ..... 38
நம்பிக்கை வாக்கெடுப்பு - உச்ச நீதிமன்றம் ..... 39
எண்ணெய் விதைகள் மற்றும் பருப்புகள் கொள்முதல் ..... 39
தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தின் தேசியப் பட்டியல் ..... 40
மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம் ..... 41
பழங்குடியின ஆசிரியர்களுக்கு 100% இட ஒதுக்கீடு இல்லை ..... 42
கோவிட் நடவடிக்கைகள் – ஒடிசா ..... 42
கோவிட் நடவடிக்கைகள் – தமிழ்நாடு ..... 42
ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் (HCQ) உற்பத்தி ..... 43
கொரானா மாதிரி மாவட்டங்கள் ..... 44
உலகளாவிய உதவி (WWH - World Wide Help) ..... 44
கோவிட் இந்தியா சேவா ..... 44
சுவாமித்துவ யோஜனா (உரிமைத் திட்டம்) ..... 44
மின்னணு கிராம் சுவராஜ் தளம் மற்றும் கைபேசிச் செயலி ..... 45
பிளாஸ்மா (ஊநீர்) சிகிச்சை ..... 45
சர்வதேசச் செய்திகள் ..... 45
சிவப்புக் கொடி (Exercise Red Flag) பயிற்சி ..... 45
அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் ..... 45
மருத்துவமனைகள் தேசியமயமாக்கல் ..... 46
கோவிட் – 19 மற்றும் உலக வங்கி ..... 46
உலக வங்கி – வறுமை குறித்த ஆய்வு ..... 46
70வது நினைவு ஆண்டு ..... 46
ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆணையம் - சந்திப்பு ..... 47
தீர்மானம் 2518 ..... 47
பிசிஜி தடுப்பு மருந்து மற்றும் கோவிட் – 19 ..... 48
ஐ.நா. தீர்மானம் ..... 49
சிங்கப்பூர் ஒப்பந்தம் – நடுநிலை ஊடாட்டம் (மத்தியஸ்தம்) ..... 49
வசந்த காலப் பாதுகாப்பு நடவடிக்கை (ஸ்பிரிங் ஷீல்ட் ஆப்பரேசன்) ..... 49
பெண்கள் உரிமைகள் குறித்த அரசியல் பிரகடனம் ..... 50
உள்ளடக்கிய இணையக் குறியீடு 2020 ..... 51
பொருளாதாரச் சுதந்திரக் குறியீடு ..... 51

கோவிட் – 19 தொற்றிற்கு எதிராகப் போராட இந்தியாவிற்கு சர்வதேச நாடுகளின் உதவி ..... 51
ஊதா வண்ண அறிவிப்பு ..... 51
நிழல் தொற்று ..... 52
நீலத் தலைக் கவசங்களின் செயல்பாடுகளை நிறுத்தி வைத்தல் ..... 52
கோவிட் – 19 மற்றும் உலகத்தில் வேலைவாய்ப்பு ..... 53
ஏமனில் போர் நிறுத்தம் ..... 53
கோவிட் -19 பற்றிய UNSC கூட்டம் ..... 54
உலகச் செவிலிய நிலை ..... 54
பெர்னி சாண்டர்ஸ் – அமெரிக்கா ..... 55
சீனாவில் வுஹான் ..... 55
உலக உணவுத் திட்ட அறிக்கை ..... 55
உலகச் சுகாதார நிறுவனம் – ஆளுகை ..... 56
எண்ணெய் உற்பத்திக் குறைப்பு ..... 56
WHOவிற்கு நிதியளித்தல் ..... 57
இந்தியாவிற்கு ஏவுகணை விற்பனை ..... 58
சார்க் நாடுகளுக்குப் பயிற்சி ..... 58
தென் கொரியத் தேர்தல் ..... 58
கூகிள் பத்திரிக்கை அவசர நிவாரண நிதி ..... 58
வணிக ரீதியிலான விண்வெளிப் பயணத் திட்டம் ..... 59
அமெரிக்கக் குடியேற்றத் தடை ..... 59
G 20 வேளாண் அமைச்சர்கள் சந்திப்பு ..... 59
உலகளாவிய வருடாந்திர அறிக்கை ..... 60
உலகப் பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு – 2020 ..... 60
நூர் (ஒளி) செயற்கைக் கோள் ..... 61
இந்தியா மற்றும் மலேசியா ..... 61
சீனாவிற்கு எதிரான வழக்கு ..... 61
தொற்றுநோய்களின் வரலாறு ..... 62
பால் தேநீர் கூட்டணி ..... 62
ஐ.நா.வின் ஒருமித்த தீர்மானம் ..... 63
அமெரிக்க கச்சா எண்ணெய் ..... 63
ஆல்ப்ஸ் மலையில் இந்தியக் கொடி ..... 64
சீனா – உலக சுகாதார நிறுவனம் ..... 64
பெஷாவரின் கிசா குவானி பசார் படுகொலை ..... 65
உலக ராணுவச் செலவுகளின் போக்குகள் – 2019 அறிக்கை ..... 65
லெபனான் – கஞ்சாச் சாகுபடி (Marijuana) ..... 66
சர்வதேச நிதியியல் சேவை மைய ஆணையம் ..... 67
பிட்ச் பிளாக் பயிற்சி ..... 67
பொருளாதாரச் செய்திகள் ..... 68
கோவிட் – 19 தொற்றால் வளரும் நாடுகளுக்கு ஏற்படும் பாதிப்பு ..... 68
சிறு சேமிப்பு வட்டி விகிதம் ..... 68
பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா ..... 69
நாடு முடக்கத்தின் போது சிறப்புப் பொருளாதார மண்டலம் ..... 69

வழிவகைக்கான முன்பணம் ........ 69
எதிர் சுழற்சி மூலதன இடையகம் (CCyB) ........ 70
முழுவதும் அணுகக் கூடிய வழி........ 71
வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை........ 71
நிறுவனங்கள் புதிய தொடக்கத் திட்டம், 2020 ........ 72
கோவிட் செயல் குழு........ 72
ஆரோக்கிய சஞ்சீவனி காப்பீட்டுக் கொள்கை ........ 73
என் காசு ........ 73
உலகப் பொருளாதாரம் குறித்து ஐக்கிய நாடுகள் ........ 73
ஊதியக் குறைப்பிற்கான அவசரச் சட்டம் ........ 74
காப்பீட்டுத் துறையில் இயற்கைப் பேரிடர் (Force Majeure) ........ 75
போஷான் அபியான்........ 75
இந்திய மருந்து & இந்திய மருத்துவச் சாதனம் மாநாடு 2020........ 76
இந்தியாவில் சமையல் எண்ணெய் இறக்குமதி குறைவு........ 76
இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை ........ 77
பாரத்மாலா பரியோஜனா ........ 77
ஐக்கிய நாடுகள் அறிக்கை ........ 77
CPI பணவீக்கம்........ 78
கோவிட் – 19 நிதியுதவி........ 78
நீண்ட கால ரெப்போ விகிதச் செயல்பாடு ........ 78
நாஸ்காமின் புதிய தலைவர் ........ 79
உலக வர்த்தக அமைப்பில் வளரும் நாடுகள் ........ 79
MFP திட்டத்திற்கான MSP ........ 80
ஹெலிகாப்டர் பணம்........ 80
இந்தியா குறித்து உலக வங்கி........ 81
மின்னணுவை அடிப்படையாகக் கொண்ட தேசிய வேளாண் சந்தை ........ 81
கச்சா எண்ணெயுடன் வந்த முதலாவது கப்பல்........ 82
பனை எண்ணெய் இறக்குமதி........ 82
ஊரடங்கிலிருந்து வெளியேறுதல் ........ 82
உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020 ........ 82
இந்திய ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள்........ 83
OBICUS........ 84
IMFC சந்திப்பு ........ 84
அகில இந்திய வேளாண் போக்குவரத்து தகவல் அழைப்பு மைய வசதி ........ 85
கோதுமை கொள்முதல்........ 85
MGNREGA ........ 86
அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையில் திருத்தம்........ 86
வளர்ச்சிக் குழுவின் 101வது சந்திப்பு........ 87
சிறப்பு எடுப்பு உரிமைகள் உள்ளடக்கம்........ 87
வாராக் கடன் (NPA) குறித்து இந்திய ரிசர்வ் வங்கி........ 88
பெட்ரோலியக் கரி இறக்குமதி........ 89
மின்சார வாகனங்களின் விற்பனை ........ 89

இந்தியாவின் ஆற்றல் மானியங்களை வரைபடமிடல் – 2020 ..... 90
உபரி அரிசி – கை காப்பான் திரவம் ..... 90
TIFAC ..... 91
ஜியோ மற்றும் முகநூல் ..... 91
15வது நிதி ஆணையம் நிதி ஒதுக்கீடு ..... 91
வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி ..... 92
விதைக்கப்பட்ட பயிர் பகுதி ..... 92
புதிய வளர்ச்சி வங்கி ..... 93
அகவிலைப் படி (DA) ..... 93
உலக அளவில் தாய் நாட்டிற்குப் பணம் அனுப்பும் செலவு ..... 93
வங்கித் தொழில் ..... 94
மாநிலங்கள் மற்றும் FRBM ..... 94
பொருட்களுக்கான சந்தைக் கண்ணோட்டம் ..... 95
வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அறிக்கை ..... 95
உணவுப் பிரச்சினை குறித்த உலக அறிக்கை ..... 95
நீதிக்கான கல்வி ..... 95
உலகளாவிய கடன் ஒப்பந்தம் ..... 96
செயல்படும் மருந்துப் பொருட்கள் (API) ..... 96
டிவிஸ்ட் நடவடிக்கை ..... 96
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 97
NIDHI (நிதி) திட்டம் ..... 97
சூரிய ரேடியோ அலை குறுக்கீட்டுமானி விண்வெளிச் சோதனை (SUNRISE Sun Radio Interferometer Space Experiment) திட்டம் ..... 98
கோவிட் – 19 வைரஸ் போன்ற தோற்றத்தைக் கொண்ட 3 துணை இனங்கள் ..... 99
பிராணா திட்டம் ..... 100
லான்செட் தொற்று நோய்கள் அறிக்கை ..... 100
GRACE-FO திட்டம் ..... 100
கரோனா கவாச் செயலி ..... 101
தானியங்கி வென்டிலேட்டர்கள் ..... 101
உயிரி அங்கி (Bio - Suit) ..... 102
குறைந்த விலை வெப்பநிலை வீச்சுப் பொறி ..... 102
கோவிட் – 19 சுகாதாரப் பிரச்சினைக்கான விரிவான போர் மையம் (CAWACH) ..... 102
கோரோப்ளு ..... 103
ஜுவன் (JEEVAN) ..... 103
காசநோய் சாதனங்கள் ..... 104
ஐவர்மெக்டின் ..... 104
முதலாவது வீட்டுச் சோதனை ..... 105
தனிமைப்படுத்துதலுக்கான வழிகாட்டுதல்கள் ..... 105
கோவிட் – 19 தொற்று நோய்க்கு ஆதரவாக தளவாடத் தொழிற்சாலைகள் ..... 105
இந்தியாவில் கோவிட் – 19 சோதனை உபகரணங்கள் ..... 106
நமஸ்தே (NAMASTE) தளம் ..... 107
நுண்ணுயிரிகள் எதிர்ப்புப் பூச்சு ..... 107

இன்புளூயன்சா தொடர்பான அனைத்துத் தரவுகளையும் பகிர்தல் குறித்த உலகளாவிய முன்னெப்பு ..... 108
மூன்று வகையான சுகாதார நல வசதிகள் ..... 109
கோவிட் – 19 தொற்றிற்காக நாசி வழியாக செலுத்தப்படும் அரைத் திண்மக் கரைசல் (Gel) ..... 110
nCoVSENSE தொகுதி ..... 110
சுவச்தா செயலி ..... 111
பெருந்திரள் உற்பத்தித் தொழில்நுட்பங்கள் ..... 111
பிளாஸ்மா சிகிச்சை ..... 111
ஹைட்ராக்ஸி குளோரோகுயின் ..... 112
தொலைதூரத்தில் இருந்து நோயாளியைக் கண்காணிக்கும் சுகாதாரக் கண்காணிப்பு அமைப்பு ..... 113
செயல்பாடு கொண்ட வைரோசோம் தடுப்பு மருந்து உற்பத்தி ..... 113
வோர்மிபெட் ..... 113
குறைந்த செலவு கொண்ட PPE ..... 114
திறன்மிகு (SMART) இதயத் துடிப்பளவி ..... 114
நோய்வாய்ப் பட்டவர்களைக் (தொடர்பில் இருந்தவர்களை) கண்காணித்தல் ..... 114
ஆதி காலத்தில் இருந்து இருக்கின்ற கருந்துளை (PBH) ..... 114
ரெம்டெஸ்விர் மருந்து ..... 115
ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறை கொண்ட சோதனையைத் தொடங்கிய முதலாவது மாநிலம் ..... 116
விரைவு நோய் எதிர்ப்புப் பொருள் சோதனை ..... 117
COVSACK ..... 117
SCTIMST தயாரித்த சோதனைக் கருவி ..... 118
விரைவு நோய் எதிர்ப்பொருள் சோதனை ..... 118
டிஜிட்டல் மற்றும் மூலக்கூறுக் கண்காணிப்பு ..... 118
சிஎஸ்ஐஆர் – மொத்த மேலங்கி ..... 119
கோவிட் – 19னின் 3 புதிய மாற்றங்கள் ..... 119
புதிய வெளிக்கோள் ..... 120
TriboE முக உறை ..... 121
கோவிட் 19 மருந்து – செப்சிவாவக் ..... 122
விண்வெளியில் லித்தியம் ..... 122
அயனிமண்டலத்தின் மின்னணு அடர்த்தி ..... 123
டிஆர்டிஓ.வின் நடமாடும் கோவிட் – 19 சோதனை ஆய்வகம் ..... 123
சீனாவின் செவ்வாய்த் திட்டம் ..... 124
ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறை கொண்ட சோதனை – கட்டுப்பாடுகள் ..... 124
ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலன் ..... 125
மூலிகை மூக்கடைப்பு நீக்கி தெளிப்பு ..... 125
காற்றுப் பதனாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் ..... 125
கொரானா வைரஸின் மாற்றங்கள் ..... 126
சுற்றுச்சூழல் செய்திகள் ..... 126
போக்குவரத்து நெரிசல் மிக்க நேரங்களில் மாசுபாடு ..... 126
கோவிட் 19 – கரடி பித்த நீர் ..... 127
புகைப்பனி எதிர்ப்பு வீச்சுப் பொறி (Guns) ..... 127

COP 26 ..... 128
பிளஸ் – VI எரிபொருள் ..... 128
புலிக்கு கோவிட் – 19 ..... 128
ஆச்சரியக் கோழி ..... 129
வன உரிமைகள் குழு ..... 129
உயிரி-செறிவூட்டப்பட்ட கேரட்டுகள் ..... 130
இளஞ்சிவப்புச் சந்திரன் (Super Pink Moon) ..... 131
மும்பை – நாக்பூர் நெடுஞ்சாலை ..... 131
குடிநீரில் யுரேனியம் ..... 132
வீழ்ச்சி படைப்புழு (FAW) ..... 132
சாசனில் நிலக்கரிச் சாம்பல் ..... 133
புவியின் நில அதிர்வு ஒலி ..... 133
இந்தியாவிலுள்ள வெளவால்கள் ..... 134
இந்தியாவில் நீர் கிடைப்பு ..... 134
மியான்மரில் வெளவால்கள் ..... 135
சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ..... 135
பருவமழை முன்னறிவிப்பு ..... 136
தோல் முதுகு ஆமை (அ) பேராமை ..... 136
ட்ரைமெருசுரஸ் சாலசர் ..... 137
பூனைகளுக்கு கொரானா ..... 137
அந்தூரியம் ..... 137
டெஹிங் பட்காய் யானைகள் காப்பகம் ..... 138
மாநிலச் செய்திகள் ..... 138
FRBM சட்டம் மற்றும் கேரளா ..... 138
விரைவான சோதனை ..... 139
ஊதியக் குறைப்பு ..... 139
“அனைத்து ஏழை மக்களுக்கான வீடுகள்” என்ற திட்டம் ..... 140
பஞ்சாப் கிராம மற்றும் சிறு நகரங்கள் சட்டம் ..... 140
விலைக் கண்காணிப்பு மற்றும் வள அலகு (PMRU - Price Monitoring & Resource Unit) ..... 140
ஜம்மு காஷ்மீர் சட்டப்பூர்வ வாழ்விட விதிகள் ..... 141
ரஜ்னேஷ் ஒஸ்வால் – ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதி ..... 141
மத்தியப் பிரதேச முதல்வர் ..... 142
உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைகாலத் தலைநகரம் ..... 142
நைகா மொபைல் செயலி ..... 142
வீடுகளுக்கேச் சென்று மீன்களை விநியோகிக்கும் திட்டம் ..... 142
கோவிட் – 19 தொற்றைக் கட்டுப்படுத்த 5டி திட்டம் ..... 143
ஒடிசாவில் ஊரடங்கு ..... 143
கமோசா (Gamosa) ..... 143
கோவிட் – 19 மருத்துவமனை ..... 144
கொரானா வைரஸ் வளைவு ..... 144
முதலாவது பசுமை மாநிலம் ..... 144
டபோரிஜோ பாலம் ..... 145

கோவிட் -19 யோதா கல்யாண் யோஜனா ..... 145
கசோவால் பாலம் ..... 145
நம்ம ஊரு ..... 146
பசவா ஜெயந்தி ..... 146
அம்புபாச்சி மேளா – அசாம் ..... 146
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ..... 147
பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை விருது 2020 ..... 147
காமன்வெல்த்தின் பாயிண்ட்ஸ் ஆப் லைட் விருது ..... 147
இந்தியாவின் 10 பணக்கார கோடீஸ்வரர்கள் 2019 ..... 148
WWF இந்தியாவின் தூதர் ..... 148
ஜெனி டெய்ட்ச் ..... 149
நான் ஒரு பூப்பந்தாட்ட வீரர் ..... 149
விளையாட்டுச் செய்திகள் ..... 150
விம்பிள்டன் 2020 ..... 150
2021 உலக விளையாட்டுகள் ..... 150
2020 இந்தியன் சூப்பர் லீக் ..... 151
FIFA - 17 வயதுக்குட்பட்ட பெண்கள் உலகக் கோப்பை ..... 151
ஆசிய இளைஞர் விளையாட்டு போட்டிகள் ..... 151
ஆசியக் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் ..... 152
முகவுறை அணிப் படை ..... 152
முக்கிய தினங்கள் ..... 153
உத்கல் திவாஸ் – ஏப்ரல் 01 ..... 153
உலக மன இறுக்க நோய் விழிப்புணர்வு தினம் – ஏப்ரல் 02 ..... 153
சர்வதேசக் குழந்தைகளின் புத்தக தினம் – ஏப்ரல் 2 ..... 153
கண்ணிவெடி நடவடிக்கைகளில் கண்ணிவெடி விழிப்புணர்வு மற்றும் உதவிக்கான சர்வதேச நாள் - ஏப்ரல் 4 ..... 154
சர்வதேச மனசாட்சி தினம் – ஏப்ரல் 05 ..... 155
தேசியக் கடல்சார் போக்குவரத்து தினம் – ஏப்ரல் 05 ..... 155
வளர்ச்சி மற்றும் அமைதிக்காக விளையாட்டிற்கா ன சர்வதேச தினம் - ஏப்ரல் 06 ..... 156
இராணுவ மருத்துவப் படை தினம் - ஏப்ரல் 03 ..... 156
உலக சுகாதார தினம் - ஏப்ரல் 7 ..... 156
1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப் படுகொலை மீதான பிரதிபலிப்பிற்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 07 ..... 157
வீரமிகு தினம் – ஏப்ரல் 9 ..... 158
இந்தியக் கலாச்சார உறவுகள் கழகம் (ICCR) ஏப்ரல் 09 ..... 158
உலக ஹோமியோபதி தினம் – ஏப்ரல் 10 ..... 158
தேசிய நில அளவை தினம் – ஏப்ரல் 10 ..... 159
பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11 ..... 160
மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 12 ..... 160
ஜாலியன் வாலாபாக் படுகொலை – ஏப்ரல் 13 ..... 161
சியாச்சின் தினம் - ஏப்ரல் 13 ..... 161
உலக இரத்த ஒட்டுண்ணி (Chagas disease) நோய் தினம் – ஏப்ரல் 14 ..... 161
அம்பேத்கர் ஜெயந்தி – ஏப்ரல் 14 ..... 162

இமாச்சல் தினம் – ஏப்ரல் 15 ........ 163
உலகக் கலை தினம் – ஏப்ரல் 15 ........ 163
உலக இரத்தப் போக்கு நோய் தினம் – ஏப்ரல் 17 ........ 164
உலகப் பாரம்பரிய தினம் – ஏப்ரல் 18 ........ 164
உலகக் கல்லீரல் தினம் – ஏப்ரல் 19 ........ 165
ஐக்கிய நாடுகள் சீன மொழி தினம் – ஏப்ரல் 20 ........ 166
குடிமைப் பணிகள் தினம் – ஏப்ரல் 21 ........ 166
உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினம் – ஏப்ரல் 21 ........ 167
சர்வதேச அன்னைப் புவித் தினம் – ஏப்ரல் 22 ........ 168
தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் (ICT) பெண்களுக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 23 ........ 168
உலக புத்தக தினம் – ஏப்ரல் 23 ........ 169
ஐக்கிய நாடுகள் ஆங்கில மொழி தினம் – ஏப்ரல் 23 ........ 169
தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் – ஏப்ரல் 24 ........ 170
அமைதிக்கான பன்னாட்டு முறைமை மற்றும் அரசியல் செயலாண்மை திறனுக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 24 ........ 170
உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25 ........ 171
உலக நோய்த் தடுப்பு வாரம் ........ 171
சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் – ஏப்ரல் 25 ........ 172
உலக அறிவுசார் சொத்துரிமை தினம் – ஏப்ரல் 26 ........ 172
சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம் – ஏப்ரல் 26 ........ 172
பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினம் – ஏப்ரல் 28 ........ 173
உலகக் கால்நடை மருத்துவ தினம் – ஏப்ரல் 27 ........ 173
இரசாயனப் போரினால் பாதிப்பிற்கு உள்ளான அனைவருக்குமான நினைவு தினம் – ஏப்ரல் 29 174
சர்வதேச நடன தினம் – ஏப்ரல் 29 ........ 174
சர்வதேச ஜாஸ் தினம் – ஏப்ரல் 30 ........ 175
ஆயுஷ்மான் பாரத் திவாஸ் – ஏப்ரல் 30 ........ 175

# TNPSC துளிகள்

- மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகமானது அத்தியாவசிய சரக்குகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விநியோகத்திற்காக “வாழ்வாதார உடான்” (Lifeline Udan) என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
  - இது நாடு முழுவதும் மருத்துவ உபகரணங்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்திய விமானப் படை விமானமான C – 1303 என்ற சரக்குப் போக்குவரத்து விமானமானது சமீபத்தில் சஞ்சீவனி நடவடிக்கையின் கீழ் 6.2 டன் எடை கொண்ட அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவமனை உபகரணங்களை மாலத் தீவிற்கு எடுத்துச் சென்றது.
- தேசிய சாரணர் இயக்கமானது (NCC - National Cadet Corps) “NCC யோக்தான் பயிற்சியின்” கீழ் சாரணர் சேவைகளை நீட்டிப்பதன் மூலம் கோவிட் – 19 தொற்றிற்கு எதிரான நாட்டின் போராட்டத்தில் குடிமைப் பணி அதிகாரிகளுக்கு உதவ முன் வந்துள்ளது.
- பறக்கும் மகிழுந்தை உற்பத்தி செய்யும் நெதர்லாந்தைச் சேர்ந்த பால் – V என்ற நிறுவனமானது இந்தியாவில் உள்ள குஜராத்தில் பறக்கும் மகிழுந்து உற்பத்தி அலகைத் தொடங்க இருக்கின்றது. பால் – V (PAL - Personal Air Land Vehicle) என்பது தனிநபர் காற்றில் பறந்து செல்லும் மகிழுந்து வாகனம் என்பதைக் குறிக்கின்றது.
- நச்சுயிரியல் வல்லுநர் மினல் தகவே போஸ்லே என்பவரால் இந்தியாவின் முதல் கரோனா வைரஸ் சோதனைக் கருவியை மதிப்பீட்டிற்காக வழங்க முடிந்தது. புனேவில் உள்ள மைலாப் டிஸ்கவரி என்ற நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் தலைவராக அவர் உள்ளார்.
- வட மாசிடோனியா நாடானது அதிகாரப் பூர்வமாக நேட்டோ (வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு) இராணுவக் கூட்டணியில் 30வது உறுப்பினராக இணைந்தது. 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், மாசிடோனியாவும் கிரேக்கமும் இணைந்து மாசிடோனியாவை வடக்கு மாசிடோனியக் குடியரசு என்று பெயர் மாற்ற ஒப்புக் கொண்டன.
- நுபுர் குல்ஸ்ரேஸ்தா என்பவர் இந்தியக் கடலோரக் காவல் படையின் துணைப் பொது ஆய்வாளராக பதவி உயர்வு பெற்ற முதலாவது பெண்மணியாக உருவெடுத்துள்ளார்.
- மகராஷ்டிராவில் உள்ள அவுரங்காபாத் விமான நிலையமானது சத்ரபதி சாம்பாஜி மகாராஜ் விமான நிலையம் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.
  - சாம்பாஜி என்பவர் மராத்தியப் பேரரசின் இரண்டாவது ஆட்சியாளர் ஆவார்.
  - இவர் மராத்தியப் பேரரசைத் தோற்றுவித்தவரான சிவாஜி மற்றும் அவரது முதல் மனைவியான சாய்பாய் ஆகியோரின் மூத்த மகன் ஆவார்.
- மார்ச் 23 ஆம் தேதியன்று, பஞ்சாப் மாநிலம் முழுவதும் எந்தவித விதிவிலக்கும் இல்லாமல் முழு ஊரடங்கை அம்மாநில அரசு அறிவித்தது. கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக இந்தியாவில் முழு ஊரடங்கைப் பிறப்பித்த முதலாவது மாநிலமாக பஞ்சாப் மாநிலம் உருவெடுத்துள்ளது.
- பாரத ஸ்டேட் வங்கியானது தனது வாடிக்கையாளர்களின் வசதிக்காக வேலூரில் நடமாடும் பணமெடுப்பு இயந்திரத்தை (ATM) அமைத்துள்ளது.
- சமீபத்தில் ஒடிசா மாநில அரசு யுனிசெப் அமைப்புடன் இணைந்து (ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் – UNICEF/ United Nations Children’s Funds) “மோ பிரதிவா” என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- ரூர்க்கியில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது “பிராண வாயு” என்று

அழைக்கப்படும் குறைந்த செலவுடைய மற்றும் கையில் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு செயற்கை சுவாசக் கருவியை மேம்படுத்தி உருவாக்கியுள்ளது.

- இந்திய உணவுக் கழகமானது (FCI - Food Corporation of India) 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 03 அன்று ஒரே நாளில் 1.93 இலட்சம் டன்கள் உணவு தானியங்களை இடம் மாற்றச் செய்து அதனை மாநிலங்களுக்கு வழங்கி சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.
- ஸ்பெயின் அரசானது கரோனா வைரசினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக நாடு தழுவிய அளவில் அனைவருக்குமான அடிப்படை வருமானத்தை வழங்கத் திட்டமிட்டுள்ளது.
    - இந்த நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கும் முதலாவது ஐரோப்பிய நாடு இதுவாகும்.
- நகராட்சிகள் தற்பொழுது “பொலிவுறு நகரங்கள்” திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையங்களை கோவிட் – 19 நோய்த் தொற்றின் கட்டுப்பாட்டு அறைகளாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன.
- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 அன்று, உலகின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார நாடான ஜப்பான் கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக அவசர நிலையை அறிவித்துள்ளது.
    - ஜப்பான் நாடானது, அதன் அதிக எண்ணிக்கையிலான மூத்த குடிமக்களுக்காக அறியப் படுகின்றது.
- சேப் (SAFE - SIDBI Assistance to Facilitate Emergency Response) திட்டம் என்பது கரோனா வைரஸிற்கு எதிரான அவசரகால எதிர்வினைக்கு வழிவகை செய்யும் SIDBI வங்கியின் ஒரு நிதி உதவித் திட்டமாகும்.
    - இதன் கீழ், இந்திய சிறு தொழிற்துறைகள் வளர்ச்சி வங்கியானது (SIDBI - Small Industries Development Bank of India) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அவசரகாலச் செயல்பாட்டு மூலதனமாக ரூ.1 கோடியை வழங்க உள்ளது.
- இந்தியப் பழங்குடியினக் கூட்டுறவுச் சந்தையிடல் வளர்ச்சிக் கூட்டமைப்பானது யுனிசெப் அமைப்புடன் சேர்ந்து பழங்குடியின வாசிகள் கூட்டாக இணைந்து பாதுகாப்புடன் பணியாற்றுவதற்காக டிஜிட்டல் தகவல் தொடர்பு உத்தியைத் தொடங்கியுள்ளது.
    - இந்தத் திட்டமானது சமூக விலகலின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- தேசிய தலைநகர்ப் பகுதியின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஷீல்ட் என்ற பெயரில் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையை) Operations Shield) தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கியுள்ளார்.
    - SHIELD என்பது முடக்குதல், வீடுகளில் தனிமைப்படுத்துதல், தனிமைப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல், அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம், உள்ளூர் சுகாதாரம் மற்றும் வீடுகளுக்கே சென்று சோதனையிடல் என்பதைக் குறிக்கின்றது.
- பஞ்சாப் மாநில அரசானது அம்மாநிலத்தில் கோவிட் – 19 தொற்று நோய்க்கான முடக்கத்தை மே ஒன்றாம் தேதி வரை நீட்டித்துள்ளது. ஒடிசாவிற்குப் பிறகு ஊரடங்கை நீட்டித்த இரண்டாவது மாநிலம் பஞ்சாப் ஆகும்.
    - பஞ்சாப் மாநிலம் குளிர்கால – வசந்த காலப் பயிர்களை அறுவடை செய்வதற்காக முடக்கத்திலிருந்து சில மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு விதிவிலக்கு அளித்துள்ளது.

- டாடா பவர் நிறுவனத்தின் டாகா முன்னெடுப்பானது 1.2 இலட்சம் முகமூடிகளை உற்பத்தி செய்து மகாராஷ்டிரா மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் விநியோகித்துள்ளது.
  - இந்தியாவில் எந்தவொருப் பெரு நிறுவனத்தினாலும் மேற்கொள்ளாத வகையில் அதிக அளவில் முகமூடிகளை விநியோகிப்பது இதுவே முதன்முறையாகும்.
- மத்திய உள்துறை அமைச்சகமானது நாடு முடக்கத்திலிருந்து மீன்பிடி மற்றும் மீன் வளர்ப்புத் தொழிற்சாலைகளுக்கு விலக்கு அளித்துள்ளது.
  - ஆரம்பத்தில் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளுக்கும் விலக்கு அளிக்கப் பட்டது.
- ஐரோப்பிய ஒன்றியமானது ஐரோப்பா முழுவதும் கொரானா நோய்த் தொற்றின் தாக்கத்தைக் கையாளுவதற்காக €500 மில்லியன் என்ற அளவிற்கு ஒரு கொரானா மீட்பு நிதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது.
  - யூரோ மண்டல கடன் நெருக்கடிப் பிரச்சனையின் போது உருவாக்கப்பட்ட பிணை எடுப்பு நிதியான ஐரோப்பிய நிலைத் தன்மை செயல்முறையின் கீழ் உள்ள மொத்தம் €240 பில்லியன் நிதியைப் பெறுவதற்கு ஐரோப்பிய அரசாங்கங்கள் கோரலாம்.
- இந்தியா விசாகப்பட்டினம் (1.3 மில்லியன் டன்கள்), படூர் (2.5 மில்லயன் டன்கள்) மற்றும் மங்களூர் (1.5 மில்லியன் டன்கள்) ஆகிய 3 இடங்களில் யுக்திசார் பெட்ரோலிய சேமிப்பு வசதிகளைக் கொண்டுள்ளது.
- மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது "பாரத் பதே நிகழ்நேரப் பிரச்சாரம்" என்ற ஒரு வார கால அளவுள்ள பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
  - இந்தப் பிரச்சாரமானது இந்தியாவில் நிகழ்நேர (ஆன்லைன்) கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மதராஸ் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான V. கனகராஜ் என்பவர் ஆந்திரப் பிரதேசத்தின் மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப் பட்டுள்ளார். ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் N. ரமேஷ் குமார் என்பவரை அப்பதவியிலிருந்து உடனடியாக நீக்கிய பின்பு இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ்நாடு மாநில அரசானது ஏப்ரல் 7 ஆம் தேதியன்று மயிலாடுதுறையை (தலைநகர் – மயிலாடுதுறை) மாநிலத்தின் 38வது மாவட்டமாகக் அதிகாரப் பூர்வமாகப் பிரித்து, அதற்கான ஒரு அரசாணையை வெளியிட்டுள்ளது.
  - இந்தப் புதிய மாவட்டமானது நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து உருவாக்கப் பட்டதாகும்.
- தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் ஏறத்தாழ 690 இலட்சத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன.
- மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது முதலமைச்சர் நிவாரண நிதி மற்றும் மாநில நிவாரண நிதி ஆகியவற்றிற்கு கொடுக்கப்படும் நன்கொடைகள் பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமைச் செலவினமாக (CSR - Corporate Social Responsibility) கருதப்பட மாட்டாது என்று கூறியுள்ளது. ஆனால் "PM CARES" நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகள் CSR ஆகக் கருதப்படும் என்று கூறியுள்ளது.
- காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையமானது இரட்டை அடுக்கு கொண்ட காதி முகமூடிகளைத் தயாரித்துள்ளது.
  - இந்த முகமூடிகள் உத்தரப் பிரதேசம் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி மற்றும் கம்பளியால் மட்டுமே தயாரிக்கப் பட்டுள்ளன.

- மத்திய உள்துறை அமைச்சகமானது நாட்டில் உள்ள இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக நலத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.
  - 1979 ஆம் ஆண்டின் மாநிலங்களுக்கிடையேயான இடப்பெயர்வுத் தொழிலாளர்கள் நலச் சட்டமானது நாட்டில் இடப்பெயர்வுத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பாதிப்பின் காரணமாக முதன்முறையாக திருச்சூர் பூரம் திருவிழாவானது இரத்து செய்யப் பட்டுள்ளது.
  - இது கேரளாவில் "அனைத்துத் திருவிழாக்களின் தாய்" என்று அழைக்கப் படுகின்றது.
- தில்லி அரசானது மக்களின் வீடுகளுக்கேச் சென்று ஆய்வை மேற்கொள்வதற்காக "அசெஸ் கொரோ னா" என்ற ஒரு செயலியைத் தொடங்கியுள்ளது.
  - இந்தச் செயலியானது கோவிட் – 19 நோய்த் தொற்று கட்டுப்படுத்தும் மண்டலங்களில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்திய அரசானது மண்டிகளுக்கு (சந்தைகளுக்கு) விவசாயிகளின் விவசாயப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு உதவுவதற்காக "கிரிஷி ரத்" என்ற ஒரு செயலியைத் தொடங்கியுள்ளது.
  - வர்த்தகர்கள் இந்தச் செயலியின் மூலம் வேளாண் உற்பத்திப் பொருள்கள் குறித்து அறிந்து கொள்ள முடியும். வர்த்தகர்கள் பல்வேறு விவசாயிகளினால் அனுப்பப் பட்டுள்ள சரக்குகளை இதன் மூலம் ஒருங்கிணைக்க முடியும்.
- ஆசியக் கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது இந்தியாவின் சுகாதார நல அமைப்புகளை மேம்படுத்துவதற்கு உதவுவதற்காக நாட்டில் உள்ள திட்டங்களுக்கு 500 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை அளிக்க இருக்கின்றது.
  - சமீபத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியானது இந்தியாவிற்கு 2.2 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியை வழங்க உள்ளதாக அறிவித்தது.
- காரீப் பருவகாலப் பயிர்கள் தொடர்பான தேசியக் கருத்தரங்கு 2020-21 ஆம் ஆண்டிற்கான உணவு தானியங்களின் இலக்கை 298 மில்லியன் டன்களாக நிர்ணயம் செய்துள்ளது.
  - 2019-20 ஆம் ஆண்டில் 291 மில்லியன் டன்கள் இதன் இலக்காக இருந்தது.
- இந்திய இராணுவமானது நரேலா தனிமைப்படுத்துதல் மையத்திற்குத் தனது ஆதரவினை நீட்டித்துள்ளது.
  - தில்லி அரசினால் ஏற்படுத்தப்பட்ட இந்த மையமானது நாட்டின் மிகப்பெரிய தனிமைப்படுத்துதல் மையமாக விளங்குகின்றது.
- சமுதாயச் சமையலறைகளுக்குப் புவியிடங் காட்டிக் குறியீட்டை வழங்கிய முதலாவது மாநிலமாக உத்தரப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
  - இது மாநிலத்தில் சமுதாயச் சமையலறைகளுக்குப் புவியிடங் காட்டிக் குறியீட்டை வழங்குவதற்காக கூகுள் நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
- அமெரிக்க அதிபரான டொனால்டு ட்ரம்ப் இந்திய – அமெரிக்கரான சுதர்சனம் பாபு என்பவரை அமெரிக்க தேசிய அறிவியல் வாரியத்தின் உறுப்பினராக நியமித்து உள்ளார்.
- மத்திய உள்துறை அமைச்சகமானது கொரானா வைரஸ் பிரச்சினை உள்ளவர்களுக்கு உதவுவதற்காக தனது கட்டுப்பாட்டு அறையில் இரண்டு புதிய உதவி மைய எண்களை அறிவித்துள்ளது.

- 1930 (அகில இந்திய அளவில் இலவச உதவி எண்) மற்றும் 1944 (வடகிழக்கு மாநிலங்களுக்கு என்று பிரத்தியேகமாக) ஆகியவை இந்த 2 எண்களாகும்.

❖ உத்தரகாண்ட்டில் அமைந்துள்ள இந்தியாவின் மிகப் பழமையான தேசியப் பூங்காவான ஜிம் கார்பெட் தேசியப் பூங்காவானது விலங்குகளுக்காக தனிமைப்படுத்துதல் வசதிகளைக் கட்டமைத்துள்ளது.

- விலங்குகளுக்கான தனிமைப்படுத்துதல் வசதி அமைக்கப் பட்டுள்ள இந்தியாவின் முதலாவது தேசியப் பூங்கா இதுவாகும்.

❖ இந்தியாவின் மூன்றாவது மிகப்பெரிய மோட்டார் – சைக்கிள் உற்பத்தியாளரான டிவிஎஸ் மோட்டார் நிறுவனமானது பிரிட்டனைச் சேர்ந்த நார்டான் மோட்டார் சைக்கிள் நிறுவனத்தை வாங்குவதற்காக 20 மில்லியன் டாலர் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ளது.

- டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஒரு பகுதியாக மாறிய ஜாகுவார் நிறுவனத்திற்குப் பிறகு, புகழ்பெற்ற பிரிட்டனைச் சேர்ந்த நிறுவனத்தின் மீது ஆசிய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஒப்பந்தம் இதுவாகும்.

❖ சர்வதேச நாணய நிதியத்தின் மேலாண் இயக்குநரான கிறிஸ்டலினா ஜார்ஜீவா என்பவர் ஆர்பிஐயின் முன்னாள் ஆளுநரான ரகுராம் ராஜன் மற்றும் இதர 11 நபர்களை தனது அயலக ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்துள்ளார்.

- கோவிட் – 19 தொற்றிற்கான எதிர்வினைகள் உள்ளிட்ட உலகம் முழுவதும் நிகழும் வளர்ச்சி மற்றும் முக்கியமான கொள்கைப் பிரச்சனைகள் குறித்து பல்வேறு கோணங்களை இது அளிக்கின்றது.

❖ கோவா மாநிலத்திற்குப் பிறகு, கோவிட் – 19 தொற்று நோயற்ற மாநிலமாக மணிப்பூர் மாநிலம் உருவெடுத்துள்ளது.

- இந்த வரிசையில் இந்தியாவில் 2வது மாநிலம் இதுவாகும்.

❖ தமிழ்நாடு மாநிலத்தில் கோவிட் – 19 பாதிப்புகளின் பரிசோதனைகளுக்கு உதவுவதற்காக, அம்மாநிலத்திற்கு 8 கோடிக்கும் மேல் மதிப்பு கொண்ட 40,000 பிசிஆர் உபகரணங்களை டாடா குழுமம் வழங்கியுள்ளது.

❖ தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணியாளர்களின் தினக் கூலியானது 229 ரூபாயிலிருந்து 27 ரூபாய் அதிகரிக்கப் பட்டு, 256 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

❖ முன்னணியில் இருக்கும் 7 இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களான மும்பை, தில்லி, குவஹாத்தி, கான்பூர், மதராஸ், ரூர்க்கி ஆகியவை டைம்ஸ் உயர் கல்வி (THE - Times Higher Education) நிறுவனம் மேற்கொள்ளும் உலகத் தர வரிசையில் பங்கேற்பதில்லை என்று முடிவு செய்துள்ளன.

- இவை, THE தரவரிசையின் வெளிப்படைத் தன்மை குறித்து சந்தேகிக்கின்றன.

❖ குஜராத் மாநில அரசானது "சுஜாலம் சுபாலம் ஜல் சஞ்சய் அபியான்" என்ற திட்டத்தின் மூன்றாவது பதிப்பிற்காக தனது ஒப்புதலை அளித்துள்ளது.

- இது பருவமழை காலத்திற்கு முன்னர் அம்மாநிலத்தில் உள்ள நீர் நிலைகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நீர்ப் பாதுகாப்புத் திட்டமாகும்.

❖ சையம் என்பது பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் புனே மாநகராட்சிக் கழகத்தினால் மேம்படுத்தப்பட்ட ஒரு கைபேசிச் செயலியாகும்.

- இது வீட்டுக் கண்காணிப்பில் உள்ள மக்களைத் திறம்படக் கண்காணிப்பதற்காகவும் அவர்கள் வீடுகளில் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் வேண்டி உருவாக்கப் பட்டுள்ளது.

- "வித்யாதான் 2.0" என்பது மின்னணு கற்றல் (e-learning) உள்ளடக்கப் பங்களிப்புகளை வரவேற்பதற்கான ஒரு தேசியத் திட்டமாகும்.
  - இது மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தால் தொடங்கப் பட்டுள்ளது.
- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது தொடக்க நிலைக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி (8 ஆம் வகுப்பு வரை) வகுப்புகளுக்கான மாற்றுக் கல்வி ஆண்டு அட்டவணையை வெளியிட்டுள்ளது.
- கர்நாடக மாநில அரசனாது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக "ஆப்தமித்ரா" என்ற கைபேசிச் செயலி மற்றும் ஒரு உதவி எண்ணைத் தொடங்கியுள்ளது.
- கப்பல் போக்குவரத்தின் முன்னாள் பொது இயக்குநரான மாலினி சங்கர் அவர்களால் தலைமை தாங்கப்படும் வகையில் தேசியக் கப்பல் போக்குவரத்து வாரியத்தை மாற்றி அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
  - இந்தியக் கப்பல் போக்குவரத்து தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆலோசனை வழங்கும் உயரிய அமைப்பு இதுவாகும்.
- கோவிட் – 19 நோய்த் தொற்று வெடிப்பு தொடங்கியதிலிருந்து, அதில் பாதிக்கப்படாத ஒரே இந்திய மாநிலம் சிக்கிம் ஆகும்.
  - கோவா மற்றும் மணிப்பூர் ஆகியவற்றிற்குப் பிறகு கொரானா நோய்த் தொற்று அற்ற 3வது மாநிலம் திரிபுரா ஆகும்.
- தமிழ்நாடு மாநிலத்தின் முன்னாள் தேர்தல் ஆணையரான இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சோ.அய்யர் சீர் மரபினர் (Denotified Community) நல வாரியத்தின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- 1891 ஆம் ஆண்டின் ஆங்கிலேய மணிப்பூர் போரில் போரிட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக மணிப்பூரில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 23 அன்று கொங்ஜோம் தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
  - மணிப்பூரின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு வேண்டி பிரிட்டீஷாருக்கு எதிராக மணிப்பூரில் உள்ள கொங்ஜோமின் கேபா மலைப் பகுதியில் ஏற்பட்ட போரில் இவர்கள் உயிர் நீத்தனர்.
- தடை செய்யப்பட்ட மருந்துக் கலவையின் அளவு மட்டுமே குற்றவாளியின் தண்டனையை முடிவு செய்யும் என்றும் மருந்தின் தூய்மைத் தன்மையானது தண்டனையை முடிவு செய்யாது என்றும் இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
  - 1985 ஆம் ஆண்டின் போதை மருந்துகள் மற்றும் மனோவியல் பொருள்கள் சட்டம் என்பதின் கீழ் உச்ச நீதிமன்றத்தால் இது தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.
- ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான சஞ்சய் கோத்தாரி என்பவர் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக ராஷ்டிரபதி பவனில் பொறுப்பேற்றுக் கொண்டார்.
  - இவருக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- நாசா அமைப்பானது பிரத்தியேகமாக கோவிட் – 19 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ஒரு புதிய செயற்கை சுவாசக் கருவியை வடிவமைத்துள்ளது.
  - இந்த சுவாசக் கருவியானது விட்டல் (VITAL - Ventilator Intervention Technology Accessible Locally) அல்லது "செயற்கை சுவாசக் கருவி இடைமுகத் தொழில்நுட்ப உள்ளக அணுகல்" என்று அழைக்கப் படுகின்றது.

- மொத்தமுள்ள 8 வடகிழக்கு மாநிலங்களில் மணிப்பூர், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கோவிட் – 19 தொற்று நோயற்ற மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
  - மேகாலயா, அசாம் மற்றும் மிசோரம் ஆகிய 3 இதர மாநிலங்களில் புதிய பாதிப்புகள் எதுவும் பதிவாகவில்லை.
- சவுதி அரேபியாவானது குழந்தைகளின் மீதான குற்றங்களுக்காக கசையடியை ஒரு மரண தண்டனையாக அறிவிப்பதை ஒழித்துள்ளது.
  - தற்பொழுது நீதிபதிகள் அதற்கான மாற்று வழி முறையாக அபராதங்கள், சிறைத் தண்டனைகள் மற்றும் பாதுகாவலற்ற சிறைத் தண்டனைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- நிலவின் ஒருங்கிணைந்த நிலப்பரப்பு வரைபடமானது மெய் நிகர் வடிவில் (1:5,000,000 என்ற அளவில்) அமெரிக்கப் புவியியல் ஆய்வு நிறுவனம் (USGS - United States Geological Survey), தேசிய விண்வெளிப் பயண மற்றும் விண்வெளி நிர்வாகம் (NASA - National Aeronautics and Space Administration) மற்றும் நிலவுக் கோள் நிறுவனம் ஆகியவற்றினால் இணைந்து வெளியிடப் பட்டுள்ளது.
  - இது நிலவின் முதலாவது டிஜிட்டல், ஒருங்கிணைந்த, உலகளாவிய நிலப்பரப்பு வரைபடம் ஆகும்.
- புனேவில் உள்ள தடுப்பு மருந்து நிறுவனமான இந்தியக் குருதி ஊனீர் நிறுவனமானது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தால் மேம்படுத்தப்பட்ட கோவிட் – 19 தடுப்பு மருந்தின் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்து உள்ளது.
  - ஏற்கெனவே இந்த நிறுவனம் இதற்கு முன்பு மலேரியா நோய்த் தடுப்பு மருந்து திட்டத்திற்காக, தடுப்பு மருந்தை உற்பத்தி செய்யும் உலகளாவிய 7 நிறுவனங்களில் ஒன்றான ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## மலைப் பகுதிகளுக்கான விதிகள், 2020

- தமிழ்நாடு மாநில அரசானது, மலைப் பகுதிகள் உள்பட நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் இருக்கும் அனுமதி பெறாத வாழ்விடங்கள் (அல்லது அமைவிடங்கள்) மற்றும் மனைகளை ஒழுங்குபடுத்த முடிவு செய்துள்ளது.
- தமிழ்நாடு அரசானது மலைப் பகுதிகளில் உள்ள அனுமதி பெறாத வாழ்விடங்கள் மற்றும் மனைகள் ஆகியவற்றுக்கான தமிழ்நாடு ஒழுங்குமுறை என்ற ஒரு அறிவிப்பாணையை வெளியிட்டுள்ளது.
- மலைப் பகுதி பாதுகாப்பு ஆணையத்தின் (HACA - Hill Area Conservation Authority) கட்டுப்பாட்டில் வரும் மலைப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான அனுமதி பெறாத வாழ்விடங்கள் அமைந்துள்ளன.
- மார்ச் 30 அன்று வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சித் துறையினால் வழங்கப்பட்ட ஒரு அரசாணையானது இது போன்ற வாழ்விடங்களில் உள்ள மனைகளானது “ஏழை மற்றும் அப்பாவி மக்களால்” வாங்கப் பட்டுள்ளது என்று கூறுகின்றது.
- இந்த அமைவிடங்களை அவற்றின் முந்தையப் பயன்பாட்டிற்கு மீண்டும் பயன்படுத்த முடியாது.

- இருப்பினும், இந்த அரசாணையானது யானைப் பெருவழித் தடங்கள் மற்றும் சில பகுதிகளின் கீழ் வராத பகுதிகளில் உள்ள அனுமதி பெறாத அமைவிடங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது.
- இந்த அரசாணையானது குடியிருப்புக் கட்டமைப்புகளுக்கு மட்டுமே பயனளிக்கும் வகையில் வெளியிடப் பட்டுள்ளது. இந்த ஆணையானது வணிக ரீதியான கட்டமைப்புகளுக்குப் பயனளிக்காது.
- மாநில அரசானது அனைத்து யானைப் பெருவழித் தடங்களை இனிமேல் தான் அறிவிக்க இருக்கின்றது. இது வனவிலங்குச் சரணாலயங்களைச் சுற்றி இடைமுகப் பகுதிகளை (Buffer Zones) அறிவிக்க இருக்கின்றது.

## தென்னம்பாளையத்தில் தொற்றுநீக்கிச் சுரங்கம்

- தமிழ்நாட்டின் திருப்பூரில் உள்ள தென்னம்பாளையம் சந்தையில் இந்தியாவிலேயே முதன்முறையாக தொற்றுநீக்கிச் சுரங்கப்பாதை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.
- இந்த அமைப்பானது திருப்பூரில் ஒரு நீர் சுத்திகரிப்பு நிறுவனத்தை வைத்திருக்கும் டி.வெங்கடேசன் என்பவரது சிந்தனையாகும்.




## தமிழ்நாடு முதலமைச்சரின் சமீபத்திய அறிவுப்புகள்

- தமிழ்நாடு மாநில இந்து சமய அறநிலையத் துறையானது "திருக்கோவில்" என்ற ஒரு தொலைக்காட்சி அலைவரிசையைத் தொடங்க இருப்பதாக தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்துள்ளார்.
- பாரம்பரிய நெல் வகைகள் பாதுகாப்பு மையமானது திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலத்தில் தொடங்கப்பட இருக்கின்றது.
- தமிழ்நாடு மாநில உயர் கல்வி மையத்தின் வளாகத்திற்கு டாக்டர் ஜெ. ஜெயலலிதா வளாகம் என்று பெயர் சூட்டப்பட இருக்கின்றது. தமிழ்நாடு மாநிலத்தில் உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கைக்கு இவர் ஆற்றியப் பங்களிப்பிற்காக அதற்கு இவரது பெயர் சூட்டப்பட இருக்கின்றது.
- மேலும் இந்த வளாகத்தில் ஜெயலலிதாவின் சிலையும் அமைக்கப்பட இருக்கின்றது.
- தூத்துக்குடி மாவட்டத்தின் வல்லநாட்டில் உள்ள மணி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் படைத் தளபதியான வெள்ளையத் தேவனின் சிலை திறக்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

- திருவண்ணாமலை மாவட்டத்தின் செய்யாறில் உள்ள தொழிற்துறைப் பூங்காவில் ஒரு மருந்துப் பூங்கா அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார்.
- தொழிலாளர்களின் நீண்ட காலக் கோரிக்கையை ஏற்று துப்பரவுப் பணியாளர்கள் (பாதுகாப்புப் பணியாளர்கள்) இனி தூய்மைப் பணியாளர்கள் என்று அழைக்கப்படுவர் எனத் தமிழக முதல்வர் அறிவித்து உள்ளார்.
- ஜப்பானிய முறையான மியாவாக்கி என்ற காடுகள் வளர்ப்பு முறையானது தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில் இருக்கும் பயன்படுத்தப்படாத திறந்தவெளிப் பகுதிகளில் காடுகளை அதிகரிக்கப் பயன்படுத்தப்பட இருக்கின்றது என்று முதல்வர் அறிவித்து உள்ளார்.

## தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், 1939

- இச்சட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநிலம் முழுவதும் கரோனா பாதிப்பு மண்டலமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- அரசாங்கக் கட்டிடங்கள், தனியார் கட்டிடங்கள், மருத்துவமனைகள், தங்கும் விடுதிகள் மற்றும் நிறுவனங்கள் போன்ற இடங்கள் பார்வையாளர்களுக்குத் தேவையான நீர்க் குழாய்கள், கை கழுவும் இடங்கள், கை கழுவும் திரவம் மற்றும் சோப்புகள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.
- பார்வையாளர்கள், அவர்களது கைகளைக் கழுவிய பின்னரே இந்தப் பகுதிகளுக்குள் நுழையவும், வெளியேறவும் அனுமதிக்கப் பட வேண்டும்.
- கோவிட் – 19 பாதிப்பு குறித்து ஏதேனும் தகவல் இருப்பின் ஆய்வகங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோர் அது குறித்து 24 மணி நேரத்திற்குள் பொதுச் சுகாதார மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரகத்திற்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.
- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் தங்களது வளாகங்களில், கோவிட் – 19 நோய்த் தொற்றைத் தடுப்பதற்காக நோய்த் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
- தமிழ்நாடு மாநில அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றை தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், 1939ன் கீழ் "அறிவிக்கப்பட்ட நோயாக" அறிவித்து உள்ளது.
- இந்த ஒழுங்கு முறைகள் தொற்று நோய்கள் சட்டம், 1897-ன் கீழ் குறிப்பிடப் பட்டுள்ளன.
- இந்த அறிவுறுத்தல்களைக் கடைபிடிக்கத் தவறியவர்கள் மேலே கூறிய இரண்டு சட்டங்களின் விதிமுறைகளின் கீழ் நடவடிக்கைகளை எதிர் கொள்ள நேரிடும்.
- இது தவிர, இந்த விதிமுறைகளை மீறியவர்கள் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 188-ன் கீழ் 6 மாத சிறைத் தண்டனையையோ அல்லது அபராதத்தையோ அல்லது இரண்டையுமோ எதிர்கொள்ள நேரிடுவர்.
- பின்வரும் சட்டங்கள் தொற்று நோய்கள் மற்றும் கொள்ளை நோய்களின் போது தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வழிவகை செய்கின்றது.
    - இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 260 மற்றும் 270 (உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் ஆபத்தான நோய்களைப் பரப்பும் வகையில் அலட்சியமாக அல்லது கொடிய நோய்களைப் பரப்பும் வகையில் செயல்படுதல்)
    - தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், 1939.
    - தொற்று நோய்கள் சட்டம், 1897
    - பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005

## வீடுகளுக்கேச் சென்று நிதி வழங்குதல்

- ஊரடங்கின்போது வீட்டை விட்டு வெளியேச் செல்ல முடியாத வாடிக்கையாளர்களுக்காக, இந்திய அஞ்சலகப் பணவழங்கீட்டு வங்கியானது (IPPB - Indian Postal Payments Bank) ஆதாரின் உதவியுடன் "வீடுகளுக்கேச் சென்று நிதி வழங்குதல்" எனும் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- இந்த முயற்சியின் கீழ் ஒருவர் ரூ.10000 வரையிலான பணத்தைப் பெற முடியும்.
- இந்த முயற்சியின் கீழ் ஒருவர் ஆதாரால் செயல்படுத்தப்பட்ட பணவழங்கீட்டு முறையின் மூலம் ஆதாருடன் இணைக்கப்பட்ட எந்தவொரு வங்கிக் கணக்கிலிருந்தும் அவரது பணத்தைப் பெற முடியும்.
- வாடிக்கையாளரின் அடையாளத்தை உறுதி செய்வதற்காக தபால் அலுவலரிடம் உள்ள பயோமெட்ரிக் (உயிரித் தரவு) சாதனத்தில் வாடிக்கையாளர் தனது கை விரல்களை வைத்து உறுதி செய்ய வேண்டும்.
- IPPB என்பது மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அஞ்சல் துறையின் கீழ் செயல்படுகின்ற முழுவதும் அரசாங்கத்தால் நிர்வகிக்கப் படும் ஒரு பொதுத் துறை வங்கியாகும்.
- 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று இந்திய அஞ்சல் துறையானது பணவழங்கீட்டு வங்கியைச் செயல்படுத்துவதற்காக இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அனுமதியைப் பெற்றது.
- IPPBன் இந்தத் தலைமைத் திட்டமானது 2017 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று ராய்ப்பூர் மற்றும் ராஞ்சியில் தொடங்கப்பட்டது.
- இது 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆதாரால் செயல்படுத்தப்பட்ட பணவழங்கீட்டு முறைச் சேவையைத் தொடங்கியது.




## டிஎன்பிஎஸ்சியின் புதிய தலைவர்

- தமிழ்நாடு அரசானது மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான கே. பாலச்சந்திரன் என்பவரை தமிழ்நாடு அரசுப் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC- Tamil Nadu Public Service Commission) தலைவராக நியமித்து உள்ளது.
    - TNPSCயின் தற்போதைய தலைவர் அருள்மொழி ஆவார்.

## மாற்றுத் தடுப்பு மருந்து அறிவியல்

- தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகமானது மாற்றுத் தடுப்பு மருந்து அறிவியலின் மூலம் சார்ஸ் Cov – 2 தொற்றிற்கு எதிராக ஒரு தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளது.

- மாற்றுத் தடுப்பு மருந்து அறிவியலைப் பயன்படுத்தி உலகம் முழுவதும் மெனிங்கோகாக்கள் மற்றும் ஸ்டாபைலோகோக்கள் (meningococcal and staphylococcal) போன்ற தொற்றுகளுக்காக தடுப்பு மருந்துகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- முதல் நிலையில், இந்தப் பல்கலைக்கழகமானது வைரஸ் மரபணுவை கட்டுப்படுத்தக் கூடிய செயற்கை பாலிபெப்டைடு என்ற ஒரு மூலக்கூறை உருவாக்கியுள்ளது. இது ஆராய்ச்சியின் இரண்டாம் கட்டத்திற்குச் செல்ல இருக்கின்றது.
- பல்கலைக்கழகமானது அந்த “பாலிபெப்டைடுக்கு” இன்னும் பெயர் சூட்டவில்லை.
- இதன் துணை வேந்தர் சுதா சேஷய்யன் ஆவார்.

### ஆரோக்கியம் திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசானது “ஆரோக்கியம்” என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், சித்த மருந்தான கபசுரக் குடிநீர் மற்றும் நிலவேம்புக் குடிநீர் கலக்கப்பட்ட பொடி ஒன்றை அரசானது விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.
- இது கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கான சிகிச்சை முறை அல்ல. இது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்துவதற்காக மட்டுமே வழங்கப்படுகின்றது.

## தேசியச் செய்திகள்


### இந்தியத் தண்டனைச் சட்டத்தை செயல்படுத்துதல்

- உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் எந்தவொரு நோயைப் பரப்பும் எவ்விதமான நடவடிக்கையிலும் தீவிரமாக ஈடுபடும் நபர்களுக்கு (malignantly) எதிராக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் (IPC – Indian Penal Code) பிரிவு 269 மற்றும் பிரிவு 270 ஆனது செயல்படுத்தப் படுகின்றது.
- பிரிவு 269 ஆனது 6 மாத சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்க வழிவகை செய்கின்றது. பிரிவு 270 ஆனது 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்க வழிவகை செய்கின்றது.
- பிரிவு 270ல் “கேடு விளைவிக்கின்ற” என்ற சொற்றொடரானது குற்றம் சுமத்தப்பட்டவர் நோயைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணத்துடனேயேச் செயல்பட்டார் என்பதைக் குறிக்கின்றது.

### இரயில்வேயின் தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகள்

- இந்திய இரயில்வே ஆனது 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை 3.2 இலட்சம் மக்கள் சிகிச்சை பெறும் வகையில் 20,000 இரயில் பெட்டிகளை மாற்றியமைத்துள்ளது.
- கோவிட் – 19 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான தனிமைப்படுத்துதல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்திய இரயில் பெட்டிகள் தனிமைப்படுத்தப்பட்ட அறைகளாக மாற்றப் பட்டுள்ளன.
- ஓர் இரயில் பெட்டியில் 16 தனிமைப்படுத்தப்பட்ட படுக்கைகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த இரயில் பெட்டிகள் செவிலியர் அறைகளையும் கொண்டுள்ளது.

- குளிர்சாதன வசதியற்ற இரயில் பெட்டிகள் மட்டுமே தனிமைப்படுத்தப் பட்ட அறைகளாக மாற்றப்படுகின்றன.
- இந்தியாவில் 18 இரயில்வே மண்டலங்கள் உள்ளன.



## ''Stranded in India'' என்ற இணையதளம்

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுவதற்காக "Stranded in India" (இந்தியாவில் தவிப்போர்) என்ற ஒரு இணையத் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் தளமானது கோவிட் – 19 தொற்று நோயின் அச்சுறுத்தல் மற்றும் முடக்க நிலை காரணமாக தங்கள் தாயகத்தில் இருந்து வெகு தூரம் வரையில் நம்நாட்டிற்குப் பயணித்து வந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தகவல் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சமூக வன வளங்கள்

- மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது சமூக வன வள உரிமைகள் குறித்த ஓர் ஆய்வை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆய்வின் படி, சமூக வன உரிமைகளைச் செயல்படுத்த விரிவான வழிகாட்டுதல்கள் தேவைப்படுகின்றன.
- வன உரிமைகள் சட்டம் என்று அழைக்கப்படும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் இதர பாரம்பரியமாக காடுகளில் வசிப்பவர்கள் சட்டம், 2016 ஆனது சமூக வன வள உரிமைகளை வரையறுக்கின்றது.
- மேலும் இது ஒரு கிராமம் தான் பாரம்பரியமாக வைத்திருக்கும் வனங்களை அந்த கிராமமே பெறும் என்றும் கூறுகின்றது.
- இது வனங்களைப் பாதுகாத்தல், அவற்றை மீண்டும் உருவாக்கல் போன்றவைகளை மேற்கொள்ள கிராம சபைகளிடம் அதிகாரங்களை வழங்குகின்றது.
- இந்திய அரசியலமைப்பின் 73வது அரசியலமைப்புத் திருத்தமானது சமூக வனங்களை நிர்வகிக்க கிராம சபைகளிடம் அதிகாரங்களை வழங்குகின்றது.
- இருப்பினும் சமூக வன உரிமைகளைச் செயல்படுத்த இதுவரை எந்தவொரு வழிகாட்டுதலும் இல்லை.
- உள்ளூர் நிலைமை மற்றும் அவர்களின் (வனங்களில் வசிப்பவர்கள்) பாரம்பரியத்தைப் பொறுத்து மாநில அரசுகள் வழிகாட்டுதல்களை உருவாக்க வேண்டும்.




## PM Cares நிதி குறித்த அவசரச் சட்டம்

- PM Cares நிதிக்காக நிதியுதவி அளிக்கப்படும் நிதிக்கு 100 சதவிகிதம் வரி விலக்கை அனுமதிப்பதற்காக ஓர் அவசரச் சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றியுள்ளது.
- இந்த அவசரச் சட்டமானது நேரடி வரி மற்றும் மறைமுக வரியைத் தாக்கல் செய்வதற்கான கால வரம்பை 2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.

## மருத்துவச் சாதனங்கள் மருந்துகளாக அறிவிப்பு

- தேசிய மருந்துகள் விலை நிர்ணய ஆணையமானது (NPPA - National Pharmaceutical Pricing Authority) பட்டியலிடப்பட்ட 883 மருந்துகளின் உச்ச விலை வரம்பை மாற்றியமைத்துள்ளது.
- NPPA ஆனது மருந்துகள் மற்றும் அழகுப் பொருட்கள் சட்டம், 1940ன் கீழ் மருத்துவ உபகரணங்களின் 24 பிரிவுகளை மருந்துகளாக அறிவித்துள்ளது.
- இந்த மருத்துவ உபகரணங்கள் தரக் கட்டுப்பாடு மற்றும் விலைக் கண்காணிப்பிற்காக மருந்துகளாகக் கருதப்பட்டு, கண்காணிக்கப் படுகின்றன.




## கோவிட் – 19 குறித்த சர்வதேச ஓவியப் போட்டி

- கலாச்சார உறவுகளுக்கான இந்திய ஆணையமானது (ICCR - Indian Council for Cultural Relations) உலகளாவிய ஓவியப் போட்டியைத் தொடங்கியுள்ளது.
- இதன் தலைப்பு "கரோனாவிற்கு எதிராக ஒன்றிணைதல் - கலையின் மூலம் வெளிப்படுத்துதல்" என்பதாகும்.
- ICCR ஆனது இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் என்பவரால் 1950 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

## ஆரோக்கிய சேது

- மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசியத் தகவல் மையமானது "ஆரோக்கிய சேது" என்ற ஒரு செயலியைத் தொடங்கியுள்ளது.
- இந்த செயலியானது கோவிட் – 19 தொற்றால் பாதிக்கப்பட்ட நபர் வேறு ஒரு நபரிடம் இருந்து 6 அடி வரம்பிற்குள் இருக்கும் போது அந்த நபரை (பாதிக்கப்படாமல் இருப்பவரை) எச்சரிக்கின்றது.
- இந்தச் செயலியானது கோவிட் – 19 நோயாளியின் தகவலைக் குறித்து ஆராயும் அதே சமயத்தில் பாதிக்கப்பட்டவரின் தனியுரிமையை எந்த விதத்திலும் பாதிக்காது.

## கோவிட் – 19 குறித்த தேசியக் கண்காணிப்புத் தகவல் பலகை

- மத்தியப் பணியாளர் நலன் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்பிற்கான இணையமைச்சரான டாக்டர். ஜிதேந்திர சிங், கோவிட் – 19 குறித்த தேசியக் கண்காணிப்புத் தகவல் பலகையைத் தொடங்கியுள்ளார்.
- இந்தத் தகவல் பலகையானது நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறையினால் (DARPG - Department of Administrative Reforms and Public Grievances) மேம்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தத் தகவல் பலகையின் முக்கியமான நோக்கம் கோவிட் – 19 தொற்று நோய்க்கான எதிர்வினை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் விரைவான மற்றும் தக்க நேரத்திற்கான செயல்பாடுகளாகும்.

## மின்னணு முறையிலான தேசிய வேளாண் சந்தையின் புதிய அம்சங்கள்

- மத்திய வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் மின்னணு முறையிலான தேசிய வேளாண் சந்தை (e-NAM/ Electronic National Agriculture Market) தளத்தின் புதிய அம்சங்களை வெளியிட்டுள்ளார்.
- இவை வேளாண் சந்தையை வலுப்படுத்துவதையும் விவசாயிகள் தங்களது வேளாண் பொருட்களை விற்பதற்காக நேரடியாக மண்டிக்கு கொண்டு வருவதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- e-NAM என்பது வேளாண் பொருட்களுக்கான ஒரு நிகழ்நேர வர்த்தகத் தளமாகும். இந்த நிகழ் நேர வர்த்தகத்தின் மூலம் விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வேளாண் பொருட்களைப் பெறுபவர்கள் ஆகியோருக்கு உதவுவதையும் எளிமையான சந்தையிடல் மூலம் சிறந்த விலையைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மத்திய அரசினால் 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் கீழ் உள்ள சிறு விவசாயிகள் வேளாண் வர்த்தக அமைப்பானது e-NAMஐச் செயல்படுத்தும் தலைமை அமைப்பாகும்.
- வேளாண் அமைச்சகத்தின் படி, தற்பொழுது 16 மாநிலங்களில் உள்ள 585 மண்டிகள் (சந்தைகள்) e-NAM தளத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

## ஜியோ – பென்சிங் (பூகோள வேலி)

- இது ஒரு இருப்பிடம் சார்ந்த சேவையாகும். இதில் ஒரு செயலி அல்லது பிற சில மென்பொருள்களானது புவியிடங்காட்டி, வானலை அடையாளம், கம்பியில்லாத் தகவல் பரிமாற்ற நுட்பம் அல்லது செல்லிடப் பேசி மூலம் இணைய சேவையைப்

பயன்படுத்துகிறது.

- ஒரு மொபைல் சாதனம் அல்லது வானலை அடையாளக் குறியானது புவியியல் இருப்பிடத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட மெய்நிகர் எல்லைக்குள் நுழையும் போது அல்லது வெளியேறும் போது, இது முன் வடிவமைக்கப் பட்ட ஒரு செயலைச் செயலாற்றும்படி தூண்டுகிறது. இது ஜியோ - பென்சிங் என அழைக்கப் படுகிறது.
- "ஜியோ - பென்சிங்" ஆனது 300 மீட்டர் வரை துல்லியமாக வேலை புரிகிறது.
- இந்தியத் தந்திச் சட்டம், 1885 என்ற சட்டத்தின் விதிகளின் கீழ் மாநிலங்கள் தங்கள் உள்துறை செயலாளர்களின் ஒப்புதலைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.
- "ஜியோ - பென்சிங்" வரம்பு மீறப்பட்டால் மின்னஞ்சல் அல்லது குறுந் தகவல் மூலம் சில குறிப்பிட்ட தொலைபேசி எண்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறு தொலைத் தொடர்புத் துறையைக் கோருவதற்கு இந்த ஒப்புதல் உதவி புரிகின்றது.




## 5 ஆராய்ச்சித் திட்டங்கள்

- கோவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்த இந்திய அரசானது 5 ஆராய்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்த திட்டங்கள் தடுப்பூசிகளிலோ அல்லது மருந்துகளிலோ கவனம் செலுத்துவதில்லை.
- இந்த திட்டங்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் மேற்பார்வையிட உள்ளது.
- முதல் திட்டமானது வைரஸிற்கான வளர்சிதை மாற்ற உயிரிச்சுட்டு குறிப்புகளை (metabolite biomarker signature) தேடுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இரண்டாவது திட்டமானது அறுவைச் சிகிச்சை முகமூடியில் பயன்படுத்தப் படும் வைரஸிடல் (viricidal) பூச்சுகளை உருவாக்குவதாகும்.
- மூன்றாவது திட்டமானது நோய்த்தொற்றுகள் பரவாமல் தடுக்க நச்சுயிர்முறிவிற்கான மேற்பரப்புப் பூச்சுகளை (antiviral surface coatings) உருவாக்குவதாகும்.
- நான்காவது திட்டமானது மேற்பரப்புகளில் பயன்படுத்தப்படும்போது வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்களை அகற்றும் ஒரு பொருளை உருவாக்குவதாகும்.
- ஐந்தாவது திட்டமானது கோவிட்-19 இன் நோய் எதிர்ப்பொருள் அடிப்படையிலான ஒரு பிடிப்பை உருவாக்கி அதைக் கொழுப்பு (லிப்பிட்) அடிப்படையிலான ஒரு கூழ்மத்தைப் பயன்படுத்தி செயலிழக்கச் செய்வதாகும்.

## காருணா (CARUNA)

- குடிமைப் பணியாளர்கள் கூட்டமைப்பானது காருணா (CARUNA - Civil Services Associations Reach to Support Natural Disasters) என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கி உள்ளது.
- CARUNA என்பது "இயற்கைப் பேரிடர்களுக்கு ஆதரவளிக்க முன்வரும் குடிமைப் பணியாளர்கள் கூட்டமைப்பு" என்பதாகும்.
- CARUNA என்பது ஒரு கூட்டுத் தளமாகும்.
- இது இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்தியக் காவற் பணி அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டுள்ளது.
- இந்தத் தளமானது குடிமைப் பணியாளர்களுடன் அரசு சாரா அமைப்பு, தொழிற்துறைத் தலைவர்கள், தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோரால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றது.
- இந்த முன்னெடுப்பானது கரோனா நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காகத் தொடங்கப்பட்டு இருக்கின்றது.
- இது இடப்பெயர்வு, மருத்துவ உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்கள், செயற்கை சுவாசக் கருவிகள், கையுறைகள் ஆகியவை குறித்த ஒரு தகவல் தளத்தை உருவாக்க உதவுகின்றது.
- இந்த முன்னெடுப்பானது மாவட்ட அளவில் மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் உள்ள பற்றாக்குறைகளைக் களைய உதவ இருக்கிறது.




## UberMEdic சேவை

- கோவிட் – 19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சுகாதார நலப் பணியாளர்களுக்குப் போக்குவரத்துச் சேவைகளை அளிப்பதற்காக தேசிய சுகாதார ஆணையமானது (NHA – National Health Authority) ஊபர் இந்தியாவுடன் இணைந்துள்ளது.
- இந்த வசதியானது "UberMEdic சேவை" என்ற பெயரின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.
- NHA என்பது ஆயுஷ்மான் பாரத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒரு தலைமை அமைப்பாகும்.



## நெருக்கடி குறித்த ஹேக்கத்தான் – இந்தியா

- ❖ மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான சஞ்சய் தோத்ரி என்பவர் "நெருக்கடி குறித்த ஹேக்கத்தான் – இந்தியா" என்ற ஒன்றைத் தொடங்கி உள்ளார்.
- ❖ இது கோவிட் – 19 தொற்றிற்குத் தீர்வு காண பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு நிகழ்நேர (ஆன்லைன்) ஹேக்கத்தான் ஆகும்.
- ❖ இந்த முன்னெடுப்பானது "FICCI மகளிர் அமைப்பு" மற்றும் "ஹேக் ஏ காஸ் – இந்தியா" ஆகியவற்றினால் இணைந்து ஒருங்கிணைக்கப் படுகின்றது.
- ❖ இது உலகளாவிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாகும்.
- ❖ இதன் முக்கிய நோக்கம் கோவிட் – 19 வைரஸைக் கட்டுப்படுத்த உதவும் மருத்துவம் சாராத தீர்வுகளைக் காண்பதாகும்.
- ❖ இது "எஸ்தோனியாவில்" தொடங்கியது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரம் பெற்ற குழு

- ❖ கோவிட்-19 மீதான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து விரைவான முடிவுகளை எடுக்க இந்திய அரசானது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரம் பெற்ற குழு ஒன்றை அமைத்துள்ளது.
- ❖ இந்தக் குழுவிற்கு நிதி ஆயோக் உறுப்பினர் வினோத் பால் மற்றும் கே. விஜய் ராகவன் ஆகியோர் தலைமை தாங்க உள்ளனர்.
- ❖ ராகவன் இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆவார்.

## அமிதாப் காந்த் குழு

- ❖ நிதி ஆயோக் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த்தின் தலைமையில் இந்திய அரசானது ஓர் அதிகாரம் பெற்ற குழுவை அமைத்துள்ளது.
- ❖ இந்தக் குழுவானது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து கோவிட்-19 தொடர்பான மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
- ❖ இந்தக் குழுவானது மூன்று பங்குதாரர் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- ❖ ஐ.நா. முகமையகங்கள், ஆசிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி ஆகியோர் முதல் குழுவின் பங்குதாரர்கள் ஆவர்.
- ❖ இரண்டாவது குழுவில் குடிமைச் சமூக அமைப்புகளும், மூன்றாவது குழுவில் FICCI, CII, NASSCOM, ASSSOCHAM போன்ற தனியார் நிறுவன அமைப்புகளும் உள்ளன.

## மிகப்பெரிய நோய் வெடிப்புகளுக்கான கட்டுப்படுத்தல் திட்டம்

- மத்திய குடும்ப நலத்துறை அமைச்சகமானது "மிகப்பெரிய நோய்ப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல் திட்டத்தை" தொடங்கியுள்ளது.
- இது ராஜஸ்தான் மாநிலத்தின் "பில்வாரா மாதிரியை" போன்றதாகும்.

## மருத்துவ ஆக்ஸிஜன்

- மத்திய அரசானது மருத்துவ ஆக்ஸிஜனை எளிமையான முறையிலும் தடையற்ற வகையிலும் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- மருத்துவ ஆக்ஸிஜன் ஆனது அத்தியாவசிய மருந்துகளின் தேசியப் பட்டியலிலும் (NLEM - National List of Essential medicines) உலகச் சுகாதார அமைப்பின் (WHO) அத்தியாவசிய மருந்துகளுக்கான ஒரு மாதிரிப் பட்டியலிலும் உள்ளது.
- மருத்துவ ஆக்ஸிஜன் என்பது ஒரு தூய்மையான ஆக்ஸிஜன் ஆகும்.
- இது 99.5% தூய்மையான ஆக்ஸிஜனைக் கொண்டுள்ளது.
- பொதுவாக, நாம் சுவாசிக்கும் காற்றானது 21% ஆக்ஸிஜனைக் கொண்டுள்ளது.
- வளிமண்டலத்தில் மாசுத் துகள்கள் அதிகரிக்கும்போது, ஆக்ஸிஜனின் செறிவானது குறைகின்றது.
- NLEM என்பது WHO அமைப்பின் அத்தியாவசிய மருந்துப் பட்டியலின் ஒரு மாதிரியாகும்.
- அத்தியாவசிய மருந்துகள் என்பது உலகில் மக்களின் முன்னுரிமை சுகாதாரச் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய மருந்துகளாகும்.
- 1970 ஆம் ஆண்டில் அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலைத் தயாரித்த உலகின் முதலாவது நாடு தான்சானியா ஆகும்.
- 1977 ஆம் ஆண்டில் WHO ஆனது அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலை வெளியிட்டது.
- இந்தியாவின் முதலாவது NLEM ஆனது 1993 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டில், இந்தப் பட்டியலில் 851 மருந்துகள் சேர்க்கப்பட்டு, புதுப்பிக்கப் பட்டது.



## சிறந்த சுற்றுலாத் தளங்களின் பட்டியல்


- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது சிறந்த சுற்றுலாத் தளங்களாக மேம்படுத்துவதற்காக நாட்டின் 12 தொகுப்புகளில் உள்ள 19 தளங்களை அடையாளம் கண்டுள்ளது.
- சமீபத்தில், அந்த அமைச்சகம் இந்த சிறந்த சுற்றுலாத் தளங்களின் பட்டியலில் உலகப் புகழ்பெற்ற காசிரங்காவையும் இணைத்துள்ளது.
- காசிரங்கா தேசியப் பூங்காவானது 2200ற்கும் மேற்பட்ட இந்திய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களுக்கு வாழ்விடமாகத் திகழ்கின்றது.
- உலகின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் இங்கு வாழ்கின்றன.
- மேலும், இது ஒடிசாவில் உள்ள உலகப் பாரம்பரியத் தளமான கோனார்க் சூரிய ஆலயம் மற்றும் குஜராத்தில் உள்ள ஒற்றுமைக்கான சிலை ஆகியவற்றையும் இந்தப் பட்டியலில் இணைத்துள்ளது.

### *இதர அங்கீகரிக்கப்பட்ட தளங்கள் பின்வருமாறு*

- தாஜ்மகால் & பதேக்பூர் சிக்ரி (உத்தரப் பிரதேசம்)
- அஜந்தா & எல்லோரா (மகாராஷ்டிரா)
- ஹுமாயூன் கல்லறை, செங்கோட்டை & குதுப்மினார் (தில்லி)
- கோல்வா (கோவா)
- ஆஜ்மீர் கோட்டை (இராஜஸ்தான்)
- சோம்நாத் மற்றும் தோலவிரா (குஜராத்)
- கஜுராஹோ (மத்தியப் பிரதேசம்)
- ஹம்பி (கர்நாடகா)
- மகாபலிபுரம் (தமிழ்நாடு)
- குமரகம் (கேரளா)
- மகாபோதி கோவில் (பீகார்)

## ஜன் அவுசாதி சுகம் செயலி

- பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுசாதி பரியோஜனா (PMBJAP - Pradhan Mantri Bharatiya Janaushadhi Pariyojana) என்பதின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள பிரதான் மந்திரி ஜன் அவுசாதி கேந்திராவின் மருந்தாளுநர்கள் மூத்தக் குடிமக்கள் மற்றும் இதர நோயாளிகள் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்று அத்தியாவசிய மருந்துப் பொருட்களை விநியோகித்து வருகின்றனர்.
- PMBJAP ஆனது நாட்டில் உள்ள குடிமக்களுக்கு குறைந்த விலையில் மருந்துப் பொருட்களை விநியோகிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டுள்ளது.
- இது மத்திய இரசாயனம் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மருந்துப் பொருட்கள் துறையினால் தொடங்கப்பட்டுள்ள ஒரு பிரச்சாரமாகும்.
- இந்திய மருந்துப் பொதுத் துறை நிறுவனங்கள் அமைப்பானது, (BPPI - Bureau of Pharma PSUs of India) PMBJAPஐ செயல்படுத்தும் அமைப்பாகும்.
- BPPI ஆனது மருந்துப் பொருட்கள் துறையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.




## அஹார் 2020

- உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சியின் 35வது பதிப்பான "அஹார்" ஆனது சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது.
- இது மத்திய உணவுப் பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் மேம்பாட்டு ஆணையத்துடன் (APEDA - Agriculture and Processed Food Products Development Authority) இணைந்து இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பால் (ITPO - India Trade Promotion Organization) நடத்தப் படுகின்றது.




## கோவிட் – 19 பணிக் குழு

- ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், இதர நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆய்வகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் கோவிட் – 19 தொடர்பான தொழில்நுட்பத் திறன்களை ஆராய்வதற்காக மத்திய அரசு "கோவிட் – 19 பணிக் குழு" ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தத் திறன் கண்டறிதல் குழுவானது பின்வருவனவற்றிலிருந்து பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது.
  - மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை
  - உயிரித் தொழில்நுட்பத் துறை
  - இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம்
  - அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகம்
  - அடல் புத்தாக்கத் திட்டம்
  - மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை நிறுவனங்கள் துறை அமைச்சகம்
  - ஸ்டார்ட் அப் இந்தியா
  - அகிய இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம்

## சமாதன்

- நாட்டில் கோவிட் – 19 தொற்று நோய் குறித்தப் பிரச்சினையைக் களைவதற்காக “சமாதன்” என்ற ஒரு போட்டியை மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் (MHRD - Ministry of Human Resource Development) தொடங்கியுள்ளது.
- இந்த நிகழ்நேரப் போட்டியானது போர்ஜ் அமைப்புடன் இணைந்து MHRD-ன் புத்தாக்கப் பிரிவு மற்றும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவற்றினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதிய சோதனைகளை மேற்கொண்டு, கோவிட் – 19 தொற்றிற்கு எதிரான தீர்வுகளைக் கண்டறிய மாணவர்களை ஊக்கப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கோவிட் – 19 குறித்த உச்சநீதிமன்ற உத்தரவு

- கோவிட் – 19 தொற்றிற்காக நடத்தப்படும் ஆய்விற்கு நோயாளிகளிடமிருந்து கட்டணம் (ரூ. 4500) ஏதும் வசூலிக்கக் கூடாது என்று தனியார் மருத்துவ ஆய்வகங்களுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தவிட்டுள்ளது.
- மேலும் கரோனா தொற்று குறித்த சோதனையானது என்ஏபிஎல் (NABL - National Accreditation Board for Testing and Calibration Laboratories) ஆய்வகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் அல்லது உலகச் சுகாதார அமைப்பு அல்லது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- தனியார் நிறுவனங்கள் அதிகக் கட்டணம் வசூலிக்காமல் இருப்பதை அரசு உறுதி செய்ய வேணடும் என்றும் இந்தத் சோதனைக்காக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை திருப்பிச் செலுத்துவதற்காக ஒரு நடைமுறையை அரசு உருவாக்க வேண்டும் என்றும் இந்த அமர்வு கூறியுள்ளது.

## iGOT

- மத்தியப் பணியாளர் பயிற்சித் துறையானது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக iGOT என்ற ஒரு நிகழ்நேர தளத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் தளமானது ஒருங்கிணைந்த அரசு நிகழ்நேர பயிற்சித் தளம் என்று அழைக்கப் படுகின்றது.
- இந்த தளமானது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடும் பணியாளர்களின் பயிற்சி தேவைகளைப் பூர்த்தி செய்ய இருக்கின்றது.
- இது மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் திக்சா என்ற இணைய தளத்தில் தொடங்கப் பட்டுள்ளது.



## உலகளாவிய இந்திய மருத்துவர்கள் – கோவிட் – 19

- ❖ உலகெங்கிலும் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மருத்துவர்கள் "உலகளாவிய இந்திய மருத்துவர்கள் – கோவிட் - 19" என்பதின் கீழ் ஒன்றிணைந்துள்ளனர்.
- ❖ இந்த முன்னெடுப்பானது குறுக்குமுறை (எளிய முறை) கற்றலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இந்த முன்னெடுப்பானது கோவிட் – 19ன் முன்னறிவிப்பு வழிமுறை, தடுப்பு மருந்து, வைரஸ் எதிர்ப்பு சிகிச்சை மற்றும் பிளாஸ்மா சிகிச்சை ஆகியவை குறித்துப் பணியாற்ற இருக்கின்றது.




## டிஜிலாக்கர்

- ❖ மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது டிஜிலாக்கரை ஒரு தனித்த தேசியக் கல்விக் கருவூலமாகத் (NAD - National Academic Depository) தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ இந்த அமைச்சகமானது NADஐ டிஜிலாக்கர் என்ற திட்டத்தின் வரம்பிற்குள் ஒரு நிரந்தரத் திட்டமாகச் செயல்படுத்துவதற்காக பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.
- ❖ NAD ஆனது மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் மூலம் டிஜிலாக்கரினால் பயனரிடம் எந்தவொரு கட்டணத்தைப் பெறாமல் ஒரு நிரந்தரத் திட்டமாக செயல்படுத்தப் படுகின்றது.
- ❖ டிஜிலாக்கர் என்பது டிஜிட்டல் இந்தியா என்ற முன்னெடுப்பின் கீழ் தொடங்கப் பட்டுள்ள மேகச் சேமிப்பு அல்லது கிளவுட் என்பதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாதுகாப்பான நிகழ்நேர சேமிப்புச் சேவையாகும்.
- ❖ இது ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ்கள், வாக்காளர் அடையாள அட்டைகள், பான் அல்லது நிரந்தர கணக்கு எண் அட்டைகள், ஓட்டுநர் உரிமம், சொத்து தொடர்பான ஆவணங்கள் ஆகியவற்றின் மின்னணுப் பதிப்புகளைச் சேமித்து அவற்றைப் பயன்படுத்துவதற்குப் பயனர்களை அனுமதிக்கின்றது.
- ❖ இது 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பிரதமரால் தொடங்கி வைக்கப் பட்டது.



## சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை மண்டலங்கள்

- இந்தியா தற்பொழுது “திறன்மிகு முடக்கத்தில்” நுழைய இருப்பதாக அறிவிக்கப் பட்டு உள்ளது.
- திறன்மிகு முடக்கத்தின் (Smart lockdown) கீழ், இந்தியாவானது சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது.
- சிவப்பு மண்டலங்கள் முக்கியமான பகுதிகளாக (நோய்த் தொற்று அதிகம் காணப்படும்) அறிவிக்கப் பட்டுள்ள பகுதிகளாகும்.
- இங்கு எந்தவொருப் பொருளாதார நடவடிக்கையும் அனுமதிக்கப் படுவதில்லை.
- ஆரஞ்சு மண்டலங்கள் என்பது குறைவான பொதுப் போக்குவரத்து அனுமதிக்கப் பட்டுள்ள பகுதிகளாகும்.
- இந்த மண்டலத்தில் வேளாண் உற்பத்திப் பொருட்கள் மீதான அறுவடை நடவடிக்கைகளும் அனுமதிக்கப் படுகின்றன.
- பச்சை மண்டலத்தில், வேளாண் நடவடிக்கைகளுடன் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை நிறுவனங்களும் தமது செயல்பாடுகளைத் தொடங்க இருக்கின்றன.
- இந்தத் தொழிற்சாலைகள் பணியாளர்களுக்கு சமூக விலகல் வசதிகளுடன் விடுதி வசதிகளையும் வழங்க இருக்கின்றன.

## யுக்தி (YUKTI) தளம்

- மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகமானது பல்வேறு முன்னெடுப்புகளைக் கண்காணிப்பதற்காக யுக்தி (YUKTI) என்ற ஒரு தளத்தைத் தொடங்கியுள்ளது.
- யுக்தி (YUKTI) என்பது “அறிவு, தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றைக் கொண்ட இளம் இந்தியா கோவிட் – 19 தொற்றை எதிர்த்துப் போராடி வருகின்றது” என்பதைக் குறிக்கின்றது.
- இந்தத் தளமானது நாட்டில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ஆகியவற்றின் முன்னெடுப்புகளை உள்ளடக்கி, அவற்றைப் பதிவு செய்து அவற்றைக் கண்காணிக்க இருக்கின்றது.




## CollabCAD முன்னெடுப்பு

- நிதி ஆயோக், அடல் புத்தாக்கத் திட்டம் (AIM - Atal Innovation Mission), மற்றும் தேசியத் தகவல் மையம் ஆகியவை இணைந்து “CollabCAD” என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளன.

- இந்த முன்னெடுப்பானது இருபரிமாண வரைவு மற்றும் முப்பரிமாண பொருள் வடிவங்களின் அடிப்படையில் தீர்வுகளைக் காண்பதற்கான ஒரு தளத்தினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது முப்பரிமாண வடிவங்களை உருவாக்கி, அவற்றை மாற்றி அமைப்பதற்காக அடல் மேம்படுத்து ஆய்வகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஒரு தளத்தினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நாடு முடக்கம் (ஊரடங்கு) நீட்டிப்பு

- இந்தியப் பிரதமர் கொரானா வைரஸிற்கு எதிராகப் போராடுவதற்காக "சப்தபதி" என்ற ஒன்றை அறிவித்துள்ளார்.
- சப்தபதி என்பது கொரானா வைரஸிற்கு எதிராகப் போராடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட 7 மந்திரங்களாகும்.
- தமிழ்நாடு, பஞ்சாப், தெலுங்கானா, ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் தங்களது ஊரடங்கை 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளன.
- அதே சமயத்தில், மத்திய அரசு 2020 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் தேதி வரை ஊரடங்கை நீட்டித்துள்ளது.
- பொது மக்களுக்கான சட்டம் ஒழுங்கானது மாநிலப் பட்டியலில் உள்ளது. இதனைச் செயல்படுத்தும் அதிகாரம் மாநில அரசிடம் உள்ளது.
- எனவே, மாநில அரசுகள் ஊரடங்கிற்கு வெவ்வேறு தேதிகளை அறிவித்துள்ளன.
- இருப்பினும், மத்திய அரசானது 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ் ஊரடங்கை அறிவித்துள்ளது.
- இதனைச் செயல்படுத்துவதற்காக, மத்திய அரசானது கோவிட் – 19 தொற்றை "அறிவிக்கப்பட்ட ஒரு பேரிடராக" அறிவித்துள்ளது.

## விரைவாகப் பரவிய செயலி

- குறைவான காலத்தில் 50 மில்லியன் பதிவிறக்கங்களைக் கண்ட உலகின் முதலாவது கைபேசிச் செயலியாக "ஆராக்கிய சேது" என்ற செயலி உருவெடுத்துள்ளது என்று நிதி ஆயோக் அறிவித்துள்ளது.
- இதன் மூலம், கூகுள் பிளேயில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட நின்டென்டோவின் புகழ்பெற்ற "போக்கிமேன் கோ" என்ற செயலியின் சாதனையை இது முறியடித்துள்ளது.
- இந்தச் செயலியானது நோய்த் தொற்றினால் இருப்பவர்களுடன் (தடம் தொடர்பினை அறிதல்) தொடர்பில் இருப்பவர்களைக் கண்டறியப் பயன்படுத்தப் படுகின்றது.
- இந்தச் செயலியானது இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொடர்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசியத் தகவலியல் மையத்தால் உருவாக்கப் பட்ட கோவிட் – 19 நோய்த் தொற்றைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் ஒரு செயலி ஆகும்.
- சிங்கப்பூர் அரசானது இதே போன்று ஒரு செயலியான "டிரேஸ் டுகேதர்" என்ற ஒரு செயலியைத் தொடங்கியுள்ளது.




## "தேகோ அப்னா தேஷ்"

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகமானது "தேகோ அப்னா தேஷ்" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இது நாட்டில் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்கள் குறித்த முக்கியமான தகவல்களைக் கொண்ட ஒரு இணையவழிக் கருத்தரங்காகும்.
- இது இந்தியாவின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் குறித்தத் தகவல்களை அளிக்கின்றது.
- முதலாவது இணையவழிக் கருத்தரங்குத் தொகுப்பானது டெல்லியின் நீண்ட வரலாறு குறித்து விளக்குகின்றது.
- இது "நகரங்களின் நகரம் – தில்லியின் சுயவிவரக் கையேடு" என்ற தலைப்பைக் கொண்டுள்ளது.
- இரண்டாவது தொகுப்பானது "கொல்கத்தா - கலாச்சாரங்களின் சங்கமம்" என்று பெயரிடப் பட்டுள்ளது.




## ஊரடங்கு 2.0விற்கான வழிகாட்டுதல்கள்

- மத்திய உள்துறை அமைச்சகமானது ஊரடங்கு (முடக்கம்) 2..0விற்கான ஒரு திருத்தப் பட்ட வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இந்த திறன்மிகு ஊரடங்கின் போது பொதுப் போக்குவரத்துச் சேவைகள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் மூடியே இருக்கும்.
- இறுதிச் சடங்கின் போது 20 நபர்களுக்கு மேல் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- இந்த வழிகாட்டுதலானது பணியிடத்தில் முகமூடிகளை அணிவதைக் கட்டாயம் என்று ஆக்கியுள்ளது.

- மேலும், எச்சில் துப்பினால் அபராதம் விதித்தல், கை காப்பான் திரவ வசதிகள் மற்றும் உடல் வெப்பநிலை அளவீடு போன்ற சுகாதார நல நடவடிக்கைகள் கட்டாயமாக்கப் பட்டுள்ளன.
- மத்திய உள்துறை அமைச்சகமானது தேசியப் பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005ன் கீழ் பொது இடங்களில் எச்சில் துப்புவதைக் குற்றமாக்கியுள்ளது.
- சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மற்றும் தொழிற்துறைப் பூங்காக்களில் செயல்படும் தொழிற்சாலைகள் செயல்பட அனுமதிக்கப்படும்.
- நிலக்கரிச் சுரங்கம் மற்றும் எண்ணெய் உற்பத்தி ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

## நிறக் குறியீடு மூலம் நாட்டைப் பிரித்தல்

- கோவிட் - 19 நோய்த் தொற்றின் மேலாண்மையைச் சிறப்பாகக் கையாளுவதற்கு உதவுவதற்காக நிறக் குறியீடு மூலம் நாட்டைப் பிரித்தலானது (சிவப்பு, ஆரஞ்சு, பச்சை) மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறையால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களையும் முக்கியமான பகுதிகள் (சிவப்பு மண்டலம்), நோய்த் தொற்று குறைவாக உள்ள பகுதிகள் (வெள்ளை / ஆரஞ்சு மண்டலம்) மற்றும் பச்சை மண்டலம் என்றவாறு பிரிக்க முடிவு செய்துள்ளது.
- இது நாடு முழுவதிலும் 170 முக்கியமான மாவட்டங்களையும் (சிவப்பு மண்டலம்), 207 நோய்த் தொற்று குறைவாக உள்ள மாவட்டங்களையும் (வெள்ளை மண்டலம்) 353 மற்ற மாவட்டங்களையும் (பச்சை மண்டலம்) அடையாளம் கண்டுள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான நோய்த் தொற்று பாதிப்புகள் அல்லது நோய்த் தொற்றின் அதிக வளர்ச்சி விகிதத்தைக் கொண்டுள்ள மாவட்டங்கள் முக்கியமான மாவட்டங்களாகக் குறிக்கப் பட்டுள்ளன. குறைந்த எண்ணிக்கையிலான பாதிப்புகளைக் கொண்டுள்ள மாவட்டங்கள் நோய்த் தொற்று குறைவான மாவட்டங்களாகக் குறிக்கப் பட்டுள்ளன. நோய் பாதிப்பு எதுவும் பதிவாகாத மாவட்டங்கள் பச்சை மண்டலங்களாகக் குறிக்கப் பட்டுள்ளன.
- சிவப்பு மண்டல மாவட்டங்கள் மிகப்பெரிய அளவில் நோய் பாதிப்புள்ள பகுதிகள் அல்லது குழுக்களாக நோய் பாதிப்புள்ள பகுதிகள் என்று மேலும் வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- தமிழ்நாடு, தனது 27 மாவட்டங்களில் 22 நோய் பாதிப்பு மாவட்டங்களுடன் நாட்டில் அதிக எண்ணிக்கையிலான நோய் பாதிப்பு உள்ள மாவட்டங்களைக் கொண்ட மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இதைத் தொடர்ந்து மகராஷ்டிராவில் 14 மாவட்டங்களும் உத்திரப் பிரதேசத்தில் 13 மாவட்டங்களும் ராஜஸ்தானில் 12 மாவட்டங்களும் ஆந்திரப் பிரதேசத்தில் 11 மாவட்டங்களும் தில்லியில் 10 மாவட்டங்களும் அதிக பாதிப்புள்ள மாவட்டங்களைக் கொண்ட மாநிலங்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- இந்த எண்ணிக்கையானது வாராந்திர அடிப்படையில் கொரானா வைரஸ் நோய்த் தொற்றின் புதிய பாதிப்புகளின் அடிப்படையில் குறையும் அல்லது அதிகரிக்கும்.
- மத்திய சுகாதார நலத்துறை அமைச்சகமானது நோய் பாதிப்புகளின் இறுதி எண்ணிக்கை மற்றும் நோய் பாதிப்புகள் அதிகரிக்கும் வேகம் என்ற காரணிகளை மாவட்டங்களை முக்கியமான மாவட்டங்களாக வகைப்படுத்த பயன்படுத்துகின்றது.


- முக்கியமான நோய்த் தொற்றுள்ள மாவட்டங்கள் என்பவை (hotspots) அதிக எண்ணிக்கையிலான கோவிட் – 19 நோய்த் தொற்று பதிவாகியுள்ள மாவட்டங்கள் மற்றும் பதிவாகியுள்ள பாதிப்புகள் தினசரியாக அதிகரித்துக் கொண்டிருப்பதைக் குறிக்கின்றது.
- நோய்த் தொற்று குறைவாக உள்ள மாவட்டங்கள் என்பவை அதிக எண்ணிக்கையிலான கோவிட் – 19 நோய்த் தொற்றுள்ள மாவட்டங்கள் மற்றும் புதிய பாதிப்புகள் எதுவும் பதிவாகாத மாவட்டங்களைக் குறிக்கின்றது.
- பச்சை மண்டல மாவட்டங்கள் என்பவை மிகவும் குறைந்த அளவிலான அல்லது கோவிட் – 19 பாதிப்புகளற்ற மாவட்டங்களைக் குறிக்கின்றன.
- சிவப்பு மண்டலத்தில் உள்ள மாவட்டத்தில் 14 நாட்களில் எந்தவொரு புதிய கோவிட் – 19 நோய்த் தொற்று பாதிப்பும் பதிவாகவில்லை எனில், அந்த மாவட்டம் அடுத்து ஆரஞ்சு மண்டலத்திற்கு மாற்றப்படும். அடுத்த 28 நாட்களில் எந்தவொரு புதிய கோவிட் – 19 நோய்த் தொற்றும் அந்த மாவட்டத்தில் பதிவாகவில்லை எனில், அது பச்சை மண்டலத்திற்கு மாற்றப்படும்.
- மாவட்டங்களை வகைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வரையறை என்பது எந்தவொரு மாவட்டத்திலும் 6 நோய்ப் பாதிப்புகளுக்கு மேல் பதிவாகியிருந்தால், அந்த மாவட்டம் முக்கியமான மாவட்டம் அல்லது சிவப்பு மண்டலமாக வகைப்படுத்தப் படும்.
- 15 நோய்ப் பாதிப்புகளுக்கு மேலுள்ள எந்தவொரு மாவட்டமும் திடீர் நோய்ப் பெருக்கத்தைக் கண்டுள்ள மாவட்டமாக வகைப்படுத்தப்படும்.
- முக்கியமாக நோய்த் தொற்றுள்ள மாவட்டங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப் படுகின்றது.

### *முக்கியமான மாவட்டத்திற்கான தகுதி நிலைகள்*

- இந்தியாவில் 80%ற்கும் மேல் நோய்த் தொற்றைக் கொண்டுள்ள மாவட்டம் அல்லது
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் 80% நோய்ப் பாதிப்புகளுக்குப் பங்கு வகிக்கும் மாவட்டங்கள் அல்லது
- 4 நாட்களுக்கும் குறைவான நாட்களில் இரட்டிப்பு விகிதத்தில் நோய்த் தொற்று விகிதத்தைக் கொண்டுள்ள மாவட்டங்கள்.
- பச்சை மண்டலம் : கடைசி 28 நாட்களில் எந்தவொரு புதிய நோய்த் தொற்றும் தோன்றாத மாவட்டங்கள்.

### *மண்டலங்களின் வறையறைகள்*

- நோய் பாதிப்புள்ள மண்டலம் அல்லது நோய் பாதிப்புள்ள குழுவைக் கொண்டுள்ள மண்டலம் என்பது நோய்க் கட்டுப்படுத்துதல் மண்டலத்தின் மையமாகக் குறிக்கப் படுகின்றது.
- தாங்கியிருப்பு அல்லது இடையக மண்டலம் (Buffer Zone) என்பது கடுமையான மற்றும் வீரியமிக்க சுவாசப் பிரச்சினை கொண்ட மக்கள் சோதிக்கப்பட்டு கண்காணிக்கப் படுவதைக் குறிக்கின்றது.
- நோய்த் தொற்றின் உள்ளூர் பரவலைக் கண்டறிவதற்காகவும் அந்த பரவுதலிலிருந்து நோய்த் தொற்றைக் தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்தல் மண்டலமானது உருவாக்கப் பட்டுள்ளது.




## ஜூம் செயலி (Zoom App)

- மத்திய உள்துறை அமைச்சகமானது அவசரகால இந்தியக் கணினி மீட்புக் குழுவின் எச்சரிக்கையை மேற்கோள்காட்டி “ஜூம் செயலி” (Zoom App) எனும் செயலி குறித்து எச்சரித்துள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இணையவழி ஒத்துழைப்பு மையமானது (Cycord) ஜூம் செயலியின் பயன்பாடு குறித்து எச்சரித்துள்ளது.
- ஜூம் செயலி என்பது காணொளி மற்றும் குரல் ஆகியவற்றின் மூலம் அதன் பயனர்களைச் சந்திக்க அனுமதிக்கும் இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு காணொளிக் கூறாகும்.
- அரசு அலுவலர்கள், தங்களது அலுவலகப் பயன்பாட்டிற்கு ஜூம் செயலியைப் பயன்படுத்தக் கூடாது என்று மத்திய உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.
- Cycord ஆனது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது இணைய வழிக்கான ஒரு ஒற்றை வழி தீர்வுத் தளமாக இணைய வழிக் குற்றங்களைக் கையாளுவதற்கான தீர்வுகளைக் கண்டுபிடித்தல், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றுக்காக தொடங்கப் பட்டுள்ளது.



## துடிப்பான இந்தியா செயலூக்கத் தின திட்டம் (Fit India Active Day Programme)

- “ஃபிட் இந்தியா” அல்லது துடிப்பான இந்தியா என்ற ஒரு முதன்மை முயற்சியின் கீழ் இந்திய அரசானது துடிப்பான இந்தியா செயலூக்கத் தின திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆயுஷ் அமைச்சகமானது சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- குழந்தைகள் வீட்டில் இருக்கும் போதும் கூட அவர்கள் உடற்பயிற்சி செய்வதை உறுதி செய்வதற்காக வேண்டி இந்த திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- விளையாட்டு மற்றும் உடல் பயிற்சிகள் மூலம் குடிமக்கள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்வதற்காக ஃபிட் இந்தியா இயக்கமானது தொடங்கப் பட்டது.
- இந்த இயக்கமானது 2019 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுத் தினத்தின் (ஆகஸ்ட் 29) போது தொடங்கப் பட்டது.
- புகழ்பெற்ற ஹாக்கி வீரரான தயான் சந்தின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த நாள் கொண்டாடப் படுகிறது.

## சஹயோக் (SAHYOG)

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது ஆரோக்கிய சேது செயலியை முழுமையாக நிறைவு செய்வதற்காகவும், பல்வேறு முயற்சிகளின் தரவுகளை ஒருங்கிணைப்பதற்காகவும், ஒருங்கிணைந்த புவி சார்ந்த தளம் ஒன்றை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்தத் தளமானது சஹயோக் கைபேசி செயலிப் பயன்பாட்டிலிருந்தும், இணைய வாயில் வழியான இந்திய வரைபடங்களிலிருந்தும் தரவுகளைப் பெறும்.
- சமூக ஈடுபாடு மூலம் கோவிட் -19 மீது குறிப்பிட்ட தரவுத் தொகுப்புகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க, இந்திய நில அளவைத் துறையானது “சஹயோக்” என்ற செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.

## தேசிய போலியோ கண்காணிப்பு வலையமைப்பு

- தேசிய போலியோ கண்காணிப்பு வலையமைப்பைச் செயல்படுத்தி கோவிட்-19 பரவலைத் தடுக்க உலகச் சுகாதார நிறுவனத்துடன் இந்தியா கைகோர்த்து உள்ளது.
- கோவிட்-19 உடன் சேர்த்து, காசநோய் மற்றும் பிற நோய்களை அகற்றுவதிலும் இந்தக் குழுவானது ஈடுபடும்.


- தேசிய போலியோ கண்காணிப்புத் திட்டத்தின் மூலம், இந்தியா 2014 ஆம் ஆண்டில் போலியோ நோயை அகற்றியது.
- இந்த திட்டமானது 1997 இல் தொடங்கப் பட்டது.
- இது இந்திய அரசாங்கத்திற்கும் உலகச் சுகாதார அமைப்பிற்கும் இடையேயான ஒரு கூட்டு முயற்சியாகும்.
- இந்தத் திட்டமானது நாட்டில் நோய்த் தடுப்பு மருந்துகளை 100% செலுத்துவதை அதன் நோக்கமாக கொண்டுள்ளது.

## நம்பிக்கை வாக்கெடுப்பு - உச்ச நீதிமன்றம்

- 22 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்த பின்னர் சட்டமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க கமல்நாத் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்ட மத்தியப் பிரதேச ஆளுநர் லால்ஜி டாண்டனின் மார்ச் மாத உத்தரவை உச்ச நீதிமன்றம் ஆதரித்து உள்ளது.
- இச்சோதனைக்கு அழைப்பு விடுக்கும் ஆளுநரின் அதிகாரமானது தேர்தல்களுக்குப் பிறகு உடனடியாக ஒரு மாநில அரசாங்கம் தொடங்கப்படுவதற்கு முன்பு மட்டும் அல்லாது அந்த சட்டமன்றத்தின் பதவிக் காலம் முழுவதும் தொடர்ந்து செயல்படக் கூடியதாகும்.
- நம்பிக்கை வாக்கெடுப்பு முறையைச் செயல்படுத்தும் போது, ஆளுநர் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்குச் சாதகமாக இருக்கக் கூடாது.
- நம்பிக்கை வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்பு, அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்களின் ராஜினாமா குறித்த சபாநாயகரின் முடிவுக்காக ஆளுநர் காத்திருக்கத் தேவையில்லை

## எண்ணெய் விதைகள் மற்றும் பருப்புகள் கொள்முதல்

- இந்திய உணவுக் கழகம் (FCI - Food Corporation of India) மற்றும் இந்திய தேசிய வேளாண் மற்றும் கூட்டுறவுச் சந்தை (NAFED - National Agricultural Cooperative Marketing of India) ஆகியவை விவசாயிகளிடமிருந்து எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்புகள் ஆகியவற்றை நேரடியாகக் கொள்முதல் செய்கின்றன.
- தற்பொழுது, ராபி காலப் பயிரினங்களுக்கான விலை ஆதரவுத் திட்டமானது ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், ராஜஸ்தான், தெலுங்கானா, உத்தரப் பிரதேசம், ஹரியானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தொடங்கப் பட்டுள்ளது.
- NAFED என்பது நாட்டில் உள்ள வேளாண் விளைபொருட்களின் அனைத்துக் கூட்டுறவுச் சந்தையிடல் அமைப்புகளுக்கான ஒரு தலைமை அமைப்பாகும்.
- NAFED ஆனது வேளாண் விளை பொருட்களைத் தவிர, வனத்தில் விளைந்த பொருட்களையும் கொள்முதல் செய்கின்றது.
- இது "பசுமை நடவடிக்கை" (Operation Greens) என்பதின் கீழ் நாட்டில் விலை நிலைத் தன்மைக்கு ஒப்புதல் அளிக்கும் ஒரு தலைமை நிறுவனமாக ஏற்படுத்தப் பட்டு உள்ளது.
- "Operation Greens" ஆனது 2018-19 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்தத் திட்டமானது நாட்டில் தக்காளி, வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு ஆகியவற்றின் விநியோகத்தைச் சமநிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தின் தேசியப் பட்டியல்

- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகமானது தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தின் தேசியப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இது இந்தியா தனது தொட்டுணர முடியாத பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இந்தியக் கலாச்சாரத்தின் பன்முகத் தன்மையை அங்கீகரிப்பதன் ஒரு முயற்சி ஆகும்.
- இந்த முன்னெடுப்பானது மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் தொலைநோக்குப் பார்வை – 2024 என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தப் பட்டியலானது ஏற்கெனவே யுனெஸ்கோவின் மனித நேயத்தின் தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தின் பிரதிநிதித்துவப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 13 கூறுகளையும் கொண்டுள்ளது.
- ICH ஆனது நம்பிக்கைகள், நாட்டுப் புறவியல், பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் மொழி போன்ற தொட்டுணர முடியாத அறிவுசார் சொத்துரிமைகளில் பங்கு வகிக்கின்றது.
- தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தை (ICH - Intangible Cultural Heritage) பாதுகாப்பதற்கான யுனெஸ்கோவின் ஒப்பந்தத்தின்படி, இந்தப் பட்டியலில் 5 விரிவான வகைப்பாடுகள் உள்ளன.
- இயற்கையான மற்றும் பாரம்பரிய கைத்திறனுடன் கூடிய அறிவு மற்றும் நடைமுறைகள், சமூக நடைமுறைகள், சடங்குகள் & விழாக்கள், நிகழ்த்துக் கலைகள் ஆகியவை இதில் அடங்கும்.

***இந்தியாவின் ICH பட்டியல்***

- வேதம் ஓதும் பாரம்பரியம்
- ராமாயணத்தின் பாரம்பரியச் செயல்திறன் - ராம்லீலா
- குடியாட்டம் - சமஸ்கிருத நாடகக் கலை
- ராமன் - கார்வால் இமயமலைப் பகுதியின் ஒரு மதம் சார்ந்த திருவிழா மற்றும் சடங்கு சார்ந்த கலை
- முடியெட்டு - கேரளாவின் ஒரு சடங்குக் கலை மற்றும் நடன நாடகம்.
- ராஜஸ்தானின் கல்பெலியா என்ற நாட்டுப்புறப் பாடல் மற்றும் நடனம்
- சாகு நடனம்.
- லடாக்கின் புத்த மதப் பாடல் பாடுதல் - ஜம்மு – காஷ்மீரில் லடாக்கின் இமயமலைப் பகுதிகளில் புனித புத்த நூல்களின் வரிகளை ஒப்பித்தல்.
- மணிப்பூரின் சங்கீர்த்தனா - சடங்கு சார்ந்த பாடல், முரசு அறைதல் மற்றும் நடனம்.
- பஞ்சாப்பின் ஜண்டியாலா தாத்ரேயா குருக்களிடையே காணப்படும் பாரம்பரியப் பித்தளை மற்றும் செம்புப் பாத்திரம் செய்யும் கலை.
- யோகா
- நவ்ரோஸ் (பாரசீகப் புது வருடம்)
- கும்ப மேளா




## மத்திய அரசினால் கொண்டு வரப்பட்ட அவசரச் சட்டம்

- மருத்துவர்கள் மற்றும் சுகாதார நலப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஓர் அவசரச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.
- இந்த அவசரச் சட்டத்தின் படி, சுகாதார நலப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் நபர்களுக்கு 6 மாதம் முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப் படும்.
- இந்த அவசரச் சட்டமானது தொற்று நோய்கள் சட்டம், 1897 என்ற சட்டத்தைத் திருத்த இருக்கின்றது.
- மேலும் இது தொற்று நோய்ச் சட்டத்தைப் பொதுச் சட்டமாக மாற்றியமைத்து உள்ளது.

- இந்த நடவடிக்கையானது மாநில அரசுகளும் அச்சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கின்றது.

## பழங்குடியின ஆசிரியர்களுக்கு 100% இட ஒதுக்கீடு இல்லை

- நாடு முழுவதும் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் பழங்குடியின ஆசிரியர்களுக்காக 100% இட ஒதுக்கீடு அளிப்பது அரசியலமைப்பிற்கு எதிரானது என்று 5 நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு கூறியுள்ளது.
- 100% இட ஒதுக்கீடானது பாகுபாட்டுத் தன்மை உடையதாகவும் அனுமதிக்க முடியாததாகவும் உள்ளது என்று இந்த அமர்வு கூறியுள்ளது.
- அரசு வேலைவாய்ப்பானது சிலருக்கு மட்டுமே உள்ள ஒரு தனிச்சிறப்பு சலுகை கொண்டது அல்ல.
- பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கான 100% இட ஒதுக்கீடானது பட்டியலிடப்பட்ட இனத்தவர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் அடிப்படை உரிமையை மறுப்பதுடன் அவர்களின் பிரதிநிதித்துவத்தையும் மறுக்கின்றது.
- மேலும் நீதிமன்றமானது 50% என்ற அளவிற்கு இட ஒதுக்கீடு உச்ச வரம்பை அனுமதிக்கும் இந்திரா சஹானி வழக்கின் தீர்ப்பையும் மேற்கோள் காட்டியுள்ளது.
- இந்த வழக்கானது 2000 ஆம் ஆண்டு ஜனவரி 10 அன்று உயர் நீதிமன்ற அமர்வினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட ஒரு வழக்காகும்.
- முன்னதாக, அப்போதைய ஆந்திரப் பிரதேச அரசானது 2000 ஆம் ஆண்டில் அம்மாநிலத்தின் பட்டியலிடப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களின் பணியிடத்திற்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு 100% இட ஒதுக்கீட்டினை அளிப்பதற்காக ஒரு ஆணையைப் பிறப்பித்திருந்தது. இதில் 33.1/3 % அளவிற்கு பெண்களும் உள்ளடங்குவர்.

## கோவிட் நடவடிக்கைகள் – ஒடிசா

- ஒடிசா மாநில முதல்வரான நவீன் பட்நாயக் பின்வரும் நடவடிக்கைகளை அறிவித்துள்ளார்.
- கோவிட் – 19 நோய்த் தொற்றுப் போராட்டத்தின் போது இறக்கும் மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதார நலப் பணியாளர்களுக்கும் "தியாகிகள்" அந்தஸ்து வழங்கப்படும் என்றும் அவர்களுக்கு அரசு மரியாதையுடன் கூடிய இறுதிச் சடங்கு செய்யப் படும் என்றும் கூறியுள்ளார்.
- மேலும் அவர்களுடைய குடும்பத்தினர் ரூ.50 இலட்சம் நிதியை நிவாரணமாகப் பெறுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.
- மேலும் அவர் மருத்துவர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் நபர்களின் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் கூறியுள்ளார்.

## கோவிட் நடவடிக்கைகள் – தமிழ்நாடு

- கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு எதிராகப் போராடும் முன்களப் பணியாளர்கள் இறந்தால், அவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையானது தற்பொழுதுள்ள ரூ.10,00,000 என்ற தொகையிலிருந்து ரூ.50,00,000 என்ற தொகையாக அதிகரிக்கப் பட்டுள்ளதாக தமிழ்நாடு முதல்வரான எடப்பாடி கே பழனிசாமி அறிவித்துள்ளார்.

- இந்தக் கருணைத் தொகையானது சுகாதாரம், காவல்துறை மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறைகளுக்குப் பொருந்தும்.
- மேலும் உயிரிழந்தவரின் குடும்பத்தில் உள்ள ஒரு நபருக்கு அரசு வேலை வழங்கப் படும்.
- மத்திய அரசானது கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடும் மருத்துவப் பணியாளர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் தொகையை ரூ.50,00,000 என நிர்ணயித்துள்ளது.

## ஹைட்ராக்ஸிகுளோரோகுயின் (HCQ) உற்பத்தி

- HCQ-ன் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளது.
- இந்த மருந்தை உற்பத்தி செய்வதில் இப்கா ஆய்வகம், சைடுஸ் கேடிலா மற்றும் வாலேஸ் மருந்து நிறுவனம் ஆகியவை இந்தியாவில் முன்னிலையில் உள்ளன.
- இப்கா நிறுவனமானது உலக அளவில் இந்த மருந்தை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது.
- இந்த மருந்தை உற்பத்தி செய்வதற்கு இந்தியாவிற்குத் தேவைப்படும் செயல்படும் திறன் கொண்ட மருந்து மூலப்பொருட்களில் மொத்தத்தில் 70 சதவீதம் சீனாவிடமிருந்து வருகின்றன.
- உலகின் 70% HCQ விநியோகத்தை இந்தியா உற்பத்தி செய்கின்றது.
- இந்த மருந்தின் மிகப்பெரிய ஏற்றுமதியாளர் நாடு இந்தியா ஆகும்.
- மலேரியா, தோல் அழிநோய் மற்றும் சளி கீழ்வாதம் ஆகிய 3 நோய்களுக்காக இந்தியாவிற்கு ஒவ்வொரு ஆண்டும் 24 மில்லியன் என்ற அளவில் HCQ மருந்துகள் தேவைப்படுகின்றன.
- தற்பொழுது, கொரானா வைரஸ் பாதித்துள்ள 55 நாடுகளுக்கு இந்த மருந்தினை விநியோகிக்கும் நடைமுறையில் இந்தியா இறங்கியுள்ளது.
- இந்த மலேரியத் தடுப்பு மருந்தானது அமெரிக்க அதிபரினால் கோவிட் – 19 நோய்க்கு எதிராகப் போராடும் முறையில் ஒரு முக்கியத் தீர்வாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.
- இந்த மருந்தானது மலேரியா இல்லாத காரணத்தினால் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் தயாரிக்கப் படுவதில்லை.
- பிரேசிலின் பிரதமரான ஜெய்ர் போல்ஸ்னரோ இந்தியாவிடமிருந்து HCQன் விநியோகத்தை இராமாயணத்தில் அனுமன் கொண்டு வரும் “புனித மருந்து” அல்லது “சஞ்சீவினி” போன்றது என்று குறிப்பிட்டுள்ளார்.
- இந்த ஆண்டின் 70வது குடியரசுத் தினத்தின் தலைமை விருந்தினர் போல்ஸ்னரோ ஆவார்.



## கொரானா மாதிரி மாவட்டங்கள்

- ❖ சமீபத்தில் மத்திய அரசானது கேரளாவின் காசர்கோடு மாவட்டத்தின் தொடர்புக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மாதிரியை எடுத்துக் காட்டியுள்ளது.
- ❖ இது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் மிகவும் வெற்றிகரமான மாதிரிகளில் ஒன்றாகும்.
- ❖ ஆக்ரா (உத்தரப் பிரதேசம்), பில்வாரா (இராஜஸ்தான்) மற்றும் பத்தனம்திட்டா (கேரளா) ஆகியவை இதர வெற்றிகரமான கட்டுப்பாட்டு மாதிரிகளாகும்.

## உலகளாவிய உதவி (WWH - World Wide Help)

- ❖ கரோனா வைரஸ் (COVID-19) தொற்றுநோயால் தேவைப்படும் உடல் ரீதியான சமூக விலகல் தேவைகளுக்கு பெரிதும் உதவக்கூடிய ஒரு மென்பொருளை பம்பாய் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது உருவாக்கியுள்ளது.
- ❖ இந்த மென்பொருளுக்கு உலகளாவிய உதவி (WWH) என்று பெயரிடப்பட்டுள்ளது, இது மருத்துவ உதவி தேவைப்படும் நபர்களை மருத்துவர்கள் போன்ற உதவியாளர்களுடன் இணைக்கப் பயன்படுகிறது.

## கோவிட் இந்தியா சேவா

- ❖ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சரான டாக்டர் ஹர்ஷ் வர்தன் "கோவிட் இந்தியா சேவா" எனும் இணைய தளத்தைத் தொடங்கி வைத்தார்.
- ❖ இது குடிமக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான தகவல்தொடர்பை வழங்குவதற்காக நிறுவப்பட்ட ஒரு ஊடகமாக அமைகிறது.

## சுவாமித்துவ யோஜனா (உரிமைத் திட்டம்)

- ❖ ஏப்ரல் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்பட்ட பஞ்சாயத்து ராஜ் தினத்தின் போது பிரதமர் இந்தத் திட்டத்தைத் தொடங்கினார்.
- ❖ இது கிராமங்களில் குடியிருப்பு நில உரிமையைத் வரைபடமிடுவதற்காகத் தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இது பிரச்சினைகளற்ற ஒரு பதிவேட்டை உருவாக்குவதற்காக ஆளில்லா குட்டி விமானங்களைப் பயன்படுத்தி நிலங்களை அளவிட இருக்கின்றது.
- ❖ கிராமங்களில் உள்ள அனைத்துச் சொத்துகளுக்கான சொத்து அட்டையானது அந்தந்த மாநிலங்களால் தயாரிக்கப்பட இருக்கின்றது.
- ❖ இந்தத் திட்டமானது இந்தியாவில் சொத்துப் பதிவேடுப் பராமரிப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- ❖ இது ஆளில்லா குட்டி விமானங்கள் மற்றும் சமீபத்திய ஆய்வு முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கிராமப்புற வாழ்விட நிலங்களை அளவிடுவதற்கு உதவுகின்றது.
- ❖ இந்தத் திட்டமானது மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தத் திட்டமானது கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், ஹரியானா, உத்தரகாண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய 6 மாநிலங்களில் தொடங்கப் பட்டுள்ளது.

### மின்னணு கிராம் சுவராஜ் தளம் மற்றும் கைபேசிச் செயலி

- இது பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டுள்ளது.
- இது கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அவர்களது கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி அவற்றைச் செயல்படுத்துவதற்காக ஒரு ஒற்றை இடைமுகத்தை அளிக்க இருக்கின்றது (GPDP - Gram Panchayat Development Plan).

### பிளாஸ்மா (ஊநீர்) சிகிச்சை

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள கிங் ஜார்ஜ் மருத்துவப் பல்கலைக்கழகமானது கோவிட் – 19 நோய்த் தொற்று சிகிச்சைக்குப் பிளாஸ்மா சிகிச்சை முறையைத் தொடங்கிய முதலாவது அரசு மருத்துவமனையாக உருவெடுத்துள்ளது.
- இந்தியாவில் பிளாஸ்மா சிகிச்சை முறையானது கழுத்தில் ஏற்படும் வீக்க வியாதி, தட்டம்மை, போலியோ மற்றும் சளிக் காய்ச்சல் போன்ற நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

## சர்வதேசச் செய்திகள்

### சிவப்புக் கொடி (Exercise Red Flag) பயிற்சி

- அமெரிக்க விமானப் படையானது, "சிவப்புக் கொடிப் பயிற்சி" எனும் தனது முதன்மைப் பலதரப்பு விமானப் பயிற்சியின் முதலாவது கட்டத்தை ரத்து செய்துள்ளது. இந்தப் பயிற்சியானது ஏப்ரல் 30 ஆம் தேதியிலிருந்து அலாஸ்காவில் நடக்க இருந்தது.
- இந்தப் பயிற்சியில் இந்திய விமானப் படையானது தனது சுகோய் சு – 30 என்ற வகை போர் விமானங்களுடன் கலந்து கொள்ள இருந்தது.
- அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடுகள் மட்டுமே இந்தப் பயிற்சியில் கலந்து கொள்ளும்.

### அணு ஆயுதக் கட்டுப்பாடுகள்

- ஈரான் மீதான 4 அணு ஆயுதக் கட்டுப்பாடுகளை அமெரிக்கா புதுப்பித்து உள்ளது.
- அணு ஆயுதத் திட்டத்தை ஈரான் மேம்படுத்துவதைத் தடுப்பதற்காக இந்தக் கட்டுப்பாடுகள் அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டன.
- ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள வர்த்தகத் தடை மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவை இந்தியாவின் எண்ணெய் இறக்குமதியை மிகப் பெரிய அளவில் பாதிக்கும்.
- இது ஈரானில் உள்ள சாபஹார் துறைமுகத்தை மேம்படுத்துவதன் மூலம் மத்திய ஆசியாவை அடைவதற்கான இந்தியாவின் திட்டத்தைப் பாதிக்கும்.
- 2015 ஆம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் ஈரானின் அணு ஆயுதத் திட்டத்தைத் தடை செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான கூட்டுச் செயல்திட்டத்தில் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஈரானில் உள்ள அதிக அளவிலான யுரேனியம் ஈரானிலிருந்து வெளியேற்றப்படும்.
- ஈரானில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு அணு ஆயுத நடவடிக்கைகள் சர்வதேசச் சோதனை வளையத்திற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.




## மருத்துவமனைகள் தேசியமயமாக்கல்

- ❖ ஸ்பெயின் அரசானது கரோனா வைரஸ் நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக நாட்டில் உள்ள அனைத்துத் தனியார் மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நலனை வழங்கும் அமைப்புகள் ஆகியவற்றைத் தேசிய மயமாக்கியுள்ளது.
- ❖ "இந்த நேரத்தில் உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையை வரையறுத்தல்" என்று இந்தத் தொற்று குறித்து உலகச் சுகாதார அமைப்பு எச்சரித்ததாலும் "சோதனை, சோதனை, சோதனை" என்ற முறையை மேற்கொள்ள நாடுகளை அறிவுறுத்தியதாலும் இந்த நடவடிக்கையானது எடுக்கப் பட்டுள்ளது.

## கோவிட் – 19 மற்றும் உலக வங்கி

- ❖ கோவிட் – 19 அவசரக் கால எதிர்வினை மற்றும் சுகாதார அமைப்புகளுக்கான தயார்நிலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1 பில்லியன் அமெரிக்க டாலரை இந்தியாவிற்கு வழங்க உலக வங்கி அறிவித்து ள்ளது.
- ❖ இது தேசிய சுகாதார அமைப்பை வலுப்படுத்தவும் நாட்டின் சுகாதார நல அமைப்புகளைத் தயார் நிலையில் வைத்து இருக்கவும் உதவ இருக்கின்றது.

## உலக வங்கி – வறுமை குறித்த ஆய்வு

- ❖ கோவிட் – 19 வைரஸ் தொற்றின் காரணமாக பசிபிக் மற்றும் கிழக்கு ஆசியாவில் ஏறத்தாழ 11 மில்லியன் மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப் படுவர் என்று உலக வங்கி அறிவுறுத்தியுள்ளது.
- ❖ உலக வங்கியின்படி, பசிபிக் மற்றும் ஆசியா ஆகிய பிராந்தியங்களில் ஏறத்தாழ 35 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்துத் தப்பித்துக் கொள்வர்.
- ❖ சீனாவில் இருந்து மட்டும் ஏறத்தாழ 25 மில்லியன் மக்கள் வறுமையிலிருந்துத் தப்பித்துக் கொள்வர்.

## 70வது நினைவு ஆண்டு

- ❖ இந்தியா மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளும் தங்களது தூதரக உறவுகளின் 70வது நினைவு ஆண்டை அனுசரித்தன.
- ❖ இந்தியாவானது 1950 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியன்று சீன மக்கள் குடியரசுடன் தூதரக உறவை ஏற்படுத்தியது.
- ❖ ஆசியாவில் சீன மக்கள் குடியரசுடன் தூதரக உறவை ஏற்படுத்திய முதலாவது கம்யூனிச ஆட்சி அற்ற நாடு இந்தியா ஆகும்.



## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு ஆணையம் - சந்திப்பு

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அமைப்பின் (UNSC - United Nations Security Council) தற்போதைய தலைமை நாடான டொமினியக் குடியரசானது கோவிட் – 19 தொடர்பாக UNSC சந்திப்பு ஒன்று நடைபெற இருப்பதாக அறிவித்துள்ளது.
- 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த அமைப்பின் சுழற்சி முறையிலான தலைமையானது சீனாவிடமிருந்து (முந்தைய தலைமை நாடு) இந்த கரீபிய நாடால் பெற்றுக் கொள்ளப் பட்டது.
- புவிசார் அரசியல் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றைக் கையாளுவதே இந்த அமைப்பின் முக்கியப் பொறுப்பாகும்.
- பொதுச் சுகாதாரப் பாதுகாப்பானது இந்த அமைப்பிற்கான வரம்பின் கீழ் இல்லை.




## தீர்மானம் 2518

- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றமானது அமைதி காப்புப் படையினரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக "தீர்மானம் 2518" என்ற ஒன்றை ஏற்றுக் கொண்டது.
- அமைதிப் படையினரின் பாதுகாப்பிற்காக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த தீர்மானம் சீனாவால் முன்னெடுக்கப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பு தனது 75வது நினைவு ஆண்டைக் கொண்டாடும் சமயத்தில் அமைதிப் படையினரின் பாதுகாப்பிற்கான ஒரு தீர்மானமானது நிறைவேற்றப் படுகின்றது.

- ❖ அமைதிக்கான நடவடிக்கையைச் செயல்படுத்துவதற்காக இந்த அமைப்பிற்கான ஒரு முக்கியமான ஆண்டு இந்த ஆண்டாகும்.
- ❖ "அமைதிக்கான நடவடிக்கை" என்ற முன்னெடுப்பானது அரசியல் பிரச்சினைகள், நீண்ட காலப் பிரச்சினைகள், ஆபத்துள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகள், விரிவான மற்றும் சிக்கலான நடவடிக்கைகள் போன்ற பிரச்சினைகளைக் களைவதற்கு வேண்டி உறுப்பு நாடுகளுக்கு உதவுவதற்காக ஐக்கிய நாடுகளினால் ஏற்படுத்தப்பட்டது.

## பிசிஜி தடுப்பு மருந்து மற்றும் கோவிட் – 19

- ❖ பிசிஜி அல்லது பேசில்லி கால்மெட்டி குரின் என்பது காச நோய்க்கான ஒரு தடுப்பு மருந்தாகும்.
- ❖ பிசிஜி தடுப்பு மருந்தானது ஒரு வலுவான நோய் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்துவதற்காக அறியப் படுகின்றது. மேலும் இது தொழுநோய் மற்றும் உள்ளக சிறுநீர்ப்பை புற்றுநோய் ஆகியவற்றிற்கு எதிரான பாதுகாப்பினை வழங்குவதற்காக அறியப் படுகின்றது.
- ❖ தங்களது சிறு வயதில் பிசிஜி தடுப்பூசியைப் பெற்ற வயதான மக்களைக் கொண்ட நாடுகள் கரோனா வைரஸ் தொற்றிற்கு எதிராக ஒரு சிறப்பான பாதுகாப்பைப் பெற்று இருக்கின்றன என்று ஒரு சமீபத்திய அறிக்கை கூறுகின்றது.
- ❖ ஏனெனில் கோவிட் – 19 ஆனது குறிப்பாக முதியோர்களை மிக எளிதில் தாக்கும் திறன் கொண்டது.
- ❖ ஸ்பெயின், பிரான்சு, அமெரிக்கா மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் நாடு தழுவிய பிசிஜி கொள்கையைக் கொண்டிராத காரணத்தினால் கோவிட் – 19 தொற்றினால் மிக அதிக அளவிலான இறப்பைச் சந்தித்து வருகின்றன.
- ❖ கோவிட் – 19 தொற்றால் அதிக அளவு இறப்பைக் கண்ட இத்தாலியானது இதுவரை நாடு தழுவிய பிசிஜி தடுப்பு மருந்தைச் செயல்படுத்தவில்லை.
- ❖ இந்தியா 1948 ஆம் ஆண்டு முதல் தொடர் காச நோய் தடுப்பு மருந்துக் கொள்கையைக் கொண்டுள்ளது.
- ❖ ஜப்பான் 1947 ஆம் ஆண்டு முதல் பிசிஜி தடுப்பு மருந்துக் கொள்கையைக் கொண்டு ள்ளது.
- ❖ ஆரம்பக் கட்டத்தில் கோவிட் – 19 தொற்று பாதிப்பைக் கண்டுள்ள நாடுகளில் ஒன்றாக ஜப்பான் இருந்துள்ளது. இது கடுமையான சமூக விலகலை கடைபிடிக்காமல் இருந்த போதிலும் இதுவரையில் குறைந்த எண்ணிக்கையிலான இறப்பையேக் கண்டுள்ளது.
- ❖ ஈரான், தனது பிசிஜி கொள்கையை 1984 ஆம் ஆண்டு முதல் தான் செயல்படுத்தி வருகின்றது. எனவே அங்கு 36 வயதிற்கு மேல் உள்ளவர் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடியவர்களாக உள்ளனர்.



### ஐ.நா. தீர்மானம்

- ஏப்ரல் 3, 2020 அன்று, கோவிட் -19க்கு எதிராக போராட சர்வதேச ஒத்துழைப்பைக் கோரிய ஒரு தீர்மானத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை ஒப்புதல் அளித்தது.
- இந்த தீர்மானம் அதன் உறுப்பு நாடுகள் பன்முகத் தன்மையை (multilateralism) ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது.

#### *அமைதியான முறையில் தீர்மானம்*

- இந்த தீர்மானத்தை நிறைவேற்ற எந்த கூட்டமும் நடத்தப்படவில்லை.
- இந்த தீர்மானம் அமைதியான முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- உறுப்பு நாடுகள் இதை ஆட்சேபிக்க ஏப்ரல் 2 ஆம் தேதி வரை வரைவுத் தீர்மானம் பரிசீலனையில் இருக்கும் என்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அறிவித்து இருந்தது.
- ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்படா விட்டால், இந்த அமைப்பு அதன் உறுப்பு நாடுகளிடையே ஒரு உறுதிப்படுத்தல் கடிதத்தை அனுப்ப விருக்கிறது.

### சிங்கப்பூர் ஒப்பந்தம் – நடுநிலை ஊடாட்டம் (மத்தியஸ்தம்)

- நடுநிலை ஊடாட்டம் குறித்த சிங்கப்பூர் ஒப்பந்தம் என்பது சிங்கப்பூர் நாட்டின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஐக்கிய நாடுகள் ஒப்பந்தமாகும். இது இந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் நடைமுறைக்கு வர இருக்கின்றது.
- இது நடுநிலை ஊடாட்டத்தின் மூலம் பெறப்படும் சர்வதேசத் தீர்வுகள் ஒப்பந்தம் குறித்த ஐக்கிய நாடுகள் ஒப்பந்தம் என்றும் அறியப்படுகின்றது.
- கத்தார் நாடு இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்த மூன்றாவது நாடு கத்தார் ஆகும். சிங்கப்பூர் மற்றும் பிஜி ஆகிய நாடுகள் ஏற்கெனவே இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளன.
- இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளின் நீதிமன்றங்களிடம் இந்த விவகாரங்களை நேரடியாக எடுத்துச் செல்வதன் மூலம் சர்வதேச மத்தியஸ்த தீர்வு ஒப்பந்தங்களின் அமலாக்கத்தைக் கோரும் வணிக ரீதியான நிறுவனங்களின் பிரச்சனைகளுக்கு எளிதில் தீர்வு காண இது வழிவகை செய்கின்றது.

SINGAPORE CONVENTION ON MEDIATION

### வசந்த காலப் பாதுகாப்பு நடவடிக்கை (ஸ்பிரிங் ஷீல்ட் ஆப்பரேசன்)


- இது வடமேற்கு சிரியாவின் இட்லிப் மாவட்டத்தில் சிரியாவின் ஆயுதப்படைகளுக்கு எதிராக துருக்கிய ஆயுதப்படைகள் நடத்திய ஒரு எல்லை தாண்டிய இராணுவ நடவடிக்கையாகும்.
- குறிப்பாக, ஹிஸ்புல்லா அமைப்பு சிரிய அரசாங்கத்தின் சார்பாக இத்தனை ஆண்டுகளாக போராடியதில் வரலாறு காணாத இழப்புகளைச் இம்முறை சந்தித்து உள்ளது.
- ஹிஸ்புல்லா அமைப்பு என்பது லெபனானைத் தளமாகக் கொண்ட ஒரு ஷியா

இஸ்லாமிய அரசியல் கட்சி மற்றும் போராளிகளின் குழுவாகும்.





## பெண்கள் உரிமைகள் குறித்த அரசியல் பிரகடனம்

- ❖ இந்த அரசியல் பிரகடனமானது, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற பெண்களின் நிலை குறித்த 64வது ஆணையத்தின் முடிவாக ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ இது ஐ.நா.வில் நடைபெறும் பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் மேம்பாடு குறித்த ஒரு மிகப்பெரிய வருடாந்திரக் கூட்டமாகும்.
- ❖ பெண்கள் மீதான ஐ.நா.வின் பிரகடனத்திற்கு ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை ஒப்புதல் அளிக்கப் படுகிறது.
- ❖ இது 1995 ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற்ற பெண்கள் பற்றிய நான்காவது உலக மாநாட்டின் 25வது ஆண்டு நிறைவை நினைவு கூர்கிறது.
- ❖ பெய்ஜிங் உச்சி மாநாடு நடந்து முடிந்த இந்த 25 ஆண்டுகளில், "எந்த நாடும் பாலின சமத்துவத்தை முழுமையாக அடைய வில்லை" என்று அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- ❖ 1995 ஆம் ஆண்டிற்கான பெய்ஜிங் பிரகடனம் மற்றும் செயல் இயங்குதளமானது உலகெங்கிலும் உள்ள பெண்களின் விடுதலையையும் முன்னேற்றத்தையும் ஊக்குவிக்க முயல்கிறது.
- ❖ இது பெண்களின் உரிமைகள் குறித்த மிகவும் தொலைநோக்கு கொண்ட ஒரு செயல் திட்டமாகக் கருதப்படுகிறது.



## உள்ளடக்கிய இணையக் குறியீடு 2020

- பொருளாதாரப் புலனாய்வுப் பிரிவு வெளியிட்ட உள்ளடக்கிய இணையக் குறியீடு 2020 (Inclusive Internet Index) என்ற குறியீட்டில் இந்தியா 46வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- இந்தப் பட்டியல் உலகின் 100 நாடுகளைக் கொண்டு உள்ளது.
- இந்தக் குறியீட்டில், ஸ்வீடன் முதலிடத்திலும், நியூசிலாந்து இரண்டாவது இடத்திலும், அமெரிக்கா மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- மிக மோசமான நிலையில், புருண்டி (100), லைபீரியா (99), மடகாஸ்கர் (98), மலாவி (97), புர்கினா பாசோ (96) ஆகிய நாடுகள் உள்ளன.




## பொருளாதாரச் சுதந்திரக் குறியீடு

- முதன்முறையாக உலகின் சுதந்திரப் பொருளாதாரமாக சிங்கப்பூர் நாடானது ஹாங்காங்கை முந்தி உள்ளது.
- முதன்முதலில் 1995 ஆம் ஆண்டில் இந்தக் குறியீடு வெளியிடப் பட்டதிலிருந்தே இதில் ஹாங்காங் நாடே முதலிடத்தில் இருந்து வந்தது.
- ஹெரிடேஜ் ஃபவுண்டேஷன் மற்றும் தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட இந்த வருடாந்திரக் குறியீடானது உலக நாடுகளில் பொருளாதாரச் சுதந்திரத்தின் அளவை அளவிடுகிறது.
- உலகப் பொருளாதாரச் சுதந்திரத்தின் குறியீடானது சொத்துரிமை, நிதிச் சுதந்திரம், அரசாங்கத்தின் நேர்மை, தொழிலாளர் சுதந்திரம், வர்த்தகச் சுதந்திரம், முதலீட்டுச் சுதந்திரம் மற்றும் வணிகச் சுதந்திரம் உள்ளிட்ட 12 சுதந்திரங்களை உள்ளடக்கியது.
- மொத்தத்தில் இந்த ஆய்வு 186 நாடுகளை உள்ளடக்கி உள்ளது.
- இந்த ஆய்வில் இந்தியா 120வது இடத்தில் உள்ளது.

## கோவிட் – 19 தொற்றிற்கு எதிராகப் போராட இந்தியாவிற்கு சர்வதேச நாடுகளின் உதவி

- அமெரிக்கா கோவிட் – 19 தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக தனது அமெரிக்க உலகளாவிய எதிர்வினைத் தொகுப்பின் கீழ் 2.9 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியானது இந்தியாவிற்கு வழங்கப் படும் என்று அறிவித்துள்ளது.
- சீனா இந்தியாவிற்கு 1,70,000ற்கும் மேற்பட்ட தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை (PPE - Personal Protective Equipment) இலவசமாக வழங்கியுள்ளது.

## ஊதா வண்ண அறிவிப்பு

- கோவிட் – 19 தொற்றிற்கு எதிராகப் போராடி வரும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றைக் குறி வைத்து ரேன்சம்வேர் மூலம் தாக்குதல் நடத்த (தகவல்களை முடக்கிப் பணம் பெறுதல்) இணையவழிக் குற்றவாளிகள் முயற்சித்து

வருகின்றனர் என்று சர்வதேசக் குற்றவியல் தடுப்பு காவல்துறை அமைப்பானது (Interpol - International Criminal Police Organisation), தனது உறுப்பு நாடுகளை எச்சரித்துள்ளது.

- இது தொடர்பாக, இந்த அமைப்பானது “ஊதா வண்ண அறிவிப்பை” வெளியிட்டு உள்ளது.
- இது 194 உறுப்பு நாடுகளைக் கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- பிரான்சின் லியோனைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த அமைப்பானது 1923 ஆம் ஆண்டில் சர்வதேசக் குற்றவியல் தடுப்புக் காவல் துறை ஆணையமாகத் தொடங்கப் பட்டது. அதன் பின்னர் 1956 ஆம் ஆண்டில் இது தன்னைத் தானே இன்டர்போல் என்று அழைத்துக் கொண்டது.
- இந்தியா இந்த அமைப்பில் 1949 ஆம் ஆண்டில் இணைந்தது.




## நிழல் தொற்று

- ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பானது கோவிட் – 19 குறித்த தனது உறுப்பு நாடுகளின் செயல் திட்டங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைத் தடுப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று தனது உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- இது பாலினத்தை அடிப்படையாகக் கொண்ட வன்முறை அதிகரிப்பை “நிழல் தொற்று” என்று அழைக்கின்றது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பினால் தொகுக்கப்பட்ட தரவின்படி, பிரான்சில் மார்ச் 17 ஆம் தேதி நாடு முடக்கப்பட்டதிலிருந்து அந்நாடு 30% குடும்ப வன்முறை அதிகரிப்பைக் கண்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பான ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பை உருவாக்கியுள்ளது.

## நீலத் தலைக் கவசங்களின் செயல்பாடுகளை நிறுத்தி வைத்தல்

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது தனது அமைதிப் படைகளின் செயல்பாடுகளை ஜூன் 30 ஆம் தேதி வரை நிறுத்தி வைப்பதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.
- கோவிட் – 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் அமைதிப் படையானது 1945 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டதாகும்.
- சில நேரங்களில் இந்தப் படையானது “நீலத் தொப்பி” அல்லது “நீலத் தலைக் கவசங்கள்” என்று அழைக்கப் படுகின்றது.

- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பணியாகும்.



## கோவிட் – 19 மற்றும் உலகத்தில் வேலைவாய்ப்பு

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பானது (ILO - International Labour Organization) “கோவிட் – 19 மற்றும் உலகத்தில் வேலைவாய்ப்பு” என்ற தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் ஏறத்தாழ 400 மில்லியன் மக்கள் வறுமை நிலைக்குச் செல்ல இருக்கின்றனர்.
- வேலைவாய்ப்புக் குறைப்பானது அரபு நாடுகள், ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியங்களில் அதிக அளவில் காணப்பட இருக்கின்றது.

## ஏமனில் போர் நிறுத்தம்

- சவுதி அரேபியா தலைமையிலான கூட்டமைப்பானது ஏமனில் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.
- ஏமனில் இந்தக் கூட்டமைப்பின் தலையீடானது ஐக்கிய நாடுகள் பட்டயச் சட்டத்தின் சரத்து 2 உடன் ஒன்றிப் பொருந்துவதாக உள்ளது.
- ஏமனில் இந்தக் கூட்டமைப்பின் தலையீடானது “வலிமையான புயல் நடவடிக்கை” (Operation Decisive Storm) என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தக் கூட்டமைப்பில் சவுதி அரேபியா, சூடான், ஐக்கிய அரபு அமீரகம், பக்ரைன், குவைத், எகிப்து, ஜோர்டான், மொராக்கோ, செனகல் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தக் கூட்டமைப்பானது அமெரிக்காவினால் ஆதரிக்கப் படுகின்றது.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கிய ஒரு பிரச்சினையினால் ஏமனானது சூறையாடப் பட்டது.
- ஈரான் நாட்டு இராணுவத்தினால் ஆதரிக்கப்பட்ட ஹவ்திஸ் படைப் பிரிவானது ஏமன் நாட்டின் மேற்கு பகுதியில் முழுக் கட்டுப்பாட்டையும் எடுத்துக் கொண்டது.
- ஹவ்திஸ் தலைமையிலான ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையானது ஏமன் நாட்டின் அதிபரான மன்சூர் ஹாடி என்பவரை அந்நாட்டை விட்டு வெளியேறச் செய்தது.
- இந்தக் குழுவின் எழுச்சியைத் தொடர்ந்து சவுதி அரேபியா மற்றும் 8 இதர அரபு நாடுகள் ஹாடியின் தலைமையிலான அரசாங்கத்தை மீண்டும் ஏற்படுத்த ராணுவ நடவடிக்கையில் இறங்கின.

## கோவிட் -19 பற்றிய UNSC கூட்டம்

- கோவிட் -19 தொற்றுநோய் குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுவானது (UNSC - United Nations Security Council) ஏப்ரல் 9, 2020 அன்று முதல் முறையாக கூடியது.
- குழுவின் பத்து நிரந்தரமற்ற உறுப்பினர்களுள் ஒன்பது பேர் தற்போதைய நெருக்கடியைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கோரியதனால் இந்தக் கூட்டம் நடைபெற்றது.
- களங்கம் விளைவிக்கக் கூடிய மற்றும் அரசியல்மயமாக்கல் போன்ற எந்தவொரு செயலையும் நிராகரிக்க, சீனா ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுவை வலியுறுத்தியது.
- கடந்த மாதம் கரோனா வைரஸை "சீன வைரஸ்" என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கூறியதால் இதை சீனா வலியுறுத்தியது.
- சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கவுன்சிலானது பொறுப்பாகும்.
- இருப்பினும், கோவிட் -19 தொற்றுநோயானது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுவின் ஆணைக்கு உட்பட்டதா இல்லையா என்பதில் அதன் உறுப்பு நாடுகள் உடன்படவில்லை.
- இந்த உலகளாவிய நோயை "சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புப் பிரச்சினை" என்று ஜெர்மனி வரையறுத்தாலும், சீனா, ரஷ்யா மற்றும் தென்னாப்பிரிக்கா போன்ற பல நாடுகள் பாதுகாப்பு குழுவின் கீழ் இந்த சுகாதார விஷயங்கள் வருவதில்லை என்றே கூறுகின்றன.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுவுக்கு தலைமை வகித்திருந்த சீனா, கோவிட் - 19 தொற்றுநோய் குறித்த அனைத்து விவாதங்களையும் நிராகரித்து, அது இக்குழுவின் கீழ் விவாதிக்க உட்பட்டது அல்ல என்று கூறியது.

## உலகச் செவிலிய நிலை

- உலகச் சுகாதார அமைப்பு, சர்வதேச செவிலியர்க் குழு மற்றும் தற்போதைய செவிலியப் பிரச்சாரம் (Nursing Now) போன்றவற்றுடன் இணைந்து "உலகச் செவிலிய நிலை" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இதன் படி உலகளவில், 10,000 பேருக்கு சுமார் 36.9 செவிலியர்கள் உள்ளனர்.
- ஆப்பிரிக்கப் பிராந்தியத்தை விட அமெரிக்காவில் கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகம் செவிலியர்கள் உள்ளனர்.
- இவர்களின் மிகப்பெரிய பற்றாக்குறையானது தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் உள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில், வயதான செவிலியப் பணியாளர்கள் உள்ளதால் இந்த நாடுகள் வேறுவிதமான பிரச்சனைகளை எதிர்கொள்கின்றன.
- செவிலியர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்கள் ஆவர் - இந்தியாவில் 88 சதவீதம் பெண் செவிலியர்கள் ஆவர்.




## பெர்னி சாண்டர்ஸ் – அமெரிக்கா

- ❖ ஜனநாயகக் கட்சியின் சார்பாக 2020 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கான போட்டியில் இருந்து பெர்னி சாண்டர்ஸ் வெளியேறினார்.
- ❖ இந்நிலையில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பிடன் 2020 ஜனாதிபதித் தேர்தலுக்கான அதிகாரப் பூர்வ வேட்பாளராக இருப்பார்.
- ❖ குடியரசுக் கட்சியின் வேட்பாளரான டொனால்ட் டிரம்பிற்கு எதிராக இவர் போட்டியிடுவார்.
- ❖ ஜோ அமெரிக்காவின் 47வது துணை அதிபராக 2009 முதல் 2017 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

## சீனாவில் வுஹான்

- ❖ வுஹான் தனது 76 நாள் முடக்க நடவடிக்கைகளை விலக்கியுள்ளது.
- ❖ இது கடந்த டிசம்பர் மாதத்தில் முதல் கரோனா வைரஸ் தொற்றுப் பதிவு செய்யப்பட்ட சீன நகரமாகும்.
- ❖ இது சீன மக்கள் குடியரசின் ஹூபே மாகாணத்தின் தலைநகரம் ஆகும்.

## உலக உணவுத் திட்ட அறிக்கை

- ❖ உலக உணவுத் திட்டமானது தனது புதிய ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அது "கோவிட்-19: உலகின் ஏழ்மையான மக்கள் மீது சாத்தியமான தாக்கம்: தொற்றுநோயின் பொருளாதார மற்றும் உணவுப் பாதுகாப்பு தாக்கங்கள் பற்றிய உலக உணவுத் திட்டப் பகுப்பாய்வு" ஆகும்.
- ❖ இது வேகமாக பரவி வரும் கரோனா வைரஸ் தொற்றுநோயானது இதுவரை உலகளாவிய உணவு விநியோகச் சங்கிலியில் சிறிதளவு தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது என்று கூறியுள்ளது.
- ❖ ஆனால் முக்கிய உணவு இறக்குமதியாளர்களின் பதட்டத்தால் உந்தப்படும் பீதியினால் ஒருவேளை இது விரைவில் மிக மோசமானதாக மாறும்.
- ❖ உலக உணவுத் திட்டம் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு உதவி புரியும் ஓர் கிளையாகும். மேலும் இது பட்டினி மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தும் உலகின் மிகப்பெரிய ஒரு மனிதநேய அமைப்பாகும்.
- ❖ இதன் தலைமையகம் ரோமில் உள்ளது.
- ❖ இது ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுக் குழுவில் ஓர் உறுப்பினராக உள்ளது.

WFP World Food Programme

## உலகச் சுகாதார நிறுவனம் – ஆளுகை

- ❖ அமெரிக்க அதிபரான டொனால்டு டிரம்ப் உலகச் சுகாதார நிறுவனத்திற்கு அமெரிக்காவின் நிதியுதவியை நிறுத்த முடிவு செய்துள்ளார்.
- ❖ டிரம்ப் உலகச் சுகாதார நிறுவனத்திற்கு அமெரிக்காவின் நிதியுதவிப் பங்கை நிறுத்த முடிவு செய்தால், இந்நிறுவனம் அமெரிக்காவின் வாக்களிப்பு உரிமையை நீக்கி அதன் சேவைகளை அமெரிக்கா பயன்படுத்தத் தடை விதிக்கும்.
- ❖ உலகச் சுகாதார நிறுவனத்தின் சபையானது (அனைத்து உறுப்பு நாடுகளையும் கொண்ட சபை) இந்த அமைப்பின் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றது.


### *உலகச் சுகாதார நிறுவனம் பற்றி*

- ❖ உலகச் சுகாதார நிறுவனம் ஆனது 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 அன்று செயல்பாட்டிற்கு வந்தது. இந்தத் தேதியானது தற்பொழுது ஒவ்வொரு ஆண்டும் உலகச் சுகாதார தினமாக அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ளது.
- ❖ தற்பொழுது உலகச் சுகாதார நிறுவனத்திற்கு மிக அதிக அளவில் நிதியுதவியை அளிக்கும் நாடு அமெரிக்கா ஆகும்.
- ❖ இதற்கு அடுத்து உலகச் சுகாதார நிறுவனத்திற்கு பில் & மெலிண்டா கேட்ஸ் அமைப்பால் அதிக அளவில் நிதியுதவி அளிக்கப் படுகின்றது.
- ❖ இந்நிறுவனத்திற்கான மூன்றாவது மிகப்பெரிய நிதியுதவிப் பங்காளர் கேவி தடுப்பு மருந்துக் கூட்டமைப்பாகும்.
- ❖ இந்தியா மொத்த நிதியில் 0.48% நிதியையும், சீனா 0.21% நிதியையும் இந்நிறுவனத்திற்கு அளிக்கின்றன.

## எண்ணெய் உற்பத்திக் குறைப்பு

- ❖ இது சவுதி அரேபியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையேயான ஒரு புதிய ஒப்பந்தமாகும்.
- ❖ பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளைக் கொண்ட அமைப்பு (OPEC - Organization of Petroleum Exporting Countries) மற்றும் ரஷ்யா ஆகியவை எண்ணெய் உற்பத்தியை 10% என்ற அளவில் குறைக்க முடிவு செய்துள்ளன.
- ❖ கோவிட் – 19 நோய்த் தொற்றினால் உலகம் முழுவதும் முடக்கப் பட்டதனால் ஏற்படும் எண்ணெய் விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ இதற்கு முன்பு சவுதி அரேபியா எண்ணெய் உற்பத்திக் குறைப்பைத் தொடங்கிய போது இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட இரஷ்யா மறுத்திருந்தது.
- ❖ OPEC அமைப்பானது ரஷ்யாவைத் தனது உற்பத்தியில் ஒரு நாளைக்கு 3,00,000 பீப்பாய்கள் என்ற அளவிற்கு உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளுமாறுக் கேட்டுக் கொண்டது.

- இந்தப் புதிய ஒப்பந்தம் மிகப்பெரிய அளவில் உற்பத்திக் குறைப்புகளை ஏற்படுத்திய போதிலும் எண்ணெய்த் தேவையானது எதிர்பார்ப்பிற்கும் குறைவாக இருப்பதனால் எண்ணெய் விலை மாற்றத்தில் இது எந்தவொரு பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்தாது.
- இந்த ஒப்பந்தமானது அமெரிக்க அதிபர் மற்றும் G20 ஆகியவற்றின் நடுநிலைமையின் மூலம் ஏற்படுத்தப் பட்டதாகும்.
- OPEC+ என்பது 2017 ஆம் ஆண்டு முதல் எண்ணெய்ச் சந்தைகளில் விநியோகத் திருத்தங்களை மேற்கொள்ளும் கச்சா எண்ணெய் உற்பத்தியாளர்களின் ஒரு கூட்டமைப்பு ஆகும்.
- OPEC+ ஆனது அசர்பைஜான், பக்ரைன், புருனேய், கஜகஸ்தான், மலேசியா, மெக்சிகோ, ஓமன், இரஷ்யா, தெற்கு சூடான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளைக் கொண்டு உள்ளது.




## WHOவிற்கு நிதியளித்தல்

- அமெரிக்க நாடானது உலகச் சுகாதார அமைப்பிற்கு (WHO - World Health Organization) தான் அளிக்கும் நிதியை நிறுத்தி வைத்துள்ளது.
- இந்நிறுவனத்திற்கு அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் 400-500 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை அளித்து வருகின்றது.
- 4 முக்கியமான நிதிப் பங்களிப்புகள் WHOவின் நிதியை ஏற்படுத்துகின்றன.
- இதில் மதிப்பீடு செய்யப்பட்ட பங்களிப்பு, தன்னார்வப் பங்களிப்பு, முக்கியமான தன்னார்வப் பங்களிப்புகள் மற்றும் பிஐபி பங்களிப்புகள் (PIP - Pandemic Influenza Preparedness) ஆகியவை அடங்கும்.
- மதிப்பீடு செய்யப்பட்ட பங்களிப்புகள் என்பது உறுப்பு நாடுகளால் செலுத்தப்படும் நிதியைக் குறிக்கின்றது.
- தன்னார்வப் பங்களிப்புகள் என்பது தனியார் அமைப்புகளின் மூலம் உறுப்பு நாடுகளால் வழங்கப்படும் நிதியைக் குறிக்கின்றது.
- முக்கியமான தன்னார்வப் பங்களிப்புகள் என்பது உடனடியாகத் தேவைப்படும் நிதியைக் குறிக்கின்றது.
- பிஐபி பங்களிப்புகள் என்பது வளரும் நாடுகளால் தடுப்பு மருந்துகளை அணுகுவதை வலுப்படுத்துவதற்காக 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இன்புளூயன்சா தொற்று நோய்க்கான தயார்நிலை (PIP - Pandemic Influenza Preparedness) நிதியைக் குறிக்கின்றது.

## இந்தியாவிற்கு ஏவுகணை விற்பனை

- இந்தியாவிற்கு ஏவுகணைகளை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.
- இலகுரக நீர்மூழ்கி வகை ஏவுகணைகள் மற்றும் ஹார்பூன் என்ற வானிலிருந்து செலுத்தப்படும் ஏவுகணைகள் இதில் அடங்கும்.
- இலகுரக நீர்மூழ்கி வகை ஏவுகணைகள் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தப் படுகின்றன.
- ஹார்பூன் என்பது எதிரியின் கப்பல் மற்றும் படகுகள் ஆகியவற்றைத் தாக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு கப்பல் எதிர்ப்பு வகை ஏவுகணைகளாகும்.
- நீர்மூழ்கி ஏவுகணைகள் என்பவை நீருக்கு அடியில் அல்லது நீரின் மேற்பரப்பிலிருந்துச் செலுத்தப்படும் நீருக்கடியிலான வகையைச் சேர்ந்த ஏவுகணையாகும்.

## சார்க் நாடுகளுக்குப் பயிற்சி

- இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டமானது (ITEC - Indian Technical and Economic Cooperation Programme) சார்க் நாடுகளைச் சார்ந்த சுகாதார நல வல்லுனர்களுக்காக ஒரு பயிற்சித் திட்டத்தை அறிவித்துள்ளது.
- இந்த திட்டமானது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் நடத்தப்பட இருக்கின்றது.
- முன்னதாக இந்தியா சார்க் கோவிட் – 19 அவசரகால நிதி என்ற ஒரு நிதியினை ஏற்படுத்தப் பரிந்துரைத்திருந்தது.
- இந்தியா இந்த நிதிக்காக 10 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை ஒதுக்கியுள்ளது.
- ITEC திட்டமானது 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ITEC ஆனது இருதரப்பு மற்றும் பலதரப்புத் தன்மை ஆகிய இரண்டு நிலையையும் கொண்டதாகும்.
- இந்தத் திட்டமானது முழுவதும் இந்திய அரசினால் நிதியளிக்கப்படுகின்றது.
- இது வெளிநாட்டு மாணவர்களுக்கு தனது பயிற்சியை வழங்குவதுடன், அவர்களது உயர்கல்வியைத் தொடரவும் அனுமதிக்கின்றது.

## தென் கொரியத் தேர்தல்

- ஆளும் ஜனநாயக் கட்சித் தலைவரான மூன் ஜே என்பவர் தென் கொரியத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
- கோவிட் – 19 நோய்த் தொற்றிற்கு மத்தியில் தேசியத் தேர்தலை நடத்திய முதலாவது நாடு தென் கொரியா ஆகும்.
- இந்தத் தேர்தலில் முதன்முறையாக 18 வயதினை உடையவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப் பட்டனர்.

## கூகிள் பத்திரிக்கை அவசர நிவாரண நிதி

- கரோனா வைரஸ் தொற்றுநோயை எதிர்கொண்டு, தமது செயல்பாடுகளை பராமரிக்கப் போராடும் உள்ளூர் செய்தி நிறுவனங்களுக்கு உதவுவதற்காக ஒரு அவசர நிவாரண நிதியைத் தொடங்க கூகிள் நிறுவனமானது திட்டமிட்டுள்ளது.

- கூகிள் செய்தி முயற்சியின் ஒரு பகுதியாக, கோவிட் -19 தொற்றுநோயின் காரணமான பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள உள்ளூர் செய்தி அலுவலகங்களுக்கு இந்த நிதியானது உதவி புரியும்.

## வணிக ரீதியிலான விண்வெளிப் பயணத் திட்டம்

- நாசாவானது, தனது விண்வெளி வீரர்களைக் கொண்ட விண்வெளிப் பயணத்தைச் செலுத்த இருப்பதாக அறிவித்துள்ளது.
- கடந்த 9 ஆண்டுகளுக்குப் பிறகு நாசாவின் முதலாவது பயணம் இதுவாகும்.
- இந்தத் திட்டமானது பால்கன்-9 விண்கலத்தை (ராக்கெட்) பயன்படுத்திச் செலுத்தப் பட இருக்கின்றது.
- எலோன் மஸ்க் விண்வெளி நிறுவனத்தின் மூலம் விண்வெளிக்கு வீரர்களைச் செலுத்தும் முதலாவது திட்டம் இதுவாகும்.
- தற்பொழுது, ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் போயிங் ஆகியவை நாசாவின் விண்வெளிப் பயணங்களுக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனங்களாகும்.
- இத்திட்டத்தின்கீழ், தனியார் நிறுவனங்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விண்வெளி வீரர்களைக் கொண்டு செல்வதற்காக, அவர்களைத் தாங்கிச் செல்லும் வாகனங்களைச் செயல்படுத்த இருக்கின்றன.




## அமெரிக்கக் குடியேற்றத் தடை

- அமெரிக்காவானது, தனது நாட்டிற்குள் பிற நாட்டினர் குடியேறுவதற்குத் தடை விதித்துள்ளது.
- இத்தடையானது 60 நாட்களுக்குப் பொருந்தும். இத்தடையானது நிரந்தரக் குடியிருப்பாளர் தகுதிக்கான "பச்சை அட்டையை" கோருபவர்களுக்கும் பொருந்தும்.
- பச்சை அட்டையானது அலுவல் ரீதியாக நிரந்தரக் குடியிருப்பு அட்டை என்று அழைக்கப் படுகின்றது.
- பச்சை அட்டையை வைத்திருப்பவர்கள் அமெரிக்கக் குடியுரிமைக்காக விண்ணப்பிப்பதற்குச் சட்டப்பூர்வமாகத் தகுதியுடையவர்களாவர்.

## G 20 வேளாண் அமைச்சர்கள் சந்திப்பு

- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் காணொலியின் மூலம் G20 நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் சந்திப்பில் கலந்து கொண்டார்.

- இந்தச் சந்திப்பானது சவுதி அரேபியாவினால் தலைமை தாங்கப்பட்டது.
- G20 AMIS ஆனது (Agricultural Market Information System - வேளாண் சந்தைத் தகவல் அமைப்பு) கொள்கை நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பிற்காக உதவ இருக்கின்றது.

## உலகளாவிய வருடாந்திர அறிக்கை

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உலக உணவுத் திட்டமானது உணவுப் பிரச்சினை குறித்த தனது 4வது வருடாந்திர அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, உலகில் உணவுப் பிரச்சினையானது 10% என்ற அளவில் அதிகரித்துள்ளது.
- இந்த அறிக்கையானது ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் வேளாண் அமைப்பாலும் உலக உணவுத் திட்டத்தாலும் இணைந்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் அளிக்கப் பட்டது.

## உலகப் பத்திரிக்கைச் சுதந்திரக் குறியீடு – 2020

- இது "ரிப்போர்ட்டர்ஸ் வித் அவுட் பார்டர்ஸ்" அல்லது எல்லைகளைக் கடந்த பத்திரிக்கையாளர்கள் (Reporters Without Borders) என்ற அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது பாரீசைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு அரசு சாரா அமைப்பாகும்.
- இந்தக் குறியீட்டில் ஏறத்தாழ 180 நாடுகள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தக் குறியீட்டில் நார்வே தொடர்ந்து 4வது ஆண்டாக முதலிடத்திலும் பின்லாந்து 2வது இடத்திலும் டென்மார்க் 3வது இடத்திலும் உள்ளன.
- இந்தியா 2018 ஆம் ஆண்டிலிருந்த இடத்திலிருந்து (140) 2 இடங்கள் பின்தங்கி 142வது இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- 2018 (6 கொலைகள்) ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படும் போது 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் எந்தவொருப் பத்திரிக்கையாளரும் கொலை செய்யப்படவில்லை என்று இது கூறுகின்றது.
- சீனா, ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் கொரானா வைரஸ் பாதிப்பின் செய்திகள் மீதான தணிக்கை முறைக்காக விமர்சிக்கப் படுகின்றன.
- இந்தக் குறியீட்டின் படி, உலகின் மற்ற இதர பிராந்தியங்களைக் காட்டிலும் தெற்கு ஆசியா குறைந்த திறன் கொண்டதாக உள்ளது.
- இந்தக் குறியீட்டில் வடகொரியா 180வது இடத்திலும் சீனா 177வது இடத்திலும் உள்ளன.



## நூர் (ஒளி) செயற்கைக் கோள்

- ஈரானின் புரட்சிகர பாதுகாப்புப் படையானது முதன்முறையாக விண்வெளியின் சுற்று வட்டப் பாதைக்குள் ஒரு இராணுவச் செயற்கைக்கோளை வெற்றிகரமாகச் செலுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தச் செயற்கைக்கோளானது நூர் (ஒளி) என்று பெயரிடப் பட்டுள்ளது.



## இந்தியா மற்றும் மலேசியா

- சமீபத்தில் இந்தியா HCQ (hydroxychloroquine) மருந்து ஏற்றுமதி நாடுகளின் பட்டியலில் மலேசியாவைச் சேர்த்துள்ளது.
- பனை எண்ணெயை வாங்கும் உலகின் மிகப்பெரிய நாடாகவும் மலேசியாவிற்கான மிகப்பெரிய சந்தையாகவும் இந்தியா விளங்குகின்றது.
- இந்தோனேசியாவிற்குப் பின்பு உலகில் இரண்டாவது மிகப்பெரிய பனை எண்ணெய் உற்பத்தியாளர் நாடு மலேசியா ஆகும்.
- இந்தியாவானது ஒவ்வொரு ஆண்டும் இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிடமிருந்து 9 மில்லியன் டன்கள் பனை எண்ணெயை வாங்குகின்றது.
- உலகில் பனை எண்ணெய் மற்றும் தாவர எண்ணெயின் மிகப்பெரிய இறக்குமதியாளர் நாடு இந்தியா ஆகும்.
- நாட்டின் மொத்த தாவர எண்ணெய் இறக்குமதியில் பனை எண்ணெயின் பங்கு 60%ற்கும் மேலாகும்.

### *பின்னணி*

- மார்ச் மாதத்தில், மலேசியாவில் புதிய பிரதமராக முக்யுதின் யாசின் பொறுப்பேற்றார்.
- முன்னதாக பிப்ரவரி மாதத்தில் மலேசியாவின் பிரதமர் பதவியிலிருந்து மஹதிர் முகமது பதவி விலகினார்.

## சீனாவிற்கு எதிரான வழக்கு

- அமெரிக்காவின் மிசௌரி மாகாணம் சீனாவிற்கு எதிராக வழக்கு ஒன்று தொடுத்துள்ளது.
- கொரானா வைரஸ் தொற்றும் நிலையை மறைத்தல், இடித்துரைப்பாளர்களைக் கைது செய்தல், தகவலை அளிக்காமல் இருத்தல் போன்ற சீனாவின் நடவடிக்கைகள் மற்ற நாடுகளுக்கு "தாங்கிக் கொள்ள முடியாத ஒரு இழப்பிற்கு" வழி வகுத்துள்ளது என்று இந்த மாகாணம் குற்றம் சாட்டியுள்ளது.

## தொற்றுநோய்களின் வரலாறு

- கோவிட்-19 ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றது மட்டும் அல்லாமல் பொருளாதார நெருக்கடியின் மோசமான மற்றும் ஆழமான வரலாற்றிற்கும் மக்களை உட்படுத்தியுள்ளது.
- இது உலகின் ஒவ்வொரு பெரிய பொருளாதாரச் சக்தியையும் முடங்கியுள்ளது.
- வரலாற்றில் இதற்குச் சமமான அளவில் வெகுவாக தாக்கங்களை உருவாக்கிய பல தொற்றுநோய்கள் இடம் பெற்று உள்ளன.
- அவை ஜஸ்டினியன் பிளேக், பிளாக் டெத் மற்றும் ஸ்பானிஷ் காய்ச்சல் ஆகும்.
- ஜஸ்டினியன் பிளேக் 6 ஆம் நூற்றாண்டில் தாக்கிய ஒரு கொடிய தொற்று நோயாகும்.
- இது எகிப்திலிருந்து கான்ஸ்டான்டிநோபிள் வரை பரவியிருந்தது.
- பிளாக் டெத் நோயானது 200 மில்லியனுக்கும் அதிகமானவர்களைக் கொன்றது.
- இது சீனா, சிரியா, இந்தியா மற்றும் எகிப்தைத் தாக்கியது.
- இந்த நோய் 1347 ஆம் ஆண்டில் ஐரோப்பாவைத் தாக்கியது.
- முதலாம் உலகப் போரின் கடைசிக் கட்டத்தில் ஸ்பானிஷ் காய்ச்சல் ஆனது தாக்கியது.
- இது முதலில் ஐரோப்பாவில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் ஆசியா மற்றும் அமெரிக்காவிலும் பரவியது.
- இந்த நோய் முதல் உலகப் போரில் ஜெர்மணியின் படைப் பிரிவுகளைப் பலவீனப் படுத்தியது மற்றும் அந்தப் போரில் ஜெர்மனியின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணமாக கருதப் பட்டது.

## பால் தேநீர் கூட்டணி

- பால் தேநீர் கூட்டணி (Milk tea Alliance) என்பது சீன அரசாங்கம் மற்றும் அதன் ஆதரவாளர்களின் சர்வாதிகாரத்திற்கு எதிராக சமூக வலைப் பின்னல்களில் தாய்லாந்து, தைவான் மற்றும் ஹாங்காங்கிலிருந்து ஆயிரக்கணக்கான இணையதளப் பயனர்களால் உருவாக்கப்பட்ட ஒரு ஜனநாயகச் சார்பு முன்னணியாகும்.
- இந்த முறைசாரா இயக்கமானது தாய்லாந்திற்கு எதிரான சீன ஆதரவு ட்விட்டர் பயனர்களின் அவமதிப்புகளுக்கு எதிராக தன்னைத் தானே தற்காத்துக் கொள்வதற்காக தொடங்கப் பட்டது.




## ஐ.நா.வின் ஒருமித்த தீர்மானம்

- ❖ ஐக்கிய நாடுகள் சபையானது ஒருமித்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.
- ❖ இது கோவிட்-19க்கு எதிராகப் போராடுவதற்காக எதிர்காலத்தில் உருவாக்கப்பட இருக்கும் தடுப்பூசிகளை நியாயமான, திறமையான மற்றும் சரியான நேரத்தில் அணுகுவதற்கான மற்றும் பகிர்ந்து கொள்வதற்கான தீர்மானமாகும்.
- ❖ மேலும் இந்த தீர்மானம் மெக்சிகோவால் உருவாக்கப் பட்டு, அமெரிக்காவால் ஆதரிக்கப் படுகிறது.
- ❖ இத்தீர்மானத்தை நிறைவேற்ற, ஐக்கிய நாடுகள் சபைக்கு சாதாரண பெரும்பான்மை தேவைப் பட்டது (அனைத்து வாக்குகளிலும் சேர்த்து 50%க்கும் அதிகமானவை).
- ❖ எப்பொழுது ஒரு விவகாரம் வாக்களிப்பதற்கான முக்கியத்துவத்தைப் பெறுகின்றதோ அப்போது அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படுகின்றது.

## அமெரிக்க கச்சா எண்ணெய்

- ❖ டெக்சாஸ் லைட் ஸ்வீட் (Texas light sweet) என்று அழைக்கப்படும் மேற்கு டெக்சாஸ் இடைநிலைச் சந்தையானது (WTI - West Texas intermediate), அமெரிக்காவில் எண்ணெய் விலையில் ஓர் அளவுகோலாகப் பயன்படுத்தப்படும் கச்சா எண்ணெயின் ஒரு தர வகையாகும்.
- ❖ இது உலகளவில் கச்சா எண்ணெயின் ஒரு மிகச் சிறந்த தர வகையாகும்.
- ❖ இது தன் குறைந்த அடர்த்தி காரணமாக லைட் அல்லது அடர்குறைவான கச்சா எண்ணெய் என அழைக்கப் படுகிறது.
- ❖ மேலும் அதன் குறைந்த கந்தக உள்ளடக்கத்தின் காரணமாக அது இனிப்பான வகை என்றும் அழைக்கப் படுகிறது.
- ❖ நியூயார்க்கில் இயங்கும் மேற்கு டெக்சாஸ் இடைநிலைச் சந்தையில் கச்சா எண்ணெய் விலையானது ஏப்ரல் 20 அன்று ஒரு பீப்பாய் மைனஸ் 40.32 டாலராக சரிந்து அமெரிக்க எண்ணெய்ச் சந்தைகளில் ஒரு வரலாற்றை உருவாக்கியுள்ளது.
- ❖ இதுவரை அறிந்ததில் இதுவே மிகக் குறைந்த கச்சா எண்ணெய் விலையாகும்.
- ❖ இதற்கு முன் மிகக் குறைந்த விலையானது இரண்டாம் உலகப் போருக்குப் பின் உடனடியாக ஏற்பட்டதாகும்.
- ❖ எண்ணெய்ச் சந்தைகளுக்கான மூன்று முக்கிய அளவீடுகளில் பிரெண்ட் கச்சா (வடக்குக் கடல் பகுதியிலிருந்து) மற்றும் துபாய் கச்சா ஆகியவற்றுடன் சேர்த்து இதுவும் ஒன்றாகும்.
- ❖ இந்தியக் கச்சா எண்ணெயின் கொள்முதலானது மேற்கு டெக்சாஸ் சந்தையை உள்ளடக்கி யிருக்கவில்லை .
- ❖ இந்தியா பிரெண்ட் சந்தை மற்றும் சில வளைகுடா நாடுகள் ஆகியவற்றிடமிருந்து மட்டுமே எண்ணெயை வாங்குகின்றது. அதனால் நேரடியான தாக்கம் எதுவும் இந்தியாவிற்குக் கிடையாது.
- ❖ ஒரு பீப்பாய் என்பது 157 லிட்டராகும்.
- ❖ ஆனால் செயல்முறைக்குள்ளாக்கிய பிறகு இது 166 லிட்டருக்கு வருகிறது.




## ஆல்ப்ஸ் மலையில் இந்தியக் கொடி

- கோவிட்-19க்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து இந்தியர்களுக்கும் வேண்டிய ஒரு வலுவான ஆதரவை வெளிப்படுத்த 1,000 மீட்டருக்கும் அதிகமான அளவில் இந்தியக் கொடியின் மூவர்ணத்தின் ஒளியானது சுவிட்சர்லாந்தின் ஜெர்மாட்டில் உள்ள மேட்டர்ஹார்ன் சிகரத்தின் மேல் காட்சிப் படுத்தப்பட்டது.
- சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஒளிக் கலைஞர் ஜெர்ரி ஹோஃப்செட்டர் மார்ச் இறுதி முதல் பல்வேறு நாடுகளின் கொடிகளை அங்கு காட்சிப்படுத்தி வருகிறார்.
- மேட்டர்ஹார்ன் (4478 மீட்டர்) என்பது ஆல்ப்ஸ் மலைத்தொடரில் உள்ள ஒரு சிகரமாகும்.
- இது சுவிட்சர்லாந்திற்கும் இத்தாலிக்கும் இடையில் உள்ளது.
- சில நேரங்களில் இது மலைகளின் மலை என்றும் குறிப்பிடப்படுகிறது, பொதுவாக மேட்டர்ஹார்ன் சிகரமானது ஆல்ப்ஸின் மலைத் தொடரின் ஒரு முக்கியச் சின்னமாக மாறியுள்ளது.




## சீனா – உலக சுகாதார நிறுவனம்

- உலக சுகாதார நிறுவனத்திற்கு (WHO) மேலும் 30 மில்லியன் அமெரிக்க டாலரை வழங்க இருப்பதாக சீனா அறிவித்துள்ளது.
- இதற்கு முன்பு, சீனா 20 மில்லியன் அமெரிக்க டாலரை வழங்கியிருந்தது.
- டெட்ரோஸ் அதனோம் கெப்ரியேசுஸ் (Tedros Adhanom Ghebreyesus) என்பவர் எத்தியோப்பியாவைச் சேர்ந்த நுண்ணுயிரியில் வல்லுநர் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மலேரிய நோய் ஆராய்ச்சியாளர் ஆவார்.

- 2017 ஆம் ஆண்டு முதல் இவர் WHOவின் பொது இயக்குநராக உள்ளார்.
- இந்தப் பொறுப்பை வகிக்கும் முதலாவது மருத்துவரல்லாத நபர் மற்றும் முதலாவது ஆப்பிரிக்கர் இவராவார்.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 11 அன்று, WHO ஆனது கோவிட் – 19ஐ "கொள்ளை நோயாக" அறிவித்தது.

## பெஷாவரின் கிசா குவானி பசார் படுகொலை

- இந்தப் படுகொலையானது 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 அன்று குடை கித்மத்கர் (இறைவனின் தொண்டர்கள்) இயக்கத்தின் அமைதிவழிப் போராட்டக்காரர்களுக்கு எதிராக ஆங்கிலேயப் படைகளால் நடத்தப்பட்டது.
- இந்தப் படுகொலையின் 90வது நினைவு தினம் இந்த ஆண்டாகும் (2020).
- குடை கித்மத்கர் என்பது இந்தியத் துணைக் கண்டத்தில் ஆட்சி செய்த ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு வன்முறையற்ற இயக்கமாகும்.
- இது வடமேற்கு எல்லை மாகாணத்தில், ஒரு பஸ்தூன் விடுதலைப் போராட்ட வீரரான அப்துல் கபார் கானால் தலைமை தாங்கப்பட்டது.



## உலக ராணுவச் செலவுகளின் போக்குகள் – 2019 அறிக்கை

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது (SIPRI - Stockholm International Peace Research Institute) உலகில் உள்ள பல்வேறு நாடுகளின் இராணுவச் செலவினம் குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகியவை 2019 ஆம் ஆண்டில் முன்னிலையில் உள்ள மிகப்பெரிய இராணுவச் செலவின நாடுகளாகும்.
- 2019 ஆம் ஆண்டில், இந்தியா தனது இராணுவத்திற்கு 71.1 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியை செலவிட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் அமெரிக்கா தனது இராணுவத்திற்காக 732 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியைச் செலவிட்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதி நாடுகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் சீனா ஆகியன தொடர்கின்றன.
- உலகின் மிகப்பெரிய ராணுவச் செலவின நாடுகளின் முதல் மூன்று நாடுகளின் மத்தியில் இந்தியா மற்றும் சீனா இடம் பெறுவது இதுவே முதன் முறையாகும்.




## லெபனான் – கஞ்சாச் சாகுபடி (Marijuana)

- கஞ்சாச் சாகுபடியைச் சட்டப்பூர்வமாக்கிய முதலாவது அரபு நாடு லெபனான் ஆகும்.
- கஞ்சாச் செடியானது லெபனானில் உள்ள வளமான பீக்கா பள்ளத்தாக்கில் சட்ட விரோதமாக பயிரிடப்பட்டு வந்தது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின்படி, மொராக்கோ மற்றும் ஆப்கானிஸ்தானிற்குப் பிறகு உலகின் 3வது மிகப்பெரிய கஞ்சா பிசின் விநியோக நாடு லெபனான் ஆகும்.
- லெபனான் நாட்டைத் தவிர, தங்க முக்கோணப் பகுதி மற்றும் தங்கப் பிறைப் பகுதி ஆகியவை இந்த அபினி (opium) உற்பத்தியில் பங்கு கொண்டுள்ளன.
- தங்கப் பிறைப் பகுதியானது ஈரான், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியுள்ளது.
- வரைபடத்தில் இந்த நாடுகள் இணைந்து பிறை வடிவத்தை உருவாக்குவதனால், இதற்கு தங்கப் பிறை என்று பெயரிடப் பட்டுள்ளது.
- தங்க முக்கோணமானது தாய்லாந்து, மியான்மர், லாவோஸ் ஆகிய நாடுகளை உள்ளடக்கியுள்ளது.
- ருவாக் மற்றும் மெக்காங் ஆகிய நதிகள் சங்கமிக்கும் இடத்தில் இந்தப் பகுதிகள் சந்திப்பதால், இதற்கு தங்க முக்கோணம் என்று பெயரிடப்பட்டுள்ளது.



## சர்வதேச நிதியியல் சேவை மைய ஆணையம்

- இந்திய அரசு இந்த ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது-
- இந்த ஆணையத்தின் தலைமையகமானது குஜராத்தில் உள்ள காந்தி நகரில் ஏற்படுத்தப்பட இருக்கின்றது.
- இந்த ஆணையத்தின் முக்கியமான பணி நிதியியல் நிறுவனங்களின் காப்பீட்டு ஒப்பந்தங்கள், நிதி வைப்புகள், பங்குகள் போன்ற நிதியியல் பொருட்களை முறைப்படுத்துவதாகும்.
- இந்த ஆணையமானது இந்திய அரசினால் நியமிக்கப்படும் 9 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
- இந்த உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.
- இந்த உறுப்பினர்களில் ஒரு தலைவர், மத்திய நிதித் துறை அமைச்சகத்தின் 2 உறுப்பினர்கள், ஆர்பிஐ, செபி, ஐஆர்டிஏஐ மற்றும் பிஎப்ஆர்டிஏ ஆகியவற்றிலிருந்து தலா 1 உறுப்பினர், தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2 உறுப்பினர்கள் ஆகியோர் இருப்பர்.

## பிட்ச் பிளாக் பயிற்சி



- ஆஸ்திரேலியாவின் ராயல் வான் படையால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் போர்ப் பயிற்சியானது கோவிட் – 19 அச்சுறுத்தலின் காரணமாக ரத்து செய்யப் பட்டுள்ளது.
- இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கம் வான்வழிப் போர் எதிர்ப்புப் பாதுகாப்பு மற்றும் வான்வழிப் போர் எதிர்ப்புத் தாக்குதல் குறித்து பயிற்சி பெறுவதாகும்.
- 2018 ஆம் ஆண்டில், இந்தப் பயிற்சியில் இந்தியா முதன்முறையாகக் கலந்து கொண்டது.

# பொருளாதாரச் செய்திகள்

## கோவிட் – 19 தொற்றால் வளரும் நாடுகளுக்கு ஏற்படும் பாதிப்பு




- வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த ஐக்கிய நாடுகள் அமைப்பானது (UNCTAD - United Nations Conference on Trade and Development) இந்தப் புதிய ஆய்வை வெளியிட்டுள்ளது.
- ஜி20 நாடுகள் 5 டிரில்லியன் அமெரிக்க டாலரை உலகப் பொருளாதாரத்திற்குள் செலுத்திய போதிலும் 2020 – 21ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரம் மந்த நிலையையே சந்திக்கும்.
- மேலும் இந்த அறிக்கையானது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இந்த மந்த நிலையிலிருந்துத் தப்பித்து விடும் என்றும் கூறுகின்றது.

## சிறு சேமிப்பு வட்டி விகிதம்

- இந்திய அரசானது 2020-2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கான பல்வேறு சிறு சேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களைக் குறைத்து உள்ளது.
- சுகன்யா சம்ரிதி யோஜனா, கிசான் விகாஸ் பத்திரம், தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி போன்ற திட்டங்களின் வட்டி விகிதங்கள் குறைக்கப் பட்டுள்ளன.

**Subject: Revision of interest rates for Small Savings Schemes - reg.**

In exercise of the powers conferred by Rule 9(1) of the Government Saving Promotion General Rules, 2018, the rates of interest on various Small Savings Schemes for the first quarter of financial year 2020-21 starting from 1st April, 2020 and ending on 30th June, 2020 have been revised as indicated below:

| Instruments | Rate of interest from 01.01.2020 to 31.03.2020 | Rate of interest from 01.04.2020 to 30.06.2020 | Compounding frequency* |
|---|---|---|---|
| Savings Deposit | 4.0 | 4.0 | Annually |
| 1 Year Time Deposit | 6.9 | 5.5 | Quarterly |
| 2 Year Time Deposit | 6.9 | 5.5 | Quarterly |
| 3 Year Time Deposit | 6.9 | 5.5 | Quarterly |
| 5 Year Time Deposit | 7.7 | 6.7 | Quarterly |
| 5 Year Recurring Deposit | 7.2 | 5.8 | Quarterly |
| Senior Citizen Savings Scheme | 8.6 | 7.4 | Quarterly and paid |
| Monthly Income Account | 7.6 | 6.6 | Monthly and paid |
| National Savings Certificate | 7.9 | 6.8 | Annually |
| Public Provident Fund Scheme | 7.9 | 7.1 | Annually |
| Kisan Vikas Patra | 7.6 (will mature in 113 months) | 6.9 (will mature in 124 months) | Annually |
| Sukanya Samriddhi Account Scheme | 8.4 | 7.6 | Annually |

2. This has the approval of Finance Minister.

(Rajesh Panwar)
Dy. Director (Budget)

## பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா

- கரோனா வைரஸ் தொற்றிற்கு எதிரான நடவடிக்கைகளின் போது ஏழை மக்களுக்கு உதவுவதற்காக பிரதான் மந்திரி கரீப் கல்யாண் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் ரூ.1.70 கோடி மதிப்புள்ள நிவாரணத் தொகைத் திட்டத்தை மத்திய நிதி மற்றும் பெரு நிறுவனங்கள் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இது அரசு மருத்துவ மனைகள் மற்றும் சுகாதார நல மையங்களில் கோவிட் – 19 தொற்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் பணியாற்றும் சுகாதார நலப் பணியாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் ஆகும்.
- துப்புரவுத் தொழிலாளர்கள், மருத்துவ அறைப் பணியாளர்கள், செவிலியர்கள், ஆஷா திட்டப் பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், மருத்துவர்கள், தொழில் நிபுணத்துவ மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் இந்த சிறப்புக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உள்ளடங்குவர்.
- கோவிட் – 19 தொற்று நோய்க்குச் சிகிச்சையளிக்கும் எந்தவொரு மருத்துவப் பணியாளரும் பாதிப்பிற்கு உள்ளாக நேரிட்டால், அவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.50 இலட்சம் நிவாரணத் தொகை வழங்கப்படும்.
- விவசாயிகள் 2020 – 21 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர வருமான நிதியுதவியான ரூ.6,000 என்ற தொகையிலிருந்து ஏப்ரல் மாதத்தில் முதல் தவணையாக ரூ.2000 ஐப் பெற இருக்கின்றனர்.
- 8.7 கோடி விவசாயிகளுக்கு வழங்கப்படும் ரூ.2000 நிதித் தொகையானது பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி என்ற திட்டத்தின் கீழ் வழங்கப் படுகின்றது.

## நாடு முடக்கத்தின் போது சிறப்புப் பொருளாதார மண்டலம்

- நாடு முடக்கத்தின் போது நாட்டில் உள்ள ஏறத்தாழ 280 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZ – Special Economic Zone) மருந்துகள், மருந்து சாதனங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.
- இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 18% என்ற அளவிற்குப் பங்களிக்கின்றன.
- 2019-20 ஆம் ஆண்டில் SEZன் ஏற்றுமதியானது அதிகரித்து, 110 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியது என்பது குறிப்பிடத்தக்கது.
- SEZகள் மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005ன் கீழ் SEZகளைச் செயல்படுத்த மாநிலங்கள் அனுமதிக்கப் படுகின்றன.
- இந்தச் சட்டமானது ஏற்றுமதி ஊக்குவிப்பில் மாநில அரசுகளின் பங்கை வரையறை செய்கின்றது.

## வழிவகைக்கான முன்பணம்


- மத்திய வங்கியிடம் இருந்து அரசாங்கம் பெறும் குறுகிய காலக் கடனுக்கான வரம்பை இந்திய ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது.
- "வழி வகைக்கான முன்பணம்" என்று அறியப்படும் கடன் வசதிக்கான வரம்பானது 2020 – 21 ஆம் ஆண்டின் முதல் பாதியில் ரூ.1.2 இலட்சம் கோடி என்ற அளவில் உயர்த்தப்பட்டது.
- கரோனா வைரஸ் தொற்றிற்கு எதிரான போராட்டத்தில் அரசின் செலவினம்

அதிகரிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த வரம்பு அதிகரிக்கப் பட்டுள்ளது.

- ❖ இந்த நிதியின் கிடைக்கும் தன்மையானது அரசின் நீண்ட காலச் சந்தைக் கடன்களை மீறிய அளவில் குறுகிய காலச் செலவினத்தை மேற்கொள்ள மத்திய அரசிற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும்.

***வழிவகைக்கான முன்பணம் பற்றி (WMA – Ways and Means Advances)***


- ❖ இது வருமானம் மற்றும் செலவினம் ஆகிய இரண்டிற்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய அரசிற்கு இந்திய ரிசர்வ் வங்கியினால் வழங்கப்படும் தற்காலிகக் கடன் வசதியாகும்.
- ❖ இது மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்காக 40 ஆண்டுகள் பழமையான தற்காலிகக் கருவூலப் பத்திரம் தடை செய்யப்பட்ட பின்பு, 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 அன்று அறிமுகப்படுத்தப் பட்டது.
- ❖ தேவை ஏற்படின், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து உடனடியாக வழங்கப் படும் இந்த நிதியை அரசு பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ❖ ஆனால், அரசு இந்த நிதியை 90 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். இதற்கான வட்டியானது தற்பொழுதுள்ள ரெப்போ விகிதத்தைக் கொண்டு கணக்கிடப் படுகின்றது.
- ❖ WMA ஆனது வழக்கமான வழக்கமான WMA மற்றும் சிறப்பு WMA என இரண்டு வகைகளைக் கொண்டுள்ளது.
- ❖ சிறப்பு WMA அல்லது சிறப்புக் கடன் பெறுதல் வசதியானது (SDF - Special Drawing Facility) மாநில அரசிடம் இருக்கும் மத்திய அரசுப் பத்திரங்களின் ஆதாரத்தைக் கொண்டு வழங்கப் படுகின்றது.
- ❖ மாநிலத்தின் SDFன் வரம்பானது முழுவதும் தீர்ந்த பின்னர் வழக்கமான WMAஐ மாநிலம் பயன்படுத்திக் கொள்ளும்.




## எதிர் சுழற்சி மூலதன இடையகம் (CCyB)

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது எதிர் சுழற்சி மூலதன இடையகத்தின் செயல்படுத்துதலை ஒத்தி வைத்துள்ளது.
- ❖ CCyB (countercyclical capital buffers) ஆனது பொருளாதாரத்தில் அதிகரித்து வரும் சுழற்சித் தொடர் அபாயங்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எதிராக வங்கித் துறையைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த விதியானது முதன்முறையாக பேசல் – III என்ற விதிமுறைகளில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- பேசல் – III என்பது உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகளினால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு தன்னார்வ நடவடிக்கைகளின் தொகுப்பாகும்.
- இந்த நடவடிக்கைகள் 2007 – 09 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலக் கட்டத்தில் நிகழ்ந்த நிதியியல் நெருக்கடிகளுக்கு எதிர்வினை ஆற்றும் விதமாக வங்கித் துறை ஒழுங்குமுறை குறித்த சர்வதேச வங்கித் தீர்வுகள் அமைப்பின் "பேசல் குழுவினால்" ஏற்படுத்தப் பட்டது. இது வங்கிகளின் ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதையும் நிதியியல் அமைப்பிற்குள் இருக்கும் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.




## முழுவதும் அணுகக் கூடிய வழி

- ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து குறிப்பிட்ட அரசாங்கப் பத்திரங்களின் மீது வெளிநாடு வாழ் இந்திய வம்சாவளியினரை முதலீடு செய்ய அனுமதிக்கும் "முழுவதும் அணுகக் கூடிய வழி" என்ற பெயர் கொண்ட ஒரு தனிப்பட்ட வழிமுறையை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப் படுத்தியுள்ளது.
- அரசாங்கப் பிரிவுகளின் குறிப்பிட்ட பிரிவுகளில் வெளிநாடு வாழ் இந்திய வம்சாவளியினர் எந்த விதக் கட்டுப்பாடும் இன்றி முதலீடு செய்ய அனுமதிக்கப் படுவர் என்ற பட்ஜெட் அறிவிப்பிற்குப் பின்பு இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

- மூலதனப் பொருட்கள் ஏற்றுமதி ஊக்குவிப்பு மற்றும் வரியற்ற இறக்குமதி அனுமதி போன்ற ஏற்றுமதித் திட்டங்கள் அடுத்த ஓர் ஆண்டுக் காலத்திற்கு நீட்டிக்கப்படுவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.
- மேலும், இந்திய அரசானது வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை 2015 – 20 என்ற கொள்கையை அடுத்த ஒரு ஆண்டுக் காலத்திற்கு, அதாவது 2021 வரை நீட்டிக்கத் திட்டமிட்டுள்ளது.
- இது 2020 ஆண்டு வெளிநாட்டு விற்பனையை 900 பில்லியன் டாலராக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இந்தக் கொள்கையானது 5 வெவ்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

- பொருட்கள் குறித்த திட்டம், சந்தை குறித்த திட்டம், சந்தையுடன் இணைக்கப்பட்ட பொருட்கள் குறித்த திட்டம் மற்றும் வேளாண் கட்டமைப்புச் சலுகைத் திட்டம் ஆகியவை இதில் அடங்கும்.
- கிராம உத்யோக் யோஜனா மற்றும் விசேஷ் கிரிஷ் ஆகியவை ஒற்றை வழி வணிகச் சரக்கு ஏற்றுமதித் திட்டமான இந்திய வணிகச் சரக்கு ஏற்றுமதித் திட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.
- மேலும் இந்தக் கொள்கையானது நாட்டின் ஏற்றுமதித் தொகுப்பைப் பன்முகப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் இது வர்த்தகச் சமநிலையின்மையைக் குறைப்பதற்காக தொடர் ஊக்குவிப்பு நடைமுறையை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## நிறுவனங்கள் புதிய தொடக்கத் திட்டம், 2020

- மத்தியப் பெரு நிறுவனங்கள் துறை அமைச்சகமானது "நிறுவனங்கள் புதிய தொடக்கத் திட்டம், 2020" என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இது "வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமைப் பங்களிப்புத் திட்டம், 2020" (LLP - Limited Liability Partnerships) என்ற திட்டத்தைப் புதுப்பித்துள்ளது.
- இது கோவிட் – 19 தொற்றின் காரணமாகச் சட்டத்தின் படி செயல்படும் நிறுவனங்கள் மற்றும் LLP ஆகியவற்றிற்கு நிவாரணம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டங்கள் கோவிட் – 19 தொற்றினால் ஏற்பட்ட பொதுச் சுகாதார நிலையின் போது முன்னெப்போதும் இல்லாத அளவில் ஏற்பட்ட அழுத்தத்தைக் குறைப்பதையும் சலுகைகளை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டங்கள் நிறுவனங்கள் அல்லது LLPகளினால் தாமதமாகத் தாக்கல் செய்யப்பட்டதற்கான மீண்டும் தாக்கல் செய்யப்பட இருக்கும் கூடுதல் கட்டணத்தை ஒரே தவணையால் தள்ளுபடி செய்கின்றன.

### *இது பற்றி*

- LLP என்பது வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமையைக் கொண்டுள்ள சில அல்லது அனைத்துப் பங்காளர்களையும் கொண்ட ஒரு பங்காளர் அமைப்பு ஆகும்.
- எனவே இது பங்காளர்கள் அல்லது நிறுவனங்களின் கூறுகளை வெளிக் கொணர்கின்றது.
- LLPல், ஒரு பங்காளர் மற்றொரு பங்காளரின் தவறான நடத்தை அல்லது தவறான செயலுக்காகப் பொறுப்பாக மாட்டார்.

## கோவிட் செயல் குழு

- கோவிட் செயல் குழு ஒன்று இந்தியாவில் தனியார் துறையின் முன்னனி நிதி மேலாளர்கள் மற்றும் முன்னணி துணிகர மூலதன நிறுவனங்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றால் தொடங்கப்பட்டது.
- இந்த வகையில், இதுவே உலகின் முதல் கோவிட் செயல் குழுவாகும்.
- COVID-19 தொடர்பான தயாரிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளில் பணியாற்ற இந்திய நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக இந்த குழு நிதி திரட்டுகிறது.
- மை லாப் நிறுவனமானது ரூ .1 கோடி நிதி உதவியை இதன் மூலம் பெற்றதன பிறகு இந்தக் குழுவானது சமீபத்தில் பிரபலமடைந்துள்ளது.

- மைலாப் நிறுவனமானது இந்தியாவில் கரோனா சோதனைச் சாதனங்களைத் தயாரிக்கவும் விற்கவும் அனுமதி பெற்ற முதல் இந்திய நிறுவனமாகும்.
- இந்தியா தற்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகளைப் பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அதைப் பயன்படுத்த ஊக்குவிக்கவும் செய்கிறது.

## ஆரோக்கிய சஞ்சீவனி காப்பீட்டுக் கொள்கை

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது சுகாதாரக் காப்பீட்டு வழங்குநர்களுக்கு ஆரோக்கிய சஞ்சீவனி காப்பீட்டுக் கொள்கையைச் செயல்படுத்த சில வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.
- கோவிட்-19 நோயாளிகளை மருத்துவமனையில் அனுமதித்த பிறகு ஏற்படும் செலவுகளை ஈடு செய்யும் அடிப்படையில் இது தொடங்கப் பட்டு உள்ளது.
- இந்திய மக்கள்தொகையில் குறைந்தபட்சம் 55% பேருக்கு அடிப்படைக் காப்பீட்டுப் பாதுகாப்பு வழங்குவதற்கான ஒரு கொள்கையைக் காப்பீட்டு வழங்குநர்கள் கட்டமைக்க வேண்டும் என்று கட்டுப்பாட்டாளர் ஆணையம் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தது.
- காப்பீட்டிற்கான கட்டணத் தொகை ரூ.1000 முதல் ஒரு லட்சம் வரை இருக்கும்.
- விருப்பமுள்ள வாடிக்கையாளர்கள் ரூ.5 லட்சம் வரை காப்பீட்டு வசதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.
- இதனை 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 65 வயதுக்கு உட்பட்ட குடிமக்களால் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

## என் காசு


- நாட்டில் முதல் முறையாக, கரூர் வைசியா வங்கியானது கரூரில் முன்பணம் செலுத்தப்பட்ட ஒரு அட்டையான "என் காசு" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்திய அரசின் டிஜிட்டல் முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இந்த வங்கியானது கரூரில் "பணப் புழக்கத்தைக் குறைத்தல்" என்ற ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. இது கரூர் மாவட்டத்தில் பணப் புழக்கத்தின் பயன்பாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கரூரைச் சேர்ந்த கரூர் வைசியா வங்கியானது 104 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப் பட்டதாகும்.

## உலகப் பொருளாதாரம் குறித்து ஐக்கிய நாடுகள்

- கரோனா வைரஸ் தொற்றின் காரணமாக உலகப் பொருளாதார வளர்ச்சியானது 2020 ஆம் ஆண்டில் 1 சதவிகிதம் அளவிற்குக் குறைய இருக்கின்றது.
- இந்த ஆய்வானது ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது (DESA/ Department of Economic and Social Affairs).
- இது UNDESAவின் உலகப் பொருளாதார முன்கணிப்பு மாதிரியின் ஒரு பகுதியாகும்.
- கோவிட் – 19 நோய்த் தொற்று ஏற்படுவதற்கு முன்பு, உலகப் பொருளாதார நிலைமைகள் மற்றும் வாய்ப்புகள் – 2020 என்ற அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு, 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரமானது 2.5 சதவிகிதம் என்ற மிதமான அளவில் வளரும் என்று கணிக்கப் பட்டதாக இந்த ஆய்வு கூறுகின்றது.

## ஊதியக் குறைப்பிற்கான அவசரச் சட்டம்

- பிரதமர் மற்றும் இதர நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் ஊதியத்தில் 30 சதவிகித ஊதியக் குறைப்பிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இவர்களைத் தவிர குடியரசுத் தலைவர், ஆளுநர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் ஆகியோரின் ஊதியங்களும் குறைக்கப்பட இருக்கின்றன.
- இது தொடர்பான ஒரு அவசரச் சட்டத்திற்கு மத்திய அமைச்சரவையினால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியங்கள், படிகள் மற்றும் ஓய்வூதியங்கள் சட்டம், 1954 என்ற சட்டத்தைத் திருத்துகின்றது.
- 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திருத்தப்பட்ட இந்தச் சட்டத்தின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு படிகளை (சலுகைகளை) தவிர்த்து மாதாந்திர ஊதியமாக ரூ.1 இலட்சம் பெறுகின்றனர்.
- நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து குறைக்கப்பட்ட ஊதியமானது இந்தியத் தொகுப்பு நிதியில் செலுத்தப்பட இருக்கின்றது.
- நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மட்டுமே குறைக்கப் பட்டுள்ளன. அவர்களின் படிகள் மற்றும் முன்னாள் உறுப்பினர்களின் ஓய்வூதியங்கள் குறைக்கப் படவில்லை.
- மேலும் மத்திய அமைச்சரவையானது நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர்ப் பகுதி/ தொகுதி மேம்பாட்டு வளர்ச்சித் திட்டத்தினை (MPLADS - Members of Parliament Local Area Development Scheme) 2 ஆண்டுகளுக்கு, அதாவது 2020-21 மற்றும் 2021-22 ஆகிய காலத்திற்கு நிறுத்தி வைப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- MPLADS என்பது நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளூர்ப் பகுதி வளர்ச்சித் திட்டம் என்பதைக் குறிக்கின்றது.
- இது 1993 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது.
- இதன் செயல்பாடுகளை மத்தியப் புள்ளியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை மேற்பார்வையிடுகின்றது.



- இது முழுவதும் இந்திய அரசால் நிதி அளிக்கப் படுகின்றது.
- 2011-12 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு MPக்கும் ஆண்டிற்கு ரூ.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப் படுகின்றது .
- இந்த நிதியானது காலாவதியாகாத (non lapsable) தன்மை கொண்டதாகும். அதாவது, குறிப்பிட்ட ஆண்டில் இந்த நிதியானது செலவு செய்யப் படவில்லையெனில் இந்த நிதி அடுத்த ஆண்டுக் கணக்கில் சேர்க்கப் படும்.

## காப்பீட்டுத் துறையில் இயற்கைப் பேரிடர் (Force Majeure)

- கோவிட் – 19 தொற்றினால் ஏற்படும் இறப்புகளுக்கு "இயற்கைப் பேரிடர்" (Force Majeure) பிரிவு பொருந்தாது என்று ஆயுள் காப்பீட்டுக் கழகம் அறிவித்துள்ளது.
- அரசு மற்றும் தனியார் என்று அனைத்து விதக் காப்பீடு வழங்கும் நிறுவனங்களும் கோவிட் – 19 தொற்றால் ஏற்படும் இறப்புகள் குறித்த கோரிக்கைகள் மற்றும் நிவாரணங்களைச் செயல்படுத்த இருக்கின்றன.
- ஒரு ஒப்பந்த முறையில் இயற்கைப் பேரிடர் பிரிவு என்பதனை தற்பொழுது கோவிட் – 19 தொற்றின் காரணமாக குறித்த காலத்திற்குள் அந்த ஒப்பந்தம் முடிக்கப் படவில்லை என்று குறிப்பிட்டு வாதிட உபயோகப்படுத்த முடியும்.
- "இயற்கை பேரிடர்" என்பது எதிர்பார்க்கப் படாத அல்லது கட்டுப்படுத்தப்படாத ஒரு நிகழ்வு அல்லது தாக்கம் என்று வரையறுக்கப் படுகின்றது.
- "இயற்கைப் பேரிடர் பிரிவானது" எதிர்பார்க்கப் படாத அவசரச் சூழ்நிலைகளின் காரணமாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- இது இந்திய ஒப்பந்தச் சட்டம், 1972ன் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

## போஷான் அபியான்

- ஆந்திரப் பிரதேச மாநிலமானது போஷான் அபியான் (முழுமையான ஊட்டச்சத்திற்கான பிரதம அமைச்சரின் விரிவான திட்டம்) திட்டத்தின் முழுமையானச் செயல்படுத்துதலுக்காக முதலாவது இடத்தில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- இது 2018 ஆம் ஆண்டு மார்ச் 8 அன்று சர்வதேசப் பெண்கள் தினக் கொண்டாட்டத்தின் போது இந்தியப் பிரதமரால் இராஜஸ்தானின் ஜூன்ஜினு என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.
- இது இதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதியிலிருந்து தேசிய ஊட்டச்சத்துத் திட்டம் (NNM) என்று அழைக்கப்படுகின்றது,
- இந்தத் திட்டமானது ஒருங்கிணைத்தல் மற்றும் முடிவுகள் குறித்த அணுகுமுறை ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்க்கைச் சுழற்சி குறித்த ஒரு அணுகுமுறையின் மூலம் படிப்படியாக நாட்டில் ஊட்டச்சத்துக் குறைபாட்டை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்திட்டத்தில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையைக் கொண்ட மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- இது நிதி ஆயோக்கின் ஆய்வு அறிக்கையான "இந்தியாவில் ஊட்டச்சத்து முறையை மாற்றுதல் : போஷான் அபியான்" என்ற அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- இது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகத்தின் கீழ் வருகின்றது.

## இந்திய மருந்து & இந்திய மருத்துவச் சாதனம் மாநாடு 2020

- ❖ மத்திய இரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள மருந்துப் பொருட்கள் துறையானது இந்திய வர்த்தக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்புடன் இணைந்து இந்திய மருந்து 2020 & இந்திய மருத்துவச் சாதனம் 2020 குறித்த ஒரு மாநாடு மற்றும் கண்காட்சியைக் குஜராத்தில் உள்ள காந்தி நகரில் நடத்தியது.
- ❖ இந்த நிகழ்வின் கருப்பொருள், "இந்திய மருந்துத் துறை : விலை குறைந்த மற்றும் தரமான சுகாதார நலத்தின் மீதான சவால்களை எதிர் கொள்ளுதல் மற்றும் இந்திய மருத்துவ உபகரணம்: நாடு தழுவிய அனைவருக்குமான சுகாதார நலத்திற்கான விலை குறைந்த பொறுப்பு மிக்க மற்றும் தரமான மருத்துவச் சாதனங்களை ஊக்குவித்தல்" என்பதாகும்.
- ❖ இந்த ஆண்டில் (2020) நடைபெற்ற மாநாடு அதன் 5வது பதிப்பாகும். இந்த நிகழ்வானது முதன்முறையாக குஜராத் மாநிலத்தில் நடத்தப்படுகின்றது.
- ❖ இந்திய மருந்துப் பொருட்கள் சந்தையானது கொள்ளளவின் அடிப்படையில் மூன்றாவது மிகப்பெரிய சந்தையாகவும் தரத்தின் அடிப்படையில் 13 மிகப்பெரிய சந்தையாகவும் விளங்குகின்றது.
- ❖ உலக அளவில் மரபு சார்ந்த மருந்துகளின் மிகப்பெரிய விநியோகஸ்தராக இந்தியா விளங்குகின்றது.




## இந்தியாவில் சமையல் எண்ணெய் இறக்குமதி குறைவு

- ❖ 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் சமையல் எண்ணெய் இறக்குமதியானது 32.44% என்ற அளவில் குறைந்துள்ளது.
- ❖ உலகில் சமையல் எண்ணெய்யை அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடான இந்தியா கோவிட் – 19 தொற்றின் காரணமாக தனது இறக்குமதியைக் குறைத்து உள்ளது.
- ❖ இந்தியா, தனது குடிமக்களுக்கு 60% அளவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்யை வழங்கி வருகின்றது.
- ❖ இந்தியா பனை எண்ணெயை இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிடமிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்கின்றது.
- ❖ இந்தியா சோயா அவரை எண்ணெய்யை அர்ஜென்டினா நாட்டிடமிருந்தும் சூரிய காந்தி எண்ணெய்யை உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிடமிருந்தும் இறக்குமதி செய்கின்றது.

## இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை

- சமீபத்தில் இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையமானது (CMIE - Centre for Monitoring Indian Economy) இந்தியாவில் தற்போதைய வேலைவாய்ப்பின்மை நிலைமை குறித்த ஒரு ஆய்வை வெளியிட்டுள்ளது.
- நாடு முடக்கப்பட்டதிலிருந்து ஏறத்தாழ 20%ற்கும் மேற்பட்ட இந்தியப் பொருளாதாரமானது தனது வேலைவாய்ப்பை இழந்துள்ளது.
- மார்ச் மாதத்திற்கான வேலைவாய்ப்பின்மை விகிதமானது 8.7% ஆக இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது. இது பிப்ரவரி மாதத்தில் 7.8% ஆக இருந்தது.
- இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் வேலைவாய்ப்பின்மை அறிக்கையை வெளியிடுகின்றது.
- 2019 ஆம் ஆண்டில், வேலைவாய்ப்பின்மை விகிதமானது 6.1% ஆக இருந்தது.
- இந்திய வரலாற்றில் கடந்த 45 ஆண்டுகளில் அதிக சதவிகிதம் இதுவாகும்.

## பாரத்மாலா பரியோஜனா

- இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமானது 2019-20 ஆம் நிதியாண்டில் 3,979 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட தேசிய நெடுஞ்சாலையைக் கட்டி முடித்து உள்ளது.
- இது இந்த அமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து ஒரு நிதியாண்டில் இந்த அமைப்பினால் மிக உயரிய இலக்கை அடைவது இதுவே முதல்முறையாகும்.
- இந்திய அரசானது பாரத்மாலா பரியோஜனா என்ற திட்டத்தின் கீழ் தேசிய நெடுஞ்சாலையைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது மத்தியச் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.
- இது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டதாகும்.
- இந்தத் திட்டமானது 65,000 கிலோ மீட்டர் நெடுஞ்சாலையைக் கட்டி முடிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.




## ஐக்கிய நாடுகள் அறிக்கை

- ஐக்கிய நாடுகள் அமைப்பானது ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் சமூக ஆய்வு – 2020 குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 2019-20 ஆம் ஆண்டில் 5 சதவீதமாக உள்ளது.
- 2020-21 ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 4.8 சதவீதமாகக் குறையும் என்று இது கணித்துள்ளது. மேலும் இந்தியப் பொருளாதார வளர்ச்சி வீதமானது 2021-22 ஆம் ஆண்டில் மேம்படும் என்றும் இது கூறியுள்ளது.

- இந்த அறிக்கையானது 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரமானது 2.3% என்ற அளவில் வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது. உலகப் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில் படிப்படியாக வளர்ச்சி அடையும் என்றும் அது கணித்துள்ளது.

## CPI பணவீக்கம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது நுகர்வோர் விலைக் குறியீட்டை (CPI - consumer Price Index) 2020-21 நிதியாண்டின் முதலாவது காலாண்டில் 4.8 சதவீதத்திலிருந்து இரண்டாம் காலாண்டில் 4.4 சதவீதமாகக் குறையும் என்று கணித்துள்ளது.
- நுகர்வோர் விலைக் குறியீட்டின் குறைப்பானது மொத்தத் தேவை மேலும் வலுவிழப்பதைக் குறிக்கின்றது.
- தற்பொழுது இந்திய ரிசர்வ் வங்கியானது நாட்டில் இலக்காகக் கொண்ட பணவீக்க விகிதத்தைப் பின்பற்றுகின்றது.
- பணவீக்க விகிதம் 4 சதவீதத்தை மையமாகக் கொண்டு +2 என்ற ஏறுமுகம் மற்றும் -2 என்ற இறங்கு முகம் என்று இரண்டு நிலையிலும் விகித வரம்பு கொண்டு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- இது இந்திய ரிசர்வ் வங்கியானது பணவீக்க விகிதத்தை இரண்டு மற்றும் ஆறு சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் வைத்திருக்க வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.
- பணவீக்க இலக்கானது 2015 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## கோவிட் – 19 நிதியுதவி

- இந்திய அரசாங்கம் ரூபாய் 15 ஆயிரம் கோடியை ஒதுக்கியுள்ளது.
- இது முன்னதாக அவசரகால எதிர்வினை மற்றும் சுகாதார அமைப்புத் தயார் நிலைக்காக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த நிதியின் முக்கிய நோக்கம் கோவிட் – 19 பரவலைக் கட்டுப்படுத்துவதாகும்.
- இந்த நிதியானது முழுவதுமாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் கையாளப் படுகின்றது.

## நீண்ட கால ரெப்போ விகிதச் செயல்பாடு

- இலக்கு வைக்கப்பட்ட நீண்ட கால ரெப்போ விகிதச் செயல்பாட்டில் ரூ.1.13 லட்சம் கோடி மதிப்புள்ள ஏலங்களைப் பெற்றுள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்து உள்ளது.
- நீண்ட கால ரெப்போ விகிதச் செயல்பாடு எனும் செயல்பாட்டின் கீழ் மத்திய வங்கியானது ஓராண்டில் இருந்து மூன்று ஆண்டு வரை பணத்தை வங்கிகளுக்கு நடைமுறையில் உள்ள ரெப்போ விகிதத்தில் வழங்குகிறது. இதற்குப் பிணையமாக அதற்குப் பொருந்தக் கூடிய காலகட்டத்தில் அல்லது அதற்கு அதிகமான காலத்துடன் இருக்கும் வகையில் உள்ள அரசாங்கக் காப்பாவணங்களை இது ஏற்றுக் கொள்கிறது.
- ரிசர்வ் வங்கியின் தற்போதைய பணப்புழக்க சரி செய்தல் வசதி மற்றும் விளிம்பு நிலை வசதி ஆகியவை வங்கிகளின் உடனடித் தேவைகளுக்கு 1 முதல் 28 நாட்கள் கால அவகாசம் வரை பணத்தை வழங்குகின்றன, நீண்ட கால ரெப்போ விகிதச் செயல்பாடு அவர்களுக்கு 1 முதல் 3 ஆண்டு வரையுள்ள தேவைகளுக்கான பணத்தை வழங்குகிறது.

- சந்தையில் குறுகிய கால வட்டி விகிதங்களை ரெப்போ விகிதம் எனும் கொள்கை விகிதத்திலிருந்து அதிகம் விலகுவதைத் தடுப்பதே நீண்ட கால ரெப்போ விகிதச் செயல்பாட்டு நடவடிக்கையின் நோக்கமாகும்.

## நாஸ்காமின் புதிய தலைவர்

- இன்போசிஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியான UB பிரவீன் ராவ் என்பவர் 2020-21 ஆம் ஆண்டிற்கான மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களுக்கான தேசியக் கூட்டமைப்பின் (Nasscom - National Association of Software and Services Companies) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவில் உள்ள அசன்சர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மூத்த மேலாண் இயக்குநரான ரேகா எம் மேனன் என்பவர் நாஸ்காமின் துணைத் தலைவராக நியமிக்கப்பட இருக்கின்றார்.
- இது இந்தியத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகச் செயல்பாடு வெளிப்புற ஒப்படைப்புத் துறை (Business Process Outsourcing industry) ஆகியவற்றுக்கான ஒரு வர்த்தக மன்றமாகும்.
- 1988 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட நாஸ்காம் கூட்டமைப்பானது ஒரு இலாப நோக்கற்ற அமைப்பாகும்.

## உலக வர்த்தக அமைப்பில் வளரும் நாடுகள்

- சீனாவின் வளரும் நாடு என்ற அங்கீகாரத்தை மாற்றுவதற்கு உலக வர்த்தக அமைப்பின் (WTO - World Trade Organization) விதிமுறைகளை மாற்ற வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார்.
- “வளர்ந்த” மற்றும் “வளரும்” நாடுகளுக்கான “WTO வரையறைகள்” என்று எதுவும் தற்பொழுது வரை நடைமுறையில் இல்லை.
- உறுப்பு நாடுகள் தாங்களாகவே “வளர்ந்த” மற்றும் “வளரும்” நாடுகளாக அறிவித்துக் கொள்கின்றன.
- பொதுவாக நாடுகள் “வளர்ந்த”, “வளரும்” மற்றும் “குறைவான வளர்ச்சியடைந்த நாடுகளாக” (LDCs - least developed countries) வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- இருப்பினும், வளரும் நாடுகளுக்கு இருக்கும் சலுகைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு உறுப்பு நாட்டின் முடிவை இதர உறுப்பு நாடுகள் அந்த அமைப்பில் முறையீடு செய்யலாம்.
- வளரும் நாடுகள் அங்கீகாரமானது சிறப்பு மற்றும் தனிப்பட்ட முறையில் நடத்தப் படுதலை உறுதி செய்கின்றது.
- இது உறுப்பு நாடுகளுக்கு ஒப்பந்தங்கள் மற்றும் உறுதிப்பாடுகளைச் செயல்படுத்த அதிகக் காலத்தை வழங்குதல், உறுப்பு நாடுகளின் வர்த்தக நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் தொழில்நுட்ப விதிமுறைகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றை அனுமதிக்கின்றது.
- சீனா 2001 ஆம் ஆண்டில் WTO அமைப்பில் உறுப்பு நாடாக சேர்ந்தது.
- 2011 ஆம் ஆண்டுவாக்கில், வளரும் நாடுகளின் மத்தியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார நாடாகவும் முதலாவது மிகப்பெரிய விற்பனைப் பொருள் ஏற்றுமதியாளர் நாடாகவும் நான்காவது மிகப்பெரிய வணிகம்சார் சேவைகள் ஏற்றுமதியாளர் நாடாகவும் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் முதலிடத்தில் உள்ள நாடாகவும் உருவெடுத்துள்ளது.



**Matter of choice**

WTO allows member countries to classify themselves as "developed" or "developing". However, other members can challenge the decision of a country to be classified as "developing". Only the "least-developed countries" status is designated by the UN. Countries in the three lists:

| Developing | Developed | Least-developed countries |
|---|---|---|
| India | U.S. | Afghanistan |
| China | European Union | Bangladesh |
| Russia | Japan | Bhutan |
| Brazil | Canada | Myanmar |
| South Africa | Australia | Nepal |
| South Korea | New Zealand | South Sudan |

## MFP திட்டத்திற்கான MSP

- இந்தியப் பழங்குடியினக் கூட்டுறவுச் சந்தையிடல் வளர்ச்சிக் கூட்டமைப்பானது காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள் (MFP - Minor Forest Produce) திட்டத்திற்கான “குறைந்தபட்ச ஆதார விலையின்” (MSP - Minimum Support Price) கீழ் உள்ள நிதியிலிருந்து கொள்முதலைத் தொடங்குமாறு மாநில அரசின் அனுமதித் துறைகள் மற்றும் செயல்படுத்தும் நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் மத்திய அமைச்சரவையானது தேசியமயமாக்கப் படாத/ முற்றுரிமையாக்கப் படாத MFPயின் சந்தையிடல் மற்றும் MSPயின் மூலம் மதிப்புக் கூட்டுத் தொடரை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக மத்திய அரசினால் ஆதரவு அளிக்கப்படும் ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியது.
- மரங்கள் அல்லாத வன உற்பத்திப் பொருள் (NTFP – Non Timber Forest Produce) என்றும் அழைக்கப்படும் MFP ஆனது பழங்குடியின மக்களுக்கான வாழ்வாதாரத்தின் ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. இது காடுகள் மற்றும் காடுகளைச் சுற்றி வாழும் அதிக எண்ணிக்கையிலான பழங்குடியின மக்களுக்கு தேவையான உணவு, ஊட்டச் சத்து, மருத்துவத் தேவைகள் மற்றும் வருமானம் ஆகியவற்றை வழங்குகின்றது.

## ஹெலிகாப்டர் பணம்

- ஹெலிகாப்டர் பணம் ஆனது உலகம் முழுவதும் உள்ள பொருளாதார வல்லுநர்களால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு தீர்வாகும்.
- இந்த சொற்கூறானது அமெரிக்கப் பொருளாதார வல்லுநரான மில்டன் ப்ரைட்மேன் என்பவரால் தோற்றுவிக்கப் பட்டதாகும்.
- இது பணப்புழக்கத்தை எளிதாக்குவதற்காக (Quantative Easing) பயன்படுத்தப்படும் ஒரு நிதியியல் கொள்கை கூறாகும்.
- இது பாதிப்படைந்துக் கொண்டிருக்கும் ஒரு பொருளாதாரத்தில் வெகுமளவில் பணத்தை உட்செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மத்திய வங்கியிடமிருந்து மாநில மற்றும் மத்திய அரசுகளால் பெறப்பட்ட திருப்பிச் செலுத்தப்படாத பணத்தின் நீட்டிப்பாகும்.
- இது மக்கள் செலவிடுவதை அதிகப்படுத்துவதற்காக அவர்களுக்கு அதிக அளவு பணம் கிடைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## இந்தியா குறித்து உலக வங்கி

- 1991 ஆம் ஆண்டு தாராளமயமாக்கத்திற்குப் பிறகு, தற்போதைய நிதியாண்டில் இந்தியா தனது மோசமான பொருளாதார செயல்பாட்டைப் பதிவு செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- 2020-21 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரமானது 1.5 சதவிகிதம் முதல் 2.8 சதவிகிதம் வரையில் வளரும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த மெதுவான (குறைந்த) பொருளாதார வளர்ச்சி வீதமானது கொரானா வைரஸ் நோய்த் தொற்றின் திடீர்ப் பெருக்கத்தினால் ஏற்பட்டதாகும்.
- உலக வங்கியானது இது குறித்தத் தகவலைத் தனது தெற்காசிய பொருளாதாரக் கவன அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- இது 2019-20 ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரமானது 4.8 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயரும் என்று கணித்துள்ளது.

## மின்னணுவை அடிப்படையாகக் கொண்ட தேசிய வேளாண் சந்தை

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று மின்னணுவை அடிப்படையாகக் கொண்ட தேசிய வேளாண் சந்தையானது (E-NAM - Electronic-National Agricultural Market) அதன் நான்கு ஆண்டு காலச் செயல்பாடுகளை நிறைவு செய்துள்ளது.
- இது “ஒரு தேசம் ஒரு சந்தை” என்ற கருத்தாக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்டதாகும்.
- இது சிறு விவசாயிகள் வேளாண் வர்த்தகக் கூட்டமைப்பினால் நிர்வகிக்கப் படுகின்றது.
- இது வேளாண் உற்பத்திப் பொருள் சந்தையிடல் குழு (APMC - Agricultural Produce Marketing Committee)தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்காகவும் வேண்டி ஒரே தளத்தில் தனது சேவைகளை அளிக்கின்றது.



## கச்சா எண்ணெயுடன் வந்த முதலாவது கப்பல்

- ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து 1 மில்லியன் பீப்பாய்களைக் கொண்ட முதலாவது கச்சா எண்ணெய்க் கப்பலானது இந்தியாவை அடைந்துள்ளது.
- இந்தியா 5.33 மில்லியன் டன் கச்சா எண்ணெய் அளவிற்கு அவசர காலச் சேமிப்பு வசதியினைக் கொண்டுள்ளது.
- இது 9.5 நாட்களுக்கு நாட்டின் எண்ணெய்த் தேவைக்குப் போதுமானதாக இருக்கும்.
- எண்ணெய்ச் சேமிப்பு இருப்புகள் மங்களூர், படூர் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் சேமித்து வைக்கப்படுகின்றன.
- படூர் எண்ணெய்ச் சேகரிப்பு நிலையமானது மேற்குறிப்பிட்டுள்ள 3 நிலையங்களில் மிகப் பெரியதாகும்.
- இந்தியா, தனது எண்ணெய்த் தேவையில் 83% எண்ணெயை இறக்குமதி செய்கின்றது.
- இந்தியாவின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் விநியோக நாடு ஈராக் ஆகும். இது நாட்டின் மொத்த எண்ணெய்த் தேவையில் நான்கில் ஒரு பங்கைப் பூர்த்தி செய்கின்றது.
- ஈராக் நாட்டைத் தொடர்ந்து சவுதி அரேபியா இந்தியாவிற்கான இரண்டாவது மிகப்பெரிய எண்ணெய் விநியோக நாடாகும்.
- அமெரிக்கா இந்தியாவிற்கான ஆறாவது மிகப்பெரிய எண்ணெய் விநியோக நாடாகும்.

## பனை எண்ணெய் இறக்குமதி

- இந்தியா பனை எண்ணெய் இறக்குமதி மீதான தடையைக் கடுமையாக்கியுள்ளது.
- உலகின் மிகப்பெரிய தாவர எண்ணெய் இறக்குமதியாளர் நாடு இந்தியா ஆகும். இது ஒவ்வொரு ஆண்டும் 15 மில்லியன் டன் தாவர எண்ணெய்யை வாங்குகின்றது.
- இந்தியாவானது இந்தோனேசியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து தாவர எண்ணெய்யை இறக்குமதி செய்கின்றது.

## ஊரடங்கிலிருந்து வெளியேறுதல்

- இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பானது சமீபத்தில் "ஊரடங்கிலிருந்து வெளியேறுதல்" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, இந்தக் கூட்டமைப்பானது தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கான மெதுவான மற்றும் படிப்படியான அணுகுமுறையைப் பரிந்துரை செய்துள்ளது.
- இந்த அமைப்பானது புவியியல் பகுதியைச் சிவப்பு, ஆம்பர் மற்றும் பச்சை நிறமாக வகைப்படுத்த பரிந்துரைத்துள்ளது.

## உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2020


- சர்வதேச நாணய நிதியமானது (IMF - International Monetary Fund) இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தை 1.9% சதவீதமாக நிர்ணயித்துள்ளது.
- மேலும் 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதமானது 7.4 சதவீதமாக மீளும் என்றும் IMF கூறியுள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரமானது 3 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இது 1929-1932 ஆம் ஆண்டில் நிகழ்ந்த மந்த நிலைக்குப் பிறகு ஏற்பட்டுள்ள ஒரு மிகப்பெரிய வீழ்ச்சியைக் குறிக்கின்றது.
- இந்தியா, சீனா, மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் மட்டும் வளர்ச்சியைக் காணும் என்று IMF கணித்துள்ளது.
- இந்த அறிக்கையின்படி, அமெரிக்கா, பிரான்சு, ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய இதர மிகப்பெரிய பொருளாதார நாடுகள் குறைவான வளர்ச்சி விகிதத்தைச் சந்திக்க இருக்கின்றன.




## இந்திய ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள்

- இது ரொக்கத் தகவமைப்பு வசதியின் (LAF - liquidity adjustment facility) கீழ் நேர்மாற்று மறுகொள்முதல் விகிதத்தை (Reverse Prepo Rate) 25 புள்ளிகள் என்ற அளவில் குறைக்க முடிவு செய்துள்ளது.
- இது நேர்மாற்று மறுகொள்முதல் விகிதத்தை 4%லிருந்து 3.75% ஆகக் குறைத்து உள்ளது.
- முன்னதாக மார்ச் மாதத்தில், இது ரெப்போ அல்லது நேர்மாற்று கொள்முதல் விகிதத்தை 5.15%லிருந்து 4.4% ஆகக் குறைத்திருந்தது.
- மேலும் நீண்ட கால ரெப்போ நடவடிக்கைக்காக (LTRO - Long Term Repo Operation) ரூ.50,000 கோடி நிதியையும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.
- இந்த முறை LTRO ஆனது நுண் நிதியியல் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்களின் ரொக்கத் தேவைகளின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- முதலில் LTRO நிதியானது பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் மிகப்பெரிய நிறுவனங்களுக்கு அதிக அளவில் வழங்கப் பட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது பணப்புழக்கப் பரவு விகிதத்தை (LCR - Liquidity Coverage Ratio) 100%லிருந்து 80% ஆகக் குறைத்துள்ளது.
- LCR என்பது வங்கிகளின் தற்போதைய திறனுடன் குறுகிய காலக் கடன்களைப் பூர்த்தி செய்வதற்காக வங்கிகளிடம் உள்ள சொத்துகளாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி, நபார்டு மற்றும் தேசிய வீட்டு வசதி வங்கி போன்ற நிறுவனங்களுக்கு ரூ.50,000 கோடி என்ற சிறப்பு நிதியுதவியையும் வழங்க இருக்கின்றது.



**Monetary antidote**

- RBI provides special refinance facility of ₹25,000 crore to NABARD for refinancing regional rural banks, cooperative banks and micro finance institutions; ₹15,000 crore to SIDBI for on-lending and refinancing; and ₹10,000 crore to NHB for supporting housing finance companies
- Banks can avail themselves of ₹50,000 crore through targeted long term repo operation (TLTRO)
- They must invest funds from TLTRO in investment grade bonds, commercial paper, and non-convertible debentures of NBFCs
- Small, mid-sized NBFCs and micro finance institutions should receive at least 50% of these funds
- Of this, 10% to be invested in MFI securities, 15% in securities issued by NBFCs with asset size of ₹500 crore and below; and 25% in securities of NBFCs with asset sizes in the ₹500 crore-₹5,000 crore range

## OBICUS

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது “OBICUS” என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- ❖ “OBICUS” என்பது “பதிவுகளுக்கு உத்தரவாதம் கொடுத்தல், கையிருப்புகள் மற்றும் திறன் பயன்பாட்டு ஆய்வு” (Order Books, Inventories and Capacity Utilization Survey - OBICUS) என்பதைக் குறிக்கின்றது.
- ❖ இந்த ஆய்வானது இந்திய உற்பத்தித் துறையின் தேவைகளுக்கான ஒரு கண்ணோட்டத்தை வழங்குகின்றது.
- ❖ இந்த ஆய்வானது பொதுத் துறை மற்றும் தனியார் துறை என இரண்டிலும் சேர்த்து மொத்தம் 2.500 நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.
- ❖ இந்த ஆய்வானது, காலாண்டுகளுக்கு (ஒரு வருடத்திற்கு 4 முறை) ஒரு முறை நடத்தப் படுகின்றது.
- ❖ இது 2008 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றது.

## IMFC சந்திப்பு

- ❖ சமீபத்தில் மத்திய நிதித்துறை மற்றும் பெரு நிறுவனங்கள் துறை அமைச்சரான நிர்மலா சீதாராமன் காணொலி மூலம் சர்வதேச நாணய மற்றும் நிதியியல் குழுவின் (IMFC - International Monetary and Financial Committee) ஒரு முழுமையான அமர்வில் கலந்து கொண்டார்.
- ❖ இந்தச் சந்திப்பின் போது மேற்கொள்ளப்பட்ட விவாதங்களானது IMF மேலாண் இயக்குநரின் உலகளாவிய கொள்கைச் செயல்திட்டமான “அபூர்வமான நேரம் – அபூர்வமான செயல்” என்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்டது.
- ❖ இந்த குழுவானது உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் பொதுப் பிரச்சினைகள் குறித்து விவாதித்தது. இது IMFன் பணி நடவடிக்கைகள் குறித்து, அந்த அமைப்பிற்கு ஆலோசனைகளை வழங்கியது.

- IMFC ஆனது 187 ஆளுநர்களைக் கொண்ட குழுவிலிருந்துப் பெறப்பட்ட 24 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- எனவே, IMFC ஆனது நிதியத்தின் அனைத்து உறுப்பு நாடுகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.
- IMFC ஆனது ஆண்டிற்கு இருமுறை அதாவது வசந்த காலம் மற்றும் வருடாந்திர சந்திப்புகள் ஆகியவற்றில் கூடி விவாதிக்கின்றது.
- IMFC ஆனது எந்தவொரு முறையான வாக்கெடுப்பு அடிப்படையிலும் இல்லாமல், ஒருமித்த கருத்தின் அடிப்படையில் செயல்படுகின்றது.





## அகில இந்திய வேளாண் போக்குவரத்து தகவல் அழைப்பு மைய வசதி

- அகில இந்திய வேளாண் போக்குவரத்து தகவல் அழைப்பு மைய வசதியை வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகமானது அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்த வசதியானது மாநிலங்களுக்கு இடையில் அழுகக் கூடிய பொருட்களின் போக்குவரத்து இயக்கத்தை மேற்கொள்ள உதவும்.
- இந்தத் தகவல் அழைப்பு மையங்களை IFFCO (இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு நிறுவனம்) கிசான் சஞ்சார் லிமிடெட் நிறுவனமானது இயக்க உள்ளது.
- IKSL நிறுவனமானது இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் நிறுவனத்துடன் பார்தி ஏர்டெல் மற்றும் ஸ்டார் குளோபல் ரிசோர்ஸ் லிமிடெட் ஆகிய நிறுவனங்களால் இணைந்து ஊக்கமளிக்கப் படுகிறது.
- இந்திய விவசாயிகள் உரங்கள் கூட்டுறவு லிமிடெட் நிறுவனமானது 1967 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட நாட்டின் மிகப்பெரிய கூட்டுறவுச் சங்கமாகும்.

## கோதுமை கொள்முதல்

- கோதுமை உற்பத்தியானது எப்போதும் இல்லாத அளவில் 106.21 மில்லியன் டன்களுக்கும் மேலாக இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.
- கோதுமையை உற்பத்தி செய்யும் மாநிலங்களின் விவசாய உற்பத்தியின் பரப்பளவு அதிகமாக இருப்பதே இதற்கு முக்கியக் காரணமாகும்.
- மத்தியப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மூன்று மாநிலங்கள் நாட்டின் 90% அளவிற்கு கோதுமை உற்பத்தியை மேற்கொள்கின்றன.




WHEAT PROCUREMENT

| State | Procurement as on May 10, 2019 | Target |
|---|---|---|
| Punjab | 12.09 | 12.5 |
| Haryana | 9.01 | 8.5 |
| Uttar Pradesh | 1.93 | 5 |
| Madhya Pradesh | 5.31 | 7.5 |
| Rajasthan | 0.85 | 1.7 |
| Bihar | 0 | 0.2 |

© BCCL 2020. ALL RIGHTS RESERVED.

## MGNREGA

- ஊரடங்கு முடக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ், கிராமப் புறங்களில் தொழில்துறைப் பணிகள், சாலை கட்டுமானப் பணிகள் மற்றும் MGNREGA (மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம்) ஆகியவற்றைத் தொடங்க அரசு அனுமதி அளிக்கிறது.
- அமைப்பு சாராத் துறையின் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் ஆகியோருக்கு உதவுவதே இதன் நோக்கமாகும்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டமானது நாட்டில் அதிக வேலைவாய்ப்பை உருவாக்கும் ஒரு ஆதாரமாக இருக்கிறது.
- 2020-21 நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்திற்கு மத்திய அரசானது ரூ.60,000 கோடியை ஒதுக்கி உள்ளது.




## அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கையில் திருத்தம்

- இந்திய அரசானது அந்நிய நேரடி முதலீட்டுக் கொள்கை, 2017 என்ற கொள்கையைத் திருத்தியுள்ளது.
- இந்தப் புதியத் திருத்தமானது, சில முதலீடுகள் நேரடி வழியின் கீழ் அல்லாமல் அரசு அனுமதி பெறும் வழியின் மூலம் மட்டுமே வர வேண்டும் என்று கூறுகின்றது.
- தற்போதைய விதிமுறையின் கீழ், இந்தியாவைச் சாராத நிறுவனங்கள் அரசாங்க வழியின் மூலம் மட்டுமே இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ள அனுமதிக்கப் படுகின்றன.
- இது இந்தியாவுடன் நில எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் அனைத்து அண்டை நாடுகளுக்கும் பொருந்தும்.

- ❖ மேலும், முதலீட்டின் மீதான உரிமையை வேறு ஒருவருக்கு மாற்றும் போது, பயனாளர் நிறுவனம் இந்திய அரசிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற வேண்டும்.
- ❖ இந்த நடவடிக்கையானது இந்திய நிறுவனங்களின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்ளும் சீன நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியையும் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ முன்னதாக சீனாவின் மத்திய வங்கியான சீன மக்கள் வங்கியானது திறந்த வெளிச் சந்தைக் கொள்முதலின் மூலம் எச்டிஎப்சி வங்கியில் தனது பங்கை 0.8%லிருந்து 1.01% என்ற அளவிற்கு உயர்த்தியுள்ளது என்று வீட்டுவசதி வளர்ச்சி நிதியியல் கழகம் (HDFC - Housing Development Finance Corporation Ltd) அண்மையில் அறிவித்துள்ளது.

## வளர்ச்சிக் குழுவின் 101வது சந்திப்பு

- ❖ உலக வங்கி – சர்வதேச நாணய நிதியத்தின் வளர்ச்சிக் குழுவின் சந்திப்பில் இந்திய நிதித்துறை அமைச்சர் காணொளியின் மூலம் கலந்து கொண்டார்.
- ❖ மிகப்பெரிய கடன் முன்னெடுப்பு என்பது ஐடிஏ நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைக்கான ஒரு சர்வதேச அழைப்பாகும்.
- ❖ ஐடிஏ நாடுகள் என்பது உலகில் உள்ள ஏழை நாடுகளுக்கு கடன் மற்றும் நிதியுதவிகளை வழங்கும் சர்வதேச வளர்ச்சிக் கூட்டமைப்பு நாடுகளாகும்.
- ❖ இது உலக வங்கியின் திட்டமான “வறுமையைக் குறைத்தலில்” பங்கு பெறுகின்றது.
- ❖ இந்த கூட்டமைப்பானது உலக வங்கியின் ஆளுநர்களைக் கொண்ட ஒரு வாரியத்தினால் நிர்வகிக்கப் படுகின்றது.

## சிறப்பு எடுப்பு உரிமைகள் உள்ளடக்கம்

- ❖ சிறப்பு எடுப்பு உரிமைகள் உள்ளடக்கமானது (Special Drawing Rights basket) 5 வருடங்களுக்கு ஒருமுறை அல்லது தேவைப்படின் அதற்கு முன்போ மறு ஆய்வு செய்யப் படுகின்றது.
- ❖ சர்வதேச நாணய நிதியத்தினால் மேற்கொள்ளப் படும் புதிய SDRன் பொது ஒதுக்கீட்டை இந்தியா ஆதரிக்கவில்லை.
- ❖ புதிய SDR (Special Drawing Rights) ஒதுக்கீடானது எந்தவொரு நிபந்தனையும் இல்லாமல் புதிய அந்நியச் செலாவணி இருப்புகளுடன் அனைத்து 189 நாடுகளுக்கும் வழங்கப் படுகின்றது.

### *SDR பற்றி*

- ❖ SDR என்பது சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பு நாடுகளின் அலுவல்பூர்வ நிதி இருப்புகளுக்கு ஆதரவளிப்பதற்காக 1969 ஆம் ஆண்டில் சர்வதேச நாணய நிதியத்தினால் உருவாக்கப் பட்ட ஒரு சர்வதேச நிதி இருப்புச் சொத்தாகும்.
- ❖ SDRன் மதிப்பானது அமெரிக்க டாலர், யூரோ, சீனாவின் ரென்மின்பி, ஜப்பானின் யென் மற்றும் பிரிட்டனின் பவுண்டு ஸ்டெர்லிங் ஆகிய 5 நாணயங்களைக் கொண்ட உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- ❖ SDR ஆனது IMF-ன் சார்பாகவும் இதர சர்வதேச அமைப்புகளின் சார்பாகவும் ஒரு அலகாகச் செயல்படுகின்றது.
- ❖ SDR என்பது ஒரு நாணயமோ அல்லது IMF மீதான உரிமைக் கோரிக்கையோ அல்ல.
- ❖ ஆனால், IMF உறுப்பு நாடுகளால் தடையின்றிப் பயன்படுத்தப்படும் நாணயங்கள் மீதான ஒரு சாத்தியமுள்ள உரிமைக் கோரிக்கையாகும்.

| | Current basket | As of 1 October 2016 |
|---|---|---|
| USD | 41,9 | 41,73 |
| EUR | 37,4 | 30,93 |
| JPY | 9,4 | 8,33 |
| GBP | 11,3 | 8,09 |
| RMB | N.A. | 10,92 |

Source: IMF.

## வாராக் கடன் (NPA) குறித்து இந்திய ரிசர்வ் வங்கி

- இந்திய ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிவிப்பின்படி, வாராக் கடன் வகைப்பாட்டுக் கால அளவானது தற்பொழுது அனைத்து வங்கிகளுக்கும் 90 நாட்களிலிருந்து 180 நாட்களுக்கு மாற்றப் பட்டுள்ளது.
- 90 நாட்கள் கால அளவுள்ள NPA (Non Performing Asset) விதியானது கடன் தவணைத் தள்ளுபடிக் கால அளவை விலக்கியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் 1 முதல் 2020 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதி வரை அனைத்து வங்கிகளுக்கும் சேர்த்து ஒரு செயல்படாத சொத்து வகைப்பாட்டுச் நிலையானது மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
- நில மனைத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை திரும்பப் பெறுவதை உறுதி செய்வதற்காக, இந்திய ரிசர்வ் வங்கியானது அக்கடன்கள் NPA ஆக அங்கீகரிக்கப் படுவதற்கு முன்பு அதற்கு ஓராண்டு கால நீட்டிப்பை வழங்கியுள்ளது.

### *NPA பற்றி*

- வாராக் கடன் (NPA) என்பது ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் செலுத்தப்படாத மற்றும் மீதமுள்ள கடன்கள் அல்லது நிதிகளுக்கான வகைப்பாட்டைக் குறிக்கின்றது.
- அசல் அல்லது அசலுக்கான வட்டித் தொகை செலுத்தப்படாமல் அல்லது காலம் தவறியதாக இருப்பின் அது கடன் நிலுவைத் தொகை எனப்படுகின்றது.
- கடன் ஒப்பந்தம் முறிக்கப் பட வேண்டியதாக கடன் கொடுத்தவர் கருதினாலும் கடன் பெற்றவர் கடன் விதிமுறைகளைப் பூர்த்தி செய்யத் தவறினாலும் அந்தக் கடன் செலுத்தாக் கடனாக மாறும்.
- பெரும்பாலான நிலைகளில், கடனானது 90 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தப் படாமல் இருந்தால், அது NPA ஆக வகைப்படுத்தப் படும்.
- NPA சொத்துகள் ஒரு வங்கி அல்லது இதர நிதியியல் நிறுவனத்தின் இருப்பு நிலைப் பட்டியலில் பட்டியலிடப்படுகின்றன.
- இந்தக் கடன் நீண்ட காலத்திற்குச் செலுத்தப்படாமல் இருந்தால், கடன் கொடுத்தவர் கடன் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக பிணையாக முன்மொழியப் பட்ட எந்தவொருச் சொத்துக்களையும் விற்றுப் பணமாக மாற்ற கடன் பெற்றவரை வற்புறுத்துவார்.
- எந்தவொருச் சொத்தும் பிணையாக முன்மொழியப் படவில்லை எனில், கடன் கொடுத்தவர் அந்தச் சொத்தினை வாராக் கடனாக எழுதி, வசூல் நிறுவனத்திற்கு தள்ளுபடி விலையில் விற்று விடுவார்.

## பெட்ரோலியக் கரி இறக்குமதி

- அயல்நாட்டு வர்த்தகத்திற்கான பொது இயக்குநரகமானது பெட்ரோலியக் கரி இறக்குமதிக்கான விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது.
- இதற்கு முன்பு, அது பெட்ரோலியக் கரி இறக்குமதிக்குத் தடை விதித்திருந்தது.
- பெட்ரோலியக் கரி இறக்குமதியானது சுண்ணாம்புச் சூளை, சிமெண்ட் வளிமயமாக்கல், கால்சியம் கார்பைடு தொழிற்சாலை ஆகியவற்றில் மட்டுமே அனுமதிக்கப் பட்டு இருந்தது.
- உலகில் பெட்ரோலிய நிலக்கரியை மிகப்பெரிய அளவில் நுகரும் நாடு இந்தியா ஆகும்.

### *பெட்ரோலிய நிலக்கரி*

- பெட்ரோலிய நிலக்கரியானது "PET COKE" என்று அழைக்கப்படுகின்றது.
- "PET COKE" ஆனது 80%ற்கும் அதிகமான கார்பனைக் கொண்டுள்ளது.
- "PET COKE" ஆனது நிலக்கரியை விட 11% அதிகமான அளவில் பசுமை இல்ல வாயுவினை உமிழ்கின்றது.
- இது அதிக அளவு கார்பன் செறிவைக் கொண்டுள்ளது. மேலும் இது எண்ணெய்ச் சுத்திகரித்தலில் இருந்து பெறப்படுகின்றது.
- "PET COKE" ஆனது அலுமினியத் தொழிற்சாலைகளில் முக்கியமான மூலப் பொருளாகப் பயன்படுத்தப் படுகின்றது.




## மின்சார வாகனங்களின் விற்பனை

- மின்சார வாகனங்களின் விற்பனையாளர் சங்கமானது (SMEV - Society of Manufacturers of Electric Vehicles) மின்சார வாகனங்களின் விற்பனை குறித்த தனது தரவை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, மின்சார வாகனங்களின் விற்பனையானது 2019-20 ஆம் நிதியாண்டில் 20% அதிகரித்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டிற்கான மின்சார வாகனங்களின் விற்பனையானது 3400 கார்கள், 1,52,000 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 600 பேருந்துகள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.

- 2019-20 ஆம் நிதியாண்டில் ஏறத்தாழ 90,000 மின்சார ஆள் இழுப்பு இரு சக்கர வாகனங்கள் விற்கப் பட்டுள்ளன.
- 2019-20 ஆம் ஆண்டில் விற்கப்பட்டுள்ள மின்சார வாகனங்களில், 97% விற்பனையானவை மின்சார மோட்டார் சைக்கிள் (Scooter) போன்ற இரு சக்கர வாகனமாகும்.

## இந்தியாவின் ஆற்றல் மானியங்களை வரைபடமிடல் – 2020

- ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் குறித்த ஆணையம் (CCEW - Council on Energy, Environment and Water) மற்றும் வளம் குன்றா வளர்ச்சிக்கான சர்வதேச நிறுவனம் (IISD - International Institute of Sustainable Development) ஆகியவை சமீபத்தில் "இந்தியாவின் ஆற்றல் மானியங்களை வரைபடமிடல் - 2020" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளன-
- 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்படும் பொழுது 2019 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான இந்தியாவின் ஆற்றல் மானியமானது 35% என்ற அளவிற்குக் குறைந்துள்ளது என்று இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.
- அதே சமயம், எண்ணெய் மற்றும் எரிவாயு மானியங்கள் 65% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளன.
- ஆனால் மின்சார வாகனங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான மானியங்களானது 2014 ஆம் ஆண்டு முதல் மூன்றரை மடங்கு அளவிற்கு அதிகரித்துள்ளது.

## உபரி அரிசி – கை காப்பான் திரவம்

- தேசிய உயிரி எரிபொருள் ஒருங்கிணைப்புக் குழுவானது (NBCC - National Biofuel Coordination Committee) இந்திய உணவுக் கழகத்திடம் (FCI - Food Corporation of India) இருக்கும் உபரி அரிசியை எத்தனால் (Ethanol) தயாரிப்பில் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.
- எத்தனால் கை காப்பான் திரவத்தில் பயன்படுத்தப் படுகின்றது.
- NBCCன் கீழ் உபரி அரிசியானது எத்தனால் கலந்த பெட்ரோல் உற்பத்தி செய்யும் திட்டத்திற்குப் பயன்படுத்தவும் இது முடிவு செய்துள்ளது.
- இந்த முடிவானது தேசிய உயிரி எரிபொருள் கொள்கை, 2018 உடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் எடுக்கப் பட்டுள்ளது.
- இக்கொள்கையின் கீழ், ஒவ்வொரு பயிர் அறுவடைக் காலத்தின் போதும், மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தினால் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட அதிக உபரியாக உள்ள உணவு தானியங்கள் எத்தனாலை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப் படலாம்.
- புதைபடிம எரிபொருள் எரிப்பின் காரணமாக ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள், விவசாயிகளுக்கு சரியான வருமானத்தை வழங்குதல், கச்சா எண்ணெய் இறக்குமதிகளுக்கு மானியம், அந்நியச் செலாவணி சேமிப்பை அதிகரித்தல் ஆகிய பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை வழங்கிட வேண்டி பெட்ரோலில் எத்தனால் கலவையை மேற்கொள்வதற்காக இந்திய அரசு 2003 ஆம் ஆண்டில் எத்தனால் கலவைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- 99 சதவிதத்திற்கும் மேல் தூய்மையான எத்தனால், பெட்ரோலுடன் கலப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

## TIFAC

- தொழில்நுட்பத் தகவல் முன்கணிப்பு மற்றும் ஆய்வு ஆணையத்தை (TIFAC - Technology Information Forecasting and Assessment Council) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கோவிட் – 19 முடக்கத்திற்குப் பிறகு இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு உதவுவதற்காக ஒரு மறுமலர்ச்சி உத்தியைத் தயாரிக்க இருக்கின்றனர்.

### *இது பற்றி*

- இது 1988 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் தனிச் சுதந்திரம் கொண்ட ஒரு அமைப்பாகும்.

## ஜியோ மற்றும் முகநூல்

- முகநூல் நிறுவனமானது 5.7 மில்லியன் அமெரிக்க டாலருக்கு ரிலையன்ஸ் ஜியோவின் 9.4% பங்குகளை வாங்கியுள்ளது.
- உலகிலுள்ள எந்தவொரு நிறுவனத்தினாலும் மேற்கொள்ளப் படாத வகையில் ஒரு தொழில்நுட்ப நிறுவனத்தினால் சிறுபான்மை அளவிலான பங்கிற்காக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய முதலீடு இது என்று ரிலையன்ஸ் நிறுவனம் கூறியுள்ளது. மேலும் இந்தியாவில் தொழில்நுட்பத் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மிகப்பெரிய அந்நிய நேரடி முதலீடு இதுவாகும்.

## 15வது நிதி ஆணையம் நிதி ஒதுக்கீடு

- மத்திய நிதித்துறை அமைச்சகமானது மத்திய வரிகளில் மாநிலங்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான அவற்றின் பங்கான ரூ.46,038 கோடியை விடுவித்துள்ளது.
- இந்த வரி ஒதுக்கீடானது 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- பங்கிடப்படும் வரிகளின் நிகர வருமானக் கணக்கீடானது 2020-21 பட்ஜெட் அறிக்கையின்படி எதுவும் மாற்றங்கள் மேற்கொள்ளப் படாமல் தொடரப் பட்டு உள்ளது.
- நிதி ஆண்டு 2021 ஆம் ஆண்டிற்கான தனது இடைக்கால அறிக்கையில், நிதி ஆணையமானது மாநிலங்களுக்கான மத்திய வரிகளின் ஒதுக்கீட்டுப் பங்கை 1% என்ற அளவில் குறைத்து 41% ஆக நிர்ணயித்துள்ளது.
- அப்போதைய ஜம்மு காஷ்மீர் 2 ஒன்றியப் பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளதன் காரணமாக இவ்வாறு குறைக்கப் பட்டுள்ளது.
- நிதி ஆணையமானது ஒரு மாநிலத்தின் மக்கள் தொகைக்கு 15 சதவீதம் என்ற அளவுகோலை நிர்ணயித்துள்ளது. இதனை 14வது நிதி ஆணையத்தினால் நிர்ணயிக்கப் பட்டிருந்த 17.5% என்ற அளவிலிருந்து அது குறைத்துள்ளது.
- ஆனால் இது மக்கள் தொகைக் காரணிகளின் மீதான அளவுகோலை 10%லிருந்து 12.5% ஆக அதிகரித்துள்ளது.
- ஏப்ரல் மாதத்திற்கான மத்திய வரிகளின் பங்கில் மிக அதிக அளவானது உத்தரப் பிரதேசத்திற்கும், அதற்கு அடுத்து பீகார் மாநிலத்திற்கும் செல்ல இருக்கின்றன.
- கோவா மற்றும் சிக்கிம் ஆகியவை மத்திய வரிகளின் குறைந்த அளவைப் பெற்றுள்ளன.

State wise Break up of Devolution

| Sl. No. | State | Amount (₹ Crore) |
|---|---|---|
| 1 | Andhra Pradesh | 1892.64 |
| 2 | Arunachal Pradesh | 810.28 |
| 3 | Assam | 1441.48 |
| 4 | Bihar | 4631.96 |
| 5 | Chhattisgarh | 1573.60 |
| 6 | Goa | 177.72 |
| 7 | Gujarat | 1564.40 |
| 8 | Haryana | 498.15 |
| 9 | Himachal Pradesh | 367.84 |
| 10 | Jharkhand | 1525.27 |
| 11 | Karnataka | 1678.57 |
| 12 | Kerala | 894.53 |
| 13 | Madhya Pradesh | 3630.60 |
| 14 | Maharashtra | 2824.47 |
| 15 | Manipur | 330.56 |
| 16 | Meghalaya | 352.20 |
| 17 | Mizoram | 232.96 |
| 18 | Nagaland | 263.80 |
| 19 | Odisha | 2131.13 |
| 20 | Punjab | 823.16 |
| 21 | Rajasthan | 2752.65 |
| 22 | Sikkim | 178.64 |
| 23 | Tamil Nadu | 1928.56 |
| 24 | Telangana | 982.00 |
| 25 | Tripura | 326.42 |
| 26 | Uttar Pradesh | 8255.19 |
| 27 | Uttarakhand | 508.27 |
| 28 | West Bengal | 3461.65 |
| | Total | 46038.70 |

## வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதி

- வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியானது (IFAD - International Fund for Agricultural Development) பல நன்கொடையாளர்களைக் கொண்ட கோவிட்-19 கிராமப்புற ஏழைகளுக்கான ஊக்க வசதியை (Rural Poor Stimulus Facility - RPSF) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய கிராமப்புற மக்களை கோவிட்-19 நெருக்கடியிலிருந்து மீட்பதைத் துரிதப்படுத்துவதே RPSFஇன் ஒரு இறுதியான குறிக்கோளாகும்.
- வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியானது ஒரு சர்வதேச நிதி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும். இது வளரும் நாடுகளின் கிராமப்புறங்களில் உள்ள வறுமை மற்றும் பசியை நிவர்த்தி செய்வதை நோக்கிப் பணியாற்றுகின்றது.

## விதைக்கப்பட்ட பயிர் பகுதி

- கோடைக் கால பயிர்களின் விதைக்கப்பட்ட பயிர் பரப்பானது (Sown Crop Area) 36% அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்த உயர்வு முக்கியமாக நெல் சாகுபடியில் காணப் படுகிறது.
- அறுவடைப் பரப்பை மத்தியப் பிரதேசம் 95 சதவீதமும், ராஜஸ்தான் 85 சதவீதமும் உத்தரப் பிரதேசம் 65 சதவீதமும் அதிகரித்துள்ளது.

## புதிய வளர்ச்சி வங்கி

- நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் புதிய வளர்ச்சி வங்கியின் ஆளுநர் குழுவின் ஐந்தாவது ஆண்டுக் கூட்டத்தில் காணொலிக் கலந்துரையாடல் மூலம் கலந்து கொண்டார்.
- கோவிட்-19 நிதியில் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் நிதியை இந்தியாவிற்கு வழங்குவதாக புதிய வளர்ச்சி வங்கியானது உறுதியளித்து உள்ளது.
- இந்த வங்கி 2014 ஆம் ஆண்டில் பிரிக்ஸ் உறுப்பு நாடுகளால் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்கா) நிறுவப்பட்டது.
- இது பொது மற்றும் தனியார் திட்டங்களை ஆதரிக்கிறது.
- வங்கியின் ஆரம்பக்கால அங்கீகரிக்கப்பட்ட மூலதனமானது 100 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.

## அகவிலைப் படி (DA)

- 2021 ஆம் ஆண்டிற்கான (2021 ஜூலை மாதம் வரை) அகவிலைப்படி உயர்வை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது.
- தற்பொழுது, மத்திய அரசு ஊழியர்கள் தங்களது ஊதியத்தில் 17%ஐ அகவிலைப் படியாகப் பெறுகின்றனர்.
- இந்தப் படித் தொகையானது பணவீக்கத்திற்கு இழப்பீடாக பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப் படுகின்றது.
- இது நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்க எண்ணுடன் இணைக்கப்பட்டு உள்ளது.
- DA (dearness allowance) ஆனது ஓய்வூதியதாரர்கள் மற்றும் அரசு ஊழியர்களால் பெறப் படுகின்றது.
- DA ஆனது ஒவ்வொரு ஆண்டும் இருமுறை, அதாவது ஜூலை மற்றும் ஜனவரி மாதங்களில் திருத்தியமைக்கப் படுகின்றது.

## உலக அளவில் தாய் நாட்டிற்குப் பணம் அனுப்பும் செலவு

- உலக அளவில் தாய் நாட்டிற்குப் பணம் அனுப்பும் செலவு என்பது உலக வங்கிக் குழுவால் வழங்கப்படும் ஒரு வளம் சார்ந்த அறிக்கையாகும்.
- இது பணம் அனுப்பும் 48 நாடுகள் மற்றும் பணத்தைப் பெறும் 105 நாடுகள் ஆகியவற்றின் செலவினம் குறித்த தரவைத் தருகின்றது.
- தற்போதைய அறிக்கையின்படி, கோவிட் – 19 நோய்த் தொற்று மற்றும் ஊரடங்கினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, தாய் நாட்டிற்குப் அனுப்பப் படும் தொகையானது 2020 ஆம் ஆண்டில் (110 மில்லியன் அமெரிக்க டாலர்) 20% அளவிற்குக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், தாய் நாட்டிற்குப் பணம் அனுப்புதல் ஆனது எப்பொழுதும் இல்லாத வகையில் 554 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது.
- இந்தியாவிற்குப் பணம் அனுப்புதல் ஆனது 23% என்ற அளவில், அதாவது 64 பில்லியன் அமெரிக்க டாலராகக் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டில் 83 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- தாய் நாட்டிற்குப் பணத்தை அனுப்பிப் பெறுதலில் உலகின் மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

- 2019 ஆம் ஆண்டில், இந்தியா வெளிநாடுகளில் பணியாற்றும் தன் மக்களிடமிருந்து 83.1 பில்லியன் அமெரிக்க டாலரை தாய் நாட்டிற்கு அனுப்பும் பணமாகப் பெற்றுள்ளது. இது மொத்த உலகளாவிய பணம் அனுப்புதலில் 12% ஆகும்.




| REGION | EXPECTED DECLINE (%) |
|---|---|
| Europe & Central Asia | 28 |
| Sub-Saharan Africa | 23.1 |
| South Asia | 22 |
| Middle East & North Africa | 19.6 |
| Latin America & Caribbean | 19.3 |
| East Asia & Pacific | 13 |
| World | 20 |

## வங்கித் தொழில்

- மத்திய அரசானது அக்டோபர் 21 ஆம் தேதி வரை வங்கித் தொழிற்துறையைப் ஒரு பொதுப் பயன்பாட்டுச் சேவையாக அறிவித்துள்ளது.
- இந்த உத்தரவானது தொழிற் தகராறுச் சட்டம், 1947 என்ற சட்டத்தின் விதிகளின் கீழ் பிறப்பிக்கப் பட்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் இந்தியத் தொழிற்துறையின் பணிக் கலாச்சாரத்தில் நல்லிணக்கம் மற்றும் அமைதியைக் காப்பதாகும்.
- இந்தச் சட்டமானது அமைப்புசார் துறைக்கு மட்டுமே பொருந்தும்.
- இந்த உத்தரவானது மத்திய நிதித்துறை அமைச்சகத்தினால் பிறப்பிக்கப்பட்டு, அதன் பிறகு அது குறித்த ஒரு தெளிவிற்காக இந்திய ரிசர்வ் வங்கிக்குச் செல்ல இருக்கின்றது.
- இந்த உத்தரவானது மத்தியத் தொழிலாளர் துறை அமைச்சகத்தினால் நிறைவேற்றப்பட்டுச் செயல்படுத்தப் படுகின்றது.

## மாநிலங்கள் மற்றும் FRBM

- கோவிட் – 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு கூடுதல் வளங்களை திரட்டுவதற்காக நிதியியல் பொறுப்புடைமைச் சட்டத்தின் (FRBM - The Fiscal Responsibility and Budget Management Act) சில பிரிவுகளைப் பயன்படுத்துமாறு மாநில அரசுகளுக்கு நிதி ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது.
- மாநிலங்கள் தங்களுக்கே உரிய FRBM சட்டத்தைக் கொண்டுள்ளன.
- மத்திய மற்றும் மாநிலங்கள் ஆகிய இரண்டிற்குமான நிதிப் பற்றாக்குறையானது 3% ஆக உள்ளது. மாநில அரசுகள் இந்த நிதிப் பற்றாக்குறையை 50 அடிப்படைப் புள்ளிகள் அளவிற்கு உயர்த்த முடியும்.

## பொருட்களுக்கான சந்தைக் கண்ணோட்டம்

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான உலக வங்கியின் பொருட்களுக்கான சந்தைக் கண்ணோட்ட அறிக்கையானது வெளியிடப் பட்டுள்ளது.
- இது ஆற்றல், உலோகம், விவசாயம், விலை மதிப்பற்ற உலோகங்கள் மற்றும் உரங்கள் போன்ற முக்கியப் பொருள் குழுக்களுக்கான சந்தைப் பகுப்பாய்வை வழங்குகின்றது.
- இது ஏப்ரல் மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியிடப் படுகின்றது.

## வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அறிக்கை

- வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மீதான ஐக்கிய நாடுகள் கருத்தரங்கு அமைப்பானது (UNCTAD - United Nations Conference on Trade and Development) தனது சமீபத்திய வர்த்தகம் மற்றும் வளர்ச்சி அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இது வளரும் நாடுகளால் பெறப்பட்ட 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் கடனை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.
- UNCTAD என்பது 1964 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் உருவாக்கப்பட்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு நிரந்தர அமைப்பாகும்.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மற்றும் பொருளாதார & சமூக ஆணையத்திற்கு கட்டுப்படுகின்றது.
- இது ஐக்கிய நாடுகள் செயலகத்தின் ஒரு பகுதியாகும்.
- இது ஐக்கிய நாடுகள் வளர்ச்சிக் குழுவின் ஒரு பகுதியாகவும் விளங்குகின்றது.

## உணவுப் பிரச்சினை குறித்த உலக அறிக்கை

- உணவுப் பிரச்சினை குறித்த வருடாந்திர உலக அறிக்கையின் ஒரு புதிய பதிப்பானது உணவுப் பிரச்சினைக்கு எதிரான உலகளாவிய அமைப்பினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பிரச்சினையானது ஆபத்தில் இருக்கும் நாடுகளுக்கு புதிய இடர்களாக "உணவுப் பிரச்சினையை" ஏற்படுத்தும் என்று கூறுகின்றது.
- இது 2016 ஆம் ஆண்டில் உலக மனிதாபிமான மாநாட்டின் போது ஐரோப்பிய ஒன்றியம், உணவு & வேளாண் அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவற்றினால் இணைந்து தொடங்கப் பட்டுள்ளது.

## நீதிக்கான கல்வி

- நீதிக்கான கல்வி (E4J - Education for Justice) என்ற ஒரு முன்னெடுப்பானது சட்டங்களின் கீழ் குற்றங்களைக் களைதல் மற்றும் குற்றங்களைத் தடுத்தல் குறித்து அடுத்தத் தலைமுறையினருக்கு விழிப்புணர்வினைக் கற்பிப்பதற்காக போதை மருந்துகள் மற்றும் குற்றங்கள் குறித்த ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் (UNODC - United Nations Office on Drugs and Crimes) தொடங்கப்பட்டு உள்ளது.
- இந்த அமைப்பானது E4J என்பதின் கீழ் "ஊரடங்கின் போது கற்கும் தொடரைத்" தொடங்கியுள்ளது.
- E4J ஆனது தோஹா பிரகடனத்தின் திட்டங்களைச் செயல்படுத்துதலுக்காக ஒரு உலகளாவியத் திட்டத்தின் கீழ் தொடங்கப் பட்டுள்ளது.

UNODC | The Doha Declaration: PROMOTING A CULTURE OF LAWFULNESS | education for justice

## உலகளாவிய கடன் ஒப்பந்தம்

- G20 குழுவானது "உலகளாவிய கடன் ஒப்பந்தத்திற்கு" அழைப்பு விடுத்துள்ளது.
- இது ஓர் ஆண்டு கால செலுத்தப்படாதக் கடனை அளிக்க வழிவகை செய்கின்றது.
- ஒரு ஆண்டிற்குப் பின்னர், வளரும் நாடுகளானது இந்தக் கடனை வட்டியுடன் செலுத்த வேண்டும்.


## செயல்படும் மருந்துப் பொருட்கள் (API)

- இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனமானது (IICT - Indian Institute of Chemical Technology) இந்தியாவிற்குள் செயல்படும் மருந்துப் பொருட்களைத் (API - Active Pharmaceutical Ingredients) தயாரிப்பதற்காக லாக்ஸை வாழ்க்கை அறிவியல் நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- இது மருந்துத் துறையில் சீனாவின் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கு உதவ இருக்கின்றது.
- APIகள் மொத்த மருந்துகள் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது உளங்கொல் (நோக்கம் கொண்டுள்ள) விளைவுகளை உருவாக்கும் மருந்துகளின் ஒரு முக்கியப் பகுதியாக விளங்குகின்றது.
- உலகில் APIயின் உற்பத்தியில் 3வது மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.
- இந்தியாவில் பயன்படுத்தப்படும் APIயில் மூன்றில் 2 மடங்கு சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், இந்திய அரசு API தொழிற்துறையைப் புதுப்பிப்பதற்காக வேண்டி மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் இயக்குநரின் தலைமையில் ஒரு குழுவை அமைத்திருந்தது.

## டிவிஸ்ட் நடவடிக்கை

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI - Reserve bank of India) தனது பத்திர மாற்றுத் திட்டத்தை மீண்டும் கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- இந்தியாவின் டிவிஸ்ட் நடவடிக்கையாக என்றறியப்படும் இது நிதி மாற்றம் செய்தலுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 10,000 கோடி ரூபாய்க்காக திறந்தவெளிச் சந்தை நடவடிக்கைகளின் கீழ் (OMO - open market operations) அரசாங்கப் பத்திரங்களின் வாங்குதல் மற்றும் விற்றல் நடவடிக்கைகளை இதன்மூலம் மேற்கொள்ள இருப்பதாக RBI கூறியுள்ளது.
- "டிவிஸ்ட் நடவடிக்கை" என்பது OMOவின் மூலம் ஒரே நேரத்தில் RBIயின் குறுகிய காலப் பத்திரங்களை விற்றல் மற்றும் நீண்டகாலப் பத்திரங்களை வாங்குதல் தொடர்பான ஒரு நடவடிக்கையாகும்.

- இந்த நடைமுறையின் கீழ், குறுகிய காலப் பத்திரங்கள் நீண்ட காலப் பத்திரங்களாக மாற்றமடைகின்றன.
- RBI ஆனது OMO என்று அழைக்கப்படும் நிதியியல் கூறின்படி, அரசாங்கப் பத்திரங்களின் வாங்குதல் மற்றும் விற்றல் நடவடிக்கைகளின் மூலம் பணப் புழக்கம், ரூபாயின் மதிப்பு மற்றும் நிதியியல் மேலாண்மையைக் கட்டுப்படுத்தி, அவற்றை நிர்வகிக்கின்றது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## NIDHI (நிதி) திட்டம்

- கோவிட் – 19 தொற்றை எதிர்த்துப் போராடுவதற்காக மகாராஷ்டிர மாநில மருத்துவமனைகளினால் ஒரு புதிய தொழில்நுட்பமானது ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது புனேவில் உள்ள ஒரு ஸ்டார்ட் அப் அமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பொருளானது “சைடெக் ஏரோன்” (Scitech Airon) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது ஒரு எதிர் அயனி ஆக்கி (உற்பத்தி) ஆகும்.
- இந்தத் தொழில்நுட்பமானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் தொடங்கப்பட்டுள்ள நிதி பிரயாஸ் என்ற திட்டத்தின் கீழ் மேம்படுத்தப் பட்டுள்ளது.
- இந்த சைடெக் ஏரோன் அயனியாக்க இயந்திரமானது 8 வினாடிகளுக்கு ஏறத்தாழ 100 மில்லியன் (1 வினாடிக்கு 10 அயனிகள்) எதிர் மின்னூட்டம் பெற்ற அயனிகளை உற்பத்தி செய்கின்றது.
- இந்த அயனியாக்கத்தினால் உற்பத்தி செய்யப்படும் எதிர் மின்னூட்டம் பெற்ற அயனிகள் காற்றில் பரவும் துகள்கள், கொரானா அல்லது இன்புளூயன்சா வைரஸ், சிலந்தி ஒவ்வாமை, பாக்டீரியா, மகரந்தம், மாசுக்கள் போன்ற நுண்துகள்களைச் சுற்றி ஒரு தொகுப்பை உருவாக்குகின்றன.
- இந்த எதிர் மின்னூட்டம் பெற்ற அயனிகள் “ஹைட்ராக்ஸில் ரேடிக்கல்ஸ் மற்றும் எச் ஓ” என்று அழைக்கப்படும் ஒரு சிறப்பாக எதிர்வினையாற்றும் OH என்ற குழுவை உருவாக்குவதன் மூலம் நிகழும் இரசாயன எதிர்வினையின் மூலம் அவற்றிற்குச் செயல்படாத ஒரு தன்மையை வழங்குகின்றன.
- இவை ஒரு சிறந்த எதிர்வினையாற்றி ஆகும். இது வளிமண்டல தூய்மைப் பொருள் என்று அழைக்கப்படுகின்றது.
- அயனியாக்கியால் உற்பத்தி செய்யப்பட்ட இந்தத் தூய்மை செய்யும் பண்பானது ஒவ்வாமை, வைரஸ், பாக்டீரியா ஆகியவற்றின் வெளிப்புற புரதத்தை உடைக்க

உதவுகின்றது. இவை காற்றில் பரவும் நோயைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

- இது தொற்று நோய் மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய சுற்றுச்சூழல் காரணிகளிடமிருந்து உடலின் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.
- இந்த எதிர்ப்புச் சக்தியானது அயனி இல்லாத சூழ்நிலையில் அடுத்த 20 – 30 நாட்களுக்கு உதவியாக இருக்கக் கூடும்.
- மேலும் இது கார்பன் மோனாக்சைடு (கார்பன்-டை-ஆக்ஸைடை விட 1000 மடங்கு தீங்கு ஏற்படுத்தக் கூடியது), நைட்ரஜன் டை ஆக்ஸைடு, எளிதில் ஆவியாகின்ற கரிம வேதிப் பொருட்கள் போன்ற காற்று மாசுபாடுகளை போக்குகின்றது.
- இந்தத் தொழில்நுட்பமானது சுற்றுப்புறத்தில் உள்ள வைரஸ், பாக்டீரியா மற்றும் பூஞ்சைத் தொற்றுகளை கட்டுப்படுத்த உதவுகின்றது. இது காற்றைத் தூய்மையாக்கி, கோவிட் – 19 பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் அறிகுறி உள்ளவர்களின் வசிப்பிடப் பகுதிகளைத் தூய்மையாக்க உதவுகின்றது.

### *இது பற்றி*


- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது புத்தாக்கவியலாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்காக காப்பக மையங்களை அமைத்தல், நிதியைத் திரட்டுதல், செயல்படுத்துபவர்கள் மற்றும் கருத்தாக்கத்திற்கான ஆதாரம் ஆகியவற்றிற்கு நிதியளிக்கும் திட்டத்தின் கீழ் நிதி (NIDHI/National Initiative for Developing and Harnessing Innovations – புத்தாக்கங்களை மேம்படுத்துதல் மற்றும் திரட்டுதலுக்கான தேசிய முன்னெடுப்பு) என்ற திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.
- NIDHI திட்டத்தின் கீழ், பிரயாஸ் (PRAYAS/Promoting and Accelerating Young and Aspiring innovators & Startupsஇளம் மற்றும் ஆர்வமுள்ள புத்தாக்காக்கவியலாளர்கள் மற்றும் ஸ்டார்ட் அப்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்) என்ற திட்டமானது தொடங்கப் பட்டுள்ளது.




## சூரிய ரேடியோ அலை குறுக்கீட்டுமானி விண்வெளிச் சோதனை (SUNRISE Sun Radio Interferometer Space Experiment) திட்டம்

- சூரியன் எவ்வாறு மிகப்பெரிய சூரிய ஒளி நுண்துகள் காற்றை (சூறாவளி) ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வு செய்வதற்காக "SUNRISE" (சன்ரைஸ்) என்ற ஒரு திட்டத்தை நாசா அறிவித்துள்ளது.
- சூரிய ஒளிச் சூறாவளியை ஆய்வு செய்யும் இந்தத் திட்டமானது சூரியக் குடும்பத்தின் செயல்பாடுகளைப் புரிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது சூரியன் எவ்வாறு "சூரிய ஒளித் துகள் சூறாவளி" என்று அழைக்கப் படும் சூரிய ஒளிக் காற்றை உருவாக்கி அதை கோள்களைக் கொண்ட விண்வெளியில் எவ்வாறு வெளியிடுகின்றது என்பதை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆய்வானது வருங்காலத்தில் செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்லும் விண்வெளி வீரர்களுக்கு அவர்களை சூரிய ஒளிச் சூறாவளியிலிருந்துப் பாதுகாக்க உதவ இருக்கின்றது..
- இது சூரியனின் நிறமாலையை ஆய்வு செய்ய இருக்கின்றது.
- அயனி மண்டலத்தின் காரணமாக புவியிலிருந்து சூரிய நிறமாலையை ஆய்வு செய்ய முடியாததால் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகின்றது.
- இது ஒரு மிகப்பெரிய ரேடியோ அலைத் தொலைநோக்கியாகச் செயல்படும் ஆறு கூயுப்சாட் என்ற ஒரு செயற்கைக் கோள்களின் தொகுப்பைக் கொண்டுள்ளது.



## கோவிட் – 19 வைரஸ் போன்ற தோற்றத்தைக் கொண்ட 3 துணை இனங்கள்

- நாட்டில் கோவிட் – 19 என்ற வைரஸ் போன்ற தோற்றத்தைக் கொண்ட 3 துணை வைரஸ் இனங்கள் உலவி வருவதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR - Indian Council of Medical Research) அறிவித்துள்ளது.
- இந்தக் கழகத்தின் படி, இவை வெளிநாட்டிலிருந்துப் பரவி வந்த வைரஸ் வகைகளாகும்.
- இந்தியாவில், கோவிட் – 19 வைரஸ் தொற்றானது வெளிநாட்டிற்குப் பயணம் செய்த (வெளிநாட்டிலிருந்து வந்த) மக்களிடமிருந்து வந்துள்ளது.
- எனவே, இந்த வைரஸ் இந்தியாவிற்கு வெளியே இருந்து கொண்டு வரப் பட்டதாகும்.
- இதுவரை, உலகின் மற்ற பகுதிகளில் இந்த வைரஸ் எவ்வாறு செயல்படுகிறது என்பது பற்றிய ஒரு அறிவியல் பூர்வச் சான்று எதுவும் இல்லை.
- இருப்பினும், நாட்டின் உள் மற்றும் வெளிக் காரணிகள், உயிரியல் காரணங்கள் மற்றும் நாட்டில் உள்ள மக்கள் ஆகிய காரணிகளின் காரணமாக இந்த வைரசானது அதன் வெவ்வேறு வடிவங்களை உருவாக்கியுள்ளது என்பதை ICMR உறுதி செய்துள்ளது.

## பிராணா திட்டம்


- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்கள் பிராணா என்ற திட்டத்தின் கீழ் உள்நாட்டு சுவாசக் கருவிகளை மேம்படுத்தியுள்ளனர்.
- இந்த சுவாசக் கருவிகள் தானியங்கி வாகனத் தொழிற்துறையில் பெரிதும் பயன்பாடு கொண்ட அழுத்த உணர்விகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப் பட்டுள்ளன.
- இந்த சுவாசக் கருவிகள் ஆக்ஸிஜனை அழுத்தப்பட்ட வாயுவுடன் கலக்கின்றது.
- சமீபத்தில் இந்தியக் கப்பல் கட்டும் நிறுவன அமைப்பானது தனது பல பயன்பாட்டு ஆக்ஸிஜன் அமைப்பு (MOM - Multi-feed Oxygen Manifold) கொண்ட சுவாசக் கருவிகளை ஆந்திர அரசிற்கு வழங்கியுள்ளது.
- MOM சுவாசக் கருவியானது எடுத்துச் செல்ல கூடியதாகவும் ஒரே நேரத்தில் 6 நோயாளிகளுக்குப் பயன் தரும் திறன் கொண்டதாகவும் உள்ளது.

## லான்செட் தொற்று நோய்கள் அறிக்கை

- கரோனா நோய்க்கானத் தொற்று அறிகுறிகள் தெரிந்த பின்பு இறப்பு வரையிலான காலகட்டம் 18 நாட்கள் எனவும் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் காலம் 25 நாட்கள் எனவும் லான்செட் தொற்று நோய்கள் ஆய்வு கணித்துள்ளது.
- கோவிட் – 19 தொற்றிற்கான இறப்பு விகிதமானது சமீபத்தில் ஏற்பட்ட இன்புளுயன்சா (2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட எச்1என்1 இன்புளுயன்சா) தொற்றின் இறப்பு விகிதத்தை விட அதிகமாக உள்ளது.

## GRACE-FO திட்டம்

- அமெரிக்காவின் தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (நாசா) மற்றும் நெப்ராஸ்கா-லிங்கன் பல்கலைக்கழகம் ஆகியோரால் ஒரு புதிய செயற்கைக்கோள் அடிப்படையிலான, மண்ணின் ஈரப்பதம் மற்றும் நிலத்தடி நீர் ஈரப்பத நிலைகளைக் காட்டும் வாராந்திர உலகளாவிய வரைபடங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.
- புவி ஈர்ப்பு விசை மீட்பு மற்றும் காலநிலை பரிசோதனை பின்தொடர்தல் (The Gravity Recovery and Climate Experiment Follow-on/GRACE-FO) என்ற திட்டமானது நாசா மற்றும் ஜெர்மனியின் புவியியலுக்கான ஆராய்ச்சி மையம் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சித் திட்டமாகும்.
- இது பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் ஈர்ப்பு விசையின் மாறுபாடுகளை அளவிடுகின்றது. மேலும் இது ஒவ்வொரு 30 நாட்களுக்கும் ஈர்ப்புப் புலத்தின் ஒரு புதிய வரைபடத்தை உருவாக்குகின்றது.



## கரோனா கவாச் செயலி

- ❖ புவியிடங்காட்டி மூலம் ஒரு கோவிட் -19 நோயாளியின் இருப்பிடத்தை இடம் காண இந்திய அரசானது கரோனா கவாச் என்ற ஒரு செயலியை அறிமுகப் படுத்தி உள்ளது.
- ❖ இது ஒவ்வொரு மணி நேரமும் ஒரு பயனாளரின் இருப்பிடம் பற்றிய தரவைக் கண்காணிக்கின்றது.
- ❖ ஒருவேளை ஒரு கரோனா நோயாளியை அவர் கடந்திருந்தால் அது அவரை எச்சரிக்கிறது.
- ❖ இச்செயலியை மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் இணைந்து உருவாக்கியுள்ளது.
- ❖ மேலும் ஆயுஷ் அமைச்சகம் "கபசுர சூரணத்தை" ஒரு தடுப்பு மருந்தாக பரிந்துரை செய்துள்ளது.




## தானியங்கி வென்டிலேட்டர்கள்

- ❖ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் விப்ரோ 3D அமைப்பு ஆகிய இரண்டும் இணைந்து தானியங்கி சுவாசக் கருவிகளின் (வென்டிலேட்டர்கள்) முன்மாதிரிகளை உருவாக்க உள்ளன.
- ❖ கோவிட் -19 நெருக்கடியின் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்ய இந்த வென்டிலேட்டர்கள் உதவும்.
- ❖ வென்டிலேட்டர்கள் கையால் இயக்கப்படும் செயற்கையான சுவாசக் கருவிகள் (AMBU - Artificial Manual Breathing Unit) என்று அழைக்கப் படுகின்றது.
- ❖ சுவாசிக்காத அல்லது சுவாசிப்பதில் தீவிர சிரமங்களை எதிர்கொள்ளும் நோயாளிகளுக்கு கையால் பிடித்து இயக்கக் கூடிய இந்தச் சாதனமானது, தானியங்கி முறையில் அழுத்தப்பட்ட சுவாசத்தை வழங்கும்.
- ❖ AMBU ஒரு கையடக்கச் சாதனமானதால், இரயில் பெட்டிகளில் அமைக்கப்பட்ட தற்காலிக மருத்துவப் படுக்கைகளுக்கு ஏற்றதாக அது இருக்கும்.
- ❖ மேலும் இது அழுத்தத்தைத் தக்க வைக்க நேர்மறையான வெளிசுவாச அழுத்தத்தை (PEEP - positive end expiratory pressure) அதில் ஒரு கூடுதல் அங்கமாகச் சேர்த்துள்ளது.

## உயிரி அங்கி (Bio - Suit)

- COVID-19 நோயை எதிர்த்துப் பணிபுரியும் மருத்துவ நிபுணர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது ஒரு உயிரி அங்கியை உருவாக்கியுள்ளது.
- இந்த அங்கியானது செயற்கை இரத்தத்திற்கு ஏதுவாக இருக்கும்படியான உடல் அங்கிகளின் பாதுகாப்பிற்கு என்று சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் நிர்ணயித்த அளவுகோல்களைப் பூர்த்தி செய்கின்றது.
- இந்தச் செயற்கையாக தயாரிக்கப்பட்ட இரத்தமானது, பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியை 48 மணி நேரம் வரை அவசரச் சிகிச்சை நிலையில் உயிரோடு வைத்திருக்க உதவும்.
- செயற்கை இரத்தம் பெர்ஃப்ளூரோ கார்பன்களிலிருந்து (Perfluorocarbons) தயாரிக்கப் படுகிறது.

## குறைந்த விலை வெப்பநிலை வீச்சுப் பொறி

- மும்பை கப்பல் கட்டும் நிறுவனமானது குறைந்த விலை கொண்ட ஒரு அகச் சிவப்பு (Infra Red) அடிப்படையிலான வெப்பநிலை உணரியை வடிவமைத்து உள்ளது.
- நிறுவனத்தின் முற்றத்தில் இருக்கும் வாயில்களில் நுழையும் பணியாளர்களைச் சோதிக்க இந்த உணரி பயன்படுத்தப்பட உள்ளது.
- இந்த கருவியானது ரூபாய் ஆயிரத்திற்கும் குறைவான விலையில் தயாரிக்கப் பட்டுள்ளது.

### *வேலை செய்யும் பொறிமுறை*

- இந்த வெப்பநிலை வீச்சுப் பொறியின் துல்லிமை (accuracy) 0.2 டிகிரி செல்சியஸ் ஆகும்
- இந்த வெப்பநிலை வீச்சுப் பொறியானது ஒரு இருமுனைய ஒளி உமிழ்வுப் பலகையையும் ஒரு அகச்சிவப்பு உணர்வியையும் கொண்டு உள்ளது.
- அகச்சிவப்பு வெப்பமானியானது அகச்சிவப்பு ஒளியை குவிக்க ஒரு ஒளிவில்லையைப் பயன்படுத்துகிறது.
- இது கரும்பொருள் கதிர்வீச்சு என்ற கோட்பாட்டின் படி செயல்படுகிறது.
- 0 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெப்பநிலையில் உள்ள எந்தவொரு பொருளும் அதில் தன்னைச் சுற்றி நகரும் மூலக்கூறுகளைக் கொண்டு இருக்கும்.
- வெப்பநிலையின் அதிகரிப்பிற்கேற்ப இந்த மூலக்கூறுகளின் வேகம் அதிகரிக்கும்.
- இவ்வாறு நகரும்போது, இந்த மூலக்கூறுகள் அகச்சிவப்புக் கதிர்களை வெளியிடுகின்றன.
- அகச்சிவப்பு வெப்பமானியில் உள்ள கண்டறிவி (Detector) ஒரு வெப்பப் பொருளில் (Hot body) இருந்து வரும் அகச்சிவப்புக் கதிர்களைக் குவிக்கிறது.
- கதிர்கள் அதிகமாக இருந்தால், அந்தக் கண்டறிவி அதிக மின்னோட்டத்தை உருவாக்குகிறது.
- மின்னோட்டம் அதிகமாக இருந்தால் பொருளின் வெப்பநிலையும் அதிகமாக இருக்கும்.

## கோவிட் – 19 சுகாதாரப் பிரச்சினைக்கான விரிவான போர் மையம் (CAWACH)

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது (Department of Science & Technology - DST) உலகளாவிய நோய்த் தொற்றான கோவிட் – 19ற்கு எதிர்வினையாற்றும்

விதமாக CAWACH (Centre for Augmenting WAR with COVID-19 Health Crisis) என்ற ஒரு மையத்திற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.

- DSTயினால் ஆதரிக்கப்படும் பம்பாய் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ள தொழில்நுட்ப வணிகக் காப்பகமான "புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவிற்கானச் சமூகமானது" (SINE - Society for Innovation and Entrepreneurship) CAWACH என்ற மையத்தைச் செயல்படுத்தும் நிறுவனமாகும்.
- CAWACH ஆனது கோவிட் – 19 தொற்றுநோயிற்கான சவால்களைக் களையும் புத்தாக்கங்கள் மற்றும் புத்தாக்க (ஸ்டார்ட் –அப்) நிறுவனங்களை ஆராய்ந்து, மதிப்பீடு செய்து ஆதரிக்கின்றது.

## கோரோப்ளு

- பாரத் பயோடெக் என்ற நிறுவனமானது விஸ்கான்சின் மற்றும் மேடிசன் ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த நச்சுயிரியியல் வல்லுநர்களுடன் இணைந்து கோவிட் – 19 தொற்றிற்காக "கோரோப்ளு" என்ற ஒரு புதிய மருந்தை மேம்படுத்திச் சோதனை செய்து வருகின்றது.
- இந்த மருந்தானது M2SR என்ற மருந்தை முக்கியக் கூறாகக் கொண்டு மேம்படுத்தப்பட இருக்கின்றது.
- M2SR தடுப்பு மருந்தானது காய்ச்சலிற்கு எதிராகப் பயன்படுத்தப் படுகின்றது.
- M2SR என்பது இன்பளுயன்சா வைரஸின் தன்னைத் தானே கட்டுப்படுத்தும் ஒரு பதிப்பாகும்.
- இந்த மருந்தானது நாசி வழியாக செலுத்தப் படுகின்றது.




## ஜுவன் (JEEVAN)

- இது பஞ்சாபின் கபூர்தலாவில் உள்ள இரயில்பெட்டித் தொழிற்சாலையினால் தயாரிக்கப்பட்ட ஆற்றல் திறனுள்ள, குறைந்த செலவு கொண்ட ஒரு செயற்கை சுவாசக் கருவியாகும்.
- இந்த உபகரணத்தின் மதிப்பானது அசல் உபகரண மதிப்பின் விகிதத்தில் மிகவும் குறைந்த ஒரு விகிதத்தைக் கொண்டதாகும்.
- இந்தச் சுவாசக் கருவியானது இந்தக் கருவியின் முக்கியப் பகுதியாகக் கருதப்படும் ஒரு காற்று கொள்கலனைக் கொண்டுள்ளது.
- இந்த உபகரணம் முழுவதும் அமைதியாகச் செயல்படும் திறன் கொண்டதாகும்.

- இது இணைப்புச் செயல்முறை, செர்வோ இயந்திரம் மற்றும் பிஸ்டன் செயல்முறை ஆகியவற்றைக் கொண்டிருக்கவில்லை.
- இந்த வடிவமானது நுண்செயலியை அடிப்படையாகக் கொண்டதாகும். இது ஜெர்மன் நாட்டு வடிவமைப்பினைக் கொண்ட லிங்கே ஹாப்மேன் ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் இந்தியாவின் முன்னணி நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.

## காசநோய் சாதனங்கள்

- காசநோய் சாதனங்களை கோவிட் – 19 சோதனைகளுக்குப் பயன்படுத்த இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR - Indian Council of Medical Research) ஒப்புதல் வழங்கியுள்ளது.
- தற்பொழுது, இந்தியா அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுப் பரிந்துரைக்கப்பட்ட, நிகழ்நேர நொதித் தொடர் வினையை (RT-PCR - Real Time-Polymerase Chain Reaction) பயன்படுத்துகின்றது.
- இதனுடன், ICMR ஆனது ட்ரூநெட் என்ற சோதனையைப் பயன்படுத்தப் பரிந்துரை செய்துள்ளது."
- "ட்ரூநெட் சோதனையானது" தற்பொழுது மருந்து எதிர்ப்பு காசநோயைக் கண்டறியப் பயன்படுத்தப்படுகின்றது.
- "ட்ரூநெட்" என்பது மின்கலத்தினால் இயங்கும் ஒரு சாதனமாகும்.
- இந்தச் சாதனமானது சில்லுத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இது ஒரு சோதனைக்குக் குறைந்தபட்சம் 60 நிமிடங்கள் வரை எடுத்துக் கொள்ளும்.
- தற்பொழுது இந்தியாவில் 800 ட்ரூநெட் சாதனங்கள் உள்ளன.
- இதில் 457 சாதனங்கள் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளன.
- தற்பொழுது, இந்தியா இந்தச் சாதனங்களை இறக்குமதி செய்கின்றது. இந்தச் சாதனங்கள் இந்தியாவில் தயாரிக்கப் படுவதில்லை.



## ஐவர்மெக்டின்

- ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் சார்ஸ் – கோவ்2 வைரஸைக் கொல்லும் ஒரு பொது ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தான "ஐவர்மெக்டின்" என்ற ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியாளர் குழுவானது ஆஸ்திரேலியாவில் உள்ள மோனாஸ் பல்கலைக்கழகத்தின் உயிரிமருந்து கண்டுபிடிப்பு நிறுவனம் மற்றும் பீட்டர் டோரத்தி

தொற்றுநோய் மற்றும் நோய் எதிர்ப்பு நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு உருவாக்கப் பட்டதாகும்.

- இது ஒரு ஒட்டுண்ணி எதிர்ப்பு மருந்தாகும். இது எச்ஐவி, டெங்கு, இன்புளூயன்சா மற்றும் ஜிகா வைரஸ் போன்ற வைரஸ்களுக்கு எதிராகவும் செயல்படும் திறன் கொண்டதாகும்.
- இது தற்பொழுது உருளைப்புழுக்களால் ஏற்படும் ஒரு ஒட்டுண்ணி நோயான ஸ்ட்ரான்கிலாய்டியாஸிஸ் என்ற நோய்க்குச் சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.
- இது வைரஸ் எதிர்ப்பு ஆராய்ச்சி என்ற பத்திரிக்கையில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.
- இது முதன்முதலில் 1975 ஆம் ஆண்டு மேம்படுத்தப்பட்டு, 1981 ஆம் ஆண்டில் மருத்துவப் பயன்பாட்டிற்கு வந்தது.
- இது உலகச் சுகாதார அமைப்பின் அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் உள்ளது.

## முதலாவது வீட்டுச் சோதனை

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது கோவிட் – 19 வீட்டுச் சோதனைச் சாதனத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இது பையோன் என்ற ஒரு ஸ்டார்ட்-அப் நிறுவனத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளதாகும்.
- இந்த உபகரணமானது சேகரித்து வைத்த இரத்தத்தை ஆய்வு செய்து, அந்த ஆய்வு முடிவுகளை 5 முதல் 10 நிமிடங்களுக்குள் அளிக்கும்.

## தனிமைப்படுத்துதலுக்கான வழிகாட்டுதல்கள்

- இதை மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை வழங்கியுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்களின்படி, தனிமைப்படுத்துதல் என்பது தனிமைப்படுத்தப் படுவதாகவும் நடமாட்டத்தைத் தடை செய்வதாகவும் உள்ளது.
- இது தனிநபர்கள் அல்லது ஒரு குழுவினருக்குப் பொருந்தக் கூடியதாக உள்ளது.
- இவர்கள் 14 நாட்களுக்குத் தனிமைப்படுத்தப் படுவர். அதன் பிறகு இறுதிச் சோதனை செய்யப்பட்ட பிறகே இவர்கள் அதிலிருந்து விடுவிக்கப் படுவர்.
- சேகரிப்புத் தளத்தில் (சோதனை) பயன்படுத்தப்படும் உயிரி மருந்துக் கழிவுகள் 1% ஹைப்போ-குளோரைட் திரவத்தைக் கொண்டு அகற்றப்பட வேண்டும்.

## கோவிட் – 19 தொற்று நோய்க்கு ஆதரவாக தளவாடத் தொழிற்சாலைகள்

- நாடு முழுவதும் உள்ள பாதுகாப்புப் பொருட்கள் உற்பத்தியை நிர்வகிக்கும் தளவாடத் தொழிற்சாலை வாரியமானது தனிமைப்படுத்துதல் அறைகளை அமைப்பதற்காக “மாற்றியமைக்கப்பட்ட கூடாரங்களை” அமைக்க இருக்கின்றது.
- “மாற்றியமைக்கப்பட்ட கூடாரங்கள்” என்ற கருத்தாக்கமானது கான்பூரில் உள்ள தளவாடப் பொருட்கள் தொழிற்சாலையினால் கொண்டு வரப்பட்டதாகும்.
- இந்தக் கூடாரமானது பாலி விஸ்காஸ் (மரக்கூழ்) எனும் ஒன்றினால் செய்யப் பட்டதாகும். இது நீர் புகாத தன்மை கொண்டதாகவும் விளங்குகின்றது.
- தளவாடத் தொழிற்சாலைகள் கை காப்பான் திரவங்களைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றன.

- தமிழ்நாட்டின் அரவங்காட்டில் உள்ள தளவாடத் தொழிற்சாலையானது கை காப்பான் திரவங்களை உற்பத்தி செய்து வழங்கியுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் இட்டார்சியில் உள்ள தளவாடத் தொழிற்சாலை மற்றும் மகாராஷ்டிராவின் பாந்த்ராவில் உள்ள தளவாடத் தொழிற்சாலை ஆகியவை தினசரியாக கை காப்பான் திரவங்களை வழங்குகின்றன.



## இந்தியாவில் கோவிட் – 19 சோதனை உபகரணங்கள்

- கோவிட் – 19 சோதனை உபகரணங்களை இந்தியாவில் உள்ள அரசு மற்றும் தனியார் சோதனை ஆய்வகங்களுக்கு வழங்குவதற்கு வேண்டி இந்திய நிறுவனமான மைலேப் மற்றும் ஜெர்மனைச் சேர்ந்த நிறுவனமான அல்டோனா டைனாஸ்டிக்ஸ் ஆகிய இரண்டு தனியார் நிறுவனத்திற்கும் மத்திய அரசு சமீபத்தில் அனுமதி வழங்கியுள்ளது.
- சீஜீன் (Seegene) மற்றும் எஸ்டி பயோ சென்சார் (SD Biosensor) ஆகிய இரண்டு தென்கொரிய நிறுவனங்களும் ஆர்டி-பிசிஆர் என்ற முறையினை அடிப்படையாகக் கொண்ட கரோனா வைரஸ் நோய் கண்டறிதல் உபகரணங்களை இந்தியாவில் வழங்குவதற்காக மத்திய அரசிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளன.

### *செயல்முறை*

- ஆர்டி-பிசிஆர் (RT-PCR/ Reverse transcription polymerase chain reaction) என்பது நிகழ்நேர தலைகீழ் குறிமுறைப் பல்படிம நொதித் தொடர்வினை என்பதைக் குறிக்கிறது.
- இது பல்படிம நொதித் தொடர் வினையைப் பயன்படுத்துவதன் மூலம் ஆர்என்ஏவின் தலைகீழ் குறிமுறையை டிஎன்ஏ உடன் ஒன்றிணைக்கும் ஒரு ஆய்வகத் தொழில்நுட்பமாகும்.
- இது உயிரணுவில் உள்ள குறிப்பிட்ட ஆர்என்ஏவின் எண்ணிக்கையை அளவிடப் பயன்படுத்தப் படுகின்றது.
- வைரசின் ஆர்என்ஏக்களை அளவிடும் இந்தத் தொழில்நுட்பமானது வைரஸ் திரள்களை அடையாளம் காணும் மிகவும் பொதுவான முறைகளில் ஒன்றாகும்.

### *மற்ற நிறுவனங்கள்*

- கோவிட் – 19 நோய்க் கண்டறிதலுக்காக 12 விரைவு நோய் எதிர்ப்புச் சோதனை உபகரணங்களுக்கும் மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நோய் எதிர்ப்பு விரைவுச் சோதனையின் பயன் என்னவெனில் சோதனையின் முடிவுகள் 30 நிமிடங்களுக்குள் கிடைக்கப் பெற்று விடும்.
- நோய்த் தொற்று ஏற்பட்டு 7 முதல் 10 நாட்களுக்குப் பின் இந்தச் சோதனையானது நோய்த் தொற்றைக் காண்பிக்கும்.

- இந்தச் சோதனையின் போது முடிவு நேர்மறையாக வருவது கோவிட் – 19 தொற்று இருப்பதை உறுதி செய்தாலும், முடிவு எதிர்மறையாக வருவது நோய்த் தொற்று இல்லை என்பதை உறுதி செய்யாது.

### *பயோடெக் நிறுவனம்*

- மத்தியப் பிரதேசத்தின் போபாலில் உள்ள பயோடெக் நிறுவனமானது கோவிட் – 19 சோதனை உபகரணத்தைத் தயாரிக்கும் இரண்டாவது இந்திய நிறுவனமாகும்.
- இது RT-PCR முறையிலான சோதனைக் கருவிகளை உற்பத்தி செய்ய இருக்கின்றது.
- இந்த நிறுவனம் இதற்கு முன்பு பன்றிக் காய்ச்சல் என்று பொதுவாக அழைக்கப்படும் H1N1 என்ற மற்றொரு நோய்த் தொற்றிற்காக இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சோதனை முறையை அறிமுகப் படுத்தியது.
- தனது கோவிட் – 19 நோய்க் கண்டறிதல் சோதனைக்காக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு, மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பிடமிருந்து (CDSCO/ Central Drugs Standard Control Organization) வணிக ரீதியிலான ஒப்புதலைப் பெற்ற முதலாவது இந்திய நிறுவனம் மைலேப் டிஸ்கவரி சொல்யூசன்ஸ் ஆகும்.
- “மைலேப் பேத்தோ டிடெக்ட் கோவிட் – 19 தர PCR சாதனம்” என்ற பெயர் கொண்ட இந்தச் சாதனமானது 6 வார காலத்தில் உருவாக்கப்பட்டதாகும்.
- இந்தத் திட்டமானது மைலேப் நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைத் தலைவரான “மினால் தகவே போன்ஸ்லே” அவர்களால் தலைமை தாங்கப் பட்டதாகும்.

## நமஸ்தே (NAMASTE) தளம்

- இது மத்திய ஆயுஷ் துறை அமைச்சகத்தினால் உருவாக்கப் பட்டதாகும்.
- ஆயுர்வேதம், யோகா & இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி என்பதே ஆயுஷ் என்பதின் விரிவாக்கமாகும்.
- சமீபத்தில், இந்த அமைச்சகமானது ஆயுர்வேதம் மற்றும் தரப்படுத்தப்பட்ட ஆயுர்வேத சொல்லாக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நோய்களின் விரிவான வகைப்பாடான தேசிய ஆயுர்வேத நோயுற்ற அளவு குறிகள் (NAMC - National Ayurveda Morbidity Codes) என்ற ஒன்றை உருவாக்கியுள்ளது.
- தேசிய ஆயுஷ் நோயுற்ற அளவு மற்றும் தரப்படுத்தப்பட்ட சொல்லாக்கல் மின்னணு தளமானது (NAMASTE Portal) 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதியன்று (2வது ஆயுர்வேத தினம்) தொடங்கப்பட்டது.
- தேசிய ஆயுர்வேத தினமானது ஒவ்வொரு ஆண்டும் தன்வந்திரி ஜெயந்தியின் போது அனுசரிக்கப் படுகின்றது.

## நுண்ணுயிரிகள் எதிர்ப்புப் பூச்சு

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி நிறுவனமான ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையமானது ஒரே சீரான குணப்படுத்தக் கூடிய நுண்ணுயிரிகள் எதிர்ப்புப் பூச்சு என்ற ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.
- இந்தப் பூச்சானது இன்புளுயன்சா வைரஸை முற்றிலும் கொல்லும் திறன் கொண்டதாகவும் மெத்திலிசின் எதிர்ப்பு ஸ்டேபைலோகாக்கஸ் அருஸ், ப்ளுகனோசோல் எதிர்ப்பு காண்டிடா அல்பிகன்ஸ் வகை மற்றும் கரோனா வைரஸ் – 2 உள்ளிட்ட பாக்டீரியா மற்றும் பூஞ்சை (நோய் உண்டாக்கும்) ஆகியவற்றைக்

கொல்லும் எதிர்ப்புத் திறன் கொண்டதாகவும் உள்ளது.

- ❖ இதை ஜவுளிகள், நெகிழிகள் போன்ற மேற்பரப்பிற்குள் வைக்க அல்லது பொருத்த முடியும்.
- ❖ இந்தப் பூச்சு பூசப்பட்ட மேற்பரப்பின் மீது நுண்ணுயிரிகள் செயல்பட இந்தப் பூச்சு அனுமதிக்காது என்ற காரணத்தினால் இது தனித்துவம் மிக்கதாக விளங்குகின்றது.
- ❖ இந்தப் பூச்சானது அதனுடன் தொடர்பு ஏற்பட்ட 30 நிமிடங்களுக்குள் நுண்ணுயிரிகளைக் கொன்று விடும்.
- ❖ இந்தப் பூச்சானது நெகிழிகள், ஜவுளிகள், பிவிசி, பாலிஸ்டிரின் மற்றும் பாலியூரேத்தேன் போன்ற பல்வேறு கரையக் கூடிய கரைசல் கொண்ட தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்தப் பட்டதாகும்.
- ❖ கோவிட் – 19 தொற்று திடீர்ப் பெருக்கத்தின் போது, இந்தப் பூச்சானது சுகாதாரப் பணியாளர்களின் தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள், உடைகள் மற்றும் சாதனங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

## இன்புளூயன்சா தொடர்பான அனைத்துத் தரவுகளையும் பகிர்தல் குறித்த உலகளாவிய முன்னெப்பு

- ❖ இன்புளூயன்சா தொடர்பான அனைத்துத் தரவுகளையும் பகிர்தல் குறித்த உலகளாவிய முன்னெடுப்புடன் (GISAID - Global Initiative on Sharing All Influenza Data) கரோனா வைரஸின் 9 முழுவதுமான மரபணுத் தொடர்களையும் இந்தியா பகிர்ந்துள்ளது.
- ❖ இது புனேவில் உள்ள தேசிய நச்சுயிரியல் நிறுவனத்தினால் பகிரப் பட்டதாகும்.
- ❖ மார்ச் மாதத்தின் ஆரம்பத்தில், கரோனா வைரஸ் அல்லது கோவிட் – 19ன் மரபணுவைத் தொடராக்கம் செய்த உலகின் 5வது நாடாக இந்தியா உருவெடுத்து உள்ளது.
- ❖ இதில் 621 என்ற அளவில் அமெரிக்கா அதிக எண்ணிகையைப் பகிர்ந்து உள்ளது. அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு (350), பெல்ஜியம் (253), மற்றும் சீனா (242) ஆகியன உள்ளன.
- ❖ உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம் (Centre for Cellular and Molecular Biology), அறிவியல்சார் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகம் (Council of Scientific and Industrial Research) மற்றும் மரபியல் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் நிறுவனம் (Institute of Genomics and Integrative Biology) ஆகியவை கோவிட் – 19ன் மரபணு வரிசை முறையாக்கலில் பணியாற்றுகின்றன.
- ❖ மரபணு வரிசை முறையாக்கம் என்பது டிஎன்ஏ அல்லது ஆர்என்ஏ ஆகியவற்றிற்குள் காணப்படும் மரபணுத் தகவல்களை படிக்க மற்றும் விளக்கமளிக்க நமக்கு உதவும் ஒரு தொழில்நுட்பமாகும்.
- ❖ இது வைரஸின் பரிணாமம் குறித்து அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப் படுகின்றது.
- ❖ சார்ஸ் கோவிட் வைரசை மரபணு வரிசை முறையாக்கம் செய்வது கீழ்க்கண்ட பலன்களை அளிக்கும்
    - ○ வைரஸ் எங்கிருந்து வந்தது?
    - ○ இந்தியாவில் வித்தியாசமான வகைகள் பரவுகின்றனவா?
    - ○ எவ்வாறு வைரஸ் பரவுகின்றது?

- GISAID என்பது பல்வேறு நாடுகளுக்காக மரபணு வரிசை முறை குறித்து பகிர்ந்து கொள்வதற்காக 2008 ஆம் ஆண்டில் உலகச் சுகாதார அமைப்பினால் தொடங்கப்பட்ட ஒரு பொதுத் தளமாகும்.
- 2010 ஆம் ஆண்டில் GISAID தளத்தை அதிகாரப் பூர்வமாக ஏற்படுத்திய நாடு ஜெர்மனியக் கூட்டாட்சிக் குடியரசு ஆகும்.

## மூன்று வகையான சுகாதார நல வசதிகள்

- நாட்டின் கோவிட் – 19 நோய்த் தொற்றின் பாதிப்புகளைக் கையாளுவதற்காக மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நல அமைப்புகள் வகைப்படுத்தப் பட்டுள்ளதாக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- ஒருவர் சமூகப் விலகல் வழிகாட்டுதல்களை மிகக் கடுமையாகப் பின்பற்றவில்லையெனில் அவர் 3 நாட்களில் 406 மக்களுக்கு நோய்த் தொற்றை ஏற்படுத்துவார் என்று இந்த அமைச்சகம் அறிவித்துள்ளது.
- நாட்டில் 3 வகையான கோவிட் – 19 சுகாதார நல மையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.
- இந்த 3 வகைகள் பின்வருமாறு:
    - கோவிட் நல மையம்
    - பிரத்தியேக கோவிட் சுகாதார மையம்
    - பிரத்தியேக கோவிட் மருத்துவமனை

### *கோவிட் நல மையம்*

- இந்த மையமானது மிகவும் குறைவான பாதிப்புக்கு உள்ளானவர்களைக் கையாள இருக்கின்றது.
- இவை விடுதிகள், அரங்குகள், பள்ளிகள், தங்கும் விடுதிகள் போன்றவையாகக் கூட இருக்கலாம்.

### *பிரத்தியேக கோவிட் சுகாதார நல மையம்*

- இந்த மையங்கள் மிதமான பாதிப்பிற்கு உள்ளான நபர்களைக் கையாள இருக்கின்றது.
- இந்த மையங்கள் அதன் அனைத்துப் படுக்கைகளிலும் கண்டிப்பாக ஆக்ஸிஜன் உபகரணத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
- மேலும், இந்த மையங்கள் போதுமான ஆக்ஸிஜன் உபகரணத்துடன் பிரத்தியேக அவசர கால ஊர்தியைக் கொண்டிருக்க வேண்டும்.

### *பிரத்தியேக கோவிட் மருத்துமனை*


- இந்த மருத்துவமனை "மிகவும் கடுமையான" பாதிப்பிற்கு உள்ளான நபர்களைக் கையாளுகின்றது.
- இவை முற்றிலும் மருத்துவமனையாகவோ அல்லது மருத்துவமனையின் ஒரு பகுதியாகவோ இருக்கலாம்.
- தனியார் மருத்துவமனைகளும் இந்த வகையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- இந்த மருத்துவமனைகள் தீவிர சிகிச்சைப்பிரிவு, ஆக்ஸிஜன் உபகரணத்துடன் கூடிய படுக்கை வசதி மற்றும் சுவாச உபகரணங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

## கோவிட் – 19 தொற்றிற்காக நாசி வழியாக செலுத்தப்படும் அரைத் திண்மக் கரைசல் (Gel)

- உயிரி அறிவியல் & உயிரிப் பொறியியல் துறை மற்றும் மதராசில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை இணைந்து நாசி வழியாக செலுத்தப் படும் அரைத் திண்மக் கரைசலை உருவாக்கியுள்ளன. இது கோவிட் – 19 வைரசை செயலிழக்கச் செய்கின்றன.
- இந்தத் தொழில்நுட்பத்திற்கான நிதியுதவியானது மத்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் கீழ் செயல்படும் ஒரு சட்டப்பூர்வ அமைப்பான அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியத்தினால் (SERB - Science and Engineering Research Board) வழங்கப் படுகின்றது.
- இந்த ஒற்றை அணுகுமுறையின் கீழ், ஓர் உயிரணுவிலிருந்து மற்றொரு உயிரணுவிற்கு இந்த வைரஸ் செல்வதைத் தடுப்பதற்காக ஒரு காரணச் செயல்பாடு கொண்ட ஒரு கூறானது உருவாக்கப் படுகின்றது.
- மற்றொரு அணுகுமுறை வைரஸ்களைப் பிடித்து வைத்துக் கொள்வதன் மூலம் வைரஸ்களை செயலிழக்கச் செய்வதாகும்.

## nCoVSENSE தொகுதி

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆனது கோவிட் – 19 சோதனை உபகரணத்தை மேம்படுத்துவதற்காக சுகாதார நல புத்தாக்க (ஸ்டார்ட் அப்) நிறுவனமான புத்தாக்க தொகுதிகள் என்ற நிறுவனத்திற்கு நிதியுதவி அளித்து உள்ளது.
- இந்தச் சோதனை உபகரணத்தின் முக்கிய நோக்கம் சோதனையை மிக விரைவாக 10 முதல் 15 நிமிடங்களுக்குள் மேற்கொள்வதாகும்.
- இந்த சாதனமானது மனித உடலில் கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கு எதிராக உற்பத்தி செய்யப்பட்ட நோய் எதிர்ப்புச் சக்திகளுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு சோதனையாகும்.
- மனித உடலானது நோய் எதிர்ப்புப் புரதம் ஜி மற்றும் நோய் எதிர்ப்புப் புரதம் எம் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது. இங்கு வைரஸ் ஆனது தனது தொற்றைத் தொடங்குகின்றது.
- இந்த நோய் எதிர்ப்புச் சக்திகள் வைரஸின் முள் புரதங்களுக்கு (spike proteins) எதிராக தாக்குதலை தொடங்குகின்றன.
- கோவிட் – 19 நோய்த் தொற்றின் தற்போதைய சோதனை முறையான நிகழ்நேர தலைகீழ் பல்படிமத் தொடர் வினைச் சோதனைக்கு அதிகப்படியான மனித ஆற்றல் தேவைப்படுகின்றது. இச்சோதனையானது அதிக காலம் எடுத்துக் கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.



## சுவச்தா செயலி

- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது சுவச்தா செயலியின் ஒரு திருத்தப்பட்ட பதிப்பை வெளியிட்டுள்ளது.
- இது சுவச் பாரத் (தூய்மை இந்தியா) திட்டத்தின் குறைகளைக் களைவதற்காக ஒரு தனிப்பட்ட குறைதீர் அமைப்பைக் கொண்டுள்ளது.


## பெருந்திரள் உற்பத்தித் தொழில்நுட்பங்கள்

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கழகமானது பெருந்திரள் உற்பத்தித் தொழில்நுட்பங்களை (மென்பொருள் மற்றும் வன்பொருள்) மேம்படுத்துவதற்காக பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- இந்தத் தொழில்நுட்பங்கள் மருத்துவ சாதனங்கள் உற்பத்தியின் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தத் தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்ட பின்னர் அவை நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்பட இருக்கின்றன.
- இந்தக் கூட்டிணைவானது தனது சமீபத்திய இரண்டு கண்டுபிடிப்புகளின் மூலம் கோவிட் – 19 தொற்றைத் தடுக்க உதவுகின்றது.
- இவை டிஜிட்டல் அகச்சிவப்பு (ஐஆர்) வெப்பமானி மற்றும் ஆக்ஸிஜன் செறிவூட்டல் அலகு ஆகும்.

## பிளாஸ்மா சிகிச்சை

- மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கும் கோவிட் - 19 நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக அவர்களது நலத்தினை மீட்கும் வகையில் பிளாஸ்மா சிகிச்சையை மேற்கொள்ள, 'மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கும் கோவிட் - 19 நோயாளிகளுக்கு' ஒரு மருத்துவச் சோதனை நெறிமுறையை நிர்வகிக்க இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவானது ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த பிளாஸ்மா சிகிச்சையின் சோதனைக்கு கேரள மாநிலமானது ஒப்புதல் பெற்றுள்ளது.
- கேரளாவில் உள்ள புகழ்பெற்ற ஸ்ரீ சித்ரா திருநாள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் தொடங்கிய இந்த முதல் வகையான திட்டத்திற்காக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவானது அதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தச் சிகிச்சையை நிர்வகிப்பதற்கு முன்னர் மருந்துகள் கட்டுப்பாட்டு ஆணையத்தின் ஒப்புதல் மற்றும் நிறுவன நெறிமுறைக் குழுவின் ஒப்புதல் ஆகியவற்றை அது பெற்றிருக்க வேண்டும்.
- இந்தச் சிகிச்சையானது வைரஸ் தொற்றிலிருந்து மீண்ட ஒரு நபரின் இரத்தத்திலிருந்து எதிர்மங்களை (Antibody) சேகரித்துக் கொள்கிறது.
- இந்த எதிர்மங்கள் அதே வைரஸால் பாதிக்கப்பட்ட மற்றொருவருக்கு செலுத்தப் படுகிறது.
- பி-லிம்போசைட்டுகள் எனப்படும் நோயெதிர்ப்பு உயிரணுக்களால் சுரக்கப்படும் இந்த எதிர்மங்கள், பிளாஸ்மா அல்லது இரத்தத்தின் திரவப் பகுதியில் காணப்படுகின்றன. இவை தேவைப்படும் போது இரத்தம் உறைவதற்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்துவதற்கும் உதவுகிறது.
- ஒருவர் வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவுடன், அவர் உருவாக்கிய எதிர்மங்கள், அதே வைரஸ் திரும்பி வந்தால் அதனோடு எதிர்த்துப் போராட அவரது இரத்தத்தில் காத்திருக்கும்.

- இந்த நோயால் பாதிக்கப்பட்ட மற்றொருவருக்கு இது செலுத்தப்படும் போது, அந்த உடலில் இருக்கும் வைரஸை தாக்க வேண்டிய ஒன்றாக இது அதனைக் கண்டுணர்கிறது.
- எதிர்மங்கள் வைரஸின் வெளிப்புறத்தில் உள்ள கூர்முனைகளைத் தாக்கி, அவ்வைரஸ் மனித உயிரணுக்களுக்குள் ஊடுருவாமல் தடுக்கின்றன என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.
- நலம் மீட்கும் பிளாஸ்மா சிகிச்சையானது செயலற்ற எதிர்மச் சிகிச்சை என்றும் அழைக்கப் படுகிறது. அதாவது ஒருவருக்கு வைரஸை எதிர்த்துப் போராடுவதற்கு எதிர்மங்களை உடனடியாக வழங்க முடியும் என்றாலும், அந்த எதிர்மங்கள் அதைப் பெறுபவரின் உடலில் குறுகிய காலத்திற்கு மட்டுமே நீடிக்கும்.




## ஹைட்ராக்ஸி குளோரோகுயின்

- இந்த மருந்து மீதான ஏற்றுமதி தடையை நீக்க இந்தியா ஒப்புக் கொண்டுள்ள நிலையில் அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் டிரம்ப், கரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் இதை ஒரு "கேம் சேஞ்சர்" அல்லது மிக முக்கிய திருப்புமுனை என்று குறிப்பிட்டுள்ளார்.
- உலகில் ஹைட்ராக்ஸி குளோரோகுயினின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களுள் இந்தியாவும் ஒன்றாகும்.
- பழமையான மற்றும் நன்கு அறியப்பட்ட மலேரியா எதிர்ப்பு மருந்துகளில் ஒன்றான குளோரோகுயினுடன் இது மிகவும் ஒத்திருக்கிறது.
- தற்போது பல தசாப்தங்களாக அதிகம் நாடப்படும் ஒரு மலேரியா எதிர்ப்பு மருந்தான இந்த 'குளோரோகுயின் பாஸ்பேட்' மருந்தை இந்தியாவில் தயாரிக்கும் ஒரே பொதுத்துறை நிறுவனமாக வங்காள வேதிம மற்றும் மருந்துகள் நிறுவனமானது (BCPL - Bengal Chemicals and Pharmaceuticals Limited) உருவெடுத்துள்ளது.
- வங்காள வேதிம மற்றும் மருந்துகள் நிறுவனமானது 1901 ஆம் ஆண்டில் ஆச்சார்யா பிரபுல்லா சந்திர ரே அவர்களால் நிறுவப்பட்டது.
- இதுவே இந்தியாவின் முதல் மருந்து உற்பத்தி நிறுவனமாகும்.
- பிரபுல்லா சந்திர ரே "இந்திய வேதியியலின் தந்தை" என்று அழைக்கப் படுகிறார்.

## தொலைதூரத்தில் இருந்து நோயாளியைக் கண்காணிக்கும் சுகாதாரக் கண்காணிப்பு அமைப்பு

- சமீபத்தில் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் மற்றும் ரிஷிகேஷில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் ஆகியவை இணைந்து தொலைதூரத்தில் இருந்து நோயாளியைக் கண்காணிக்கும் சுகாதாரக் கண்காணிப்பு அமைப்பை உருவாக்கி உள்ளன.
- இந்த அமைப்பானது கோவிட் – 19 தொற்றின் காரணமாக தனிமைப்படுத்துதலில் உள்ள நோயாளிகளைக் கையாளும் சுகாதார நலப் பணியாளர்களுக்கு இருக்கும் ஆபத்தைக் குறைப்பதற்காக நோயாளியின் வீடுகள் அல்லது மருத்துவமனைகளில் பொருத்தப்பட இருக்கின்றது.
- இந்த அமைப்பானது தனிநபர் பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின் அதிகரித்து வரும் தேவையைக் குறைக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.

## செயல்பாடு கொண்ட வைரோசோம் தடுப்பு மருந்து உற்பத்தி

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது கோவிட்-19 தொற்று நோய்க்காக செயல்பாடு கொண்ட வைரோசோம் தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக் கண்டறிதல் உபகரணங்களை மேம்படுத்துவதற்காக சீகல் பயோ சொல்யூசன்ஸ் என்ற நிறுவனத்திற்கு நிதியுதவி அளிக்க இருக்கின்றது.
- இந்த வைரோசோம் என்பது யுனிலாமெல்லர் பாஸ்போலிபிடு சவ்வை (unilamellar phospholipid membrane) கொண்ட ஒரு மருந்தாகும்.
- இந்த சவ்வானது இலக்காகக் கொண்ட செல்களுடன் இணைய மருந்தை அனுமதிக்கின்றது.

## வோர்மிபெட்

- இந்திய தேசியப் புத்தாக்க அமைப்பானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வோர்மிவெட் (Wormiret) என்ற ஒரு மூலிகை மருந்தைத் தயாரித்துள்ளது.
- இது தற்பொழுது புழுக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் இரசாயன முறைகளுக்கு மாற்றாக விளங்குகின்றது.
- இது கால்நடைகளில் உள்ள உடலக ஒட்டுண்ணிப் புழுக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காகப் பயன்படுத்தப் படுகின்றது.
- தேசியப் புத்தாக்க அமைப்பானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படுகின்றது.
- இது கடைமட்ட நிலையிலான புத்தாக்கக் கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவு அளிப்பதற்காகப் பணியாற்றுகின்றது.



## குறைந்த செலவு கொண்ட PPE

- கான்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமானது குறைந்த செலவு கொண்ட தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தை (personal protective equipment) உருவாக்கி உள்ளது.
- இதை ரூ.100 ரூபாய்க்குக் கீழே உற்பத்தி செய்ய முடியும்.
- இது பொதிகட்டுதல் மற்றும் நெகிழிப் பைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பாலித்தீனின் மெல்லிய உருளைகளை அடிப்படையாகக் கொண்ட உபகரணத்தை வடிவமைத்துள்ளது.

## திறன்மிகு (SMART) இதயத் துடிப்பளவி

- பம்பாய் – இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு ஆராய்ச்சியாளர் குழுவானது "டிஜிட்டல் இதயத் துடிப்பளவியை" உருவாக்கியுள்ளது.
- இது தொலைதூரத்திலிருந்து நோயாளியின் இதயத் துடிப்பைக் கண்டறிந்து அவற்றைப் பதிவு செய்து கொள்ளும். இதன் மூலம் கொரானா வைரஸ் பாதித்துள்ள நோயாளியிடமிருந்து சுகாதாரப் பணியாளர்களுக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைக்க முடியும்.
- இது பம்பாய் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப வணிக மையத்திலிருந்து "ஆயுடிவைஸ்" (AyuDevice) என்ற ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- இந்தப் பொருளானது ரிலையன்ஸ் மருத்துவமனை மற்றும் PD இந்துஜா மருத்துவமனை ஆகியவற்றைச் சேர்ந்த மருத்துவர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று வடிவமைக்கப் பட்டுள்ளது.


## நோய்வாய்ப் பட்டவர்களைக் (தொடர்பில் இருந்தவர்களை) கண்காணித்தல்

- உலகளாவியத் தொழில்நுட்ப நிறுவனங்களான ஆப்பிள் மற்றும் கூகுள் ஆகியவை கொரானா வைரஸ் நோய்த் தொற்றை கையாளுவதற்கு வேண்டி அரசாங்கங்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு உதவுவதற்காக நோய்வாய்ப் பட்டவர்களைக் கண்காணித்தல் என்ற தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக இணைந்துள்ளதாக அறிவித்துள்ளன.
- உலகச் சுகாதார அமைப்பானது நோய்வாய்ப் பட்டவர்களைக் கண்காணித்தல் என்பதனை சமூகப் பரவலைத் தடுப்பதற்காக நோய்வாய்ப் பட்டவர்களைக் அடையாளம் கண்டு, ஆய்வு செய்து, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் ஒரு செயல்முறை என்று வரையறை செய்து உள்ளது.

## ஆதி காலத்தில் இருந்து இருக்கின்ற கருந்துளை (PBH)

- ஆதி காலத்தில் இருந்து இருக்கின்ற கருந்துளை (PBH - Primordial Black Hole) குறித்த ஒரு சமீபத்திய ஆய்வானது, குறைந்த அளவிலான உள்ளூர ஆற்றலின் அதிகரிப்பானது பல்வேறு PBHகளின் உருவாக்கத்திற்கு வழி வகுத்துள்ளது என்பதையும் PBH ஆனது மிகவும் வலிமையான ஈர்ப்பு அலைகளை வெளியிட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளது.
- PBH ஆனது பெருவெடிப்புக் காலக்கட்டத்தின் போது உருவானதாகும்.
- PBH ஆனது 3000 கிலோ மீட்டர்கள் அளவு மிகப் பெரியதாகவோ அல்லது ஒரு அணுவின் உட்கருவைப் போன்று மிகச் சிறியதாகவோ உள்ளது.

- மிகப்பெரிய நட்சத்திரங்கள் மோதிக் கொள்வதனால் இவை உருவாகி விடும் என்பதற்கு மாறாக, பிற எந்தவொரு கருந்துளைகளைப் போன்றே இவையும் கதிர்வீச்சுகள் ஒன்றோடொன்று கலந்ததன் விளைவாக உருவாகியுள்ளது என்று நம்பப் படுகின்றது.
- பிரபஞ்சம் வேகமாக விரிவடைந்து கொண்டிருந்த சமயத்தின் போது பிரபஞ்சத்தின் உள்ளூர ஆற்றல் நிலையில் ஏற்பட்ட சிறிய மோதலின் விளைவாக PBHகள் ஆனவை உருவாக்கப் பட்டன.
- பெருவெடிப்பிற்குப் பிறகு பிரபஞ்சமானது தனது அசல் அளவை விட 10^27 மடங்கு என்ற அளவில் விரிவடைந்துள்ளது.
- இது அண்ட விரிவடைந்த நிலை நிறைவு பெற்ற பிறகான 1 வினாடிக்குள் நிகழ்கின்றது.
- இதன் பிறகு, ஈர்ப்பு விசையினால் கொள்ளப் பட்டுள்ள மீதியுள்ள ஆற்றலானது புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் மற்றும் இதர துகள்களைத் தவிர போட்டான்களாகவும் (எடை குறைந்த) மாற்றம் பெறுகின்றன.
- அண்ட விரிவடை நிலையின் போது பிரபஞ்சம் அதிவேகமாக விரிவடைந்துக் கொண்டிருக்கும் சமயத்தில், இது சிறிய குவாண்டம் அதிர்வுகளுக்கிடையே செலுத்தப் படுகின்றது.
- ஒரு குறிப்பிட்ட முறையில் வெளியிடப் படுகின்ற இந்த அதிர்வுகள் விண்மீன் திரள்கள் மற்றும் நட்சத்திரங்களை மெதுவாக அதே சமயம் கூடுமானவரை மிகப்பெரிய அளவில் உருவாக்குகின்றன. எனவே ஆற்றலில் வெகுவாக அதிகரிப்பு ஏற்படுகின்றது.
- அவைகளில் குறிப்பிடத்தக்க அளவில் மிகப்பெரியதாக உள்ளவை PBHகள் உருவாக உதவுகின்றன.
- ஆற்றல் அதிகரிப்பானது பின்பு மிகவும் வலிமையான ஈர்ப்பு அலைகளைத் தவிர PBHகளையும் உருவாக்குகின்றது.



## ரெம்டெஸ்விர் மருந்து

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது "ரெம்டெஸ்விர்" என்ற வைரஸ் எதிர்ப்பு மருந்தானது கோவிட் – 19 வைரஸ் பெருக்கத்தைத் தடுப்பதில் அதிகத் திறனுடன் செயல்படுகின்றது என்று கூறியுள்ளது.
- "ரெம்டெஸ்விர்" என்ற மருந்தின் திறன் குறித்த ஆராய்ச்சியானது உலகச் சுகாதார அமைப்பின் "பொறுப்புமிக்க சோதனையின்" ஒரு பகுதியாகும்.
- இந்த மருந்து "எபோலா வைரஸிற்கு" எதிராகப் பயன்படுத்தப்பட்டது.

## ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறை கொண்ட சோதனையைத் தொடங்கிய முதலாவது மாநிலம்

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது (ICMR - Indian Council of Medical Research) ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறை கொண்ட கோவிட் – 19 சோதனையைத் தொடங்க உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு அனுமதி வழங்கி உள்ளது.
- இதன்மூலம் ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறைச் சோதனையைத் தொடங்கும் மாநிலமாக உத்தரப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
- சோதனையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மாநிலத்தில் ஒற்றை முறை அதிக அளவு கொண்ட குழு முறையிலான சோதனையானது (Pool testing) நடத்தப் படுகின்றது
- ஒற்றை முறை அதிக அளவு குழு கொண்ட முறைச் சோதனையின் கீழ், மாதிரிகள் ஒன்றுடன் ஒன்றாகக் கலக்கப்பட்டுச் சோதனை செய்யப்பட இருக்கின்றன.
- ஒற்றை முறை அதிக அளவு கொண்ட குழு முறைச் சோதனை வழிமுறையானது பல்வேறு தனிப்பட்ட நோயாளிகளின் ஒரு குறிப்பிட்ட மாதிரியின் கலவையைக் கொண்டு பல்படிம நொதி தொடர் வினைச் சோதனை முறையில் ஈடுபடுகின்றது.
- இதில் குழு முறைச் சோதனை நேர்மறையாக இருந்தால் மட்டும் தனிநபர் சோதனை மேற்கொள்ளப் படுகின்றது.
- சோதனை எதிர்மறையாக உள்ள அனைத்துத் தனிநபர் மாதிரிகளும் எதிர்மறையாகக் கருதப் படுகின்றன. குழு முறைச் சோதனையானது எதிர்மறையாக இருந்தால் மேற்கண்ட நடவடிக்கையின் மூலம் பணமானது சேமிக்கப் படுகின்றது.

### *ஒற்றை முறை அதிக அளவு குழு முறைச் சோதனைக்கான தேவை*

- இது நோயாளிகளைச் சோதனையிடுவதற்கான மற்றும் அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மொத்தச் சோதனை உபகரணங்களின் தேவைகளைக் குறைக்கின்றது.
- இது மாநிலத்தின் சோதனைத் திறனை அதிகரிக்கின்றது.
- இது குறிப்பாக குறைவான வளங்களைக் கொண்ட நாடுகளுக்குச் செலவு குறைந்ததாக உள்ளது.
- இது நோயின் சமூகப் பரவலைத் தடுக்கப் பயன்படுத்தப் படுகின்றது.



## விரைவு நோய் எதிர்ப்புப் பொருள் சோதனை

- ❖ விரைவு நோய் எதிர்ப்புப் பொருள் சோதனையானது கண்டிப்பாக கண்காணிப்புப் சோதனையாகப் பயன்படுத்தப்படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.
- ❖ சமீபத்தில் இந்தியா சீனாவிலிருந்து 5 இலட்சம் விரைவு நோய் எதிர்ப்புப் பொருள் சோதனை உபகரணங்களை இறக்குமதி செய்துள்ளது.
- ❖ இந்தியா கோவிட் – 19 நோய்த் தொற்றை கண்டறிவதற்காக டிஎன்ஏவை அடிப்படையாகக் கொண்ட தலைகீழ் குறிமுறையாக்க பல்படிம நொதித் தொடர் வினைச் (Reverse transcription polymerase chain reaction) சோதனையைத் தொடர்ந்து மேற்கொள்கின்றது.
- ❖ இது தொண்டைச் சளியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் படுகின்றது.
- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின்படி (ICMR - Indian Council of Medical Research), இன்புளுயன்சா போன்ற அறிகுறிகள் மற்றும் சளி ஒழுகுதல் & தொண்டை வலி உள்ள நோயாளிகள் தலைகீழ் குறிமுறையாக்க பல்படிம நொதி தொடர் வினைச் சோதனையைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும்.
- ❖ இச்சோதனையின் முடிவானது எதிர்மறையாக இருப்பின், அவர்கள் 7 நாட்களுக்குப் பின் நோய் எதிர்ப்புப் பொருள் சோதனையை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ள ஒருவர் மீது அடுத்த 8 நாட்களுக்குப் பின் அவரது உடலில் உருவாகியுள்ள நோய் எதிர்ப்புப் பொருளைக் கண்டறிவதற்காக இந்தச் சோதனையானது மேற்கொள்ளப் படுகின்றது.

## COVSACK

- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது கோவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளிடமிருந்து மாதிரிகளைப் பெற COVSACK என்ற அமைப்பை உருவாக்கி உள்ளது.
- ❖ COVSACK என்பது கோவிட்-19 மாதிரிச் சேகரிப்பு கியோஸ்க் (மையம்) ஆகும்.
- ❖ அரசுத் தொழிலாளர் காப்பீட்டுக் கழகத்தின் மருத்துவர்களோடு கலந்தாய்வு செய்த பின் COVSACK ஆனது உருவாக்கப் பட்டுள்ளது.
- ❖ இதன் ஒட்டு மொத்த தொற்று நீக்கச் செயல்பாட்டில் மனித ஈடுபாடு துளியளவும் இல்லை.



- மேலும், இந்த அறையானது தண்ணீர் மற்றும் புற ஊதா ஒளியால் சுத்தப்படுத்தப் படுகிறது.
- எனவே இது பயன்படுத்தப் படுவதற்கு ஒரு பாதுகாப்பான அமைப்பு முறையாக அமைந்து உள்ளது.

## SCTIMST தயாரித்த சோதனைக் கருவி

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கல்வி நிறுவனமான ஸ்ரீ சித்திரத் திருநாள் மருத்துவ அறிவியல் நிறுவனம் (SCTIMST - Sree Chitra Tirunal Institute for Medical Science) ஒரு நோயறிதல் கருவியை உருவாக்கி உள்ளது.
- தலைகீழ் குறிமுறையாக்க பல்படிம நொதித் தொடர்வினை (Reverse transcription polymerase chain reaction) சோதனைக் கருவிகள் ஒரு சோதனை செய்ய எடுக்கும் நேரத்தில் பாதியைக் கொண்டே இது மாதிரிகளை ஆய்வு செய்கிறது.
- இந்தச் சோதனைக் கருவியானது வைரஸின் N மரபணுவை அடையாளம் காண RT-LAMP (Reverse Transcriptase Loop Mediated Isothermal Amplification technique) எனும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- இதன் விரைவுத்தன்மை, எளிமை, உணர்திறன் மற்றும் தனித்துவத்தின் மூலம், இந்தத் தொழில்நுட்பம் தலைகீழ் குறிமுறையாக்க பல்படிம நொதித் தொடர்வினை சோதனைக் கருவிகளுக்குப் பதிலாக பயன்படுத்தப்பட இருக்கின்றது.

## விரைவு நோய் எதிர்ப்பொருள் சோதனை

- இந்தியா, சீனாவிலிருந்து ரைபோ நியூக்ளிக் அமிலத்தை (Ribo Nucleic Acid) பிரித்தெடுக்கும் கருவிகளையும் நோய் எதிர்ப்பொருள் சோதனைக் கருவிகளையும் வாங்குகிறது.
- இந்தியா சீனாவிலிருந்து தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களையும் (Personal Protective Equipment) இறக்குமதி செய்ய உள்ளது.
- விரைவு நோய் எதிர்ப்பொருள் சோதனையானது பல்படிம நொதி தொடர்வினைச் சோதனையை விடவும் விரைவானதாகும்.
- இது சோதனை முடிவுகளை 15 முதல் 30 நிமிடங்களில் வழங்குகிறது.
- இது ஒரு நபரின் விரலில் குத்துவதற்கு என்று ஓர் அறுவைக் கத்தியைப் பயன்படுத்துகிறது. மேலும் அவரின் நோய் எதிர்ப்பொருள்களைப் பரிசோதிக்க அவரின் இரத்தத்தைச் சேகரிக்கிறது
- இச்சோதனை எம்-எதிர்ப்புப் புரதங்கள் (IgM - Immunoglobulin M) மற்றும் ஜி-எதிர்ப்புப் புரதங்களைச் (IgG - Immunoglobulin G) சரிபார்க்கிறது.

## டிஜிட்டல் மற்றும் மூலக்கூறுக் கண்காணிப்பு

- மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனமானது (CDRI - Central Drug Research Institute) பல்வேறு நோயாளிகளிடமிருந்துப் பெறப்பட்ட கோவிட் – 19 வைரஸ் மாதிரிகளின் திரிபு வரிசைகளை முறைப்படுத்துவதற்காக கிங் ஜார்ஜ் மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- இது “டிஜிட்டல் மற்றும் மூலக்கூறு கண்காணிப்பு” என்பதின் கீழ் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

- தற்பொழுது மூலக்கூறுக் கண்காணிப்பானது எச்ஐவி மருந்து சோதனை, உணவு மூலம் பரவும் தொற்று நோய்கள் மற்றும் காசநோய் ஆகியவற்றில் பயன்படுத்தப் பட்டு வருகின்றது.
- CDRI ஆனது கோவிட் – 19ஐ எதிர்த்துப் போராடுவதற்காக மருந்துகளின் மறுபயன்பாடு குறித்துச் செயல்பட்டு வருகின்றது.
- மருந்துகளின் மறுபயன்பாடு என்பது புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக இந்த வைரஸிற்குத் தீர்வுகளைக் கண்டறிவதற்கான ஒரு விரைவான வழியாகும்.
- மருந்துகளின் மறுபயன்பாடு என்பது சிகிச்சைப் பயன்பாடுகளுக்கு உதவாத தற்பொழுதுள்ள மருந்துகள் குறித்து ஆய்வு செய்யும் ஓர் உத்தியாகும்.



## சிஎஸ்ஐஆர் – மொத்த மேலங்கி

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றத்தின் (CSIR - Council of Scientific and Industrial Research) கீழ் இயங்கும் தேசிய வான்வெளி ஆய்வகமானது ஒரு சுய பாதுகாப்பு கொண்ட மேலங்கியை உருவாக்கியுள்ளது.
- இந்த அங்கியானது பாலிபுரெப்பிலீன் கொண்டு நூற்கப்பட்ட பல அடுக்கு உடைய ஒரு நெய்யப்படாத துணியைக் கொண்டு உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்த அங்கியின் முக்கியமான பயன் என்னவெனில் இறக்குமதி செய்யப்பட்ட மற்ற அங்கிகளுடன் ஒப்பிடப்படும் பொழுது இது விலை குறைந்ததாக உள்ளது.

## கோவிட் – 19னின் 3 புதிய மாற்றங்கள்

- குஜராத் உயிரித் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் (GBRC - Gujarat Biotechnology Research Centre) கோவிட் – 19 வைரஸின் 3 புதிய மாற்றங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இதன் மூலம், கோவிட் – 19னின் முழு மரபணுவையும் குறிமுறையாக்கம் செய்த நாட்டின் முதலாவது அரசு ஆய்வகமாக GBRC உருவெடுத்துள்ளது.
- மரபணுக் குறிமுறையாக்கம் என்பது ஓர் உயிரினத்தில் உள்ள மரபணுவின் டிஎன்ஏ வரிசைமுறையைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும்.


## புதிய வெளிக்கோள்

- ❖ நாசாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு குழுவானது "கெப்ளர் – 1649சி" என்ற ஒரு வெளிக் கோளைக் கண்டுபிடித்துள்ளது.
- ❖ இது, தனது நட்சத்திரத்தின் (கெப்ளர் சிவப்புக் குள்ள நட்சத்திரம் – 1649) வாழ்விட (உயிர் வாழத் தகுந்த) மண்டலத்தைச் சுற்றி வருகின்றது.
- ❖ உயிர் வாழத் தகுந்த மண்டலம் என்பது திரவ நீருக்குச் சாதகமாகவுள்ள ஒரு செந்நிறக் கோளின் ஒரு நட்சத்திரத்தைச் சுற்றியுள்ள பகுதியாகும்.
- ❖ இது பூமியிலிருந்து 300 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- ❖ இது அளவு மற்றும் மதிப்பிடப்பட்ட வெப்பநிலை ஆகியவற்றில் பெரும்பாலும் பூமியைப் போன்றே உள்ளது.
- ❖ இந்தப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உலகமானது நமது பூமியை விட 1.06 மடங்கு மட்டுமே பெரியதாகும்.
- ❖ மேலும், அதன் சொந்த நட்சத்திரத்திலிருந்து அது பெறும் நட்சத்திர ஒளியின் அளவானது சூரியனிலிருந்து பூமி பெறும் ஒளியில் 75 சதவிகிதம் ஆகும்.
- ❖ இது அந்த வெளிக் கோளின் வெப்பநிலையானது நமது கோளினைப் போன்றே இருப்பதைக் குறிக்கின்றது.
- ❖ ஆனால் பூமியைப் போல் அல்லாமல், அது ஒரு சிவப்புக் குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருகின்றது.




- ❖ கெப்ளர் – 1649Cன் ஒரு வருடமானது 19.5 புவி நாட்கள் மட்டுமே ஆகும்.
- ❖ இந்த வகை நட்சத்திரமானது நட்சத்திரம் சார்ந்த ஒளிக்காக அறியப் படுகின்றது. அந்த நிகழ்வானது கோளின் சுற்றுச்சூழலை உயிர்களின் எந்தவொரு சாத்தியமான வாழ்க்கைக்கும் ஒரு சவாலானதாக மாற்ற முயலலாம்.
- ❖ இது எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்பட இருக்கும் நட்சத்திரங்களிடையே காணப்படும் இரண்டாவது பூமியாக இருக்கும் என்று நம்பப் படுகின்றது.
- ❖ கெப்ளர் திட்டம் மற்றும் வெளிக்கோள்களை கண்டறிவதற்கான ஆய்வுச் செயற்கைக் கோள் திட்டம் போன்ற திட்டங்களால் சேகரிக்கப்பட்ட தரவானது அற்புதமான கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்படுவதைத் தொடரும்.
- ❖ அளவில் பூமிக்கு அருகிலுள்ள இதர வெளிக்கோள்கள் டிராப்பிஸ்ட் – 1F மற்றும் டீகார்டன் – சி (Teegarden c) ஆகியவை ஆகும்.
- ❖ வெப்பநிலையில் பூமிக்கு அருகிலுள்ள இதர வெளிக்கோள்கள் டிராப்பிஸ்ட் – 1d மற்றும் TOI 700d ஆகியவையாகும்.
- ❖ ஆனால் தனது வாழ்விட மண்டலத்தில் அமைந்துள்ள எந்தவொரு இதர வெளிக்கோளும் இந்த இரண்டு மதிப்புகளிலும் பூமிக்கு மிக அருகில் ஒத்து இருப்பதாகக் கண்டறியப் படவில்லை.
- ❖ கெப்ளர் விண்வெளித் தொலைநோக்கியானது வெளிக்கோள்களைக் கண்டறிவதற்காக நாசாவினால் செலுத்தப்பட்ட ஓர் காலாவதியான தொலை நோக்கியாகும்.

- ஜோகன்ஸ் கெப்ளர் என்ற வானியலாளரின் நினைவாக பெயரிடப்பட்ட இந்த விண்கலமானது பூமி கதிரவனை மையமாகக் கொண்ட சுற்றுவட்டப் பாதைக்குள் 2009 ஆம் ஆண்டில் செலுத்தப் பட்டது.
- நாசா இதன் ஓய்வை 2018 ஆம் ஆண்டில் அறிவித்தது.
- இது வாழ்விட மண்டலத்திற்கு உள்ளேயோ அல்லது அதன் அருகிலேயோ பூமி போன்ற இருக்கும் வெளிக் கோள்களைக் கண்டறிவதற்காக பால்வழி அண்டத்தின் பூமியின் ஒரு பகுதியை ஆய்வு செய்வதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.
- பால்வழி அண்டத்தில் எத்தனை மில்லியன் கணக்கான நட்சத்திரங்கள் இது போன்ற கோள்களைக் கொண்டிருக்கின்றன என்று மதிப்பிடப்பட இது செலுத்தப் பட்டது.




## TriboE முக உறை

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் ஒரு தன்னாட்சி நிறுவனமான பெங்களூருவில் உள்ள நானோ மற்றும் மென்பொருள் அறிவியலுக்கான மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் குழுவானது "TriboE முக உறை" என்று அழைக்கப்படும் முக உறையைத் தயாரிப்பதற்கான ஒரு செய்முறையை உருவாக்கியுள்ளது.
- இது ஆச்சரியப் படத்தக்க வகையில் எந்தவொரு வெளிப்புற ஆற்றலும் இல்லாமல் நோய்த் தொற்றின் நுழைவைத் தடுப்பதற்காக மின் அயனிகளை தாங்கிக் கொள்ளும் திறன் கொண்டது.
- இது மின்னியலைச் சார்ந்துள்ளது.
- இந்த டிரைபோ மின் விளைவானது ட்ரைபோ மின் அயனியாக்கம் என்று அழைக்கப் படுகின்றது.
- இது ஒரு பொருள் மற்றொரு பொருளுடன் தான் கொண்டிருந்த தொடர்பைப் பிரித்த பின்னர் அதன் சில பொருள்கள் மின்னூட்டம் பெற்றதாக மாற்றப் படும் வகையில் ஏற்படும் தொடர்பு மின்மயமாக்கலின் ஒரு வகையாகும்.



## கோவிட் 19 மருந்து – செப்சிவாவக்

- இந்தியாவின் மருந்துக் கட்டுப்பாட்டாளர் பொது அதிகாரி அலுவலகமானது (DCGI - Drugs Controller General of India) கோவிட் – 19 நோயாளிகளின் இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்காக இந்த மருந்தின் சோதனைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி நிறுவனத்துடன் (CSIR - Council of Scientific and Industrial Research) இணைந்து கேடிலா மருந்து நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்த மருந்தானது கிராம் எதிர்மறை பாக்டீரியச் சீழ்பிடிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள தீவிரத் தன்மையுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப் படுகின்றது.
- சீழ்பிடிப்புடன் கூடிய கிராம் எதிர்மறை பாக்டீரியா என்பது நுண்ணுயிரிகளால் ஏற்படும் ஒரு முறைப்படுத்தப்பட்ட நோயாகும்.
- கோவிட் – 19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் மற்றும் கிராம் எதிர்மறை பாக்டீரிய சீழ்பிடிப்பு நோயாளிகள் இருவரும் ஒத்தத் தன்மையுடையதாக உள்ளனர்.
- சீழ்பிடிப்பு என்பது உயிருக்கு ஆபத்தான ஒரு நிலையாகும்.
- இரத்த ஓட்டத்தில் உள்ள இரசாயனங்கள் சமநிலையற்றுப் போகும் போது, சீழ்பிடிப்பு ஏற்படுகின்றது.

## விண்வெளியில் லித்தியம்

- இந்திய வானியற்பியல் மையத்தின் (IIA - Indian Institute of Astrophysics) விஞ்ஞானிகள் குழு லித்தியம் நிறைந்த செம்பெரு வீண்மீன்களை (red giants) கண்டுபிடித்துள்ளது.
- இவை விண்மீனிடையில் இருக்கும் இடைவெளியில் (interstellar space) உள்ள லித்தியம் மற்றும் செம்பெரு வீண்மீன்களில் உள்ள லித்தியம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு தொடர்பை உருவாக்கியுள்ளது.
- லித்தியம் நிறைந்த ஹீலியம் வாயு கொண்ட எரியும் நட்சத்திரங்களுக்கும் செம்பெரு வீண்மீன்களுக்கும் இடையேயும் தொடர்பு உள்ளது.
- இந்த கண்டுபிடிப்பானது, லித்தியம் நட்சத்திரங்களில் உற்பத்தியாவதைக் குறிக்கிறது மற்றும் விண்மீனிடையில் இருக்கும் இடைவெளியில் லித்தியமானது ஏராளமாக இருப்பதையும் இது குறிக்கிறது.
- பேரண்டத்தில் தற்போது காணப்படும் லித்தியத்தின் அளவானது ஆதிகாலத்தில் இருந்த அளவை விட நான்கு மடங்கு அதிகம் என்று ஆய்வு கூறுகிறது.
- ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் தவிர, மொத்தமுள்ள மூன்று ஆதிகாலக் கூறுகளில் லித்தியமும் ஒன்றாகும். இது பெருவெடிப்பின் அண்ட அணுக்கருத் தொகுப்பின் (bigbang nucleosynthesis) போது உருவானது.
- பெருவெடிப்பின் அண்ட அணுக்கருத் தொகுப்பின் கோட்பாடுகளை உறுதி செய்ய இந்தப் பேரண்டத்தில் உள்ள லித்தியம் செறிவூட்டலின் ஆதாரங்களை அடையாளம் காண்பது ஆராய்ச்சியாளர்களுக்கு மிகுந்த ஆர்வமூட்டும் வகையில் இருக்கின்றது.
- பேரண்டமானது தோராயமாக 25% ஹீலியத்தைக் கொண்டுள்ளது என இக்கோட்பாடு கணித்துள்ளது.
- இந்திய வானியற்பியல் மையமானது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் வரும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.




## அயனிமண்டலத்தின் மின்னணு அடர்த்தி

- அயனிமண்டலத்தின் மின்னணு அடர்த்தியைக் கணிக்கும் ஒரு மாதிரியை இந்தியப் புவிக் காந்த நிறுவன ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- இது ஒரு செயற்கை நரம்புசார் வலைப் பின்னல் (ANN - Artificial Neural Networks) அடிப்படையிலான உலகளாவிய அயனிமண்டலத்தின் மாதிரியாகும்.
- செயற்கை நரம்புசார் வலைப் பின்னல்கள் மனித மூளையின் செயல்பாட்டைப் பிரதிபலிக்கின்றன.
- பூமியில் தொடர்பு மற்றும் வழிகாட்டுதலிற்கு இது மிகவும் முக்கியமானது.
- அயனிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைப் படிக்க இது மிகவும் உதவியாக இருக்கும்.
- சூரியனில் இருந்து தோன்றும் காந்த மேகங்களால் ஏற்படும் புவி காந்தப் புயல்களைப் பற்றியும் அறிய இது உதவுகிறது.
- பூமியின் காந்த மண்டலத்தில் உருவாகும் காந்தப் புயல்கள், சூரியக் காற்றினால் ஏற்படுகிறது.

## டிஆர்டிஓ.வின் நடமாடும் கோவிட் – 19 சோதனை ஆய்வகம்

- இந்த ஆய்வகத்தை மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தொடங்கி வைத்தார்.
- இந்த வசதியானது ஒரு நாளில் 1000 மாதிரிகளைச் சோதனை செய்யும் திறன் கொண்டது.
- நடமாடும் நச்சுயிரியியல் ஆராய்ச்சி மற்றும் நோய் கண்டறிதல் ஆய்வகமானது (MVRDL - Mobile Virology Research and Diagnostics Laboratory) ஹைதராபாத்தில் உள்ள ESIC (Employee State Insurance Corpration) எனப்படும் அரசு தொழிலாளர் காப்பீட்டுறுதிக் கழக மருத்துவமனையுடன் இணைந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் (DRDO – Defence Research and Development Organization) ஏற்படுத்தப் பட்டதாகும்.
- இந்த ஆய்வகமானது உயிரிப் பாதுகாப்பு நிலை 2 மற்றும் உயிரிப் பாதுகாப்பு நிலை 3 என்ற நிலைகளைக் கொண்டுள்ளது.




## சீனாவின் செவ்வாய்த் திட்டம்

- ❖ சீனத் தேசிய விண்வெளி நிர்வாகமானது (CNSA - Chinese National Space Administration) தனது முதலாவது செவ்வாய்த் திட்டத்திற்கு "டியான்வென் 1" என்று பெயரிட்டு உள்ளது.
- ❖ இந்த அறிவிப்பானது சீனாவால் 2016 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வரும் தேசிய விண்வெளி தினமான ஏப்ரல் 24 அன்று வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ 1970 ஆம் ஆண்டில் தனது முதலாவது செயற்கைக் கோளான "டோங்பாங்காங்" என்ற செயற்கைக்கோள் செலுத்தப்பட்டதைக் குறிப்பதற்காக தனது தேசிய விண்வெளி தினத்தை சீனா அனுசரிக்கின்றது.
- ❖ "டியான்வென்" என்றால் சொர்க்கலோகக் கேள்விகள் என்று பொருள்படும்.
- ❖ இதுவரை இந்தியா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை செவ்வாய்க்குச் செயற்கைக் கோள்களைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளன.
- ❖ ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றிற்குப் பின்பு செவ்வாய்க் கிரகத்தை அடைந்த உலகின் 4வது நாடு இந்தியா ஆகும்.
- ❖ இந்தியாவின் செவ்வாய்த் திட்டமானது "மங்கல்யான்" என்று பெயரிடப்பட்டு இருந்தது.
- ❖ இது 2013 ஆம் ஆண்டில் இஸ்ரோவினால் செலுத்தப்பட்டது.

## ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறை கொண்ட சோதனை – கட்டுப்பாடுகள்

- ❖ கோவிட் – 19 தொற்றுப் பரவல் 5%ற்கும் கீழ் உள்ள பகுதிகளில் மட்டுமே ஒற்றை முறையில் அதிக அளவிலான குழு முறை கொண்ட சோதனை நடத்தப்படும் (Pooled Testing) என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR - Indian Council of Medical Research) அறிவித்துள்ளது.
- ❖ மேலும் ICMR ஆனது இந்தச் சோதனை முறையில் 5 மாதிரிகளுக்கு மேல் ஒன்றாக கலக்கப்பட்டு மேற்கொள்ளப் படாது என்று அறிவித்துள்ளது.
- ❖ இந்தியாவில் இதுவரை Pooled Testing முறையானது அந்தமான் நிக்கோபர் தீவுகள், உத்தரப் பிரதேசம் மற்றும் ஹரியானாவில் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.
- ❖ Pooled Testing முறையை ஏற்றுக் கொண்ட முதலாவது ஒன்றியப் பிரதேசம் அந்தமான் நிக்கோபர் தீவாகும். இந்த முறையை ஏற்றுக் கொண்ட முதலாவது மாநிலம் உத்தரப் பிரதேசம் ஆகும்.
- ❖ இந்த முறையானது இஸ்ரேல் மற்றும் ஜெர்மனியில் வெற்றி பெற்றுள்ளது.

## ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலன்

- சமீபத்தில் தேசிய அனல் மின் கழகமானது 10 ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலப் பேருந்துகள் மற்றும் அதே போன்ற 10 மின்சார மகிழுந்துகள் ஆகியவற்றை வாங்குவதற்கான விருப்பக் கடிதங்களை வரவேற்றுள்ளது.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த இந்த வாகனங்கள் தில்லி மற்றும் லேஹ் நகரில் பயன்படுத்தப்பட இருக்கின்றன.
- இதே வகையைச் சேர்ந்த நாட்டின் முதலாவது திட்டம் இதுவாகும்.
- இது நாட்டில் கரிம நீக்கத்தை மேற்கொள்ளும் போக்குவரத்து முறையாக இருக்கின்றது.
- ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலமானது செறிவு மிக்க ஹைட்ரஜன் எரிபொருளை மின்சாரமாக மாற்ற வேதியியல் முறையைப் பயன்படுத்துகின்றது.
- இந்த எரிபொருள் மின்கலனின் முக்கியமான நன்மை, இவை அடிக்கடி மின்னேற்றப்பட வேண்டியதில்லை.
- இது எரிபொருள் இருக்கும் வரை மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது.
- அதிகத் திறன், குறைந்த – சுழிய உமிழ்வுகள், எரிபொருள் நெகிழ்வுத் தன்மை, அமைதியான செயல்பாடு, நீடித்தத் தன்மை மற்றும் ஆற்றல் (எரிபொருள்) பாதுகாப்பு ஆகியவை ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலனின் மிக முக்கியமான பயன்களாகும்.
- ஹைட்ரஜன் எரிபொருள் என்பது ஆக்ஸிஜனுடன் சேர்த்து எரிக்கப்படும் சுழிய உமிழ்வு கொண்ட எரிபொருளாகும்.
- இது எரிபொருள் மின்கலன்கள் மற்றும் உள்ளக எரிப்பு எஞ்சின்களில் பயன்படுத்தப் படுகின்றது.
- இது விண்வெளி இயந்திரத்தின் உந்து விசைக்கான எரிபொருளாகவும் பயன்படுத்தப் படுகின்றது.

## மூலிகை மூக்கடைப்பு நீக்கி தெளிப்பு

- அறிவியல்சார் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்றம் (CSIR - Council of Scientific and Industrial Research) – தேசியத் தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனம் (National Botanical Research Institute – NBRI) மூலிகை மூக்கடைப்பு நீக்கி தெளிப்பை வடிவமைத்துள்ளது.
- இந்தத் தெளிப்பானது, கோவிட் – 19 தொற்றைத் தடுப்பதற்காகவும் முகவுறைகளை அணிவதை எளிமைப் படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.
- NBRI என்பது தாவரவியல் ஆராய்ச்சிப் பணிகளின் மீது கவனத்தைச் செலுத்தும் லக்னோவில் உள்ள ஓர் ஆய்வகமாகும்.

## காற்றுப் பதனாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்

- மத்தியப் பொதுப் பணித் துறையானது கோவிட் – 19 நோய் தொற்றின் போது காற்றுப் பதனாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டு உள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள் சூடாக்கும், உறை பதனம் செய்யும் மற்றும் காற்றுப் பதனாக்கிப் பொறியாளர்களின் இந்தியச் சமூகத்தினால் (ISHRAE - Indian Society of Heating, Refrigerating and Air Conditioner Engineers) தயாரிக்கப் பட்டுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்களின் முக்கிய நோக்கம் காற்றுப் பதனாக்கிகளைப் பயன்படுத்துவதன் மூலம் கோவிட் – 19 நோய்த் தொற்றுப் பரவல் அதிகரிப்பதை தடுப்பதாகும்.

- சீர்மை வெப்ப நிலையானது 24 டிகிரி செல்சியஸ் மற்றும் 30 டிகிரி செல்சியஷிற்கு இடைப்பட்ட அளவில் இருக்க வேண்டும்.
- ஒப்பு ஈரப்பதமானது 40% மற்றும் 70%ற்கு இடைப்பட்ட அளவில் இருக்க வேண்டும்.
- காற்றுவெளியில் நேர்மறை அழுத்தத்தைப் பராமரிக்கும் பொருட்டு, இயந்திர வெளியேற்றக் காற்றானது தூய்மைக் காற்று அளவில் 70% - 80% அளவில் இருக்க வேண்டும்.
- இந்திய அரசானது ஒவ்வொரு காற்றுப் பதனாக்கிகளுக்கும் அதன் குறைந்தபட்ச வெப்பநிலையானது தொடக்க நிலை அளவான 24 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் இருக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒரு உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

## கொரானா வைரஸின் மாற்றங்கள்

- மேற்கு வங்கத்தின் கல்யாணியில் உள்ள தேசிய உயிரி மருத்துவ மரபியல் நிறுவனமானது 10 பல்வேறு வகையான மாற்றம் பெற்ற கொரானா வைரஸ் உள்ளது என்று ஒரு ஆய்வு முடிவை வெளியிட்டுள்ளது.
- இவற்றில், A2a ஆனது அனைத்துப் புவியியல் பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது.
- A2a வைரஸ் மாற்றமானது அதிக எண்ணிக்கையில் மனித நுரையீரலில் நுழையும் அதிகத் திறன் கொண்டதாக உள்ளது.
- இந்த வைரசானது O, A2, A2a, A3, B, B1 மற்றும் அதன் பல்வேறு இதர வடிவங்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- தற்பொழுது O வகை உள்ளிட்ட 11 வைரஸ் வகைகள் அடையாளம் காணப் பட்டுள்ளன.
- இது வூகானில் உருவான வைரசின் மரபு வழி வந்த வகையைச் சார்ந்ததாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## போக்குவரத்து நெரிசல் மிக்க நேரங்களில் மாசுபாடு

- இந்தியப் பெரு நகரங்களில் நாடு முடக்கப்பட்டதின் காரணமாக காலை மற்றும் மாலை ஆகிய போக்குவரத்து நெரிசல் மிக்க நேரங்களில் ஏற்படும் மாசுபாடானது குறைந்துள்ளது.
- இது 2.5 மைக்ரானுக்கும் குறைவாக உள்ள நுண்மத் துகள் மாசுபாட்டை வெகுவாகக் குறைத்துள்ளது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் படி, நாட்டில் உள்ள 92 நகரங்கள் "திருப்திகரமான" நிலையிலிருந்துச் "சிறந்த" (Good) நிலையைப் பதிவு செய்துள்ளன.

### *காற்றுத் தரக் குறியீடு (AQI)*

- AQI (Air Quality Index) ஆனது 0 முதல் 50 ஆக இருக்கும் போது காற்று மாசுபாட்டு நிலையானது "சிறந்ததாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- மோசமான நிலை (201 – 300), மிகவும் மோசமான நிலை (301 – 400) மற்றும் கடுமையான நிலை (401 – 500) ஆகியவை பிற வகைப்பாடுகளாகும்.

| Air Quality Index - Particulate Matter | |
|---|---|
| 301 – 500 | Hazardous |
| 201 – 300 | Very Unhealthy |
| 151 – 200 | Unhealthy |
| 101 – 150 | Unhealthy for Sensitive Groups |
| 51 – 100 | Moderate |
| 0 – 50 | Good |

## கோவிட் 19 – கரடி பித்த நீர்

- ❖ கோவிட் – 19 வைரஸ் தொற்றிற்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் மருந்துகளின் பட்டியலை சீன அரசு வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் சீனப் பாரம்பரிய மருந்துகளும் மேற்கத்திய மருந்துகளும் உள்ளன.
- ❖ இவற்றில் “தான் ரீ குயிங்” என்ற மருந்து சிறப்பாகச் செயலாற்றும் மருந்தாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் பாரம்பரிய மருந்தானது கரடியின் பித்த நீரைக் கொண்டுள்ளது.
- ❖ கரடியின் பித்த நீரில் உள்ள உர்சோடி ஆக்ஸிகாலிக் அமிலமானது (Ursodeoxycholic acid) கோவிட் – 19 தொற்றைச் சரி செய்யும் ஒரு கூறாகும்.
- ❖ மேலும் இது உர்சோடியோல் (Ursodiol) என்றும் அழைக்கப் படுகின்றது.

## புகைப்பனி எதிர்ப்பு வீச்சுப் பொறி (Guns)

- ❖ புகைப் பனி எதிர்ப்பு வீச்சுப் பொறியானது தில்லியில் அமைக்கப்பட்டு உள்ளது.
- ❖ மத்திய அல்லது மாநில அரசிடமிருந்து சுற்றுச் சூழல் அனுமதியைப் பெறும் திட்டங்கள் கட்டாயம் புகைப்பனி எதிர்ப்பு வீச்சுப் பொறியை அமைக்க வேண்டும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியிருந்தது.
- ❖ புகைப்பனி எதிர்ப்பு வீச்சுப் பொறி என்பது காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்காக துகள்களாக உள்ள நீர்த்துளிகளை காற்று வளிமண்டலத்தில் தெளிக்கும் ஒரு சாதனமாகும்.



## COP 26

- ❖ 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற இருந்த உறுப்பினர்கள் மாநாடு – 26 (COP 26 - Conference of Parties 26) 2021 ஆம் ஆண்டிற்குத் தள்ளி வைக்கப் பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.
- ❖ COP 26 என்பது காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தத்தின் (UNFCCC - UN Framework Convention on Climate Change) சந்திப்பாகும்.




## பிஎஸ் – VI எரிபொருள்

- ❖ இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான இந்திய எண்ணெய்க் கழகமானது உலகின் தூய்மையான பெட்ரோல் மற்றும் டீசலை நாடு முழுவதும் விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.
- ❖ நாடு முழுவதும் பிஎஸ் – IV எரிபொருள்களை விநியோகிக்கும் முதலாவது நிறுவனம் இதுவாகும்.
- ❖ இதர எரிபொருள் விற்பனையாளர்களான பாரத் பெட்ரோலியக் கழகம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியக் கழகம் ஆகியவை படிப்படியாக பிஎஸ் - VI எரிபொருள்களை விநியோகிக்க இருக்கின்றன.
- ❖ யூரோ – VI உமிழ்வு விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட இந்த எரிபொருள்களின் விநியோகத்தைத் தொடங்குவதற்கான கால வரம்பை ஏப்ரல் 01 என்று மத்திய அரசு நிர்ணயித்திருந்தது.

## புலிக்கு கோவிட் – 19

- ❖ அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள பிரான்ஸ்க் விலங்கியல் பூங்காவில் இருக்கும் நான்கு வயது நிரம்பிய ஒரு மலேசியப் புலிக்கு கோவிட் – 19 நோய்த் தொற்று ஏற்பட்டு உள்ளது.
- ❖ விலங்குகளில் கோவிட் – 19 நோய்த் தொற்று ஏற்படுவது இதுவே முதல்முறை ஆகும்.
- ❖ இந்திய மருந்து ஆராய்ச்சிக் கழகமானது கோவிட் – 19 நோய்த் தொற்று காற்று மூலம் பரவும் நோய்த் தொற்று என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை என்று உறுதியாக கூறி உள்ளது.
- ❖ இது நீர்த்துளிகள் மூலம் மட்டுமே பரவும் என்பதற்கான ஆதாரங்கள் மட்டுமே உள்ளன.




## ஆச்சரியக் கோழி

- ❖ டைனோசரஸ் காலத்தைச் சேர்ந்த ஒரு நவீன காலப் பறவையின் மிகப் பழமையான புதைபடிவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தச் சிறிய புதைபடிவமானது "ஆச்சரியக் கோழி" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இது நெதர்லாந்தின் மாஸ்ட்டிரிச்சிற்கு அருகிலுள்ள சிண்ட்-பீட்டர்ஸ்பெர்கின் சுண்ணாம்புக் கல்லில் காணப் பட்டது.
- ❖ இது 66 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
- ❖ இது எந்தவொரு காலத்திலும் இல்லாத வகையில் சிறந்த முறையில் பாதுகாக்கப் பட்ட புதைபடிவ பறவை மண்டையோடுகளில் ஒன்றாக உள்ளது.
- ❖ இந்தப் புதைபடிவமானது தற்காலத்தியப் பறவைகளின் முந்தைய இனங்கள் எப்போது மற்றும் எப்படி உருவானது என்பதைக் கண்டறிய ஒரு சிறந்த ஆதாரமாக விளங்குகின்றது.
- ❖ மாஸ்ட்டிரிட்ச் நகரமானது மாஸ்ட்டிரிட்ச் ஒப்பந்தத்திற்காகவும் 1992 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட யூரோ நாணயத்தின் பிறப்பிடமாகவும் புகழ்பெற்று விளங்குகின்றது.



## வன உரிமைகள் குழு

- ❖ சமீபத்தில் மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது (MoTA - Ministry of Tribal Affairs) வன உரிமைகள் சட்டம், 2006ன் (FRA - Forest Rights Act) கீழ் சமூக வனவளங்கள் (CFR - Community Forest Resources) குறித்த ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ❖ இந்த அமைச்சகமானது அந்தக் குழுவை இந்தியத் திட்டக் குழுவின் முன்னாள் தலைவர் மற்றும் தேசிய ஆலோசனைக் குழுவின் முன்னாள் தலைவரான NC சக்சேனா என்பவரின் கீழ் அமைத்துள்ளது.

- FRA-ன் கீழ் உள்ள CFR உரிமையானது பழங்குடியினரின் வனத்தைப் பாதுகாக்க மற்றும் நிர்வகிக்க கிராம சபைக்கு அதிகாரம் வழங்குகின்றது.
- 2016 ஆம் ஆண்டில், CFR வழிகாட்டுதல்களானது மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் ஆலோசனையுடன் MoTAயினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- இதற்கு முன்பு மத்தியப் பழங்குடியின விவகாரங்கள் துறை அமைச்சகமானது குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுக்களுக்கு (PVTG - Particularly Vulnerable Tribal Groups) ஒரு சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குவதற்காக ஒரு குழுவை ஏற்படுத்தியிருந்தது.
- இது MoTA-ன் முன்னாள் செயலாளரான ருசிகேஷ் பண்டா என்பவரால் தலைமை தாங்கப் பட்டது.
- இந்தக் குழுவின் உறுப்பினர்கள் ஜம்மு காஷ்மீர், ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்குச் செல்ல முடிவு செய்திருந்தனர்.
- FRA-ன் கீழ், வாழ்விட உரிமைகள் ஆனது PVTGகள் மற்றும் முந்தைய அல்லது மரபுசார் வேளாண் சமூகங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இது அவர்களது வாழ்விடங்களாக அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளில் வனங்களை அணுகுவதற்கான அனுமதியை அவர்களுக்கு வழங்குகின்றது.

## உயிரி-செறிவூட்டப்பட்ட கேரட்டுகள்

- குஜராத்தின் ஜுனாகத் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு விவசாய விஞ்ஞானியான வல்லபாய் வஸ்தம்பாய் மர்வன்யா என்பவர் உயிரி-செறிவூட்டப்பட்ட கேரட்டுகளை உருவாக்கியுள்ளார்.
- இந்தக் கேரட்டுகள் பொதுவாக "மதுபன் கஜர்" என்று அழைக்கப் படுகின்றன.
- இது 277.75 மி.கி/கி.கி அளவு கொண்ட β – கரோட்டீன் மற்றும் 276.7 மி.கி/கி.கி அளவு கொண்ட இரும்புச் சத்தைக் கொண்டுள்ளது.
- கேரட்டுகளின் சரிபார்த்தல் சோதனையானது தேசியப் புத்தாக்க அமைப்பினால் (NIF - National Innovation Foundation) மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது நாடு முழுவதும் கடைமட்ட நிலையிலான புத்தாக்கங்களுக்கு நிறுவன நிலையிலான ஆதரவை அளிப்பதற்காக குஜராத்திலுள்ள அகமதாபாத்தில் 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஏற்படுத்தப் பட்டது.



## இளஞ்சிவப்புச் சந்திரன் (Super Pink Moon)

- இளஞ்சிவப்புச் சந்திரன் ஆனது 2020 ஆம் ஆண்டில் இரண்டாவது முறையாக நிகழ்ந்தது.
- "சூப்பர் மூன்" என்ற நிகழ்வானது, நிலவானது முழு நிலவாகவும் அண்மை நிலையில் இருக்கும் போதும் நிகழ்கின்றது.
- அண்மை நிலை என்பது நிலவானது புவிக்கு அருகில் இருக்கும் போது நிலவின் சுற்று வட்டப்பாதையின் புள்ளியைக் குறிக்கின்றது.
- இதன் புவிக்கான சுற்று வட்டப்பாதையானது நீள்வட்ட வடிவைக் கொண்டதாகும்.
- எனவே, முழு நிலவு பூமிக்கு அருகில் இருக்கும்போது, சூப்பர் நிலவு நிகழ்கின்றது.
- இந்த நிலவானது முழு நிலவின் சராசரியைவிட 14% பெரியதாகவும் 30% பிரகாசமாகவும் காணப்படுகின்றது.
- ஏப்ரல் சூப்பர் நிலவானது இளஞ்சிவப்புச் சந்திரன் என்று அழைக்கப் படுகின்றது. கிழக்கு வட அமெரிக்காவிற்குச் சொந்தமான இளஞ்சிவப்பு மலரின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- எனவே, ஏப்ரல் மாதத்தில் சூப்பர் நிலவானது இந்த மலரிலிருந்து இப்பெயரைப் பெற்றுள்ளது.
- இது மலரின் நிறத்தைக் குறிக்கின்றதே தவிர, நிலவின் நிறத்தைக் குறிக்க வில்லை.




## மும்பை – நாக்பூர் நெடுஞ்சாலை

- தேசிய வனவிலங்கு வாரியமானது (NBWL - National Wildlife Board) மும்பை-நாக்பூர் நெடுஞ்சாலைக்கான இறுதி அனுமதியை வழங்கியுள்ளது.
- இந்த நெடுஞ்சாலையானது கதேபூர்ணா மற்றும் கரன்ஜா சோஹல் கலைமான் வனவிலங்குச் சரணாலயங்களின் 10 கிலோ மீட்டர் தொலைவு கொண்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு மண்டலத்தின் வழியாகச் செல்கின்றது.

### *NBWL பற்றி*

- NBWL என்பது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது பிரதம அமைச்சரால் தலைமை தாங்கப்படுகின்றது.
- NBWL-ன் அனுமதி இல்லாமல் தேசியப் பூங்காக்கள் மற்றும் வனவிலங்குச் சரணாலயங்களின் எல்லைகளை மாற்றியமைக்க முடியாது.

- இது பிரதம மந்திரி உள்பட 47 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இது 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள் (2 மக்களவை உறுப்பினர்கள் மற்றும் 1 மாநிலங்களவை உறுப்பினர்), அரசு சாரா அமைப்புகளைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள், சூழலியல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் சுற்றுச்சுழல் அமைப்புகளைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் ஆகியோரையும் கொண்டுள்ளது.




## குடிநீரில் யுரேனியம்

- இங்கிலாந்தின் மான்செஸ்டர் பல்கலைக்கழகம் மற்றும் பாட்னாவின் புல்வாரிஷரிப்பில் உள்ள மகாவீர் புற்றுநோய் நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி மையம் நடத்திய புதிய ஆய்வில், பீகார் மாநிலத்தின் 10 மாவட்டங்களில் நிலத்தடி நீரை யுரேனியம் மாசுபடுத்துகிறது என்று கண்டறியப் பட்டுள்ளது.
- குடிநீர் விவரக் குறிப்பிற்கான "இந்திய தர நிர்ணயம் ஐஎஸ் 10500: 2012" ஆனது ஆல்பா மற்றும் பீட்டா உமிழ்ப்பான் போன்ற கதிரியக்க எச்சங்களின் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு அதிகபட்ச வரம்பினை வரையறை செய்கின்றது.
- இந்தியத் தரநிலை நிறுவனத்தின் படி, அனைத்துக் குடிநீர் தரங்களிலும் யுரேனியத்தின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட வரம்புவானது 0.03 மி.கி / லிட்டர் (உலகச் சுகாதார அமைப்பின் தற்காலிக வழிகாட்டுதலின்படி) ஆகும்.
- அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகமானது மத்திய நிலத்தடி நீர் வாரியம் மற்றும் மாநில நிலத்தடி நீர் துறைகளுடன் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் பெரும்பான்மை மாநிலங்களில் யுரேனியம் செறிவு ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

## வீழ்ச்சி படைப்புழு (FAW)

- உணவு மற்றும் விவசாய அமைப்பானது (Food and Agriculture Organization) படைப்புழுக்களால் ஏற்படும் சர்வதேச அச்சுறுத்தல்களுக்கு எதிர்வினை ஆற்றும் விதமாக FAW (Fall Armyworm) கட்டுப்பாட்டிற்கான சர்வதேச நடவடிக்கை என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- வீழ்ச்சி படைப்புழு (FAW) என்பது சர்வதேச வர்த்தகத்தினால் தனது இயற்கையான பரவும் திறன் மற்றும் வாய்ப்புகளின் காரணமாக வேகமாகப் பரவும் திறன் கொண்ட அபாயகரமான எல்லை தாண்டிய (எல்லைகளைத் தாண்டி பரவும்) ஒரு பூச்சியாகும்.
- படைப்புழு வகையிலான கம்பளிப்புழு என்பது பல்வேறு அத்திப்பூச்சி வகைகளின் லார்வா நிலையாகும்.

- FAW ஆனது சகாராாவைச் சுற்றியுள்ள ஆப்பிரிக்க நாடுகள், ஆசியா மற்றும் அதன் கிழக்கு நாடுகள் முழுவதும் பரவிக் காணப்படுவதன் மூலம் மில்லியன் கணக்கிலான சிறுநில விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றது.
- FAWஐ ஒழிக்க முடியாது.
- ஒருங்கிணைந்த நோய்ப்பூச்சி மேலாண்மை நடவடிக்கைகளின் மூலம் விவசாயிகளின் விவசாயப் பயிர்முறைகளில் FAWஐ ஒரு நீடித்த அளவில் கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு அதிக அளவு உதவி தேவைப்படுகின்றது.

## சாசனில் நிலக்கரிச் சாம்பல்

- மத்தியப் பிரதேசத்தில் சிங்ரௌலியின் சாசன் பகுதியில் உள்ள ரிலையன்ஸ் பவர் நிறுவனத்தின் மிகப்பெரும் மின்சாரத் திட்டத்தின் நிலக்கரிச் சாம்பல் கழிவுகளைத் தடுக்கும் சுவர் சமீபத்தில் சேதமடைந்தது.
- புகை நிலக்கரி அல்லது பொடியாக்கப்பட்ட எரிபொருள் நிலக்கரி என்று அழைக்கப்படும் இது, நிலக்கரி எரிக்கப் படுதலின் போது கிடைக்கும் ஒரு பொருளாகும்.
- இது புகை வாயுக்களுடன் இணைந்து நிலக்கரியின் மூலம் எரிக்கப்படும் கொதிகலனில் இருந்து வெளிவரும் நுண் துகள்களைக் கொண்டுள்ளது.



## புவியின் நில அதிர்வு ஒலி

- பிரிட்டிஷ் புவியியல் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கொரானா வைரஸ் முடக்கத்தினிடையே புவியின் நில அதிர்வு ஒலி மற்றும் அதிர்வுகள் மாற்றம் பெற்றுள்ளதாகக் கூறியுள்ளனர்.
- புவியியலில், நில அதிர்வு ஒலி என்பது பல்வேறு நில அதிர்வுகளின் காரணமாக நிலமானது தொடர்ச்சியாக அதிர்வதைக் குறிக்கின்றது.
- இந்த ஒலியானது போக்குவரத்து மற்றும் தொழிற்சாலை உற்பத்தி போன்ற மனித நடவடிக்கைகளினால் ஏற்படும் அதிர்வுகளைக் கொண்டுள்ளது.
- இது சீஸ்மோ மீட்டர் அல்லது நிலநடுக்க மானியினால் பதிவு செய்யப்பட்ட சமிக்ஞைகளின் தேவையற்ற கூறாகும்.
- சீஸ்மோ மீட்டரானது நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு மற்றும் எரிமலை சிதறுதல் ஆகியவற்றினால் ஏற்படும் நில நடுக்க இயக்கங்களைப் பதிவு செய்கின்றது.

- நில அதிர்வு செயல்பாடுகளைத் துல்லியமாகப் பதிவு செய்வதற்காக, புவியியலாளர்கள் தங்களது கண்டறிதல் சாதனங்களை புவியின் மேற்பரப்பிற்குக் கீழ் 100 மீட்டர் ஆழத்தில் பொருத்துகின்றனர்.
- நாடு முடக்கத்திலிருந்து இதுவரை, புவியின் மேற்புறப் பதிவுகளிலிருந்தே இயற்கை அதிர்வுகளை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்ய சாத்தியப் பட்டுள்ளது.

## இந்தியாவிலுள்ள வெளவால்கள்

- ICMR-னினால் (Indian Council of Medical Research) மேற்கொள்ளப்பட்ட ஒர் ஆய்வின்படி, இந்தியாவில் உள்ள இரண்டு வெளவால் இனங்களில் பல்வேறு வகையான கொரானா வைரஸ்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்த 2 வெளவால் இனங்கள் கேரளா, இமாச்சலப் பிரதேசம், புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் காணப்படுகின்றன.
- ஆனால் இந்த கொரானா வைரஸ்கள் மனிதர்களிடையே நோயை ஏற்படுத்தும் என்பதற்கான எந்தவொரு ஆதாரமோ, ஆராய்ச்சியோ இல்லை.
- இதற்கு முன்பு கேரளாவில் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரொடெபஸ் வெளவால் இனமானது நிபா வைரஸ் பாதிப்பிற்குக் காரணமாக இருந்தது.
- வெளவால்கள் சாத்தியமான அளவில் மனித நோய்க் கிருமிகளாக உள்ள பல்வேறு வைரஸ்களுக்கான இயற்கையான இருப்பிடமாகக் கருதப் படுகின்றது.
- இந்த ஆய்வானது “மருத்துவ ஆராய்ச்சி” என்ற இந்தியப் பத்திரிக்கையில் வெளியிடப் பட்டுள்ளது.



## இந்தியாவில் நீர் கிடைப்பு

- இந்தியாவில் சராசரி வருடாந்திர தலா நீர் கிடைப்பானது 2001 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 1820 கன மீட்டரிலிருந்து 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 1545 கன மீட்டராகக் குறைந்துள்ளது.
- இது மேலும் 2025 ஆம் ஆண்டில் 1341 அளவாகவும் 2050 ஆம் ஆண்டில் 1140 என்ற அளவாகவும் குறைய இருக்கின்றது.
- தனது 2018 ஆம் ஆண்டு அறிக்கையில், நீர் மற்றும் துப்புரவு ஆர்வலக் குழுவான “வாட்டர் எய்டு” என்ற அமைப்பானது வீடுகளுக்குச் சென்று தூய்மையான நீரை வழங்குவதில் மிகவும் மோசமாகச் செயல்படும் முதல் 10 நாடுகளில் இந்தியாவை முதலிடத்தில் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- 1700 கன மீட்டர்களுக்குக் குறைவான வருடாந்திர தலா நீர் கிடைப்பானது நீர்ப் பிரச்சினை உள்ள நிலையாகக் கருதப்படுகின்றது.
- 1000 கன மீட்டர்களுக்குக் குறைவான வருடாந்திர தலா நீர் இருப்பானது நீர்ப் பற்றாக்குறை உள்ள நிலையாகக் கருதப்படுகின்றது.


## மியான்மரில் வௌவால்கள்

- மியான்மரின் வௌவால்களில் ஆறு புதிய கரோனா வைரஸ்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த வகையான வைரஸ்கள் கண்டுபிடிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இவை கோவிட் -19 வைரசிடமோ, சார்ஸ் அல்லது மெர்ஸ் எனும் மற்ற இரண்டு வகை கரோனா வைரஸ்களிடமோ நெருங்கிய தொடர்புடையவையாக காணப்பட வில்லை.
- வௌவால்களில் ஆயிரக்கணக்கான கொரோனா வைரஸ்கள் இருப்பதாக நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர்.
- விலங்குகள் மற்றும் மக்களிடையே உள்ள உயிரியல் சூழலில் கண்காணிப்பு நடத்தப் படும் போது ஆராய்ச்சியாளர்கள் இந்த புதிய வைரஸ்களைக் கண்டறிந்து உள்ளனர்.
- நோய்த் தொற்று பரவுதலுக்கான சூழ்நிலைகளை நன்கு புரிந்து கொள்ள இது நடத்தப் பட்டுள்ளது.
- இது PREDICT (கணிப்பு) எனப்படும் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ஸ்மித்சோனியனின் உலகளாவிய சுகாதாரத் திட்டத்தால் இந்த குழு உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்புகள் ப்ளொஸ் ஒன் (PLOS ONE) என்ற அறிவியல் இதழில் வெளியிடப் பட்டுள்ளன.



## சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

- இந்தியாவில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடானது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 என்ற சட்டத்தால் சட்டப்பூர்வமாக ஆதரிக்கப் படுகிறது.
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு முறை மற்றும் செயல்முறை குறித்த பல்வேறு விதிகள் இதில் உள்ளன.
- கோவிட்-19 சூழலிருந்து எழும் திடீர்ச் சூழ்நிலையை எதிர்கொள்ள, பல்வேறு மருந்துகளின் கிடைக்கும் தன்மை அல்லது உற்பத்தியை அதிகரிப்பதற்காக சுற்றுச்சூழல் அமைச்சகமானது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு - 2006 என்ற அறிவிக்கையில் ஒரு திருத்தத்தைச் செய்துள்ளது.
- பல்வேறு நோய்களை எதிர்கொள்ள தயாரிக்கப்படும் மொத்த மருந்துகள் மற்றும் அதற்கான பல்வேறு இடைநிலை உற்பத்திப் பொருள்கள் தொடர்பான அனைத்துத் திட்டங்களும் செயல்பாடுகளும் தற்போதுள்ள வகை ‘ஏ’ என்ற நிலையிலிருந்து வகை ‘பி 2’ என்ற நிலைக்கு மறுவகை செய்யப் பட்டுள்ளன.




## பருவமழை முன்னறிவிப்பு

- இந்தியாவில், 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் 'இயல்பானதை விட' அதிகமாக மழை பெய்யக் கூடிய வகையில் பருவமழை அமையும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறையானது கணித்துள்ளது.
- ‘இயல்பான’ மழைப் பொழிவு எது என்பதற்கான வரையறையையும் இது அதிகாரப் பூர்வமாக மறுவரையறை செய்துள்ளது. அதை 89 செ.மீ இல் இருந்து 88 செ.மீ ஆக ஒரு செ.மீ அளவிற்கு இந்நிறுவனம் குறைத்துள்ளது.
- ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்யும் மழைப் பொழிவானது நாட்டின் ஓராண்டில் பெய்யும் மழையின் 75% அளவை உள்ளடக்கும்.
- இந்திய வானிலை ஆய்வுத் துறையானது இரண்டு கட்ட முன்னறிவிப்பை வெளியிடுகிறது. முதலில் ஏப்ரல் மாதத்தில் ஒரு முன்னறிவிப்பையும் பிறகு மே மாதத்தின் கடைசி வாரத்தில் இன்னும் விரிவான ஒரு முன்னறிவிப்பையும் வெளியிட்டு, பருவமழை எவ்வாறு நாடு முழுவதும் பரவுகிறது என்பதையும் இந்நிறுவனம் விளக்குகின்றது.
- இந்திய வானிலை ஆய்வுத் துறையானது கணித ரீதியில் கடல் மற்றும் வளிமண்டலத்தை ஒத்த மாதிரியிலான இயற்பியலை அறிய மீத்திறன் கணினிகளை நம்பியுள்ளது.

## தோல் முதுகு ஆமை (அ) பேராமை

- தோல் முதுகு ஆமைகள் ஆனது உலகின் மிகப்பெரிய கடல் ஆமைகளாக விளங்குகின்றன.
- இந்த இனத்தின் அதிக எண்ணிக்கையிலான கூடுகளானது சமீபத்தில் தாய்லாந்து நாட்டில் கண்டறியப் பட்டுள்ளது.
- இது பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN - International Union for Conservation of Nature) சிவப்புப் பட்டியலில் “பாதிக்கப்படக் கூடிய இனமாகப்” பட்டியலிடப் பட்டுள்ளது.

## ட்ரைமெருசுரஸ் சாலசர்

- இது சமீப காலத்தில் (ஓராண்டு காலத்திற்கும் மேலாக) அருணாச்சலப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள ஊர்வன இனத்தின் 5வது வகையாகும்.
- இது பக்கே-கேசாங் மாவட்டத்தில் உள்ள பக்கே புலிகள் காப்பகத்தில் கண்டறியப் பட்டுள்ளது.
- இந்தியாவிலிருந்து கண்டறியப்பட்ட இனங்களில், சாலசரின் விரியன் பாம்பு (Salazar's pit viper) கண்டுபிடிப்பிற்கு முன்னர் வடகிழக்கில் 7 வகை பாம்பு இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன.
- சாலசரின் விரியன் பாம்பானது உருவ மற்றும் சூழலியல் பன்முகத் தன்மைகளுடன் கவர்ந்திழுக்கும் நச்சுத் தன்மையைக் கொண்ட பாம்பு வகைகளான ட்ரைமெமெருசுரஸ் லெஸிப்பீட் என்ற வகையின் மரபணுவைச் சார்ந்ததாகும்.
- விரியன் பாம்புகளானது கண் மற்றும் நாசிக்கு இடைப்பட்ட அதன் வெப்பம் உணர் உறுப்புகளினால் நச்சுத்தன்மை கொண்ட பாம்புகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

## பூனைகளுக்கு கொரானா

- நியூயார்க்கில் 2 வளர்ப்புப் பூனைகளுக்கு கொரானா நோய்ப் பாதிப்பு உறுதி செய்யப் பட்டுள்ளது.
- இது அமெரிக்காவில் வளர்ப்பு விலங்குகளில் உறுதி செய்யப்பட்ட முதலாவது பாதிப்பு ஆகும்.
- ஆனால் பொதுச் சுகாதார அதிகாரிகள் விலங்குகள் இந்த வைரசை மனிதனுக்குப் பரப்பிட எந்தவொரு ஆதாரமும் இல்லை என்று கூறியுள்ளனர்.
- அமெரிக்காவைத் தவிர்த்து, ஹாங்காங்கில் 2 நாய்கள் மற்றும் 1 பூனைக்கும் பெல்ஜியத்தில் 1 பூனைக்கும் என்று குறைந்த அளவிலான வளர்ப்பு மிருகங்கள் கொரானா பாதிப்பை உறுதி செய்திருக்கின்றன.

## அந்தூரியம்

- கேரளாவின் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த ஒரு பெண் கண்டுபிடிப்பாளரான, டி. லாசினி பாய் என்பவர் அந்தூரியத்தின் 10 வகைகளை உருவாக்கியுள்ளார்.
- அந்தூரியம் என்பது உலகில் சிறந்த வகையிலான உள்ளூரில் பூக்கும் தாவரங்களில் ஒன்றாக விளங்குகின்றது.
- நாசா இதனை காற்றுத் தூய்மையாக்கித் தாவரங்களின் பட்டியலில் வைத்துள்ளது.



## டெஹிங் பட்காய் யானைகள் காப்பகம்

- ❖ சமீபத்தில் தேசிய வனவிலங்கு வாரியமானது (NBWL - National Board for Wild Life) அசாமில் உள்ள டெஹிங் பட்காய் யானைகள் காப்பகத்தின் ஒரு பகுதியில் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தை அமைக்கப் பரிந்துரைத்துள்ளது.
- ❖ NBWL ஆனது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972ன் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- ❖ இது வனவிலங்குகள் தொடர்பான அனைத்து விவகாரங்களையும் ஆய்வு செய்வதற்காகவும் தேசியப் பூங்காக்கள் மற்றும் சரணாலயங்களிலும் (பாதுகாக்கப்பட்ட பகுதிகள்) அதனைச் சுற்றிலும் அமைக்கப் படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்காகவும் தொடங்கப் பட்ட ஒரு தலைமை அமைப்பாகும்.
- ❖ இது பிரதமரால் தலைமை தாங்கப் படுகின்றது.
- ❖ இது ஆண்டிற்கு ஒரு முறை கூடும் வகையில் 47 உறுப்பினர்களை (ஒரு தலைவர் உள்பட) கொண்ட ஒரு வாரியமாகும்.




# மாநிலச் செய்திகள்

## FRBM சட்டம் மற்றும் கேரளா

- ❖ நிதியியல் பொறுப்புடைமை மற்றும் நிதிநிலை மேலாண்மை (FRBM - Fiscal Responsibility and Budget Management) சட்டத்தின் கீழ் கேரளாவிற்குச் சலுகை வழங்குமாறு மத்திய அரசிடம் அம்மாநில முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- ❖ இது ஏப்ரல் 1 ஆம் தேதியில் இருந்து தொடங்கும் அடுத்த நிதியாண்டில் மாநிலத்தின் நிதிநிலைமையானது மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏதும் அடையாமல் இருப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ❖ அவசர கால நிவாரணத் திட்டத்திற்கு நிதியளித்து உதவுவதற்காக, ஏப்ரல் மாதத்திலேயே சந்தையிலிருந்து ரூ.12,500 கோடி கடனைப் பெற கேரளா பரிந்துரைத்துள்ளது.
- ❖ இந்தச் சட்டமானது பொதுவாக அறியப்படும் "விடுபடு பிரிவு" (escape clause) என்ற ஒன்றைக் கொண்டுள்ளது.

### *FRBM பற்றி*

- ❖ FRBM சட்டம், 2003 ஆனது நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக நிதியியல் ஒழுங்குமுறைகளை ஏற்படுத்தியுள்ளது.

- இந்தச் சட்டத்தின் நீண்ட கால நோக்கம் என்பது இந்தியாவிற்கான நிதியியல் நிலைத் தன்மையை அடைவது மற்றும் இந்தியாவில் பணவீக்கத்தைக் கையாளுவதற்காக ரிசர்வ் வங்கிக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவது ஆகியவனவாகும்.
- இந்தச் சட்டத்தின் கீழ், மத்திய அரசானது சிலபல காரணங்களைக் காரணம் காட்டி வருடாந்திர நிதிப்பற்றாக்குறை இலக்கை மீறலாம்.
- தேசியப் பாதுகாப்பு, போர், தேசியப் பேரிடர், விவசாய நிலை சீர்குலைதல், அடிப்படைக் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் மற்றும் முந்தைய 4 காலாண்டுகளின் சராசரி விகிதத்தை விட குறைந்தது 3 புள்ளிகள் குறைவாக தற்போதைய காலாண்டின் நேரடி வளர்ச்சிக் குறைவு ஆகியவை அதற்கான காரணங்களாகும்.

## விரைவான சோதனை

- அரை மணி நேரத்தில் முடிவுகளை அறிவிக்கும் வகையில் விரைவான சோதனைகளைக் கையாள கேரள அரசு அறிவித்துள்ளது.
- இது சமுதாயத்தில் கரோனா தொற்று பரவியுள்ளதா என்பதைக் கண்டறிந்து, அவற்றைக் கையாளுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- விரைவான சோதனை என்பது ஒரு மனிதனின் உடலில் சமீபத்தில் ஏதேனும் வைரஸ் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக நடத்தப்படும் ஒரு சோதனையாகும்.
- நுண்ணுயிரி ஒரு மனிதனின் உடலில் நுழையும் போது, குறிப்பிட்ட பிற நோய் எதிர்ப்புப் பொருள்கள் இந்த நுண்ணுயிரியை எதிர்த்துப் போராடுவதற்காக வெளியிடப் படுகின்றன.
- இந்த விரைவுச் சோதனையானது இரத்தம், செரம் அல்லது பிளாஸ்மா ஆகியவற்றின் மாதிரிகளில் இது போன்ற பிற நோய் எதிர்ப்புப் பொருள்களைக் கண்டறிந்து, வைரஸ் தொற்று இருப்பதை விரைவாக அறிவிக்கும்.
- நோய்த் தொற்றின் போது வைரஸின் சமூகப் பரவலைக் கண்காணிப்பதற்காக வேண்டி பெரும்பாலும் இந்தச் சோதனையானது மேற்கொள்ளப்படுகின்றது.
- இது மனிதர்களின் இரத்த மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஒரு எளிய முறையாகும். இது 10 முதல் 30 நிமிடங்களுக்குள் முடிவுகளை அறிவிக்கும்.
- இது குறைந்த செலவைக் கொண்ட ஒரு சோதனையாகும்.

## ஊதியக் குறைப்பு

- கோவிட் – 19 நோய்த் தொற்று பரவலின் காரணமாக மகாராஷ்டிரா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநில அரசுகள் பெருமளவிலான ஊதியக் குறைப்பை அறிவித்துள்ளன.
- மகாராஷ்டிர மாநில அரசானது முதலமைச்சர், இதர சட்டமன்ற உறுப்பினர்கள் (கீழ் சபை), சட்ட மேல்சபை உறுப்பினர்கள் (மேல் சபை) மற்றும் இதர உள்ளூர் அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஆகியோரின் மொத்த ஊதியத்திலிருந்து 60 சதவிகித ஊதியத்தைக் குறைத்துள்ளது.
- தெலுங்கானா அரசானது முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில அமைச்சர்களின் ஊதியத்திலிருந்து 75% சம்பளத்தை குறைக்க உள்ளது.

## “அனைத்து ஏழை மக்களுக்கான வீடுகள்” என்ற திட்டம்

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது “நவரத்னாலு பெடலண்டரிக்கி இல்லு” என்ற திட்டத்தின் வழிகாட்டுதல்களைப் புதுப்பித்துள்ளது.
- இந்தத் திட்டமானது “அனைத்து ஏழை மக்களுக்கான வீடுகள்” என்று அழைக்கப் படுகின்றது.
- இந்தத் திட்டத்தின் கீழ், வீட்டு நிலங்கள் வெள்ளை நிறக் குடும்ப அட்டையைக் கொண்டுள்ள ஏழை மக்களுக்கு ரூ.1 என்ற கட்டணத்துடன் அளிக்கப்பட இருக்கின்றன.
- “நவரத்னாலு” என்பது ஆந்திரப் பிரதேச அரசின் ஒரு முதன்மைத் திட்டம் ஆகும்.
- இதில் 9 (நவரத்தினங்கள்) நலத் திட்டங்கள் உள்ளன.




## பஞ்சாப் கிராம மற்றும் சிறு நகரங்கள் சட்டம்

- இந்தச் சட்டமானது சமீபத்தில் ஊரடங்கின் போது மக்களின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஹரியானாவின் பஞ்சகுலாவில் செயல்படுத்தப் பட்டது.
- இந்தச் சட்டமானது முதன்முறையாக 1918 ஆம் ஆண்டில் அப்போதைய பஞ்சாப்பில் அவசர நிலையின் போது சிறு கிராமங்கள் மற்றும் நகரங்களில் வசிக்கும் மக்களை இரவு நேரத்தில் ரோந்துப் பணியில் ஈடுபடும் வகையில் ஏற்படுத்தப் பட்டது.
- இந்தச் சட்டத்தின் கீழ், பஞ்சாப் அல்லது ஹரியானாவில் உள்ள ஏதேனும் மாவட்டங்களின் ஒரு துணை ஆணையர் கிராமத்தில் பொதுப் பாதுகாப்பை நிலை நிறுத்துவதற்கான சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கருதினால், “அந்தக் கிராமத்தில் வாழும் தகுதியுள்ள ஆண் மக்கள் அனைவரையும்” அந்தக் கிராமத்தில் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தும் ஆணையைப் பிறப்பிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார்.

## விலைக் கண்காணிப்பு மற்றும் வள அலகு (PMRU - Price Monitoring & Resource Unit)

- தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையத்தினால் (NPPA - National Pharmaceutical Pricing Authority) அமைக்கப்படும் விலைக் கண்காணிப்பு மற்றும் வள அலகைக் கொண்ட 12வது மாநிலமாக ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசம் உருவெடுத்துள்ளது.
- இது பதிவு செய்யப்பட்ட ஒரு சமுதாய அமைப்பாகும். இது அந்தந்த மாநிலங்களின் மாநில மருந்துக் கட்டுப்பாட்டாளரின் நேரடிக் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வையிலும் செயல்படுகின்றது.

## ஜம்மு காஷ்மீர் சட்டப்பூர்வ வாழ்விட விதிகள்

- நாடெங்கிலும் உள்ள மக்கள் ஜம்மு காஷ்மீரின் பல்வேறு அரசுப் பணிகளில் நியமனம் பெறும் வகையில் ஜம்மு காஷ்மீர் சட்டப்பூர்வ வாழ்விட விதிகளை மத்திய அரசு மறுவரையறை செய்துள்ளது.
- இந்த ஆணையானது ஜம்மு காஷ்மீர் குடிமைப் பணிகள் (அதிகாரப் பரவல் மற்றும் ஆள்சேர்ப்பு) என்பதின் கீழ் வரையறுக்கப்படுகின்றது.
- இச்சட்டத்தின் படி, சட்டப்பூர்வ வாழ்வகம் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் சட்டப்பூர்வமாக நிரந்தரமாக வாழும் ஒரு நபரிற்கான இயற்பண்பு அல்லது அங்கீகாரம் என்பதாகும்.
- இதற்கு முன்பு, பிரிவு 35A ஆனது நீக்கப்பட்ட சிறப்புத் தகுதிநிலையான சரத்து 370 உடன் இணைந்து ஜம்மு காஷ்மீரில் குடியிருப்பவரை வரையறை செய்வதற்கான அதிகாரத்தை அம்மாநிலச் சட்டமன்றத்திற்கு வழங்கியது.




## ரஜ்னேஷ் ஒஸ்வால் – ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதி

- ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் பொது உயர் நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியாக ரஜ்னேஷ் ஒஸ்வால் பொறுப்பேற்றுள்ளார்.
- ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான கீதா மிட்டல் அவர்களால் இவருக்கு ஜம்முவில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பின்படி அந்நீதிமன்றத்தில் பொறுப்பேற்கும் முதலாவது நீதிபதி இவராவார்.
- இதற்கு முந்தைய நீதிபதிகள், 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 ஆம் தேதியன்று நீக்கப்பட்ட ஜம்மு காஷ்மீர் அரசியலமைப்பின் படி பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.
- நீதிபதி ஒஸ்வால் அவர்களின் நியமனத்திற்குப் பின்பு, அந்நீதிமன்றத்தின் எண்ணிக்கையானது 8லிருந்து 9 ஆக அதிகரித்துள்ளது.

## மத்தியப் பிரதேச முதல்வர்

- ❖ பாஜக கட்சியைச் சேர்ந்த சிவ்ராஜ் சிங் சவுகான் மத்தியப் பிரதேச முதல்வராக பதவியேற்றார்.
- ❖ சிவராஜ் சிங் சவுகான் முதல்வராக பதவியேற்பது இது நான்காவது முறையாகும்
- ❖ சிவ்ராஜ் சிங் சவுகான் இந்த மாநிலத்தின் 32வது முதல்வர் ஆவர்.
- ❖ முன்னதாக, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கமல்நாத் தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார்.

## உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைகாலத் தலைநகரம்

- ❖ கெயிர்சைன், உத்தரகாண்ட் மாநிலத்தின் கோடைகாலத் தலைநகரமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ இதன் குளிர்காலத் தலைநகரம் டேராடூன் ஆகும்.
- ❖ நவம்பர் 9, 2000 அன்று, உத்தரகாண்ட் மாநிலமானது, இந்தியக் குடியரசின் 27வது மாநிலமாக உத்தரப் பிரதேசத்தில் இருந்து பிரிக்கப் பட்டது.
- ❖ இது பெரும்பாலும் "தேவபூமி" என்று குறிப்பிடப் படுகிறது.




## நைகா மொபைல் செயலி


- ❖ உள்ளாட்சி அமைப்பிற்கான தேர்தல் முறைகேடுகளைத் தடுக்க ஆந்திர மாநில அரசு நைகா (NIGHA) என்ற கைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது.
- ❖ இது சட்டவிரோதமாக பணம் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் விநியோகத்தைப் பற்றிப் புகாரளிக்க குடிமக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மேலும் இது புகைப்படங்களையும் காணொளிப் பதிவுகளையும் பதிவேற்றுவதற்கான வசதிகளையும் கொண்டுள்ளது.

## வீடுகளுக்கேச் சென்று மீன்களை விநியோகிக்கும் திட்டம்

- ❖ மத்தியக் கடல் மீன்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கும் கிரிஷி விக்யான் கேந்திரா ஆனது கேரளாவில் வீடுகளுக்கேச் சென்று மீன்களை விநியோகிக்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ இத்திட்டத்தின் கீழ், இது கொச்சி நகரில் உள்ள பல்வேறு வீடுகளுக்குச் சென்று மீன்களை விநியோகம் செய்து வருகின்றது.

## கோவிட் – 19 தொற்றைக் கட்டுப்படுத்த 5டி திட்டம்

- தில்லி ஒன்றியப் பிரதேசத்தில் கோவிட் – 19 தொற்றைக் கட்டுப்படுத்த தில்லி அரசு 5டி (5T) என்ற ஒரு திட்டத்தை அறிவித்துள்ளது.
- 5T திட்டமானது சோதனை, கண்காணிப்பு அல்லது தடமறிதல், குழுவேலை, சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- இந்தச் சோதனைத் திட்டத்தின் கீழ், தில்லி அரசானது தில்லியில் இந்த நோய் பரவிக் காணப்படும் முக்கியமானப் பகுதிகளில் 1 இலட்சம் விரைவுச் சோதனைகளை மேற்கொள்ள இருக்கின்றது.




## ஒடிசாவில் ஊரடங்கு

- ஏப்ரல் 30 ஆம் தேதி வரை கோவிட் – 19 முடக்கத்தை நீட்டித்த முதலாவது இந்திய மாநிலம் ஒடிசா ஆகும்.
- வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் ஒடிசாவில் இந்த முடக்க காலத்தில் போதிய சமூக இடைவெளியுடன் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

## கமோசா (Gamosa)

- சமீபத்தில் ஏற்பட்ட கோவிட் – 19 நோய்த் தொற்றானது ஒரு அலங்கார பருத்தி வகைக் கைக்குட்டையான எங்கும் பரவி இருக்கும் கமோசா (Gamosa) வகைக் கைக்குட்டைக்கு வழிவகுத்துள்ளது. ஞாபகார்த்தமானப் பொருளாகப் பயன்படுத்தப்பட்ட இது தற்போது ஒரு முகமூடியாக உருவெடுத்துள்ளது.
- கமோசா என்பது அசாம் மாநில மக்களுக்கான ஒரு முக்கியப் பொருளாக விளங்குகின்றது.
- இது மூன்று புறங்களில் சிவப்பு நிறத்திலும் நான்காவது புறத்தில் நெய்த சிவப்பு நிறக் கருக்களுடன் காணப்படும் ஒரு வெள்ளைநிற செவ்வக வடிவத் துணியாகும்.



## கோவிட் – 19 மருத்துவமனை

- பிரத்தியேக கோவிட் – 19 மருத்துவமனையானது ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் திறந்து வைக்கப் பட்டுள்ளது.
- கோவிட் – 19 நோயாளிகளுக்கு மட்டும் சிகிச்சையளிப்பதற்காக இந்தியாவில் தொடங்கப்பட்ட முதலாவது மருத்துவமனை இதுவாகும்.
- ஒடிசா சுரங்கக் கழகம் மற்றும் மகாநதி நிலக்கரிப் பகுதி நிறுவனம் ஆகியவை இந்தத் திட்டத்திற்காக தனது பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமையின் கீழ் நிதியுதவி அளிக்கின்றன.
- இது 1000 படுக்கை வசதிகளைக் கொண்டு நாட்டில் மிகப்பெரிய ஒரு கொரானா வைரஸ் மருத்துவமனையாக உருவெடுத்துள்ளது.

## கொரானா வைரஸ் வளைவு

- கேரளா மாநிலத்தின் கொரானா வைரஸின் வளைவானது சமநிலையாக மாறத் தொடங்கியுள்ளது.
- நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் குணமடைந்தவர்களின் வளைவானது (பச்சை வளைவு) மஞ்சள் வளைவை விரைவில் கடக்க இருக்கின்றது.
- இந்த வரைபடமானது 3 வண்ணங்களைக் கொண்டுள்ளது.
    - பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பாதிப்புகள் - சிவப்புக் கோடு
    - தற்பொழுதுள்ள பாதிப்புகள் – மஞ்சள் கோடு
    - குணமடைந்தவர்கள் – பச்சைக் கோடு

## முதலாவது பசுமை மாநிலம்

- கடைசியாக ஏற்பட்ட 7 கோவிட் பாதிப்புகளும் எதிர்மறையாக மாறி வரும் நிலையில் (பாதிப்பு குணமாகி வரும் நிலையில்) சமீபத்தில் நாட்டில் முதலாவது சுழிய கோவிட் – 19 கொண்ட மாநிலமாக கோவா மாநிலம் உருவெடுத்துள்ளது.
- ஏப்ரல் 3 ஆம் தேதிக்குப் பிறகு எந்தவொரு கொரானா வைரஸ் பாதிப்பும் அங்கு பதிவாகாததால் இது நாட்டில் முதலாவது பசுமை மாநிலமாக கோவா மாநிலத்தை மாற்றியுள்ளது,
- 28 நாட்களில் எந்தவொரு புதிய கொரானா வைரஸ் பாதிப்பும் பதிவாகாத எந்தவொரு மாவட்டமும் "பசுமை மண்டலமாக" வகைப்படுத்தப் படும்.

## டபோரிஜோ பாலம்

- இது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சுபன்சிரி ஆற்றின் குறுக்கே திறக்கப் பட்டது.
- இந்தப் பாலத்தை எல்லைப்புறச் சாலைகள் அமைப்பானது வெறும் 27 நாட்களிலேயே கட்டி முடித்துள்ளது.
- சுபன்சிரி நதி பிரம்மபுத்ரா நதியின் மிகப்பெரிய துணை நதியாகும்.
- இது திபெத் பிராந்தியம், அஸ்ஸாம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகியப் பகுதிகள் வழியாக பாய்கின்றது.
- இந்த நதி சீனாவில் உருவாகிறது.
- இது அசாமில் பிரம்மபுத்ராவுடன் இணைகிறது.



## கோவிட் -19 யோதா கல்யாண் யோஜனா

- மத்தியப் பிரதேச மாநில அரசானது சமீபத்தில் முதலமைச்சர் கோவிட் -19 யோதா கல்யாண் யோஜனாவை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் மழலையர் பள்ளி (அங்கன்வாடி) தொழிலாளர்கள் ரூ.50 லட்சத்தை சிறப்பு சுகாதாரக் காப்பீடாக பெற உள்ளனர்.

## கசோவால் பாலம்

- இது ராவி நதியின் மீது அமைந்த மிக நீண்ட நிரந்தரப் பாலம் ஆகும்.
- இது பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் இருக்கும் பஞ்சாப்பின் கசோவால் நிலப் பகுதியையும் நமது நாட்டின் பிற பகுதியையும் இணைக்க இருக்கின்றது.
- இது "சேதக்" என்ற திட்டத்தின் கீழ் எல்லைச் சாலைகள் அமைப்பினால் கட்டமைக்கப் பட்டுள்ளது.



## நம்ம ஊரு

- பெங்களூருவில் உள்ள கெம்பகௌடா சர்வதேச விமான நிலையத்தின் செயல்பாட்டாளர்கள், தங்களது பெருநிறுவன சமூகப் பொறுப்புடைமைத் திட்டமான "நம்ம ஊரு" என்ற ஒரு தலைமைத்துவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, அப்பகுதியில் மரம் நடும் ஒரு இயக்கத்தைத் தொடங்கியுள்ளனர்.
- இது அழிந்துவரும் சிட்ரஸ் பழமான "தேவனாஹல்லி போமிலோ" என்பதனை மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பழமானது தனது இனிமையான சுவைக்காக "புவிசார் குறியீட்டை" கொண்டுள்ளது.

## பசவா ஜெயந்தி




- 2020 ஆம் ஆண்டின் உலக பசவா ஜெயந்தி ஆனது ஏப்ரல் 26 அன்று அனுசரிக்கப் பட்டது.
- பசவா ஜெயந்தியானது 12வது நூற்றாண்டைச் சேர்ந்த கவிஞர் – தத்துவவியலாளர், மற்றும் லிங்காயத் நம்பிக்கையை நிறுவியத் துறவியான பசவண்ணாவின் பிறந்த தினத்தைக் குறிக்கின்றது.
- இவர் கர்நாடகாவில் காலச்சூரிப் பேரரசின் பிஜாலா – 1 என்ற அரசரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவராவார்.
- இவர் தனது புகழ்பெற்றப் படைப்பான வச்சானங்களின் மூலம் சமூக விழிப்புணர்வைப் பரப்பினார்.

## அம்புபாச்சி மேளா – அசாம்

- இது கோவிட் – 19ன் காரணமாக இந்த ஆண்டு ரத்து செய்யப் பட்டுள்ளது.
- இது அசாமில் உள்ள காமாக்கியா என்ற பெண் கடவுளுக்கான கருவுறுதல் தொடர்பான சமய வழிபாட்டைக் குறிக்கின்றது.
- மேலும் இந்தத் திருவிழாவானது "கிழக்கின் மகா கும்பம்" என்றும் அழைக்கப் படுகின்றது.
- அம்புபாச்சி மேளாவானது மாத விடாய் விலக்குக்குரிய சுகாதாரம் மீதான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான ஒரு நிகழ்வாக அனுசரிக்கப் படுகின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை விருது 2020

- அனுபவம் வாய்ந்த கட்டிடக் கலைஞர்களான யுவோன் ஃபாரெல் மற்றும் ஷெல்லி மெக்னமாரா (Yvonne Farrell and Shelley McNamara) ஆகியோர் சமீபத்தில் 2020 பிரிட்ஸ்கர் பரிசிற்கான விருதாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
- டப்ளினைச் சார்ந்த கட்டடக் கலை நிபுணர்களான இவர்கள் உலகளாவிய மதிப்புமிக்க இவ்விருதைப் பகிர்ந்து கொண்ட முதல் இரண்டு பெண்கள் ஆவர்.
- அவர்களின் குறிப்பிடத்தக்கத் திட்டங்களில் பெருவின் லிமாவில் உள்ள பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகமும் அடங்கும். இது ரிபா என்ற சர்வதேசப் பரிசையும் வென்றுயுள்ளது.
- இது “நவீனக்கால மச்சு பிச்சு” (modern-day Machu Picchu) என்றும் குறிப்பிடப் படுகிறது.
- பிரிட்ஸ்கர் கட்டிடக் கலைப் பரிசானது ஆண்டுதோறும் "வாழும் கட்டிடக் கலைஞர் அல்லது கட்டிடக் கலைஞர்களைக் கௌரவிப்பதற்காக" வழங்கப் படுகிறது.
- இது பெரும்பாலும் கட்டிடக்கலைக்கான நோபல் பரிசு என்று குறிப்பிடப் படுகிறது.
- 1979 ஆம் ஆண்டில் ஜே ஏ. பிரிட்ஸ்கர் மற்றும் அவரது மனைவி சிண்டி ஆகியோரால் நிறுவப்பட்ட இந்த விருதிற்கு பிரிட்ஸ்கர் குடும்பத்தினராலும் ஹையாட் அறக்கட்டளையினாலும் நிதியுதவி அளிக்கப் படுகிறது.




## காமன்வெல்த்தின் பாயிண்ட்ஸ் ஆப் லைட் விருது

- இந்தியாவின் ‘வன நாயகன்’ என்றும் அழைக்கப்படும் சுற்றுச்சூழல் ஆர்வலர் ஜாதவ் பாயெங், 128வது காமன்வெல்த் பாயிண்ட்ஸ் ஆப் லைட் என்ற விருதை வென்று உள்ளார்.
- இந்த விருது 53 காமன்வெல்த் நாடுகளில் வசிக்கும் மக்களில் சமூகத்திற்குச் சிறப்பான பங்கினை அளிக்கும் மக்களை அங்கீகரிக்கிறது.
- அசாமைச் சேர்ந்த பாயெங், பிரம்மபுத்திரா ஆற்றங்கரையில் ஒரு மரம் கூட இல்லாமல் இருந்த ஒரு மணற்திட்டை ஒரு பரந்த வனவிலங்குகள் கொண்ட இடமாக மாற்றி உள்ளார்.
- அவர் அசாமைச் சேர்ந்த மைசிங் என்ற ஒரு பூர்வீகப் பழங்குடி இனத்தில் பிறந்தவர் ஆவார்.




## இந்தியாவின் 10 பணக்கார கோடீஸ்வரர்கள் 2019

- இது ஆண்டுதோறும் ஃபோர்ப்ஸ் இதழ் தொகுக்கும் ஒரு பட்டியலாகும்.
- 106 ஆக இருந்த மொத்த இந்தியக் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டில் 102 ஆக குறைந்துள்ளது.
- 36.8 பில்லியன் டாலர் சொத்து மதிப்புள்ள முகேஷ் அம்பானி, இந்தியாவின் முதல் பணக்காராக தனது பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.
- அவர் தொடர்ந்து 12வது ஆண்டாக இந்தியாவின் முதல் பணக்காரராக திகழ்கிறார்.





## WWF இந்தியாவின் தூதர்

- செஸ் வீரரான விஸ்வநாதன் ஆனந்த் "உலகளாவிய நிதி – இந்தியா: என்ற அமைப்பின் (WWF – World Wide Fund India) தூதராகப் பெயரிடப் பட்டுள்ளார்.
- இந்தியாவிலிருந்து தேர்வான முதலாவது செஸ் கிராண்ட் மாஸ்டர் இவராவார்.

- இவர் 2000 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் தொடர்ச்சியாக FIDE உலக செஸ் சாம்பியன்ஷிப்பை வென்றுள்ளார். இச்சாதனையைப் புரிந்த முதலாவது ஆசிய வீரர் இவராவார்.
- WWF என்பது 1961 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு சர்வதேச அரசு சாரா அமைப்பாகும்.
- இது உலகில் ஒரு மிகப்பெரிய இயற்கைப் பேணுகை அமைப்பாக விளங்குகின்றது.

## ஜெனி டெய்ட்ச்

- ஆஸ்கர் விருது பெற்ற திரைக்கதையாளர் மற்றும் உயிர்ப்பூட்டுக் கலை (Animator) வித்தகரான ஜெனி டெய்ட்ச் என்பவர் சமீபத்தில் செக் குடியரசில் காலமானார்.
- டெய்ட்ச் முன்றோ, பிம்டெரிபிக் மற்றும் நுட்னிக் போன்ற உயிர்ப்பூட்டப் பட்ட வகை கேலிச் சித்திரங்களுக்காகவும் போப்பேயி மற்றும் டாம் & செர்ரி தொடர் குறித்த அவரது பணிகளுக்காகவும் வெகு சிறப்பாக அறியப் படுகின்றார்.




## நான் ஒரு பூப்பந்தாட்ட வீரர்

- உலக சாம்பியனான P.V. சிந்து என்பவர் "நான் ஒரு பூப்பந்தாட்ட வீரர்" என்ற பிரச்சாரத்தின் தூதராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தப் பிரச்சாரமானது, "பூப்பந்தாட்டத்திற்கான உலகக் கூட்டமைப்பினால்" தொடங்கப் பட்டுள்ளது.
- P.V. சிந்துவைத் தவிர, இதில் இதர தூதுவர்களும் உள்ளனர்.
- உலகப் பூப்பந்துச் சாம்பியனான முதலாவது இந்தியர் P.V. சிந்து ஆவார்.
- கனடாவின் மிச்சலி லி, சீனாவின் ஹவங் யா குயோங் மற்றும் செங் சி வெய், ஜெர்மனியின் வலேஸ்கா நோபளச், ஹாங் காங்கின் சன் ஹோ யென் ஆகியோர் இதன் மற்ற தூதுவர்களாவர்.

# விளையாட்டுச் செய்திகள்

## விம்பிள்டன் 2020

- கரோனா வைரஸ் அச்சுறுத்தலால் விம்பிள்டன் போட்டித் தொடரானது ரத்து செய்யப் பட்டுள்ளது.
- இரண்டாம் உலகப் போரிற்குப் பின்பு இந்தப் போட்டித் தொடர் ரத்து செய்யப் படுவது இதுவே முதன்முறையாகும்.
- விம்பிள்டன் டென்னிஸ் தொடரானது முதன்முதலில் 1877 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது.
- அன்றிலிருந்து இது ஒவ்வொரு ஆண்டும் இலண்டன் நகரில் நடத்தப் படுகின்றது.
- இருப்பினும், இது இரண்டு நிகழ்வுகளின் போது ரத்து செய்யப்பட்டது.
- 1915 ஆம் ஆண்டு முதல் 1918 ஆம் ஆண்டு வரை முதலாவது உலகப் போரின் காரணமாக முதன் முறையாக ரத்து செய்யப்பட்டது.
- 1940 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை இரண்டாவது உலகப் போரின் காரணமாக இது ரத்து செய்யப்பட்டது.
- இது உலகின் மிகப் பழமையான டென்னிஸ் தொடராகும்.
- இது நான்கு கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடர்களில் ஒன்றாகும்.
- பிரெஞ்சு ஓபன், அமெரிக்க ஓபன் மற்றும் ஆஸ்திரேலிய ஓபன் ஆகியவை இதரத் தொடர்களாகும்.
- இதுவரையில் புல் தரையின் மீது விளையாடப்படும் ஒரே தொடர் விம்பிள்டன் ஆகும்.

## 2021 உலக விளையாட்டுகள்

- அமெரிக்காவின் அலபாமாவில் உள்ள பிர்மிங்ஹாமில் நடைபெற இருந்த 2021 உலக விளையாட்டுகள் போட்டியானது 2022 ஆம் ஆண்டிற்குத் தள்ளி வைக்கப் பட்டுள்ளன.
- டோக்கியோ ஒலிம்பிக் போட்டியுடன் ஏற்படும் முரண்பாட்டைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- உலக விளையாட்டுகள் 4 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றன.
- இது ஒலிம்பிக் போட்டியின் ஒரு பகுதியாக இல்லாத 32 விளையாட்டுகளைக் கொண்டுள்ளது.
- உலக விளையாட்டுகள் ஆனது முதன்முதலில் 1981 ஆம் ஆண்டில் நடைபெற்றன.
- இதுவரை, உலக விளையாட்டுகள் ஆப்பிரிக்க நாடுகளில் நடைபெற்றது இல்லை.

## 2020 இந்தியன் சூப்பர் லீக்

- இரண்டு முறை சாம்பியன்ஸ் பட்டம் வென்றுள்ள ஏ.டி.கே அணியானது கோவாவில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்னை அணியை வீழ்த்தி உள்ளது.
- இது இந்தியன் சூப்பர் லீக்கின் ஆறாவது பதிப்பாகும்.
- இந்தப் போட்டியின் வரலாற்றில் மூன்று முறை பட்டத்தை வென்ற ஒரு வெற்றிகரமான அணியாக ATK அணி திகழ்கிறது.
- ATK என்பது மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவைச் சேர்ந்த இந்தியத் தொழில்நுட்பக் கால்பந்து வீரர்களைக் கொண்ட ஓர் கால்பந்து அணியாகும்.

## FIFA - 17 வயதுக்குட்பட்ட பெண்கள் உலகக் கோப்பை

- சர்வதேச கால்பந்து சம்மேளனக் கூட்டமைப்பானது (FIFA - International Federation of Association Football) 17 வயதுக்குட்பட்ட பெண்கள் உலகக் கோப்பையை 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு ஒத்தி வைத்துள்ளது.
- 17 வயதுக்குட்பட்டோர் மற்றும் 20 வயதுக்குட்பட்டோர் ஆகியோருக்கான பெண்கள் உலகக் கோப்பைப் போட்டிகளை ஒத்தி வைக்க சர்வதேச கால்பந்து சம்மேளனக் கூட்டமைப்பானது முடிவு செய்துள்ளது.
- 20 வயதுக்குட்பட்ட பெண்களின் FIFA உலகக் கோப்பையானது பனாமா நாட்டில் உள்ள கோஸ்டாரிகாவில் நடத்த திட்டமிடப் பட்டிருந்தது.
- 17 வயதுக்குட்பட்ட மகளிர் FIFA உலகக் கோப்பையானது இந்தியாவின் குவஹாத்தி, நவி மும்பை, அகமதாபாத், புவனேஸ்வர் மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்களில் நடத்த திட்டமிடப் பட்டிருந்தது.

## ஆசிய இளைஞர் விளையாட்டு போட்டிகள்

- மூன்றாவது ஆசிய இளைஞர் விளையாட்டுக்கள் 2021 ஆண்டு நவம்பர் மாதத்தில் சீனாவில் நடத்தப்பட இருப்பதாக ஆசிய ஒலிம்பிக் குழுவானது அறிவித்துள்ளது.
- ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டியானது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகிறது.
- இது ஆசிய ஒலிம்பிக் குழுவால் நடத்தப் படுகிறது.
- இது ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு அடுத்தபடியாக நடத்தப்படும் இரண்டாவது மிகப்பெரிய விளையாட்டுப் போட்டியாகும்.




## ஆசியக் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப்

- சமீபத்தில் இந்திய தேசிய விளையாட்டுகள் கூட்டமைப்பானது ஆசியக் குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டி 2020 ஆம் ஆண்டில் நவம்பர் – டிசம்பர் மாதங்களில் நடத்தப் படும் என்று அறிவித்துள்ளது.
- இந்தப் போட்டியை நடத்தும் நகரமானது இந்தியக் குத்துச் சண்டைக் கூட்டமைப்பினால் (BFI - Boxing Federation of India) தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றது.
- இந்தப் போட்டியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப் படுகின்றது. ஆனால் ஆரம்பத்தில் இது தொடர்ச்சியான ஆண்டுகளில் நடத்தப்பட்டது.
- BFI என்பது இந்தியாவில் ஒலிம்பிக் குத்துச் சண்டைக்கான நிர்வாக அமைப்பாகும்.
- இது சர்வதேசக் குத்துச் சண்டைக் கூட்டமைப்பில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

## முகவுறை அணிப் படை

- இது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தினால் (BCCI - Board of Control for Cricket in India) ஏற்படுத்தப் பட்டதாகும்.
- இது சச்சின் டெண்டுல்கர், விராட் கோலி, சவுரவ் கங்குலி மற்றும் ராகுல் டிராவிட் போன்ற இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர்களைக் கொண்டுள்ளது.
- இது பொது இடங்களில் முகவுறை அணிவதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# முக்கிய தினங்கள்

## உத்கல் திவாஸ் – ஏப்ரல் 01

- இது ஒடிசா தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று பீகார், வங்காளம், ஒடிசா ஆகிய மாகாணங்களிலிருந்து ஒரு தனி மாநிலமாக பிரிக்கப்பட்டு அதோடு மதராஸ் மாகாணத்தின் கோராபுட் மற்றும் கஞ்ஜம் ஆகிய பகுதிகள் சேர்க்கப்பட்டு ஒடிசா மாநிலமாக உருவாக்கப் பட்டதை நினைவு கூர்கின்றது.
- 2010 ஆம் ஆண்டு நவம்பர் 9 அன்று, இந்தியப் பாராளுமன்றமானது ஒரிசாவை ஒடிசா எனவும் ஒரியா மொழியை ஒடியா எனவும் பெயர் மாற்றம் செய்தது.
- பண்டைய காலத்தின் போது இருந்த கலிங்கப் பேரரசிற்காக வரலாற்றில் இது வெகு சிறப்பாக அறியப்படுகின்றது.
- கி.மு. 250ல், இது அசோகரால் கைப்பற்றப்பட்டது. இதன் விளைவாக இந்த மாநிலம் மௌரியப் பேரரசு ஆட்சியின் கீழ் ஒரு நூற்றாண்டு காலம் செழிப்புடன் ஆளப்பட்டது.

## உலக மன இறுக்க நோய் விழிப்புணர்வு தினம் – ஏப்ரல் 02

- இத்தினமானது ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.
- இது உடல் நலம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அதிகாரப் பூர்வமான 7 தினங்களில் ஒன்றாகும்.
- இது 2007 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது மன இறுக்கப் பிரச்சனை குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "முதிர்வயது நிலையைக் கவனித்தல்" (The Transition to Adulthood) என்பதாகும்.
- மன இறுக்க நோயுடன் உள்ள மக்களை அங்கீகரிப்பதற்காக "நீல நிற ஒளியினை" ஏற்படுத்துவதற்காக உலகம் ஒன்றிணைகின்றது.




## சர்வதேசக் குழந்தைகளின் புத்தக தினம் – ஏப்ரல் 2

- இது ஒரு சர்வதேச அரசு சாரா அமைப்பான இளையவர்களுக்கான புத்தகங்கள் குறித்த சர்வதேச வாரியத்தினால் (International Board on Books for Young People - IBBY) அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- 1967 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இத்தினமானது ஹன்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்

என்பவரின் பிறந்த தினமான ஏப்ரல் 2 ஆம் தேதியை ஒட்டியுள்ள நாட்களில் அனுசரிக்கப் படுகின்றது.

- ❖ இது வாசிப்பின் மீதான நேசிப்பை ஈர்ப்பதற்காகவும் குழந்தைகளின் புத்தகங்கள் குறித்த தகவலைப் பரப்புவதற்காகவும் அனுசரிக்கப் படுகின்றது.
- ❖ 2020 ஆம் ஆண்டின் சர்வதேசக் குழந்தைகளுக்கான புத்தகத் தினத்தை ஆதரிக்கும் நிறுவனம் IBBY ஸ்லோவேனியா ஆகும்.




## கண்ணிவெடி நடவடிக்கைகளில் கண்ணிவெடி விழிப்புணர்வு மற்றும் உதவிக்கான சர்வதேச நாள் - ஏப்ரல் 4

- ❖ 2005 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இந்த நாளைக் கண்ணிவெடி விழிப்புணர்வு நாளாக கடைபிடிப்பதாக அறிவித்தது.
- ❖ இது ஏப்ரல் 4, 2006 அன்று முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- ❖ 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், சர்வதேசச் சமூகத்தின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு மற்றும் அரசு சாராப் பிரதிநிதிகள் மாபுடோவில் (மொசாம்பிக்) ஒன்றுகூடி, “மாபுடோ + 15 பிரகடனம்” மூலம் 2025 ஆம் ஆண்டிற்குள் உலகத்தை கண்ணிவெடி இல்லாத ஒரு உலகாக மாற்ற வேண்டும் என்ற ஒரு இலக்கை நிர்ணயித்தனர்.



## சர்வதேச மனசாட்சி தினம் – ஏப்ரல் 05

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் தேதியானது சர்வதேச மனசாட்சி தினத்தைக் குறிக்கின்றது.
- இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் தினமாகும்.
- இத்தினமானது சுய பிரதிபலிப்பு, அவர்களின் மனசாட்சிப்படி நடத்தல் மற்றும் நல்ல செயல்களை மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்து மக்களுக்கு நினைவுபடுத்த அனுசரிக்கப் படுகின்றது.




## தேசியக் கடல்சார் போக்குவரத்து தினம் – ஏப்ரல் 05

- இத்தினமானது முதன்முறையாக 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 அன்று அனுசரிக்கப் பட்டது.
- இது உலகெங்கிலும் உள்ள கண்டங்களுக்கிடையேயான பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சுழலுக்கு உகந்த முறையிலான வணிகத்திற்கு உதவுதல் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டு முதல், இந்தியக் கடல்சார் போக்குவரத்துத் துறையில் சிறப்பாகப் பங்காற்றியவர்களுக்கு "வருணா" என்ற விருதானது வழங்கப் படுகின்றது.
- மும்பையிலிருந்து ஐக்கிய இராஜ்ஜியத்திற்கு (இலண்டன்) பயணம் மேற்கொண்ட சிந்தியா நீராவிப் போக்குவரத்து நிறுவனத்தின் முதலாவது கப்பலான SS லாயல்டி கப்பல் தனது பயணத்தை ஆரம்பித்த 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 05 ஆம் தேதி அன்று இந்தியக் கப்பல் போக்குவரத்தானது முதன்முறையாகத் தொடங்கப் பட்டது.
- உலகக் கடல்சார் போக்குவரத்து தினமானது 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 அன்று அனுசரிக்கப்பட இருக்கின்றது.
- சர்வதேசக் கடல்சார் போக்குவரத்து அமைப்பின்படி, "நீடித்த பூமிக்கான நீடித்த கப்பல் போக்குவரத்தானது" 2020 ஆம் ஆண்டின் உலகக் கடல்சார் போக்குவரத்து தினத்தின் கருத்துருவாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.



## வளர்ச்சி மற்றும் அமைதிக்காக விளையாட்டிற்கா ன சர்வதேச தினம் - ஏப்ரல் 06

- இது சமூக மாற்றம், சமுதாய வளர்ச்சி, அமைதி மற்றும் புரிதலை ஏற்படுத்துதல் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டி விளையாட்டின் வலிமை குறித்து அனுசரிக்கப் படும் ஒரு வருடாந்திர அனுசரிப்பாகும்.
- "#BEActive" என்ற ஒரு பிரச்சாரமானது இந்த ஆண்டில் சர்வதேசக் கால்பந்து சம்மேளனம் என்ற அமைப்பினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இத்தினமானது 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்படுத்தப் பட்டு, 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 06 அனுசரிக்கப்படுகின்றது. இது சர்வதேச ஒலிம்பிக் குழுவினால் ஆதரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது 1896 ஆம் ஆண்டில் ஏதென்ஸில் நவீன காலத்தில் முதலாவது ஒலிம்பிக் விளையாட்டுகள் தொடங்கப் பட்டதைக் குறிக்கின்றது.





## இராணுவ மருத்துவப் படை தினம் - ஏப்ரல் 03

- ஏப்ரல் 3, 2020 அன்று, "சர்வ சாந்து நிர்மயா" என்ற குறிக்கோளின் கீழ் இராணுவ மருத்துவப் படை நிறுவன தினம் கொண்டாடப் பட்டது.
- "எல்லா மனிதர்களும் குறைபாடுகள் மற்றும் நோய்களிலிருந்து விடுபடட்டும்" என்பதே "சர்வ சாந்து நிர்மயா" என்பதன் பொருளாகும்.
- இராணுவ மருத்துவப் படையின் முக்கிய பங்களிப்பாளராக இந்திய மருத்துவச் சேவை இருந்தது.
- இது 1612 ஆம் ஆண்டில் கிழக்கிந்திய நிறுவனம் உருவாக்கப்பட்ட போது நிறுவப் பட்டது.
- இந்திய மருத்துவச் சேவைகள், இந்திய மருத்துவமனை மற்றும் செவிலியர் படை மற்றும் இந்திய மருத்துவத் துறையை இணைத்து 1943 ஆம் ஆண்டில் இராணுவ மருத்துவப் படைகள் நிறுவப் பட்டன.

## உலக சுகாதார தினம் - ஏப்ரல் 7


- உலகப் பாதுகாப்பையும் ஆரோக்கியத்தையும் பராமரிப்பதில் மருத்துவத் தாதிகள் மற்றும் செவிலியர்களின் பங்களிப்பைக் கொண்டாடும் நாளாக இது குறிக்கப் படுகிறது.
- "செவிலியர்கள் மற்றும் மருத்துவத் தாதிகள் ஆகியோருக்கான ஆதரவு" என்பது இத்தினத்தின் இந்த ஆண்டிற்கான கருப்பொருளாகும்.
- புளோரன்ஸ் நைட்டிங்கேலின் 200வது பிறந்த நாளை முன்னிட்டு 2020 ஆம் ஆண்டை "செவிலியர் மற்றும் மருத்துவத் தாதிகளின் ஆண்டு" என்று உலக சுகாதார அமைப்பு தேர்வு செய்துள்ளது.

- ❖ உலக சுகாதார நாளில், 2020 ஆம் ஆண்டிற்கான முதல் உலக செவிலியர் அறிக்கையானது வெளியிடப்பட உள்ளது.
- ❖ உலக சுகாதார அமைப்பானது 1948 ஆம் ஆண்டின் இந்த நாளில் (ஏப்ரல் 7) தனது முதல் உலக சுகாதார மாநாட்டை நடத்தியது.




## 1994 ஆம் ஆண்டு ருவாண்டா இனப் படுகொலை மீதான பிரதிபலிப்பிற்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 07

- ❖ 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 அன்று ஐக்கிய நாடுகள் அமைப்புகளால் இது ஒரு சர்வதேச அனுசரிப்பாக அங்கீகரிக்கப் பட்டது.
- ❖ 8,00,000ற்கும் மேற்பட்ட டுட்சி இன மக்கள் ருவாண்டாவில் ஹுட்டு இனத்தின் தலைமையிலான ஒரு தீவிரவாத அமைப்பு அரசினால் மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலையில் கொல்லப் பட்டனர்.
- ❖ டுட்சி இனமானது ருவாண்டா மற்றும் புருண்டியில் உள்ள 3 மிகப்பெரிய குழுக்களில் இரண்டாவது மிகப்பெரிய மக்கட்தொகைப் பிரிவாக விளங்குகின்றது. மற்ற இரண்டு குழுக்கள் ஹுட்டு (மிகப் பெரியது) மற்றும் துவா (சிறியது) ஆகும்.
- ❖ டுட்சி என்பது ஆப்பிரிக்கப் பெரு ஏரிகள் நிலப் பகுதியில் உள்ள ஒரு சமூகப் பிரிவு அல்லது இனக் குழுவாகும்.
- ❖ ஆப்பிரிக்கப் பெரு ஏரிகள் நிலப்பகுதி என்பது கிழக்கு ஆப்பிரிக்கப் பிளவுப் பள்ளத்தாக்கில் உள்ள மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிளவுப் பள்ளத்தாக்கின் ஒரு பகுதியாக விளங்கும் ஏரிகளின் ஒரு தொடர் வரிசையாகும்.
- ❖ இது பரப்பில் உலகின் மூன்றாவது மிகப்பெரிய நன்னீர் ஏரியான விக்டோரியா ஏரி, கொள்ளளவு மற்றும் ஆழத்தில் உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஏரியான தங்கநாயகா ஏரி மற்றும் பரப்பில் உலகில் எட்டாவது மிகப்பெரிய நன்னீர் ஏரியான மலாவி ஏரி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- ❖ புருண்டி, காங்கோ மக்களாட்சிக் குடியரசு, கென்யா, மலாவி, ருவாண்டா, தான்சானியா மற்றும் உகாண்டா ஆகியவை ஆப்பிரிக்கப் பெரு ஏரிகள் நிலப் பகுதியில் உள்ள நாடுகளாகும்.




## வீரமிகு தினம் – ஏப்ரல் 9

- மத்திய ரிசர்வ் காவல் படையானது (CRPF - Central Reserve Police Force) தனது வீரமிக்க தினத்தை (சவுரிய திவாஸ்) ஏப்ரல் 9 அன்று கொண்டாடியது.
- 1965 ஆம் ஆண்டு இத்தினத்தன்று, குஜராத்தின் ரான் ஆப் கட்ச்சில் உள்ள சர்தார் சோதனைச் சாவடியில் பாகிஸ்தான் இராணுவத்தின் தாக்குதல் முயற்சிகளின் போது CRPF ஆனது தனது 6 வீரமிக்க வீரர்களை இழந்தது.
- பாகிஸ்தான் ராணுவத்திற்கு எதிராக தரைப்படையைச் சேர்ந்த ஒரு முழுமையான படைப்பிரிவு தீவிரமாக போரிட்டு வெற்றி பெற்றது இதுவே முதன்முறையாகும்.


## இந்தியக் கலாச்சார உறவுகள் கழகம் (ICCR) ஏப்ரல் 09

- ICCR (Indian Council for Cultural Relations) ஆனது ஏப்ரல் 09 ஆம் தேதியன்று தனது தொடக்க தினத்தைக் கொண்டாடியது.
- ICCR ஆனது சுதந்திர இந்தியாவின் முதலாவது கல்வி அமைச்சரான மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களால் 1950 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## உலக ஹோமியோபதி தினம் – ஏப்ரல் 10

- இது ஹோமியோபதியின் நிறுவனரான டாக்டர் ஹாகினிமான் அவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- டாக்டர் கிறிஸ்டியன் பெரிட்ரிக் சாமுவெல் ஹாகினிமான் என்பவர் ஜெர்மனியைச் சேர்ந்த மருத்துவர் ஆவார்.
- இவர் ஹோமியோபதியின் கண்டுபிடிப்பிற்காக சிறப்பாக அறியப் படுகின்றார்.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "கல்வி மற்றும் மருத்துவ நடைமுறையுடன் ஆராய்ச்சியை இணைத்தல் : மேம்படுத்தப்பட்ட அறிவியல் கூட்டிணைவுகள்" என்பதாகும்.
- உலக ஹோமியோபதி விழிப்புணர்வு வாரமானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 10 மற்றும் ஏப்ரல் 16 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் அனுசரிக்கப் படுகின்றது.

- ஹோமியோபதி என்பது இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற மருத்துவ முறைகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- இது ஒரு மாற்று மருத்துவ வடிவமாக விளங்குகின்றது.
- இது மனித உடல் தானே நோய் குணமாதலை ஊக்குவிக்கும் கொள்கையின் அடிப்படையில் செயல்படும் ஒரு மருத்துவ முறையாகும்.
- ஆயுஷ் ஆனது ஆயுர் வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றின் மருத்துவ சேவைகளைக் கொண்டு உள்ளது.
- ஹோமியோபதியில் மிகப்பெரிய மருந்து உற்பத்தியாளர் மற்றும் வர்த்தகர்களைக் கொண்ட நாடாக இந்தியா விளங்குகின்றது.
- ஆயுஷ் அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆண்டிற்கான அதிகாரப்பூர்வக் கருத்துரு, "பொதுச் சுகாதாரத்தில் ஹோமியோபதியின் நிலையை மேம்படுத்துதல்" என்பதாகும்.




## தேசிய நில அளவை தினம் – ஏப்ரல் 10

- நில அளவை வரலாற்றில் இந்தத் தினமானது முக்கியமான தினமாக விளங்குகின்றது.
- இத்தினத்தில் மேஜர் வில்லியம் லம்ப்டோன் என்பவர் 1802 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் தேதியன்று சென்னையில் உள்ள செயின்ட் தாமஸ் மலையிலிருந்து இமயமலை வரையிலான சிறந்த வளைவைக் கணக்கிடுவதற்கான பணியான GTS (மிகப்பெரும் முக்கோணவியல் ஆய்வு) என்ற ஒரு ஆய்வைத் தொடங்கினார்.
- GTS (Great Trigonometrical Survey) என்பது அறிவியல் பூர்வ அணுகுமுறையுடன் இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் அளவிடுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும்.
- இந்தியக் கள ஆய்வு நிறுவனம் என்பது இந்தியாவில் வரைபடமிடல் மற்றும் வரைபட ஆய்வை மேற்கொள்ளும் ஒரு மத்தியப் பொறியியல் நிறுவனமாகும்.
- ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் நிலப் பகுதிகளை ஒருங்கிணைப்பதற்கு உதவுவதற்காக 1767 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனமானது இந்திய அரசின் பழமையான பொறியியல் துறைகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- இதன் தலைமையகம் டேராடூனில் அமைந்துள்ளது.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படுகின்றது.
- இந்த நிறுவனத்தின் முழக்கம், "தேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் நாம் அறிவோம் ஏனெனில் தேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் நாம் அளந்துள்ளோம்" என்பதாகும்.

## பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினம் – ஏப்ரல் 11

- இது பெண்களுக்கான சரியான சுகாதார நலம் மற்றும் கர்ப்பிணி & பாலூட்டும் தாய்மார்களுக்கான மகப்பேறு வசதிகள் ஆகியவை குறித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இது இந்திய வெள்ளை நாடாக் கூட்டிணைவின் (WRAI - White Ribbon Alliance India) ஒரு முன்னெடுப்பாகும்.
- 2003 ஆம் ஆண்டில் இந்திய அரசானது ஏப்ரல் 11 ஆம் தேதியை பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினமாக அறிவித்தது.
- சமூக அளவில் பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினத்தைக் கொண்ட உலகின் முதலாவது நாடு இந்தியா ஆகும்.
- குழந்தைப் பிறப்பில் மிகவும் அபாயமுள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். உலக அளவில் மொத்த தாய்மார்கள் இறப்பில் 15% இறப்புகள் இங்கு நிகழ்கின்றன.
- கஸ்தூரிபா காந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு, ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்பான தாய்மைக்கான தேசிய தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- கஸ்தூரிபா காந்தி நமது தேசத் தந்தையான மோகன் தாஸ் கரம் சந்த் காந்தியின் மனைவி ஆவார்.




## மனித விண்வெளிப் பயணத்திற்கான சர்வதேச தினம் - ஏப்ரல் 12

- 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் தேதியில் யூரி காகரின் என்ற சோவியத்தைச் சேர்ந்த நபரால் முதலாவது மனித விண்வெளிப் பயணமானது மேற்கொள்ளப் பட்டது.
- மனித விண்வெளிப் பயணத்தின் 50வது நினைவு தினக் கொண்டாட்டங்களுக்கு சில தினங்களுக்கு முன்னதாக, 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் 07 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 65வது அமர்வில் இத்தினமானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- யூரி காகரின் என்பவர் பூமியைச் சுற்றி வலம் வந்த முதலாவது மனிதராக உருவெடுத்துள்ளார். இவர் மனித விண்வெளிப் பயணம் என்ற ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்தார்.
- ஏப்ரல் 12 ஆம் தேதியானது 1981 ஆம் ஆண்டில் கொலம்பியாவில் STS – 1 என்ற முதலாவது விண்வெளி விண்கலம் ஏவப்பட்டதைக் குறிக்கின்றது. இத்தினத்தன்று இந்த ஏவுதலும் அனுசரிக்கப் படுகின்றது.



## ஜாலியன் வாலாபாக் படுகொலை – ஏப்ரல் 13

- இந்திய அரசானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் தேதியன்று ஜாலியன் வாலாபாக் படுகொலையின் நினைவு தினத்தை அனுசரித்தது.
- இது அமிர்தசரஸ் படுகொலை என்றும் அழைக்கப்படுகின்றது.
- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று, (பைசாகி தினம்) பஞ்சாப்பின் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் மக்களால் அமைதியான கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.
- ரௌலட் சட்டத்திற்கு எதிராக அமைதியாகப் போராட மக்கள் அப்பூங்காவில் கூடினர்.
- சத்யபால் மற்றும் சைய்ப்புதின் கிச்லு ஆகிய 2 தேசியத் தலைவர்களின் கைதை எதிர்த்தும் மக்கள் ஒன்று கூடினர்.
- ஜெனரல் டயர் இந்தக் கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார். இதில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் இறந்தனர்.



## சியாச்சின் தினம் - ஏப்ரல் 13

- இந்திய இராணுவம் சியாச்சின் தினத்தை அனுசரித்தது.
- “மேகதூத் நடவடிக்கையின்” கீழ் இந்திய இராணுவத்தின் வீரத்தைப் போற்றுவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.
- மேகதூத் நடவடிக்கையானது 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று தொடங்கப்பட்டது.
- இந்த நடவடிக்கையின் கீழ், இந்தியத் துருப்புகள் காஷ்மீரில் உள்ள சியாச்சின் பிரதேசம் முழுவதையும் வெற்றிகரமாக தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.


## உலக இரத்த ஒட்டுண்ணி (Chagas disease) நோய் தினம் – ஏப்ரல் 14

- 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று உலகச் சமூகமானது முதன்முறையாக உலக இரத்த ஒட்டுண்ணி நோய் தினத்தை அனுசரித்தது.
- மேலும் இந்த நோய் “அமெரிக்க டிரப்பனோசோமியாசிஸ்” (American trypanosomiasis) என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்த நோயானது மிகவும் அமைதியான மற்றும் அமைதியாக்கப் பட்ட நோயாகக் குறிப்பிடப் படுகின்றது.
- இது மெதுவாக செயல்படும் திறன் கொண்டதாக உள்ளது. இது வறுமையில் வாழும் மக்களை மிக அதிக அளவில் பாதிக்கின்றது.

- இது மிக முக்கியமாக இலத்தீன் அமெரிக்காவில் உள்ள வறுமையில் வாடும் மக்களைப் பாதிக்கின்றது.
- இது அமெரிக்கா, மேற்கு பசிபிக், ஐரோப்பா, கனடா ஆகியவற்றில் மிகப் பரவலாகக் காணப்படுகின்றது.
- இத்தினமானது உலகச் சுகாதார அமைப்பால் குறிக்கப்படுகின்றது.
- இது டி குரூஸி (T cruzi) ஒட்டுண்ணி போன்ற நோய்க் கடத்தியால் கடத்தப்படுகின்றது.
- மேலும் இது இரத்தத்தை உறிஞ்சும் வண்டுகளின் சிறுநீர் மற்றும் மலம் ஆகியவற்றுடன் ஏற்படும் தொடர்பின் மூலமும் பரவுகின்றது.
- ஆனால் இது ஒரு மனிதரிடமிருந்து மற்றொரு மனிதருக்குப் பரவாது.
- இருப்பினும், இது பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தை வேறு ஒருவருக்குச் செலுத்துவதின் மூலம் பரவும் திறன் கொண்டது.
- 1909 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று பிரேசிலில் இந்த நோய் கண்டறியப்பட்ட நோயாளியான டாக்டர் கார்லோஸ் ரிபேரியோ ஜஸ்டினேனோ சாகாஸ் என்பவரின் நினைவாக இதற்கு இப்பெயர் இடப்பட்டுள்ளது.
- இது புறக்கணிக்கப்பட்ட வெப்ப மண்டல நோய்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. இது உலகம் முழுவதும் வளரும் நாடுகளில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட மக்களைப் பாதிக்கின்றது என்று அதற்கு பொருள்.

## அம்பேத்கர் ஜெயந்தி – ஏப்ரல் 14

- இந்தியா பீமாராவ் ராம்ஜி அம்பேத்கரின் 129வது பிறந்த தினத்தைக் கொண்டாடியது.
- அம்பேத்கர் மத்தியப் பிரதேசத்தின், மஹோவ் நகரில் பிறந்தார்.
- இந்த நகரானது 2003 ஆம் ஆண்டில் டாக்டர் அம்பேத்கர் நகர் என்று பெயர் மாற்றப் பட்டது.




- இந்திய அரசியலமைப்பானது அம்பேத்கரின் தலைமையின் கீழ் உருவாக்க பட்டதாகும்.
- இந்திய அரசு டாக்டர் அம்பேத்கரின் நினைவாக பஞ்ச தீர்த்தத்தை (5 இடங்கள்) அமைத்துள்ளது.
- பஞ்ச தீர்த்தம் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.
  - அம்பேத்கரின் பிறப்பிடமான மஹோ
  - ஐக்கிய இராஜ்ஜியத்தில் இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் போது அவர் தங்கிய இடம்.
  - அவர் கல்வி கற்ற நாக்பூரில் உள்ள தீட்சை பூமி.

- தில்லியில் உள்ள மகாபரிநிர்வாண் தலம்.
- மும்பையில் உள்ள சைத்திய பூமி.

## இமாச்சல் தினம் – ஏப்ரல் 15

- இந்திய விடுதலைக்குப் பின்பு, இமாச்சலப் பிரதேசத்தின் தலைமை ஆணையரக மாகாணமானது 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று ஒருங்கிணைக்கப்பட்டது.
- இது மேற்கு இமயமலைப் பகுதிகளில் உள்ள 28 சிறிய சுதேச அரசுகளின் (நிலப்பிரபுத்துவ மற்றும் ஜெயில்தார்கள் உள்ளிட்ட) ஒருங்கிணைப்பின் விளைவாக உருவானதாகும்.
- இந்திய ஒன்றியத்தின் 18வது மாநிலம் இமாச்சலப் பிரதேசமாகும்.
- 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று இமாச்சலப் பிரதேசமானது மாநில அந்தஸ்தைப் பெற்றது.

## உலகக் கலை தினம் – ஏப்ரல் 15

- இது யுனெஸ்கோவினால் அனுசரிக்கப்படும் நுண்கலைகளுக்கான ஒரு சர்வதேச அனுசரிப்பாகும்.
- இது உலகம் முழுவதும் ஆக்கப்பூர்வ மற்றும் படைப்பு தொடர்பான நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை அதிகப்படுத்துவதற்காக யுனெஸ்கோவின் ஒரு பங்காளரான சர்வதேசக் கலைக் கூட்டமைப்பினால் (IAA - International Association of Art) அறிவிக்கப்பட்டது.
- இது கூகுள் கலைத் திட்டத்தினால் நிகழ்நேரத்திலும் ஆதரிக்கப்படுகின்றது.
- முதலாவது உலகக் கலை தினமானது 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று அனுசரிக்கப் பட்டது.
- லியோனார்டோ டாவின்சி என்பவரின் பிறந்த தினத்தின் நினைவாக இத்தினமானது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இவர் இத்தாலியைச் சேர்ந்த ஓர் ஓவியராக அறியப் படுகின்றார்.
- இவர் தொல்லுயிரியல், புதைபடிவத் தடயவியல் மற்றும் கட்டிடக் கலையின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.
- இவர் உலக அமைதி, சுதந்திரமான சிந்தனையின் வெளிப்பாடு, சகிப்புத் தன்மை மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றின் அடையாளமாகக் கருதப்படுகின்றார்.

### *இவரது பணிகள்*

- மோனா லிசா என்பது இவரது பணிகளில் மிகவும் புகழ்பெற்றது மற்றும் இதுவரை மேற்கொள்ளப்படாத மிகப் புகழ்பெற்ற ஒரு சித்திரப் பிரதி ஓவியமாகக் கருதப் படுகின்றது.
- இவரது "லாஸ்ட் சப்பர்" என்பது வரலாற்றில் அதிக அளவில் மறுபதிப்பு செய்யப்பட்ட ஓவியமாகும்.
- இவரின் "விட்ருவியன் மேன் ஓவியம்" ஒரு கலாச்சாரச் சின்னமாகக் கருதப் படுகின்றது.
- இவரின் "சல்வாடோர் முன்டி" என்பது கலைப் பணிக்காக இதுவரை அளிக்கப்படாத அதிக விலையைக் கொண்ட ஒரு ஓவியமாகும்.

- இது 2017 ஆம் ஆண்டில் நியூயார்க்கில் கிறிஸ்டியின் ஏலத்தின் போது உலகச் சாதனை விலையாக $450.3 மில்லியனுக்கு விற்கப் பட்டது.



## உலக இரத்தப் போக்கு நோய் தினம் – ஏப்ரல் 17

- இத்தினமானது உலக இரத்தப் போக்கு நோய்க் கூட்டமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.
- இது மரபுவழி இரத்தப் போக்கு நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இரத்தப் போக்கு நோய் என்பது இரத்தம் சரியாக உறையாகாமல் இருக்கும் ஒரு மரபுவழி இரத்தப் போக்கு நோயாகும்.
- இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "Get + Involved Virtually and Stay Safe" (கிட்டத்தட்ட இணைந்தும் பாதுகாப்பாகவும் இருத்தல்) என்பதாகும்.
- ஏப்ரல் 17 என்ற தேதியானது உலக இரத்தப் போக்கு நோய்க் கூட்டமைப்பின் நிறுவனரான, கடுமையான இரத்தப் போக்கு நோயுடன் பிறந்த கனடா நாட்டு வணிகரான பிரான்க் ஸ்னாபெலின் பிறந்த தினமாகும்.




## உலகப் பாரம்பரிய தினம் – ஏப்ரல் 18

- இது நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான சர்வதேச தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இத்தினத்தை அனுசரிப்பதன் நோக்கம் சர்வதேச நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்கள் ஆணையத்தினால் (ICOMOS - International Council on Monuments and Sites) மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் மூலம் கலாச்சாரப் பாரம்பரியத்தை ஊக்குவிப்பதாகும்.




- ஏப்ரல் 18 ஆம் தேதியானது நினைவுச் சின்னங்கள் மற்றும் தளங்களுக்கான சர்வதேசத் தினமாக அனுசரிக்கப்பட வேண்டும் என்று ICOMOS பரிந்துரைத்தது.
- இதற்கு 1983 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் பொதுச் சபையினால் ஒப்புதல் அளிக்கப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு, "பகிரப்பட்ட கலாச்சாரம்; பகிரப்பட்ட பாரம்பரியம் மற்றும் பகிரப்பட்டப் பொறுப்புடைமை" என்பதாகும்.
- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் 2020 ஆண்டின் உலகக் கலாச்சாரத் தினத்தை மாமல்லபுரம் மற்றும் டெல்லி ஹுமாயுன் கல்லறை ஆகியவற்றின் மீதான ஒரு இணைய தளக் கருத்தரங்குடன் அனுசரித்தது
- யுனெஸ்கோ அமைப்பானது உலகப் பாரம்பரியத் தளத்தை சிறப்புப் பாதுகாப்பு தேவைப்படுகின்ற இடம் மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பு அல்லது இயற்கையாக (அ) மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு பகுதி என்று வரையறுக்கப் படுகின்றது.
- இந்தியாவில் மொத்தம் 38 உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.
- இதில் 30 கலாச்சாரத் தளங்கள், 7 இயற்கைத் தளங்கள் மற்றும் 1 கலப்புத் தளம் ஆகியவை உள்ளடங்கும்.
- உலகில் அதிக எண்ணிக்கையிலான பாரம்பரியத் தளங்களைக் கொண்ட 6வது நாடு இந்தியா ஆகும்.

## உலகக் கல்லீரல் தினம் – ஏப்ரல் 19

- இது கல்லீரல் தொடர்பான நோய்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- மூளையை அடுத்து, உடலில் உள்ள மிகவும் சிக்கலான உறுப்பு மற்றும் இரண்டாவது மிகப்பெரிய உறுப்பு கல்லீரல் ஆகும்.
- இது நமது உடலின் செரிமான அமைப்பில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.
- ஹெப்படைடிஸ் என்ற கூறானது கல்லீரலின் வீக்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றது.
- இது மது போன்ற தீங்கு விளைவிக்கக் கூடிய பொருள்களுக்கு கல்லீரல் உட்படுத்தப்படும் பொழுது அல்லது வைரஸ் தொற்று ஆகியவற்றினால் ஏற்படுகின்றது.
- 2018 ஆம் ஆண்டு ஜூலை 28 அன்று, இந்திய அரசின் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகமானது தேசிய வைரஸ் ஹெப்படைடிஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்தத் திட்டமானது 2030 ஆம் ஆண்டு வாக்கில் வளம் குன்றா வளர்ச்சி இலக்கு 3.3 என்ற இலக்கை அடையும் பொருட்டு இந்தியாவில் ஹெப்படைடிஸ் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவது மற்றும் அதைத் தடுப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு உள்ளது.




## ஐக்கிய நாடுகள் சீன மொழி தினம் – ஏப்ரல் 20


- இது முதன்முதலில் 2010 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இது கேன்ஜி என்பதற்கு மரியாதை செலுத்துவதற்காக அனுசரிக்கப்பட்டது.
- கேன்ஜி என்பவர் சீன எழுத்துக்களைக் கண்டறிந்த ஒரு புராணக் காலம் சார்ந்த நபர் ஆவார்.
- சீன மொழியானது 1946 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் (UN - United Nations) அலுவல்பூர்வ மொழிகளில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் அமைப்பில் 7 அலுவல்பூர்வ மொழிகள் உள்ளன.
- அவையாவன: அரபி, ஆங்கிலம், சீனம், ரஷ்யா, ஸ்பானியம் மற்றும் பிரெஞ்சு ஆகும்.
- ஐக்கிய நாடுகளின் செயலகத்தின் பணிக்கான மொழிகள் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு ஆகும்.




## குடிமைப் பணிகள் தினம் – ஏப்ரல் 21

- 1947 ஆம் ஆண்டின் இத்தினத்தன்று சர்தார் வல்லபாய் படேல் சுதந்திர இந்தியாவில் தில்லியில் உள்ள மெட்கால்ப் இல்லத்தில் முதல் பிரிவு குடிமைப் பணியாளர்களிடம் உரையாற்றினார்.
- இவர் குடிமைப் பணியாளர்களை “இந்தியாவின் எஃகுச் சட்டகம்” என்று குறிப்பிட்டார்.
- நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறையானது இத்தினத்தை அனுசரிக்கின்றது.

❖ இத்தினத்தின் முதலாவது அனுசரிப்பானது 2006 ஆம் ஆண்டில் நிகழ்த்தப் பட்டது.




## உலகப் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத் தினம் – ஏப்ரல் 21

❖ இத்தினமானது ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.

❖ இது ஐக்கிய நாடுகளின் வளம் குன்றா வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப்படுகின்றது.

❖ மேலும் உலகமானது ஏப்ரல் 15 முதல் ஏப்ரல் 21 வரை உலகப் படைப்பாற்றல் புத்தாக்க வாரத்தையும் அனுசரிக்கின்றது.

❖ இது முதன்முறையாக 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று அனுசரிக்கப் பட்டது.




## சர்வதேச அன்னைப் புவித் தினம் – ஏப்ரல் 22

- இது 1970 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஆதரவை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- இத்தினமானது இந்த ஆண்டில் "காலநிலை நடவடிக்கை" என்ற கருப்பொருளுடன் அனுசரிக்கப் பட்டது.
- இது உலகப் புவித் தின வலையமைப்பினால் அனுசரிக்கப் படுகின்றது.
- புவித் தின வலையமைப்பு என்பது ஒரு லாப நோக்கற்ற அமைப்பாகும்.
- இந்த ஆண்டானது உலகப் புவித் தினத்தின் 50வது நிறைவு ஆண்டாகும்.
- புவித் தினமானது அதன் 50வது நிறைவு தினத்தில் 8 மில்லியன் மக்களை "பூமியின் சவால் 2020" என்ற நிகழ்வில் பங்கு கொள்ள வைப்பதற்காக மக்கள்சார் அறிவியல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை வழங்குகின்றது.
- 2016 ஆம் ஆண்டு புவித் தினத்தன்று, புகழ்பெற்ற பாரிஸ் ஒப்பந்தமானது அமெரிக்கா, சீனா மற்றும் இதர 120 நாடுகளினால் கையெழுத்திடப்பட்டது.
- புவித் தினம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுக்காக அமெரிக்க மேல்சபை உறுப்பினரான கேலார்ட் நெல்சன் என்பவரால் துவக்கி வைக்கப் பட்டது.




## தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் (ICT) பெண்களுக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 23

- இது 2010 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU - International Telecommunication Union) ஒரு முன்னெடுப்பாகும்.
- இது ICTல் (Information and Communication Technologies) ஆய்வுகள் மற்றும் வாழ்க்கைப் போக்கு ஆகியவை குறித்து கருத்தில் கொள்வதற்காக பெண்கள் மற்றும் இளம் பெண் குழந்தைகளை மேம்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு உலகளாவிய முயற்சியாகும்.
- ITU என்பது ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு சிறப்புமிகு தொலைத் தொடர்பு நிறுவனமாகும்.



## உலக புத்தக தினம் – ஏப்ரல் 23

- இது வாசித்தல், பிரசுரித்தல் மற்றும் காப்புரிமை ஆகியவை குறித்து ஊக்குவிப்பதற்காக யுனெஸ்கோவினால் அனுசரிக்கப்படும் ஒரு வருடாந்திர நிகழ்வாகும்.
- இது உலக புத்தக காப்புரிமை தினம் அல்லது சர்வதேச புத்தக தினம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இது 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 அன்று முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டானது இத்தினத்தின் 25வது பதிப்பாகும்.
- மலேசியாவின் கோலாலம்பூர் நகரமானது 2020 ஆம் ஆண்டிற்கான உலக புத்தகத் தலைநகரமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் முழக்கம் "கேஎல் பாகா – வாசித்தல் மூலம் நலம் பெறுதல்" என்பதாகும்.
- இத்தினத்தன்று வில்லியம் ஷேக்ஸ்பியர், மிகுல் செர்வன்டிஸ் மற்றும் இன்கா கேர்சிலசோ டி லா வேகா போன்ற சில பிரபலமான புத்தக ஆசிரியர்கள் இறந்ததால், ஏப்ரல் 23 ஆனது மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.




## ஐக்கிய நாடுகள் ஆங்கில மொழி தினம் – ஏப்ரல் 23

- வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறப்பு மற்றும் இறப்பு தினமாக ஏப்ரல் 23 என்ற தேதியானது பாரம்பரியமாக அனுசரிக்கப் படுவதன் காரணமாக இத்தினமானது தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இது 2010 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுத் தகவல் துறையினால் ஏற்படுத்தப் பட்டது.
- சீன மொழியான மாண்டரின் மற்றும் ஸ்பானிஷ் ஆகியவற்றிற்கு அடுத்து உலகின் அதிகம் பேசப்படும் மூன்றாவது மொழி ஆங்கிலம் ஆகும்.
- ஐக்கிய நாடுகள் ஸ்பானிஷ் மொழி தினமானதும் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 23 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இது 2010 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவினால் ஏற்படுத்தப் பட்டது.
- இது பன்மொழித்துவம் மற்றும் கலாச்சாரப் பன்முகத் தன்மையை அனுசரிப்பதற்காகவும் இந்த அமைப்பு முழுவதும் 6 அலுவல்பூர்வ மொழிகளின் சமமான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகவும் அனுசரிக்கப் படுகின்றது.
- மொழிகளுக்கான ஐக்கிய நாடுகள் தினங்கள் பின்வருமாறு
    - அரபி (டிசம்பர் 18)
    - சீன மொழி (ஏப்ரல் 20)
    - ஆங்கிலம் (ஏப்ரல் 23)

- பிரெஞ்சு மொழி (மார்ச் 20)
- ரஷ்ய மொழி (ஜுன் 06)
- ஸ்பானிஷ் மொழி (ஏப்ரல் 23)

## தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினம் – ஏப்ரல் 24

- முதலாவது தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினமானது 2010 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- 1992 ஆம் ஆண்டில் இந்தியாவின் பஞ்சாயத்து அமைப்பில் நிகழ்ந்த மிகப்பெரிய மாற்றமானது பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் (73 வது திருத்தம்) வடிவில் ஏற்பட்டதாகும்.
- இந்தச் சட்டமானது 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று நடைமுறைக்கு வந்தது.
- ஒவ்வொரு ஆண்டும் இத்தினத்தில், மத்தியப் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது ஒரு தேசியக் கருத்தரங்கை நடத்துகின்றது.
- இந்த அமைச்சகமானது சிறப்பாக செயல்படும் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு "பஞ்சாயத்து சசாக்திக்கரன் புரஸ்கர்/ராஷ்டிரிய கவுரவ் கிராம் சபை புரஸ்கர்" என்ற விருதினை வழங்குகின்றது.
- மேலும், இந்த அமைச்சகமானது சிறப்பாகச் செயல்படும் பஞ்சாயத்துகளுக்கு பின்வரும் விருதுகளையும் வழங்குகின்றது.
  - மின்னணு – பஞ்சாயத்து புரஸ்கர்
  - நானாஜி தேஷ்முக் ராஷ்டிரிய கவுரவ் கிராம சபை புரஸ்கர்
  - கிராமப் பஞ்சாயத்து வளர்ச்சித் திட்ட விருது
  - தீன தயாள் உபாத்யாய பஞ்சாயத்து சசாக்திக்கரன் புரஸ்கர்
  - குழந்தைகளுக்கு உகந்த கிராமப் பஞ்சாயத்து விருது
- இந்தியப் பிரதமர் ஒருங்கிணைந்த மின்னணு கிராம சுவராஜ் என்ற இணைய தளத்தையும் மற்றும் அதற்கான ஒரு கைபேசிச் செயலியையும் தொடங்கியுள்ளார்.
- மேலும் இவர், நிலங்களை ஒருங்கிணைப்பதற்காகவும் நிலப் பிரச்சினைகளைக் குறைப்பதற்காகவும் சுவாமித்வா என்ற ஒரு திட்டத்தையும் தொடங்கியுள்ளார்.
- இந்தத் திட்டமானது கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்திரப் பிரதேசம், ஹரியானா, உத்தரகண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்திற்காக, இந்த அமைச்சகமானது மாநில வருவாய்த் துறை, பஞ்சாயத்து ராஜ் துறை, இந்திய நில அளவை ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.

## அமைதிக்கான பன்னாட்டு முறைமை மற்றும் அரசியல் செயலாண்மை திறனுக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 24

- இது ஐக்கிய நாடுகளால் முதன்முறையாக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று அனுசரிக்கப் பட்டது.
- மேலும், இது ஐக்கிய நாடுகளின் மூன்று தூண்களை ஆதரிப்பதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் அனுசரிக்கப்படுகின்றது.
- அமைதி & பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் வளர்ச்சி ஆகியவை இந்த 3 தூண்களாகும்.
- கோவிட் – 19 தொற்றிற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்காக வேண்டி

பன்னாட்டு முறைமையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த ஆண்டில் இத்தினமானது அனுசரிக்கப் படுகின்றது.




## உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25

- இது உலக சுகாதார அமைப்பினால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இந்த ஆண்டின் கருத்துரு, “என்னிலிருந்து சுழிய மலேரியா தொடங்குகின்றது” ஆகும்.
- இது உலக சுகாதார சபையின் 60வது அமர்வின் போது 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 அன்று ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- மனிதர்களின் நோயுற்ற தன்மை மற்றும் இறப்பிற்கு ஒரு முக்கியக் காரணம் மலேரியா ஆகும்.
- இதன் மிகப் பெரும்பான்மையான பாதிப்புகள் (80%) மற்றும் இறப்புகள் (90%) சஹாரா ஆப்பிரிக்கப் பகுதிகளில் காணப்படுகின்றன.
- 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற கிழக்கு ஆசிய மாநாட்டில், இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் மலரியாவை ஒழிக்க உறுதிமொழி எடுத்தது.
- இந்தியா மலேரியா ஒழிப்பிற்காக 5 ஆண்டு கால தேசிய உத்திகள் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

## உலக நோய்த் தடுப்பு வாரம்

- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரமானது உலக நோய்த் தடுப்பு வாரமாக அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் கருத்துரு “நோய்த் தடுப்பானது அனைவருக்கும் உதவும்” என்பது ஆகும்.
- ஒரு நோய்க்கு எதிரான நோய்த் தடுப்பு ஆற்றலுக்காக கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது தடுப்பு மருந்து “பெரியம்மை நோய்த் தடுப்பூசியாகும்”
- இது 1796 ஆம் ஆண்டில் ஆங்கில மருத்துவரான எட்வர்டு ஜென்னர் என்பவரால் உருவாக்கப் பட்டது.



## சர்வதேசப் பிரதிநிதிகள் தினம் – ஏப்ரல் 25

- முதன்முறையாக, ஐக்கிய நாடுகள் அமைப்பு சர்வதேசப் பிரதிநிதிகள் தினத்தை அனுசரித்தது.
- ஐக்கிய நாடுகள் நிறுவதலுக்கு காரணமான ஒரு நிகழ்வான சான் பிரான்சிஸ்கோ கருத்தரங்கின் 75வது நினைவு தினத்தை அனுசரிப்பதற்காக இத்தினமானது கொண்டாடப் படுகின்றது.
- 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 அன்று, முதன்முறையாக 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் ஒன்று கூடினர்.
- இது சர்வதேச அமைப்பு மீதான ஐக்கிய நாடுகள் கருத்தரங்கு என்று அழைக்கப் படுகின்றது.
- இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம் உலகப் போரிற்குப் பின் உலக அமைதியை மீட்டெடுத்தல் மற்றும் சர்வதேச விதிகளை விதித்தலுக்காக ஒன்றிணைதல் என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் சாசனமானது இக்கருத்தரங்கு நடைபெற்று 2 மாதங்களுக்கு பின்பு (1945, ஜுன் 25) வடிவமைக்கப் பட்டது.




## உலக அறிவுசார் சொத்துரிமை தினம் – ஏப்ரல் 26

- இது 2000 ஆம் ஆண்டில் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பால் (WIPO - World Intellectual Property Organization) ஏற்படுத்தப் பட்டது.
- இத்தினமானது 1970 ஆம் ஆண்டில் WIPO ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த தினத்துடன் ஒன்றிப் பொருந்துகின்றது.
- இது காப்புரிமைகள், பதிப்புரிமை, முத்திரைகள் மற்றும் வடிவங்கள் ஆகியவை அன்றாட வாழ்வில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் உலகம் முழுவதும் உள்ள சமூகத்தின் வளர்ச்சிக்காக படைப்பாளர்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் மற்றும் ஆக்கப்பூர்வங்கள் குறித்து அனுசரிப்பதற்காகவும் கொண்டாடப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு, "பசுமையான மற்றும் வளமான எதிர்காலத்திற்காக புதுமையை மேற்கொள்தல்" என்பதாகும்.

## சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினம் – ஏப்ரல் 26

- இத்தினமானது செர்னோபில் பேரழிவின் விளைவுகள் குறித்தும் பொதுவாக அணு ஆற்றலின் அபாயங்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இத்தினத்தை அனுசரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- உக்ரைனில் உள்ள பிரிபயாட் நகரில் 1986 ஆம் ஆண்டில் செர்னோபில் அணுக்கரு ஆற்றல் ஆலையில் ஒரு வெடி விபத்தானது ஏற்பட்டது.

- இது அப்போதைய சோவியத் ஒன்றியத்தின் பெரும்பாலான பகுதிகளில், அதாவது தற்போது உள்ள பெலாரஸ், உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய பகுதிகள் முழுவதும் கதிர்வீச்சினைப் பரவச் செய்தது.



## பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான உலக தினம் – ஏப்ரல் 28

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பானது (ILO - International Labour Organization) பணியிடங்களில் பாதுகாப்பு நடைமுறைகளை ஏற்றுக் கொள்வது குறித்தும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சேவையின் பங்கு குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த தினத்தைப் பயன்படுத்துகின்றது.
- 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ILO நூற்றாண்டுப் பிரகடனமானது "பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணி நிலைமைகள் என்பவை கண்ணியமான பணிக்கு அடிப்படை" என்று அறிவித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "தொற்றை நிறுத்து: பணியிடங்களில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உயிர்களைக் காக்கும்" என்பதாகும்.
- இது 2003 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப் படுகின்றது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு 1996 ஆம் ஆண்டிலிருந்து ஏப்ரல் 28 ஆம் தேதியை இறந்தவர்கள் மற்றும் காயம்பட்ட தொழிலாளர்கள் ஆகியோருக்கான சர்வதேச அனுசரிப்பு தினமாகவும் அனுசரிக்கின்றது.




## உலகக் கால்நடை மருத்துவ தினம் – ஏப்ரல் 27

- இது ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக் கிழமையன்று அனுசரிக்கப் படுகின்றது.
- இந்த ஆண்டின் கருத்துரு, "விலங்குகள் மற்றும் மனித சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி சுற்றுச்சூழல் பாதுகாப்பு" என்பதாகும்.

- உலகக் கால்நடை மருத்துவக் கூட்டமைப்பானது (WVA - World Veterinary Association) ஒவ்வொரு ஆண்டும் கால்நடை மருத்துவர்களைக் கொண்டாடுவதற்காக 2000 ஆம் ஆண்டில் இத்தினத்தைத் தொடங்கியது.

## இரசாயனப் போரினால் பாதிப்பிற்கு உள்ளான அனைவருக்குமான நினைவு தினம் – ஏப்ரல் 29

- 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு இத்தினத்தை அனுசரிக்க முடிவு செய்தது.
- இரசாயன ஆயுத ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த தினத்தின் (ஏப்ரல் 29) காரணமாக இத்தினத்தின் அனுசரிப்பிற்காக ஏப்ரல் 29 என்ற தேதியானது தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.
- இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பு (OPCW - Organisation for the Prohibition of Chemical Weapons) என்பது 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 அன்று நடைமுறைக்கு வந்த இரசாயன ஆயுத ஒப்பந்தத்திற்கான செயல்முறைப்படுத்தும் அமைப்பு மற்றும் அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட OPCW ஆனது நெதர்லாந்தின் தி ஹேக்கில் தலைமையிடத்தைக் கொண்டுள்ளது.
- இந்த அமைப்பிற்கு 2013 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப் பட்டது.




## சர்வதேச நடன தினம் – ஏப்ரல் 29

- இது யுனெஸ்கோவின் நிகழ்த்துக் கலையின் முக்கியப் பங்காளரான சர்வதேச அரங்கேற்ற நிறுவனத்தின் நடனக் குழுவினால் ஏற்படுத்தப்பட்ட, நடனத்தின் மீதான உலகளாவிய ஒரு அனுசரிப்பாகும்.
- இது பிரெஞ்சு நடனக் கலைஞர் மற்றும் நவீனக் கூட்டு நடன வகையை உருவாக்கியவரான ஜீன் – ஜார்ஜன் நோவ்ரி (1727 – 1810) என்பவரின் பிறந்த தின நினைவு தினமாகும்.



## சர்வதேச ஜாஸ் தினம் – ஏப்ரல் 30

- 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் யுனெஸ்கோ அமைப்பானது ஏப்ரல் 30 ஆம் தேதியை சர்வதேச ஜாஸ் தினமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இது உலகின் அனைத்து மூலைகளிலும் இருக்கும் மக்களை ஒருங்கிணைப்பதில் ஜாஸின் ராஜதந்திரப் பங்கு மற்றும் ஜாஸின் சிறப்பு ஆகியன குறித்து எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் திவாஸ் – ஏப்ரல் 30

- இது ஒரு தேசிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டமாகும்.
- இது 2018 ஆம் ஆண்டில் பிரதமரது சுதந்திர தின உரையின் போது அவரால் அறிவிக்கப் பட்டது.
- இந்தத் திட்டமானது ஒரு ஆண்டிற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் வரையிலான சுகாதாரப் பாதுகாப்பை வழங்குகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★